# ரஞ்சன மஞ்சரி



செல்வி ரஞ்சனா நவரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஞ்சனா மஞ்சரி

(படைப்புக்களின் தொகுப்பு)

ஆக்கம்:-
செல்வி ரஞ்சனா நவரத்தினம்

வெளியீடு
**கலாசாரப் பேரவை**
பிரதேச செயலகம்
தென்மராட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்பதிப்பு விளக்கக்குறிப்பு

| | | |
|---|---|---|
| ***நூற்பெயர்*** | :- | ரஞ்சன மஞ்சரி |
| ***ஆக்கம்*** | :- | செல்வி ரஞ்சனா நவரத்தினம்<br>(நுணாவில் மேற்கு, சாவகச்சேரி) |
| ***வெளியீடு*** | :- | கலாசாரப் பேரவை<br>தென்மராட்சி |
| ***வெளியீட்டு நாள்*** | :- | 28-07-2017 |
| ***நூல் அளவு*** | :- | A5 |
| ***பக்கங்கள்*** | :- | I -XII + 1-224 |
| ***பிரதிகள்*** | :- | 200 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பெற்றதோடு மட்டுமன்றிப்
பெருமையோடு வாழவைத்துப்
பேர்தந்த பெற்றோருக்கும்
உற்றநற் கல்வியையும்
உயர்ந்த பல்கலைகளையும்
ஊட்டிவிட்ட ஆசான்களுக்கும்
சுற்றம் பலவிருந்தாலும்
சுத்தமான மனதினராய்ச்
சீரிய நல்வாழ்த்துரைக்கும்
அந்த ஒரு சிலருக்கும்
இம்மஞ்சரி சமர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் உள்ளத்திலிருந்து...

நான் ஒரு துறைசார் அல்லது தொழில் சார் எழுத்தாளியல்ல. சமூக அவலங்களால் உந்தப் பட்டு எழுத்துலகில் நுழைந்தவளுமல்ல. வெறுமனே, எனது பெயரும் பத்திரிகையில் வரவேண்டுமே என்ற அவாவில், எதையோ எழுதி, எழுத்துலகின் வாசலின் வெளியில் நின்று எட்டிப் பார்த்தவள். ஒரு விதத்தில், ஈசல் போன்றவள். சந்தர்ப்பம் வரும்போது மட்டும், எழுதித்தான் பார்ப்போமே என்று பேனாவைத் தேடுபவள். வார்த்தை களும், எதுகை, மோனைகளும், கருத்துக்களும் தாமே வந்து வரிசையில் காத்திருக்கவில்லை. நானே தேடிப்பிடித்து வலுக்கட் டாயமாக வரித்துக் கொண்டேன்.

பள்ளிக்காலத்திலிருந்தே நாவல்கள், சிறுகதைகள் வாசிப்பதில் நாட்டம் அதிகம். அதிலும் சாண்டில்யன், பார்த்தசாரதி, ஜெயகாந்தன் போன்றோரின் அரச நாவல்கள் என்றால் பசி, தூக்கம் கூட ஏற்படுவதில்லை. பரீட்சைக்குப் படிப்பதாகப் பெற்றோரை நம்ப வைத்துப் பாடப்புத்தகத்திற்குள் சாண்டில்யனின் உப்பிய நாவல்களை மறைத்துவைக்கப் படாதபாடுபட்ட திருட்டுத்தனங்கள் ஏராளம்.

யாழ் பல்கலைக்கழகக் கல்விக்காகத் திருநெல்வேலியில் வசிக்க வேண்டி ஏற்பட்டபோது, வார இறுதிநாட்களில் பல இலக்கிய நிகழ்வுகளில் பங்குகொள்வதுண்டு. அச்சந்தர்ப்பத்தில், பிரவேச பண்டிதர் வகுப்புக்கள் யாழ் இந்துமகளிர் கல்லூரியில் நடாத்தப் படுவதை அறிந்து, அதில் இணைந்துகொண்டேன். அங்கு பண்டிதர் கார்த்திகேசு, சொக்கன், பண்டிதர் பேரின்பநாதன், பண்டிதர் கடம்பேஸ்வரன், பல்துறை அறிஞர் சபாரத்தினம் போன்ற இலக்கிய இலக்கண ஜாம்பவான்களிடம் ஒரு சில மாதங்கள் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. பண்டிதர் கார்த்திகேசு ஐயாவிடம் யாப்புத் தொடர்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்க ஆரம்பித்தபோது, சில மரபுக் கவிதைகளை எழுதிப்பழகினேன். அக்காலத்து உதயன் பத்திரிகையின் வாரமலர் 'சஞ்சீவி' யில் சகமாணவர் சிலரின் மரபுக்கவிதைகள் பிரசுரமானது. அதைப்பார்த்து ஆசைப்பட்டு, வகுப்பில் எழுதிய சில மரபுக்கவிதை முயற்சிகளை நானும் அனுப்பினேன். புதுவரவுகளை ஊக்குவிக்கவோ என்னவோ அவை பிரசுரிக்கப்பட்டன. முதன் முதலில் எனது ஆக்கம் பத்திரிகையில் வந்தபோது, இனம் புரியாத பரவசநிலை. வீதியில் எதிர்ப்படும் எல்லோரும் என்னையே பார்ப்பதுபோல, என்னைப்பற்றியே பேசுவதுபோல, சிறுபிள்ளைத்தனமான ஓர் உணர்வு.

வகுப்பில் முயற்சித்த ஆக்கங்களையெல்லாம் தொடர்ந்தும் அனுப்பினேன். பெரும்பாலும் அவை பிரசுரிக்கப்பட்டன. தொடர்ந்தும், 'சுடரொளி' வாரமலரில் கவிதை முயற்சிகளோடு, வாரமலரில் பிரசுரமாகும் சிறுகதை, நகைச்சுவை விருந்து போன்ற ஆக்கங்கள் சிலவற்றையும் எழுதி அனுப்பினேன். அவையும் பிரசுரிக்கப்பட்டன. வடமாகாண சபையின் ஆக்கஇலக்கியப் போட்டிகளுக்கும், தேசிய ஆக்கஇலக்கியப் போட்டிகளுக்கும் 'நானும் எழுதிப்பார்ப்போமே' என்ற ஆசையில் மட்டுமே ஆக்கங்களைச் சமர்ப்பித்திருந்தேன். அவற்றில் சில ஆக்கங்கள் வெற்றியும் பெற்றன.

பத்திரிகைப் பிரசுரங்களையும், ஏனைய ஆக்கப்பிரதிகளையும் பல வருடங்களாக, தொழில் காரணமாக மாவட்டம் மாவட்டமாக அலைந்த நிலையிலும், பாதுகாத்து வைத்திருந்தேன். ஆக்கங்களை ஒரு தொகுப்பாக ஆவணப்படுத்துமாறு சில நல்லுள்ளங்கள் கருத்துத் தெரிவித்தபோதும், 'எழுதப்படுபவை எல்லாம் இலக்கியங்கள் அல்லவே.... அதற்கென்றொரு தரம் வேண்டுமே' என்ற உண்மை யால் நான் அக்கருத்தைப் பொருட்படுத்தவில்லை.

ஆனால், என்னால் பாதுகாக்கப்பட்ட எனது ஆக்க முயற்சிகளின் சில பிரதிகள், என்னையறியாமலே என் கைநழுவிப் போனபின்புதான், ஏனையவற்றையாவது ஆவணப்படுத்தவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அப்போதும், எனது ஆக்கமுயற்சிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாவதொரு பதிப்பகத்தில் கொடுத்து, ஒரேயொரு புத்தகமாகப் பதிப்பித்து, எனக்குநானே வைத்துக்கொள்வோம் என்றே ஆரம்பத்தில் எண்ணியிருந்தேன். ஆனாலும் நண்பர் ஒருசிலர், அதை ஒரு வெளியீடாகச் செய்யலாமே என்று ஊக்கப்படுத்தினர். ஆசை யாரைத்தான் விட்டுவைத்தது. நான் மட்டும் அதற்கு விதிவிலக்கா என்ன. அதனாற்றான் இந்த வேண்டாத வேலைக்குள் இறங்கினேன். ('உனக்கு ஏன் இந்த வேண்டாத வேலை' என்று நீங்கள் யாராவது என்னிடம் கேட்குமுன் நானே கூறிவிடவேண்டுமே.)

தொகுப்பிற்காகக் கணிப்பொறியிலிட ஆரம்பித்த பின்பும், சில ஆக்க முயற்சிகள் என் கைநழுவிவிட்டன. ஏனைய அனைத்து ஆக்கங்களையும், எழுதப்பட்ட நோக்கம் மற்றும் விடயங்களுக்கேற்ப, மரபுக்கவிதை முயற்சிகள், கவிதைகள், பாடலாக்கங்கள், சிறுகதைகள், நாடகங்கள், குறுந்திரைப்படம், நகைச்சுவை விருந்து, கட்டுரைகள், சேவைநலன் பாராட்டும் வாழ்த்தும், இரங்கற்பாக்கள் ஆகிய பிரிவுகளுக்குள் உள்ளடக்கியுள்ளேன். உண்மையில் அனைத்து ஆக்கங்களுமே முயற்சிகளாகவே கருதப்படத்தக்கன. எனினும் ஏனைய பிரிவுகளுக்குள் நெகிழ்ச்சிகள் அனுமதிக்கப் பட்டுள்ளன. ஆனால் மரபுக் கவிதைகள் என்பது, அதற்கான நிபந்தனைகள் (சீர், தளை.....) உறுதியாகப் பேணப்படவேண்டியன. யாப்பிலக்கணத்தைப் படித்த சந்தர்ப்பத்திலே, வகுப்பிலே, இவை எழுதப்பட்டதனால் சில வழுக்கள் மற்றும் பொருத்தமற்ற தன்மைகள் காணப்படலாம். எனவே தான் மரபுக் கவிதை முயற்சிகள் எனக் குறிப்பிட்டுள்ளேன். மேலும், சில வருட இடைவெளிகளில் ஒவ்வொன்றும் எழுதப்பட்டமையால் கூறியது கூறல், ஒரே கருத்து மீண்டும் காணப்படல் போன்ற அம்சங்களும் காணப்படுவதைத் தவிர்க்கமுடியவில்லை. ஒவ்வொரு காலப்பகுதியிலும் எழுதப்பட்ட, அனைத்து ஆக்கங்களும், எவ்வித மாற்றங்களுக்கும் உட்படுத்தப் படாது உள்ளவாறே தொகுக்கப்பட்டுள்ளன. எனது நானாவித ஆக்கமுயற்சிகளின் தொகுப்பாக உள்ளதால் எனது பெயருடன் (எழுதப்படும் முறைக்கேற்ப) இணைத்து 'ரஞ்சன மஞ்சரி' எனப் பெயரிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சந்தர்ப்பத்தில் பலரை நினைவுகூர்வது பொருத்தமானது. நான் எத்துறைக்குச் சென்றாலும், எதைக் கற்றாலும், எவ்விதத் தடையையும் ஏற்படுத்தாது, ஒத்துழைப்பு வழங்கும் என் இனிய பெற்றோருக்கு எனது முதல் நன்றிகள். எனது இச்சிறு முயற்சியை ஆவணப்படுத்த ஊக்கமளித்த அன்புள்ளங்களுக்கும் என் நன்றிகள். எனது இத்தொகுப்பிற்கு அணிந்துரை பெறவேண்டுமே என எண்ணியபோது, முதலில் நினைவுக்கு வந்தவர் நாடறிந்த அறிஞர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் ஐயா அவர்கள். சென்னையில் இருந்த அவரைத் தொடர்புகொண்ட போது, உடன் சம்மதமளித்து மின்னஞ்சலில் என் ஆக்கங்களைப் பார்வையிட்டு அணிந்துரையை அனுப்பியிருந்தார். ஐயா அவர்களுக்கு என் பணிவான நன்றிகள்.

பின்னட்டையில் சேர்ப்பதற்காக, என்னைப் பற்றிய குறிப்புக் களை, நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க, வாழ்த்துத் தெரிவித்து எழுதிக்கொடுத்த என் ஆசிரியர் திருமதி. சி. சிவநாதன் (பிரதிக் கல்விப்பணிப்பாளர் - கல்வி அபிவிருத்தி) அவர்களுக்கு என் சிரந்தாழ்ந்த நன்றிகள். அழகிய அட்டைப்படத்தை வரைந்துதவிய திரு. இ. இராகவன் அவர்களுக்கும், ஆக்கங்களில் பெரும்பாலான வற்றைக் கணினியில் பொறித்துதவிய செல்வி. செ. இ. வுளோஜினா நன்சி, செல்வி. பு. யசோதரா, திருமதி. இ. கலைச்செல்வி ஆகி யோருக்கும், நூலாக அழகுறப் பதிப்பித்து உதவியதோடு, சில ஆலோசனைகளையும், வெளியீடு தொடர்பான சில உதவிகளையும் பெருமனதோடு உவந்து செய்த, திருக்கணிதபதிப்பக முகாமையாளர் திரு. கா.சிவஞானசுந்தரம் தம்பதியினருக்கும், பதிப்பக ஊழியர் களுக்கும் நான் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

தென்மராட்சிக் கலாசாரப் பேரவையின் உறுப்பினராகிய யான், எனது தொகுப்பை, கலாசாரப் பேரவையூடாக வெளியிட விரும்பியபோது, அதற்கு அனுமதியளித்த கலாசாரப் பேரவையின் நிர்வாக சபையினருக்கும், வெளியீட்டு நிகழ்வைப் பிரதேச செயலகத்தில் நடாத்துவதற்கு அனுமதியளித்ததோடு, நிகழ்விற்குத் தலைமை தாங்க உவகையோடு உடன்பட்ட தென்மராட்சிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசசெயலரும், கலாசாரப் பேரவையின் தலைவருமாகிய திருமதி. தே. பாபு அவர்களுக்கும் என் இனிய நன்றிகள். எனது கன்னி வெளியீட்டிற்கு நயப்புரை நிகழ்த்துவதற்கு, நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க, பெருமனதோடு சம்மதமளித்த பெருங்கவிஞரும், பருத்தித்துறைப் பிரதேச செயலருமான திரு. த. ஜெயசீலன் அவர்களுக்கும் என் பணிவான நன்றிகள்.

வெளியீட்டு நிகழ்விற்கு முதன்மை விருந்தினராகவும் (மேலதிக அரச அதிபர் (காணி) திரு. சு. முரளிதரன் அவர்கள்), சிறப்பு விருந்தினர்களாகவும் (ஓய்வுபெற்ற, கிளிநொச்சி, மேலதிக அரசாங்க அதிபரும், வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுத் தலைவருமான திரு. செ. ஸ்ரீநிவாசன் அவர்கள், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர், திரு. சு. கிருஷ்ணகுமார் அவர்கள்), கௌரவ விருந்தினர்களாகவும் (அறிஞர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் அவர்கள், கவிஞர் த. நாகேஸ்வரன் அவர்கள்) என் அழைப்பை ஏற்று வருகை தந்து, என்னைப் பெருமைப்படுத்திய பெருந்தகைகள் அனைவருக்கும், முதற்பிரதி, சிறப்புப்பிரதிகள் மற்றும் பிரதிகளைப் பெற்று என்னை ஊக்கப்படுத்திய அன்புடை நெஞ்சங்களுக்கும் என் என்றும் மறவா நன்றிகள்.

எல்லாவற்றுக்கும் மேலாக நூலிற்குப் பெயரிடுவதிலிருந்து வெளியிடுவதுவரை பல்வேறு வழிகளில் உதவியையும், ஆலோசனையையும் வழங்கியதோடு, வெளியீட்டுரையையும் உளமார வழங்கிய தென்மராட்சிப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திரு.சி. முகுந்தன் அவர்களுக்கு என்றென்றும் என் நன்றிகள். மீண்டும் இந்நிகழ்விற்குச் சகல வழிகளிலும் ஒத்துழைத்த சகலருக்கும் என்றென்றும் என் நன்றிகள் உரித்தாகும்.

நூலாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



"முக அழகு பார்க்கையிலே முன்னலர்ந்த பூ, தோற்கும், அக அழகு நோக்கையிலே அன்னைக்கு நிகராகும்" என்ற வரிகளில், கலை அழகு விஞ்சும், தமிழ் அழகு கொஞ்சும், கவிதை அழகு மிஞ்சும்.

எழுதியவர் இரஞ்சனா நவரத்தினம் ஆட்சிப் பணியினர் காட்சிக்கு எளியர். கடுஞ்சொல் இலார்.

தேன் தமிழ் சுரக்குநர். தென்றல் உரை நடையினர். அவர் எழுதுகிறார். "பழகுவதில் பண்பாளராம், தோற்றத்திலே ஆறடியாம், தோழமையில் நூறடியாம்" சொற் குவியல் சுமக்கும் கருத்துக் குவியல் அவர் எழுத்தெங்கும் கண்டேன்.

ஆட்சி விதிகளை நிறைவேற்ற நிதி எல்லைகள், தளம்பாமல், மேலிருப்போர் முகம் சுளிக்காமல், கீழிருப்போர் நொந்து புலம்பாமல் அலுவலகக் கடிவாளத்தை இழுப்பது போல இழுத்து தளர்த்துவதுபோல தளர்த்தித் தென்மராட்சிப் பிரதேசச் செயலகத்தில் கோலோச்சியவர், எழுத்துக் கலையிலும் கோலோச்சுவது விந்தையிலும் விந்தை.

கவிதை எழுதுகிறார். எதுகை தள்ளாடவில்லை. மோனை முட்டிமோதவில்லை. சீர்கள் சோரவில்லை. உவமைகள் உவந்தன. சொல்ல வந்த செய்திகள் செம்மையாயின.

கட்டுரை எழுதுகிறார். தகவல்கள் கொப்பளிக்கின்றன. நீரோட்டமாகக் கருத்தமைதி. எடுப்பான சொல்லாட்சி. அங்கங்கே வடமொழி மயக்கம். ஆன்றோர் போற்றிய கொள்கைகள் இவரின் மேற்கோள்கள். மூடப் பழக்கங்களைச் சாட்டையாலடிக்கிறார். யதார்த்தத்தில் மிதக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை எழுதுகிறார் படப்பிடிப்புக் கருவியும் வானின் குரல்களும் கதையை நகர்த்தும் உத்திகள் சில கதைகளில் இரஞ்சனாவின் வாழ்க்கையும் குலவிக் கதை மாந்தராகிறதே." கல்லறையில் தேடிப்பார்த்திருந்தால் அடக்கமான பெண் சுணக்கமின்றிக் கிடைத்திருப்பாளே" எனப் பெண்ணின் அடக்கத்தை உவமிக்கிறார்.

பழமொழிகள் துள்ளி விளையாடும் எழுத்தோவியங்கள் உவமான உவமேயங்களின் உயிரோவியங்கள். இயற்கையை எழிலூட்டும் வண்ணச் சுவரோவியங்கள் கற்பனைச் சிறகு விரித்த கருத்தோவி யங்கள் பெண்ணின் பெருந்தக்க யாவுள? எனும் வினாவோ வியங்கள். இடையிடையே வஞ்சப் புகழ்ச்சியுமாய்ப் பிரிவோரை வாழ்த்தும் நவிற்சியணியோவியங்கள்.

தென்மராட்சி ஈந்த கவிதை, கட்டுரை, கதைப் படைப்பாளர் வரிசையில் இரஞ்சனா நவரத்தினம் ஆற்றலராய் மிளிர்கிறார். வாழ்க, வளர்க, வானுயர் புகழோடு.

மறவன்புலவு
**க. சச்சிதானந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **1) மரபுக் கவிதை முயற்சிகள்** | |
| i) விநாயகர் | 3 |
| ii) முருகன் | 3 |
| iii) கண்ணன் | 4 |
| iv) தமிழ் | 4 |
| v) கல்வி | 4 |
| vi) நண்பி | 5 |
| vii) கடல் | 5 |
| viii) இம்சை | 6 |
| ix) மலர் | 7 |
| x) எமது அகம் | 8 |
| xi) எமது ஊர் | 9-10 |
| **2) கவிதைகள்** | |
| i) நட்புக்காய் ஒருத்தி | 13-15 |
| ii) காயத்தின் கரையில் | 16 |
| iii) புண்ணிய தேசம் | 17-18 |
| iv) காத்திருக்கிறேன் | 19-20 |
| v) முடிசூடு | 21 |
| vi) மாற்றம் வர வேண்டுமே | 22-23 |
| vii) புரிந்து கொள் | 24-25 |
| viii) பயமயம் | 26-27 |
| ix) பண்பாடு | 28-30 |
| **3) பாடலாக்கங்கள்** | |
| i) நிலை மாறும் | 33-34 |
| ii) எது நட்பு | 35-36 |
| iii) கண்டங்கள் தாண்டி | 37-38 |
| iv) பணமே! பாடையில் போ | 39-40 |
| v) பதவிக்காய் | 41-42 |
| vi) பார்லருக்கு வாங்களேன் | 43-44 |
| **4) சிறு கதைகள்** | |
| i) உணர்வோடு கலந்தது | 47-53 |
| ii) காசுக்கோர் வாழ்க்கை | 54-61 |
| iii) பட்டாபிஷேகம் | 62-71 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv) சவால் ........................ 72-81
v) பெண்(ணா)(நா)ய் நான் பட்ட... ........................ 82-88
vi) நிழலான நிஜங்கள் ........................ 89-95
vii) எங்கே போகிறோம் ........................ 96-102
viii) தாலிக்கொரு தாலி ........................ 103-111
ix) உன்னால் முடியும் ........................ 112-117
x) புதுமைப்பெண் ........................ 118-124

**5)** நாடகங்கள்
i) (ஏ)மாற்றம் வர வேண்டுமே(மா?) ........................ 127-141
ii) நாளும் நடப்பும் ........................ 142-152

**6)** குறுந்திரைப்படம்
i) எதுவரை ........................ 155-162
ii) இனி...அவன்...இனியவன் ........................ 163-172

**7)** நகைச்சுவை விருந்து
i) ஆங்கில மோகம் ........................ 175-177
ii) ஏலுமெண்டால் பாப்பம் ........................ 178-180
iii) நல்ல நேரம் ........................ 181-186

**8)** கட்டுரைகள்
i) சிறுவர் மற்றும் பெண்களின் பாதுகாப்பும் முன்னேற்றமும் ........................ 189-200
ii) காலங் கடந்(த)(தும்) கர்நாடக இசை ........................ 201-210

**9)** சேவைநலன் பாராட்டுக்களும் வாழ்த்தும்
i) திரு. எஸ். ரங்கராஜன் -
வடமாகாண முன்னாள் பிரதம செயலாளர் ........................ 213-214
ii) திரு. எஸ். ஞானச்சந்திரன் -
வடமாகாண விவசாய அமைச்சின் முன்னாள் செயலாளர் ................ 215-217
iii) வாழ்த்துப்பா
கவிதை நூல்
திரு. மு. பாலசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற அதிபர்) .................. 218

**10)** இரங்கற் பாக்கள்
i) அமரர். சி. சர்வலோகநாதன் -
வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் ........................ 221-224



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரபுக் கவிதை
# முயற்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. விநாயகர்

பட்டமும் வேண்டேன் பதவியும் வேண்டேன்யான்
துட்டநட்பு வேண்டேன் தீயெண்ணம் – விட்டு
நினையே சரணடைந்தேன் நாயகா என்றும்
எனைவிட் டகலா திரு.

ஊரெல்லாம் கோவிலாகப்போற்றிப் புகழ்ந்திருந்து
நீரெல்லாம் தீர்த்தமாகக் கொண்டு பார்புகழ்
ஆதியாம் விநாயகன் தாள்பணிந்து என்றும்
நீதியாம் வகையில் வாழ்வோம் நாமே.

## 2. முருகன்

நல்லைக் குமரன் திருவடி சேர்ந்தால்
தொல்லை என்பதென்றும் யார்க்கும் இல்லையே
என்றுதொன்மைச் சான்றோர் விளம்பியதால்
நன்றுபணிவோம் முருகன் தாள்.

திடம்மிகுந்த சிந்தையாய் நல்லை சென்று
குடம்குடமாய்க் நீர்பொழிந்து தேரைத் – தொடவே
அடம்பிடித்து வெற்றிபெற்றோர் கந்தன் அடியில்
இடம்பிடித்தோர் என்றே போற்றுவர் பலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தாக வேற்றவர்தீன் உண்டு வியர்வை
சிந்தாமல் வாழ்ந்துகோவில் வாசல் – வந்திருந்து
கந்தா என்றே கதறி அழுதால்
இந்தாவென் பாணோ வரம்.

## 3. கண்ணன்

கண்ணா கம்சனை கொன்ற மாமணி
வண்ணா வடிவழகாம் பார்வதி – அண்ணா
உண்ணாது வாழ்கினும் வாழ்வேன் உன்பாதம்
எண்ணாது என்றும் வாழ்கிலேன் நான்.

## 4. தமிழ்

தேனினும் இனியஎம் தமிழ் அமுதே
வானினும் உயர்ந்த மேன்மை பெற்றாய்
வாழ்விலும் உறவாய் வந்தாய்
தாழ்விலும் மறவேன் யானும் நின்னையே.

## 5. கல்வி

கரையிலாக் கல்வியைக் கண்ணெனவே போற்றி
வரையிலா நற்புகழைப் பெற்று – தரையிலே
இன்பமாய் வாழ்ந்திடலாம் என்பதால் நீகற்று
துன்பமின்றி நீடூழி வாழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. நண்பி

தனிப்பிறவி எந்தனுக்குத் தந்தாய் உறவு
இனியெனக்கு யார்தருவார் இங்கு – தனித்திருந்து
நான்மட்டும் எண்ணியழ இன்று எனைவிட்டு
நீமட்டும் போனது ஏன்?

## 7. கடல்

கற்கக் குறைவுபடா நற்கல்வி போலேநாம்
விற்க விலையிலா நல்முத்தாய் – பெற்ற
பெரிய தனமிதே என்றீசன் தந்த
அரிய பெரும்செல்வம் கடல்

மடமின்றி வாழாக் கவரிமான் போலே
கடலின்றி யார்எனினும் வாழார் – விடமே
ஆகிலும் கொடுந்தாகம் வாட்டின் அருந்தாது
போகிலார் யாரும் உனை.

சிலசெயல்கள் உன்மேலே சிந்தியாமல் செய்தாலும்
பல்நன்மை புரிகிறாய் பரிவுடன் – நிலமே
நலம்பெற வந்த கடலேநாம் உண்ண
சலம்மட்டும் தந்திடாய் நீ.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம்போல் ஆராய்ந் தறிவோர் கடலாவர்
கர்ணனாய் ஈயின் கடலாவர் - இன்னும்
உன்பெருமை சொல்ல உவமை இல்லை
என்ப தறியார் யார்.

## 8. இம்சை

**கை**யால் இடிக்கிறார் காலால் மிதிக்கிறார்
பையவே கோவிலில், பஸ்ஸில் - சை பண்பு
இல்லா இடியர் நடத்தும் வெளியில்
சொல்லாத சேதிகள் பல.

(1999)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. மலர்

ஊரும் உலகும் உவந்து ஏத்த
பாரும் விசும்பும் பரவி வீசும்
வாசம் தந்த வண்ண மலரே
பாசம் வைத்தேன் பாவி நானும்
முள்ளுக் கொண்டு மலர்ந்த போதும்
வள்ளல் என்று வாழ்த்தி உன்னை
நாளும் பறித்து நன்கு கட்டி
கோளும் பார்த்து கோயில் வாசல்
வைக்க நினைத்தேன் வடிவாய் நானும்
தைக்க நினைத்தாய் தரமிலா முள்ளால்
வண்டு வந்து வட்டம் போட்டால்
கண்டு விரிந்து களிக்கும் பெண்ணே
மங்கை நானும் மயங்கி வந்தால்
செங்கை ஆக்கச் சிந்தை கொண்டாய்
வேதனை தந்து விட்டாய்
சாதனை இதுவா சொல்லு மலரே.

(1999)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. எமது அகம்

**யா**ழுடன் பாணர் புகழுடன் வாழ்ந்த
யாழில் இருந்து நேராய் சிறந்த
யாவகர் பெரிய அளவில் வாழ்ந்த
சாவகச் சேரி போகும் வழியில்
நுணாமரம் நூற்றுக் கணக்காய் வளர்ந்த
நுணாவில் மூன்று சந்தியில் இருந்து
கிழக்குப் பக்கம் நேராய்த் திரும்பி
வழக்கமாய்ப் பலர்வரும் வழியில் நடந்து
தெரியும் கடைவரை விரைந்து கடந்து
விரியும் தெருவின் தெற்குப் பக்கம்
வளைந்து நெளிந்து செல்ல வலத்தில்
விளைந்து இருக்கும் கத்தரி அருகில்
இரைந்து கேட்க உள்ளவர்
விரைந்து சொல்வார் எங்கள் அகத்தை

(1999)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஊர்

சீர்பல மிகுந்த பெரிய ஊராம்
சாவகச் சேரி என்னும் நகரில்
சீரிய அளவில் நலங்கள் பொங்கும்
சிற்றூர் நுணாவில் உயரிய பதியில்
மாவா றோய்வு இன்றி ஓடும்
மாந்தரின் எண்ணிலா வயலின் கரையில்
பூவாய் எங்கும் நறுமணம் வீசும்
பூத்து இருக்கும் பலநன் நிலங்கள்

பற்பல பொருட்கள் செய்யக் காய்கனி
பலகை ஓலை உவந்து கொடுக்கும்
கற்பக தருவாம் பனைமர வளமுடன்
கணக்கிட முடியாத் தெங்கும் உண்டு
உழுது பற்பல உயிரைக் காக்கும்
உழவர் தம்மொடு நிதமும் இறைவனைத்
தொழுது வாழும் பக்தர் கூட்டம்
தொகை தொகை உண்டுநம் ஊரில்

கொடியோர் கொற்றம் கடிதே அடக்கிக்
கொல்லங் கிராயில் கணபதி இருக்க
வடிவில் மிக்கார் இன்றி விளங்கும்
வடிவாம் அம்மனும் அமர்ந்து இருக்க
வீர வித்தாம் அரன் வடிவாம்
வீரபத்திரர் கோவில் கொள்ள
வீர வேலொடு மயிலின் மேலே
வீற்று இருப்பான் பாலன் வேலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தற் கடவுளாய் என்றும் எம்மைக்
        காத்து அருளும் வைரவர் இருக்க
கற்புக் கடவுளாம் பத்தினித் தெய்வம்
        கண்ணகி யும்சினம் தணிந்து இருக்க
வஞ்சம் இல்லா மாந்தர் பூங்கரம்
        வழங்கிச் சிவந்து குவிந்து இருக்க
நெஞ்சம் உருகும் நல்ல பக்தியின்
        நெகிழும் பரவசப் பண்ணொலி கேட்டு

தேவரும் வியந்து உடனே விரைந்து
        தேடி ஓடி வந்து அடைய
யாவரும் மகிழ்ந்து பெருமை உடனே
        யாண்டும் புகழ்ந்து போற்றத் தக்க
அத்தனை பற்பல வளத்தைத் தன்னுள்
        அடக்கி நிறைந்து சிறந்து இருக்கும்
புத்தனைப் புகழால் மிஞ்சக் கூடிய
        பெரிய புகழூர் நுணாவில் ஊரே.

(1999)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. நட்புக்காய் ஒருத்தி

பக்கத்தில் இருந்துகொண்டே படுகுழியில் தள்ளிவிடத்
தருணம் பார்க்கும் பச்சோந்திகள் கூட்டம்
பச்சோந்திகள் வாழும் பாழ்பட்ட உலகத்திலே
பாவி நான் வாழ பாசம் தந்த ஓர் ஜீவன்

நாளுக்கொரு நட்புக்கொள்ளும் நாகரிக உலகில்
ஆழமான நட்புக்கு அர்த்தம் சொன்ன
அருமை நண்பியே.....
நாளும் உன்னை நினைக்க வைத்து
நாடு தாண்டிப் போவது சரியா?
நண்பி என்று ஒருத்தியை நம்பி
நானும் அன்று மோசம் போனேன்
நண்பி நீதான் என்றுணரும் வேளை
நழுவிப் போகிறாய் என்னை விட்டு

என் வீழ்ச்சியில் சந்தோசப்பட்டு
என் எழுச்சியில் பொறாமைப்பட்டு
உதட்டளவில் நட்புக்கொள்ளும் போலி உலகில்
என் வீழ்ச்சியில் கவலைப்பட்டு
என் எழுச்சியில் சந்தோசித்து
உள்ளத்தால் நட்புத்தந்த என் ஒரேயொரு நண்பியே.....

என் பிறந்தநாளன்று வந்த உன்னைப் பிரியும் போது
காண்பது கடைசி என்றா கண்ணீருடன் என்னைப் பார்த்தாய்?
கலங்கவில்லை நான்
காரணம் கடைசியல்ல மீண்டும் காண்பாய்
என்றென் மனம் சொன்னதாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் ஊகம் இதுவரை பொய்த்ததில்லை
என்றே இறுமாப்படைந்திருந்தேன்
எதிர்பாராமல் இதில் மட்டும்
என் மனம் பொய் சொல்லியதேன்
தனித்துப் பிறந்த எந்தனுக்குத்
துணையாய் நீயும் இருந்துவந்தாய்
நண்பியாக நட்புத்தந்தாய்
சகோதரியாக அன்பு தந்தாய்
ஆசானாய் அறிவுரை சொன்னாய்
நிழலாய் என்பின் எங்கும் வந்தாய்
நீங்கி நீயும் போய்விட்டாயே....
நிழலும் உடலைப் பிரிவதுண்டோ?

கலங்காமல் நீயும் படிப்பாய் தானே
நம்பி நானும் போறன் என்றாய்
காலையில் எழுந்து படிக்கும் நேரம்
கலங்கி அழுகிறேன் உந்தன் நினைவால்
கவனமாகப் படியென்றெனக்கு
அடிக்கடி சொல்வாய் உள்ளத்தாலே
இனியார் சொல்வார் யமுனா எனக்கு
சொன்னாற் கூட உதட்டளவில் தான்

சேர்ந்து வந்து வீட்டுப் பக்கம்
தெரு பிரியும் தூரத்தில் கூட
நீ கேட்பாய் "தனியப் போவியா?"
இனி நான் தனியத் தானே போகப்போகிறேன் யமுனா.....

நீயில்லாத வகுப்பறையை
நினைத்துப்பார்க்க முடியவில்லை
நீயில்லாத பார்ட்டிகளில்
உன் நினைவை நிறைக்க யாருமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த நாம் பிரிந்துவிட்டால்
சிரிப்பார் பலரும் என்று வகுப்பில்
அருகில் இருக்க வேண்டாம் என்று
அடிக்கடி நானும் சொல்லிவந்தேன்
வகுப்பிலேயே யமுனா நீயும்
இல்லாமலே போய்விடுவாயென்று
கனவில் கூட நினைக்கவில்லை
காட்சியாச்சு நிஜமாயின்று
முரண்பாடு நிறைய நமக்குள் உண்டு
சண்டைகள் பலவும் வந்ததுண்டு
ஆனாலும் யமுனா உந்தன் நட்பு
ஆழமாய் என்னுள் இருக்கலாச்சு
கண்ணீர் என்பது உள்ளவரை
நீயும் அதற்குள் கலந்திருப்பாய் யமுனா

வாழ்வுக்காகச் செல்கிறாய் யமுனா
வளமாய் நீயும் இருக்க வேணும்
செல்வம் பலவும் கிடைக்க வேணும்
மனநிறைவோடு வாழ வேணும்
கொண்டவன் மனதில் தேவதையாக
குடும்பத்தில் அருமைக் குலவிளக்காக
ஆயுள் உள்ளவரை மங்கலமாக
அழகுமுகம் என்றும் மலர்ந்திருக்க
அருமை நண்பியே நீவாழ வேணும்
கொண்டவன் குணத்தில் ராமனாய்
அவனுக்கேற்ற சீதையாய்
ஆத்ம நண்பியே நீ பல்லாண்டு வாழ
கடைசிவரை என் பிரார்த்தனைகள் உனக்காக

(பிரிய நண்பி பிறநாடு போன பிரிவுத்துயரில் **16/09/2000** அன்று எழுதப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. காயத்தின் கரையில்.....

**வா**ழ்க்கையென்ற நதியினிலே வந்துபோகும் படகுகளே
போகுமிடம் தெரியவில்லை போய்ச்சேர உதவுங்களேன்

ஆசையில்லை அவஸ்தைஇல்லை ஆயினுமோர் அமைதியில்லை
ஆயிரமாய் உறவிருந்தும் ஆசைக்கொரு ஜீவனில்லை
வந்ததெல்லாம் வேஷம்போட நொந்ததெல்லாம் ஒருமனந்தான்
இந்தஜீவன் இனியும்வாழ இருண்ட இந்த உலகெதற்கு?

கருவினிலே இருக்கும்கனவு கண்முன்னே காணும்கானல்
தவறுகின்ற வயதினிலே புரளவொரு மணலுண்டு
தளர்நடையின் பருவத்திலே வளர்கின்ற மரமுண்டு
வளரும்வரை கண்ட இன்பம் வளர்ந்தபின்னே போனதெங்கே?

பள்ளிசென்ற காலத்திலே பக்கமிருந்த தோழியவள்
பல்கலைக்குப் போனபின்னே பகல்க்கனவாய் ஆகிவிட்டாள்.
பல்கலையில் துளிர்த்தஅன்பு பகல்நிழலாய்த் தொடர்ந்தஉறவு
பாதியிலே தூரம்போக பரிதவித்து நின்றதுண்டு

உடன்பிறந்த உறவென்று உரிமையெடுத்து வந்தஜீவன்
உயிரைக்கொல்லும் செயல்செய்து உதறித்தள்ளிப் போனபின்பும்
கற்றதெதுவும் மறக்கவில்லை வெற்றிவிட்டுப் போகவில்லை
தனித்துவந்து பிறந்ததனால் தாங்கும்சக்தி அதிகம்தான்

இத்தனைநாள் இருந்தசக்தி இப்பொழுது எங்கோபோக
கண்பெற்று இழந்ததுபோல் கலங்குவதேன் கண்ணிரண்டும்
நம்பிக்கையும் கைநழுவ தும்பிக்கையும் கைகழுவ
உலகிலெதுவும் பிடிக்கவில்லை உயிரைத்தாங்க உறுதியில்லை

**வாழ்க்கையென்ற நதியினிலே வந்துபோகும் படகுறவே**
**போகுமிடம் புரிகிறது போக மட்டும் உதவுங்களேன்.**

(2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. புண்ணிய தேசம்

புண்ணிய தேசத்தில் புதைகுழிகள் ஏராளம்
கண்ணியம் தான்மறந்த காமிகளும் தாராளம்

வாயால் தொடங்கியது வாள்வெட்டில் முடியுது.
போயதைப் பார்த்தாலோ போலீசும் பிடிக்குது.
வேலிக்காகப் பலர் தாலி அறுகுது.
தாலிக்காகச் சிலர் தலையும் உருளுது.

கருவுக்கு உள்ளேயே கற்பழிப்பும் நடக்குது
குருவின் உபயம் குழந்தையும் பிறக்குது.
பள்ளியில் கல்வியொடு கலவியும் ஒருபாடம்
முள்ளி வாய்க்கால்போல் முகிழ்ந்த பலிபீடம்

சல்லிவேண்டிக் குடும்பச் சமரும் நடக்குது
கல்வியோடு அவள் கற்பும் பறக்குது.
முகமே தெரியாமல் முகநூலில் காதல்
சுகம் தெரிந்தபின் சூசைற்றால் சாதல்

பெற்றவர் பிள்ளையைப் பற்றையில் வீசுறார்.
கற்றவர் பெற்றோரைக் கருணையில்லம் சேர்க்கிறார்.
படிப்புக்கும் பண்பிற்கும் பாரினில் பயனில்லை
நடிப்பும் நாடகமும் நிலைநாட்டுது தன்எல்லை.

நிர்வாக இயலில் நிர்வாணங்கள் நிறைய
அரவாணிகள் ஆட்டம் அர்த்தங்களும் நிறைய.
பலகால் பணிந்து பதவியேற்று நிர்வாகம்
தலைகால் புரியாமல் தகுதியற்ற சர்வாதிகாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாந்த திருவிழாவாம் விடியும்வரை கூத்து
பருவமிலாப் பையன்களும் பாட்டில்களை ஊத்தி
கோவில் கூட்டம் குழப்பத்தால் காயம்
சாமியின் பெட்டியில் சாரியும் மாயம்

கணவன் கண்முன்னே கள்ளக் காதல்
மனைவி மகனிருக்க மைத்துனிக்காய் மோதல்
மகளுக்கும் அப்பன் மருமகளுக்கும் அப்பன்
மகளுக்குப் பிறந்த பேத்திக்கும் அப்பன்.

விளையாட்டுப் போட்டியில் விளையாட்டாய் ஒருகொலை
விளையும் பயிர்கள் பயிலும் தனிக்கலை.
பண்பாடு கலாசாரம் பாழ்படும் நிலைதொடரின்
எம்பாடு என்னாகும் எம்மினமே எழுச்சிகொள்வீர்.

(2011)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. காத்திருக்கின்றேன்..

முத்தென்று மணியென்று முன்செய்த தவமென்று
முகர்ந்தார் உச்சி முன்பொருகாலம்
பெத்தெடுத்த பத்தினி பத்தையிலே வீசிவிட்டு
பெருமகிழ்வெய்திறாள் இன்றையகாலம் – இதில்
பத்துமாதம் சிறையிருந்து பரவசமாய் மூச்சுவிட்டு
செத்துப் போகவா நான் பிறக்க

தாலிதந்தவன் தன்பெயரைத் தன்வாயால் தானழைக்க
தயங்கி நாணினாள் சங்ககாலத்தாள்
வேலிதாண்டிப் பிறந்ததுக்கு வினைக்குரியான் தனைக்காட்ட
வலிந்து யோசிக்கிறாள் நாகரிகத்தாள் – இதில்
கேலியால் தலைதாழ்ந்து கேளாத முதலெழுத்தைக்
கேட்டு அலையவா நான் பிறக்க

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்றென்பார்
குடும்பமும் கோவிலாயானது அன்று
குழந்தையோ கிழவியோ குமரி தானின்று
குதறிக் கொல்கின்றான் கீழ்மகன் – இதில்
பழகிய குடும்பமோ பள்ளியோ பாதையோ
பயந்து பதுங்கவா நான் பிறக்க

காலையில் படிப்பு கனிவுதரும் பாட்டு
மாலையில் விளையாட்டு என்றான் பாரதி
விளையாட நேரமில்லை விடியும்வரை தூக்கமில்லை
வருகுதாம் ஸ்கொலஷிப் பரீட்சை – இதில்
களைப்பாற பொமிஷனின்றிக் கண்மூட வழியுமின்றி
காலம் கடத்தவா நான் பிறக்க

கண்ணுக்கு விருந்தாகக் கரைவேட்டி தானுடுத்து
கோவிலுக்கு வருவான் ஆணழகனன்று
தண்ணியடித்து தவண்டு தறிகெட்டு மதிகெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளாடி வருகின்றான் ஆண்மகனின்று – இதில்
பண்பாக வளர்ந்தாலும் குடிகாரன் மகனென்று
பெயர் கேட்கவா நான் பிறக்க

படித்தால் பட்டமும் பதவியும் தகுதிக்கே
பணிகளும் விதிப்படி பண்பானகாலமது
அடிக்கிறார் சலாம் கொடுக்கிறார் இனாம்
அடிக்கடி மாற்றம் அரசியல் ஓடர் – இதில்
நடித்துக்கால் பிடித்து நயவஞ்சகம் தான்செய்து
நிறம்மாறி வாழவா நான் பிறக்க

கஸ்ரப்பட்டு உழைத்துக் கண்ணியத்தை மதித்து
இஸ்ரப்பட்டு வாழ்ந்த வாழ்க்கையது
கஸ்ரப்பட்டு உழைத்தாலும் கல்லாவில் நிலைக்கவில்லை
கள்ளன் வந்து கழுத்தறுக்கும் காலம் – இதில்
கஸ்ரப்பட்டு நாள்வேலைசெய்து கள்ளர்க்குக்
கொட்டிக் கொடுக்கவா நான் பிறக்க

காலம் மாறட்டும் கண்ணியம் ஓங்கட்டும்
பாலம் அமையட்டும் பண்பாடு வளரட்டும்
ஒருத்தன் வாழ்க்கை ஒருத்தியோடு ஆகட்டும்
கரு வளர்வது குடும்பத்துக்கு ஆகட்டும்
தப்பான தங்கங்கள் தங்குமில்லம் மறையட்டும்
அப்போது நான் பிறப்பேன்

குழந்தை தன்னைக் குழந்தையாய் நினைக்கட்டும்
குமரியை ஆண்கள் தங்கையாய் மதிக்கட்டும்
பெண்களும் ஆண்களும் பண்பாடு பேணட்டும்
பாலகர் விருப்பத்தைப் பெற்றோர்செவி மடுக்கட்டும்
கல்வியைத் தகுதியைக் கட்சிகள் மதிக்கட்டும்
கட்டாயம் அப்போது நான் பிறப்பேன் - அதுவரை
கருவிலேயே நான் காத்திருக்கிறேன் ..................

(கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய. தேசிய கலை இலக்கியப் போட்டிக்காக 2012 ல் சமர்ப்பிக்கப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. முடிசூடு

**நா**ளை வருமென்று நாட்கணக்கில் காத்திருப்பார்
வேளை வருமட்டும் வெற்றுக் கூச்சல் போட்டிருப்பார்
பொழுதை வீணாக்கிப் பொய் வேலை பார்த்திருப்பார் எப்
பொழுதேனும் முடிசூடல் எவர்க்காயின் **முடிந்திடுமோ?**

தங்கம் கிடைக்குமென்று தரங்கெட்ட செயல் செய்வார்
அங்கம் நோகாமல் அசிங்கத்தில் தான் வாழ்வார்
தலைகீழாய் நின்றாலும் தராசிலெடை போட்டாலும்
நிலைமாறல் இயன்றிடுமோ **முடிசூடல் முடிந்திடுமோ?**

சூழ்ச்சி பல செய்து சூதாட்டம் நடத்திடுவார் பிறர்
வீழ்ச்சியை விரும்பி விழாக்கள் ஒழுங்குசெய்வார்
சாமிக்கும் கண்கட்டிச் சதிராட்டம் ஆடிடுவார்
பூமியை வென்று புகழ் **முடிசூடல் முடிந்திடுமோ?**

நம்பி நின்றவரை நட்டாற்றில் தவிக்கவைப்பார்
தும்பிக்கையானைத் துணைக்கேனும் அழைக்கமாட்டாார்
பிறர் மனைக்கு இச்சித்துப் பாதை தவறிடுவார்
சிறப்பவரைச் சேர்ந்திடுமோ **முடிசூடல் முடிந்திடுமோ?**

கோடி பணம் சேர்த்துக் கொள்ளைலாபம் அடித்திடுவார்
நாடிவந்தவர்க்கு நட்டுக்கூடக் கொடுக்கமாட்டார்
தாய்க்குச் சோறிடவும் தயக்கம் காட்டிடுவார்
வாய்விட்டுக் கேட்டாலும் **முடிசூடல் முடிந்திடுமோ?**

நில்லென்றால் நிக்காது செல்லென்றால் செல்லாது
கல்கொண்டு அணைபோட்டுத் தடுத்தாலும் முடியாது
பணத்துக்கும் பணியாது சினத்துக்கும் அடங்காது
கணப்பொழுது என்றாலும் **காலமது பொன்தானே.**

விதிவரைந்த பாதையிலே விளையாடும் மனிதர்காள்
மதிபோன வழியின்றி மனம்போன வழிபோகீர்
நல்லதையே நாடிநிதம் நற்பண்பை வளர்த்திட்டால்
**வல்லமை தேடிவரும் வானுலகம் முடிசூடும்.**

**(வடமாகாண ஆக்க இலக்கியப் படைப்பாற்றல் போட்டிக்காக 2011ல் சமர்ப்பிக்கப்பட்டது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. மாற்றம் வர வேண்டுமே

**வ**ருவார் வருகின்றார் வசந்தத்தின் வாசம் பட்டு
இருப்பார் இடம்பெயர்ந்தார் இஷ்டம் தான் இல்லாமல்
கசந்தவை கனவுகளாகக் கண்மறைந்து கலையட்டும்
விசந்தனை நீக்கி மாவிடியல் வரவேண்டுமே

கஷ்டப்பட்டு உழைத்தபணம் கல்லாவில் நிலைக்கவில்லை
துஷ்டத்திலே வந்தபணம் தந்திடுமா நிம்மதியை
தாலியறுத்து வேலிவெட்டித் தட்டிப்பறித்துத் தடயமழித்து
சோலியைத் தான் குறைத்துப்பாரும் சோதனைகள் குறைந்திடுமே

கட்டிய மனைவிக்கும் கண்ணிறைந்த கணவனுக்கும்
கெட்ட மனத்தினோடு கண்மறைவில் துரோகிப்பீர்
நம்பிவந்த உம்துணையை நன்றியோடு போற்றுவீரே
வம்பில்லை உம்வாழ்வில் வளங்கள் வந்துசேர்ந்திடுமே.

பஸ்ஸில் இடிக்கின்றார் பாதையில் இகழ்கின்றார்.
துஷ்டருக்கோ குறைவில்லை துடுக்குத்தனம் மாறவில்லை
மட்டமான மனதைக்கொஞ்சம் மாறவிட்டுப் பார்த்திருந்தால்
கிட்டவந்து ஊர்வாழ்த்தும் கீர்த்தி அதைக் காணலாமே

சந்தையிலே வெள்ளாடு சரிவிலைக்கு விற்பார்மணச்
சந்தையிலே விலைக்கும்மை சளைக்காமல் விற்பார்உம்
சிந்தையில் ஏன்படவில்லை சீர்கெட்டு மனைவிக்கு
மந்தைபோல் தலையாட்ட மானமது பறந்திடுமே

விளையாட நேரமில்லை விடியும்வரை தூக்கமில்லை
முளைத்துமூன்று விடவில்லை முதுகலை மாணவர்போல
அடித்துக் கலைக்காதீர் ஐயிரண்டு வயதாரைப்
பிடித்ததைப் படிக்கவிடும் பின்னாளில் உயர்ந்திடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தமது ஆறடிதான் சொத்து வரப்போவதில்லை
குந்தவோர் நிலம்போதும் குளிரநல் வார்த்தைபோதும்
அந்தப்பக்கம் இந்தப்பக்கம் ஆயிரந்தான் உறவிருந்தும்
தந்தவை எதுவுமில்லை தர்மம்தான் தலைகாக்கும்

முதியோரை மனைவிரட்டி முதியோர்க்காய் முழங்குகின்றீர்
கதியேதும் இல்லையென்று கண்மங்கும் காலம்வரும்
பெற்றமகன் புறந்தள்ள புத்திவந்து பயனில்லை
உற்றஉம் பெற்றோரை உயர்வுடனே போற்றுவீரே.

**(கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய. தேசிய கலை இலக்கியப்போட்டி 2010ல், பிரதேச மட்டத்தில் இரண்டாமிடம் பெற்றது)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. புரிந்துகொள்

அன்பே என்பர் அமுதே என்பர்
ஆருயிரே என்பர்
இன்பமே என்பர் இதயமே என்பர்
இன்னுயிரே என்பர்
பசப்பு வார்த்தையை நம்பி
பரிதவித்து நிற்காதே
கசப்பு மருந்தை விழுங்கி
கடைசியைத் தேடாதே

செருப்பாய் நீயும் இதுவரை
சகதிக்குள் வாழ்ந்தாலும்
நெருப்பாய் மாறு ஓடுவர்
நேற்றுவரை வட்டமிட்டோர்
தங்கச்சி வாய் சொல்லும் பார்வை
தரம்கெட்டும் மேயும்
எம்கட்சி எதிர்த்து நின்றால்
எதிரிலே வருவாரோ?

புகழை விரும்பி வீழ்வர்
புதைகுழிக்குள் பலரும்
முகஸ்துதியில் மனம் மயங்காதே
முந்தானை மறக்காதே
கள்ளுண்ட வண்டுபோல
கலங்கிடாதே உன்னிலையில்
முள்மீது மலரோ மலர் மீது
முள்ளோ நாசம் மலருக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசிக் கோல் வேண்டாம்
தொல்லைக்குள் விழவேண்டாம்
வலைத்தளத்துள் படம் போட்டு
விலைபேசி விற்க வேண்டாம்
முகநூலில் சற் வேண்டாம்
முகத்தைக் காட்ட வேண்டாம்
சுகமான சுதந்திரத்தை
சுறுக்காய் இழக்க வேண்டாம்

**(கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய. தேசிய கலை இலக்கியப்போட்டி 2013ல். பிரதேச மட்டத்தில் முதலிடம் பெற்றது)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. பயமயம்

பயமாயிருக்கிறது எனக்கு – ஏன்
நான் கர்ப்பமாக இருக்கிறேன் – அதற்கு?
அதிலிருப்பது என்னினமாம் – அதனால்
பயமாயிருக்கிறது எனக்கு

பிறந்தபின் உன்னை யார் என்செய்வார்?
உன்தந்தையோ என்தந்தையோ எப்படி விட்டுப்போவது?
உன் அண்ணனோ என் அண்ணனோ எப்படி நம்புவது?
யாரோடும் விடமாட்டேன் நானே வைத்திருப்பேன்
வேலையைவிட்டாவது – ஏன்
பயமாயிருக்கிறது எனக்கு

ஓடிப்பிடிப்பது யாரோடு – நீ
மண்ணளைவது யாரோடு
பக்கத்துப் பையன் பமிலனோடா? எதிர்வீட்டு எழிலனோடா?
பமிலனும் வேண்டாம் எழிலனும் வேண்டாம்
என்னுடன் மட்டுமே விளையாடு – ஏன்
பயமாயிருக்கிறது எனக்கு

பள்ளிபோவது எவ்வாறு ? - நீ
ரியூசன் போவது எவ்வாறு?
முச்சக்கரத்திலா? இல்லை துவிச்சக்கரத்திலா?
பேரூந்திலா? இல்லை தொடரூந்திலா?
எதிலாயினும் நானே வருவேன் சமையலையும் மறந்து – ஏன்
பயமாயிருக்கிறது எனக்கு

பாலும் சோறும் தரேன்
அன்னம் தருவேன் ஒருபிடியளவே
ஒருபிடியளவிலும் கலோரியும் குறைவே
சத்தாய் உண்டால் சடுதியாய் வளர்வாய்
பெத்ததாய் என்செய்வேன் உன்னைப்பேண – ஏன்
பயமாயிருக்கிறது எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயசுக்கு வந்தநாளை இரகசியமாய்ப் பூட்டிவைப்பேன்
எனக்கெனத் தனியே கோவிலில்லை திருமணவீடில்லை
எதுவுமேயில்லை எல்லாம் உன்னுடனே
பாற்காரன் வேண்டாம் பேப்பர்க்காரன் வேண்டாம்
ரிப்பேர்க்காரன் வேண்டாம் யாருமே வேண்டாம் வீட்டுக்கு – ஏன்
பயமாயிருக்கிறது எனக்கு

போன் வேண்டாம் கணினி வேண்டாம்
இன்ரநெற் வேண்டாம் இடிகளும் வேண்டாம்
ஸ்கூட்டி வேண்டாம் ஸ்ரைல்களும் வேண்டாம்
பள்ளி வேண்டாம் படிப்புக்கூட வேண்டாம்
என்னோடிரு போதும் – ஏன்
பயமாயிருக்கிறது எனக்கு

உலகம் எங்கோ போகிறது
உத்திகள் பலவும் வருகிறது – அதிலே
கர்ப்பத்திலேயே கற்பழிக்கும் நவயுக்தி வந்துவிட்டால்
ஐயகோ நான் என்செய்வேன்
பயமாயிருக்கிறது எனக்கு – அதனால்
கர்ப்பத்தைக் கலைத்தாலென்ன???

**(கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய. தேசிய கலை இலக்கியப்போட்டி 2014ல். பிரதேச மட்டத்தில் இரண்டாமிடம் பெற்றது)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. பண்பாடு

முட்டி தெரியச் சட்டை போட்டு
முடிக்குச் சிவப்பு மையடித்து
கட்டி வைத்த கார் குழலைக்
கட்டையாக்கிக் காற்றில் விட்டு
சட்டி கவிழ்த்து விட்டது போல்
சடையைத் தலையில் இருத்திக் கொண்டு
வெட்டியாக அலைகிறீரே
வேதனை தான் தோன்றுதம்மா

பின்னித் தலை தான் முடித்துப்
பிச்சிப் பூச் சூடிக் கொண்டு
கன்னி நீவிர் போகையிலே
காளையர் பின் வந்தது போய்
சன்னி வந்த சாமி போலச்
சடையைத் தான் தொங்க விட்டு
மின்னிச் சிரித்துப் போறீரே
மனம் தவித்துப் புலம்புதம்மா

பூச்சு மேலே பூச்சுப் பூசி
பூனை மயிரை நெளித்து விட்டு
பேச்சுத் தமிழில் பிரிட்டிஸ் வாடை
பேசச் சொன்னால் போலி மழலை
கூச்சல் போடும் டக்டக் சத்தம்
கீல்ஸ் ஷப்பல் அதுதான் பெயராம்
போச்சு ஐயோ நம்ம புத்தி
போனால் காலம் திரும்பிடுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால் மீற்றர் துணியெடுத்துக்
காத்து வர வழியும் விட்டு
மேல் சட்டை என்று சொல்லி
மேனி தெரியப் போட்டுக் கொண்டு
வேல் விழிக்கு லென்ஸும் இட்டு
வெட்கத்தைத் தொலைத்து விட்டு
வால்த் தனம் தான் செய்கிறீரே
வலிக்குதம்மா பார்க்கும் நெஞ்சம்

சிங்கம் போன்ற நடையழகு
சிலிர்த்து நிற்கும் முடியழகு
பங்கம் வந்து சேர்ந்தது காண்
பாழாய்ப் போன ஸ்ரைல் இதுவோ
தொங்கும் சின்ன முடியதனைத்
தொகுத்து றபர்பான்டும் போட்டு
மங்கை போலத் தோன்றும் கோலம்
மனம் நொருங்கிப் போகுதையா


நீண்ட காலைக் கொத்தி விட்டு
நல்ல முடிக்கு மையுமிட்டு
பூண்டு ஒற்றைக் காதில் தோடு
புகையிழுத்துத் தேய்ந்த கன்னம்
வேண்டிப் போட்ட மச்சிங் சட்டை
வேலையில்லாப் பொழுது போக்கு
மாண்டு போன இளமைக் காலம்
மீண்டும் திரும்பி வருவதுண்டோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் – வாலோடு
முன்தோன்றிய மூத்த குடியாரே நீவிர்
கல்லாத காலமதில் காத்த பண்பாட்டைக்
கற்றபின் காற்றில் பறக்க விட்டதேன்? ? ?

**(கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய, தேசிய கலை இலக்கியப்போட்டி 2015ல். பிரதேச மட்டத்தில் மூன்றாமிடம் பெற்றது)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. நிலை மாறும்...

இராகம்:- விரும்பியது
தாளம்:- சதுஸ்ரம் ஏகம்

தானனனா தனனனனா தானனனா தனனனனா
தானனனா தனனனனா தானனனா தனனனனா

**வா**ழ்க்கையெனும் நதியினிலே வந்துபோகும் படகுகளே
போகுமிடம் புரியவில்லை போய்ச்சேர உதவுங்களேன்

பந்தியிலே உண்டவர்கள் பரலோகம் சென்றுவிட்டார்
சந்தியிலே நின்றவர்கள் சந்ததிக்குள் வந்துவிட்டார்
அன்றிருந்த வரலாறு அழியாத வடுவாச்சு
என்றுகூடி நாம் வாழ்வோம் எல்லாமே கனவாச்சு

(வாழ்க்கையெனும்)

உச்சத்திலே இருந்தோமே உயிரைத்தான் கொடுத்தோமே
துச்சமாக நினைத்தாலும் துயரத்தைத் தடுத்தோமே
சிந்தித்துப்பார் சிலநேரம் சிற்றினமும் சீரடையும்
நந்திபோல யாரிருக்கார் நரிவேலை தான்விலகும்

(வாழ்க்கையெனும்)

வாழ வைக்கும் கல்வியின்று வழிகாட்ட மறந்து போச்சு
கோழைபோலக் காவல்நின்று குனிந்துஅலுவல் பார்க்கலாச்சு
படிப்புக்குப் பட்டமுண்டு பாரினிலே பதவியுண்டு
நடிப்பில்நீ நின்றுவிட்டால் நலமாமோ உன்வாழ்வு

(வாழ்க்கையெனும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களைத்தான் தெய்வமென்று பெரியவர்கள் சொல்லிவிட்டார்
கண்கலங்கி வாழ்வதற்கு கவலைதான் யார்கொடுத்தார்
பொன்னைத்தான் பெரிதென்று பொய்முகங்கள் நீகாட்ட
புன்னகைதான் உன்பெயரை புகுந்தவீட்டில் நிலைநாட்ட

(வாழ்க்கையெனும்)


அச்சம்மடம் நாணம்பயிர்ப்பு அழகுப்பெண்ணே எங்கேபோச்சு
எச்சமென்ன விட்டுவைத்தீர் எம்மினமே மாறிப்போச்சு
அக்கரைதான் பச்சையென்று அறியாமல் அகன்றுவிட்டாய்
இக்கரைக்கு ஓடிவாநீ இனிதான வாழ்க்கையுண்டு

(வாழ்க்கையெனும்)

தேடித்தேடிப் பெற்றசெல்வம் தெருவழியே ஓடிப்போச்சு
கூடிக்கூடி வாழ்ந்ததெல்லாம் குற்றுயிராய்க் குழம்பிப்போச்சு
துன்பம்கண்டு துவளாதே துயரில்நீ மூழ்காதே
இன்பம்வரும் இனிதாகும் எல்லாமே நலமாகும்

(வாழ்க்கையெனும்)

(2017)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. எது நட்பு?

இராகம்: சங்கராபரணம்
தாளம்: ஆதி / சதுஸ்ர ஏகம்

தன்னனான தனனனான தான தான தானனா
தன்னனான தனனனான தான தான தானனா

காட்டு வழியில் நண்பர் இருவர் கதைத்துக்கொண்டு போயினர்
பாட்டுப்பாடி ஆட்டம் போட்டுப் பாதை மாறிப் போயினர்
போகும் வழி புரியாமல் பேயறைந்தார் ஆயினர்
ஆகும் பல நேரமென்று அழுது கலங்கித் தவித்தனர்.

அந்த நேரம் பார்த்து அங்கே அதிர்வுச் சத்தம் கேட்டது
மந்தமான ஒளியில் பெரிய மிருகம் அசைந்து வந்தது.
வந்த கரடி உருவம் கண்டு வாயடைத்துப் போயினர்
சொந்த உயிர் காக்க வேண்டும் சொற்ப நேரம் தயங்கினர்.

பிரிந்து போன ஒருவன் ஓடிப் பெரிய மரத்தில் ஏறினன்.
தெரியாது மரமேற தனித்து ஒருவன் கலங்கினன்
எண்ணம் ஒன்று வந்துதிக்க எளிதில் முடிவு கண்டனன்.
மண்ணில் விழுந்து கிடந்தனன் மரித்தவன் போல் மாறினன்.

பட்டுக் கரடி பக்கம் வந்து புரட்டிப் புரட்டிப் பார்த்தது
முட்டி முட்டிப் பார்த்தது முகர்ந்து முகர்ந்து பார்த்தது.
முயன்ற கரடி முயற்சி விட்டு முடிவு ஒன்று கண்டது.
பயன் ஏதும் இல்லை என்று பற்றை நாடிப் போனது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்ற நண்பன் கீழிறங்கி உடன் விரைந்து வந்தனன்.
சற்று முன்னர் கரடி சொன்ன செய்தியைச் சொல் என்றனன்.
ஆபத்திலே உதவாத நட்பு வேண்டாம் என்றது.
கோபத்தோடு கூறியே காத தூரம் போயினன்.

கொள்வதெல்லாம் நட்பல்ல கொண்டதெல்லாம் அன்பல்ல
உள்ளம் தொடும் உண்மை நட்பின் உயர்வு கண்டு வாழுங்கள்.
கொள்வதெல்லாம் நட்பல்ல கொண்டதெல்லாம் அன்பல்ல
உள்ளம் தொடும் உண்மை நட்பின் உயர்வு கண்டு வாழுங்கள்

**(கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய. தேசிய கலை இலக்கியப்போட்டி 2010 ல். பிரதேச மட்டத்தில் முதலிடம் பெற்றது)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. கண்டங்கள் தாண்டி..

இராகம்– பெஹாக்
தாளம்– ஆதி

பல்லவி

கண்களில் ஆயிரம் கனவிருந்தால் – இன்றே
கண்டங்கள் ஆயிரம் கடந்திடலாம் – பெண்ணே
(கண்களில் ஆயிரம்)

அனுபல்லவி

இன்பங்கள் மட்டுமே வாழ்க்கையல்ல – எண்ணில்
துன்பங்கள் புடம்போடும் உன்மனதை பெண்ணே
(கண்களில் ஆயிரம்)

சரணங்கள்

கண்கள் காணும் காட்சி யாவும் கானலல்ல – இம்
மண்ணில் மலரும் மலர்கள் யாவும் மாலைக்கல்ல
விண்ணில் வாழும் தேவருக்கும் வீழ்ச்சியுண்டு – உன்
எண்ணத்தில் உயர்ந்திருந்தால் ஏற்றமுண்டு – பெண்ணே
(கண்களில் ஆயிரம்)

சின்னச் சின்ன தோல்வி என்றும் சிறுமையல்ல – இங்கு
மின்னும் கண்ணீர் காட்டும் அன்பு மடமையல்ல
அன்னம் போல தேர்ந்து வாழு அழகாக – நான்
என்ன சொல்ல ஏது சொல்ல உனக்காக – பெண்ணே
(கண்களில் ஆயிரம்)

அடக்குமுறையும் அவலக்கதையும் அழியாதோ – உனை
மடக்க முயலும் மானம் உனது மொழியாமோ
இடுக்கண் வந்து சூழ்ந்தாலும் இளகாதே – நீ
தொடுக்க வேண்டும் தனிப்பாலம் தளராதே – பெண்ணே
(கண்களில் ஆயிரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் என்ற பேரிலுண்டு பேதைமையாம் - அவர்
கண்கள் முன்பு காட்ட வேண்டும் சாதனையாம்
விண்ணில் பறந்து நாம் விலக்கோம் போதனைகள்
மண்ணில் கூடி நாம் மிதிப்போம் சோதனைகள் - பெண்ணே
(கண்களில் ஆயிரம்)

**(கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய. தேசிய கலை இலக்கியப்போட்டி 2013ல் பிரதேச மட்டத்தில் மற்றும் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றது)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. பணமே! பாடையில் போ

தானன தானனனா தனனா தானன தானனனா

பாடையில் போ பணமே – உடனே
பாடையில் போ பணமே
பந்தம் பாசமெல்லாம் உனக்காய்
பாரினில் போடுறதே வேஷம்

(பாடையில்)

தந்தன தந்தன தந்தன தானா

தம்பியைத் தடுத்துத் தலையை எடுப்பான்
தங்கையைத் தள்ளித் தாலி அறுப்பான்
நம்பி நின்றவரை நட்டாற்றில் விடுவான்
நன்றி மறந்துநய வஞ்சகம் புரிவான்

(பாடையில்)

தாயையும் தந்தையையும் தவிக்க விடுவான்
தன்னை மறந்து தாளுக்கு அலைவான்
பேயும் இரங்கும் பெண்களுக் கென்பர்
நீயோ இரங்காய் நல்வாழ் வீயாய்

(பாடையில்)

பட்டமும் பதவியும் பணத்துக்கென் றாச்சு
பாசமும் நேசமும் காசுக்கே பேச்சு
சட்டமும் சாதியும் சல்லிக்கே மூச்சு
வாங்குது மறைந்து ஏன்வெளிப் பூச்சு

(பாடையில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியம் தருபவ ரிடத்திலும் லஞ்சம்
பைத்தியம் வாழ்கின்ற குடிலிலும் லஞ்சம்
பள்ளிக்கு லஞ்சம் பதவிக்கு லஞ்சம்
வள்ளிநாதன் தனை வாழ்த்தவும் லஞ்சம்

(பாடையில்)

காரும் வாங்கலாம் கணவனும் வாங்கலாம்
பேர் சொல்லப் பிள்ளையும் வாங்கலாம்
ஊர் மெச்ச உலாவும் வரலாம்
பார் நடிக்கும் பணமேநீ இருந்தால்

(பாடையில்)

வேலிக்குச் சண்டை தாலிக்குச் சண்டை
கூலிக்குச் சண்டை கூத்திக்கும் சண்டை
காலி மண்டைகளும் கனம்பெறும் காசால்
போலி மனிதர்களும் பொய்வாழ்த் துரைப்பார்

(பாடையில்)

அன்பு வலுக்கும் ஆசை அகன்றால்
பண்பு பெருகும் பணம்நீ மரித்தால்
துன்பம் குறையும் தூக்கம் கிடைக்கும்
இன்பம் சேரும் வம்பன்நீ இறந்தால்

(பாடையில்)

**(கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய. தேசிய கலை இலக்கியப்போட்டி 2014ல். சமர்ப்பிக்கப்பட்டது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. பதவிக்காய்...

இராகம் :- சண்முகப்பிரியா
தாளம் :- ஆதி

காலில் விழுந்தேனும் கதிரை பிடி
கற்றது ஏதுமில்லை குதிரைக்காள் பிடி

பட்டறிவும் இல்லை படிப்பறிவும் இல்லை
பக்கத்துப் பண்டிதனின் பரிந்துரை தானுமில்லை
திட்டித்திட்டிப் பெருங்குடிகள் தீட்டினாலும் பலமடல்கள்
தில்லாக நிலைத்திருக்க திட்டம்போட்டுப் படியேறி

(காலில்....)

கடமையில் கண்ணில்லை கண்ணியம் ஏதுமில்லை
கடைமட்ட ஊழியரின் கட்டளைக்குக் குறைவில்லை
மடமைதனை மறைக்க மந்திர அறிவுண்டு
மற்றவர் தனைமுந்தி மந்திரி வீடேகி

(காலில்....)

பக்குவமும் இல்லை பகிர்ந்தளிப்பும் இல்லை
பந்தபாசம் பெரிதென்றால் பதவியால் பயனில்லை
பக்தர் பலருண்டு புனைந்து கோள்சொல்ல
பழிவாங்கிப் பந்தாட பதவி வேண்டுமென்று

(காலில்....)

வாக்கினில் மெய்யில்லை வருகையில் ஒழுங்கில்லை
வந்தவர் வருபவர்க்கு வசதிகள் போதவில்லை
நோக்கம் ஒன்றேதான் நோகாமல் அனுபவிக்க
நாணம் தனைமறந்து நாலாறு வழிதேடி

(காலில்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றம் புரிந்தவர் குரங்காய்க் குதிக்கிறார்
குற்றம் அறியார் குறுகி நடக்கிறார்
கொற்றவன் தர்மம் கொல்லைவழி போகவிட்டு
சுற்றத்தோடு அனுபவிக்க சுகபதவி தனைவேண்டி

(காலில்....)

உனக்கல்ல உபதேசம் ஊருக்குத்தான் என்பதுபோல்
எனக்கென்ன பதவியுண்டு எவரிருக்கார் எதிர்ப்பதற்கு
எனக்கான எல்லாம்தா எடுத்தாள அறிவுண்டு
எதைச்செய்ய எவருக்கு என்பதில் தான் அறிவில்லை

(காலில்....)

ஊருக்குள் பேரில்லை ஊழியரும் உறவில்லை
பேருக்கு நடிக்கின்றார் பெருமக்கள் முகம்முன்னே
பச்சோந்தி மனிதருக்கு பலவேஷம் தான் கிடைக்கும்
அச்சமோ அதிகம்தான் பதவி பறிபோனால்

(காலில்....)

காற்று எப்போதும் காட்டும் திசை செல்வதில்லை
மாற்றம் ஒன்றேதான் மாறாது இதுஉண்மை
என்றாவது ஒருநாள் எல்லாமே நிறம்மாறும்
அன்றுநீர் என்செய்வீர் ஆர்துணைதான் பெறுவீர் – அதுவரை

(காலில்....)

தகுதியை வளர்த்திடுவீர் தக்கதைச் செய்திடுவீர்
தஞ்சமென வருபவர்க்குத் தயங்காமல் உதவிடுவீர்
சமத்துவம் பேணிடுவீர் சரிவழி காட்டிடுவீர்
சுமக்கின்ற பதவி சேவைக்கென்றே உணர்வீர் – அப்போ

**கால் போகும் வழிதேடி கதிரை வரும்**
**வால்பிடிக்கும் கலாசாரம் வணக்கம் சொல்லும்**

(கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய, தேசிய கலை இலக்கியப்போட்டி 2015 ல், பிரதேச மட்டத்தில் முதலிடம் பெற்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. பார்லருக்கு வாங்களேன்

**வ**ந்து பார் வனிதையே
நொந்து போவாய் உண்மையே

கார் குழலைக் கட் பண்ணி வார் போட்டு விடுவோம்.
ஈர் பிடித்ததறியாமல் இருள்மையும் அடிப்போம்.
நீர் கண்ட தலையிலிருந்த நிறமும் மங்கிப்போகும்.
ஆர் கண்டார் முடிகளது ஆயுள் கேள்வியாகும்.
(**வ**ந்து பார் வனிதையே......)

கருவண்ணம் குறைவென்று கண்கலங்கி வருவார்.
தருகின்ற சல்லிக்கு தாக்காட்டி அப்புவோம்.
வருகின்ற வாரம் மட்டும் வடிவான வண்ணம் வரும்.
பருபள்ளத்தோடு கொண்ட பாங்கும் தேய்ந்து போகும்.
(**வ**ந்து பார் வனிதையே......)

வில் போன்ற புருவமதை விலை பேசி வழிப்போம்.
எல்லோரும் செய்கிறார் எழில் கூடும் என்போம்.
இல்லாத புருவத்தை இருப்பது போல் வரைவோம்.
நல்லதை விடுத்து நகலுக்கேன் இந்தாசை.
(**வ**ந்து பார் வனிதையே......)

கால் மயிரும், கை மயிரும் கனத்துப் போச்சு.
வால் கூட வரும்நாளில் வளர்ந்திடுமோ என்றே.
நூல் கொண்டிழுத்து நூதனமாய் துளை மூட
மேலெழும்பும் பலமுடிகள் மரமந்தியது போல.
(**வ**ந்து பார் வனிதையே......)

மணமகளை அலங்கரிக்க மனை தேடிப் போவோம்.
பணமாயிரம் இருபத்தைந்து பணிவாகக் கேட்போம்.
குணமது தெரியாமல் கொண்ட கோலம் மாற்றுவோம்.
மணமகனும் பார்ப்பார் மருண்டோடுவார் விரைந்து.
(**வ**ந்து பார் வனிதையே......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலவைத் தூள் பிளீச்சிங் சட்டைக்குக் கேடாம்.
செலவான பிளீச்சிங் சருமத்துக்கு ஆமோ.
விலகுமோ பிறப்பிலிருந்த விம்பம் சலவையால்.
நலமான இருபது நாற்பதாகும் நலிந்து.

(**வ**ந்து பார் வனிதையே......)

கால் கைக்கு மசாஜ் கலர்கலராய் நகப்பூச்சு
வேல்விழி புருவத்தோடு வளரிமைக்கும் மையடிப்பு
தோலுக்கு ஒவ்வாத வகைக்களிம்பு மின்னியொடு
மேலுதடு கீழுதடு மயக்கும் கலரிடுவோம்.

(**வ**ந்து பார் வனிதையே......)

மீசை முடி, தாடி முடி முகத்தில் பூனை முடி
ஆசையாய் வழித்தெடுத்து அடைப்போம் வளித்துளை.
காசைக் கரியாக்கிக் கரும்புள்ளி தனைக்கிள்ள
மோசமாய் வரும்பள்ளம் முகத்தை முதிர்விக்கும்.

(**வ**ந்து பார் வனிதையே......)

நீள்முடியை நெளித்து நெளி முடியை நிமிர்த்தி
பாழ்படுத்தும் வித்தை பலதும் நாம் அறிவோம்.
ஆள்நாமம் பொருளென்று அலங்கரிக்கும் டடூக்கள்.
சீழ்பிடித்துப் புற்றாக்கும் சொல்லக்கூட மாட்டோமே.

(**வ**ந்து பார் வனிதையே......)

செயற்கையாய் வருமழகு சேதாரம் மிக அதிகம்.
இயற்கை தருமழகே இறப்பு வரை நிலைத்திருக்கும்.
நற்காற்று நன்னீரும் நற்தூக்கம் நல்லுணவும்
நற்பயிற்சியொடு தியானம் நவிலும் பேரழகே.

(**வ**ந்து பார் வனிதையே......)

(கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய. தேசிய கலை இலக்கியப் போட்டி 2016ல். பிரதேச மட்டத்தில் இரண்டாமிடம் பெற்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுகதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. உணர்வோடு கலந்தது

வெயிலும் இல்லாத, மழையும் இல்லாத மந்தாரநேரம். எஞ்சியிருக்கும் சிறுபுழுக்கத்தையும் விரட்டியடிக்கும் குளிர்ந்த தென்றல். ஆரவாரமற்ற அமைதியான சூழல். பறவைகளின் இனிய இசைஒலி. போதாக் குறைக்குத் தெய்வசந்நிதி. அருணனைச் சூழ இத்தனை இருந்தும், அவன் மனது மட்டும் கோபத்தால் கொதித்துக் கொண்டி ருந்தது. பிள்ளையார் கோவில் ஆலமரத்தடியில் நின்றவாறு அடிக்கடி மணிக்கூட்டைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"மணி பதினொண்டாகப் போகுது. பத்துமணிக்கு வாறனெண்டவளை இன்னுங்காணேல்லை. எங்கை ஆடப் போட்டாளோ தெரியாது. வரட்டும் இண்டைக்கு." மனம் கறுவிக் கொண்டது.

அருணன் யாழ்ப்பாணத்தில் பிறந்து, வாழ்பவன். அருந்ததி முல்லைத் தீவில் பிறந்து வளர்ந்தவள். யாழ்ப்பாண நிறுவனமொன்றில் வேலை கிடைத்ததால் ஒருவருடமாக யாழ்ப்பாணத்தில் வாழ்பவள். இருவரும் ஒரே இடத்தில் வேலைசெய்வதால், சாதாரணமாகப் பழகத்தொடங் கினாலும் நாளடைவில் ஒருவரை ஒருவருக்குப் பிடித்துப் போகப் பழக்கம் நெருக்கமானது. அலுவலகத்தில் சாதாரணமாகக் கதைத்துக் கொண்டாலும், சனிக்கிழமைகளில் இருவரும் சந்தித்துக் கொள்வது வழக்கம். இன்றும் சனிதான். பத்துமணிக்கு வருவதாகச் சொன்ன அருந்ததியை இன்னுங் காணவில்லை. என்றாலும் அருணனின் கோபத்திற்குஅதுமட்டும் காரணமல்ல. அவனுக்கு நியாயமாகப்பட்ட பாரதூரமான காரணம் வேறு.

அருணனுக்கு ஒரே ஒரு தங்கை. பெயர் சுபா. நன்றாக நடனம் ஆடுவாள். அவளின் எந்த நிகழ்வுக்கும் அவன் போவது வழக்கம். தங்கை என்பதோடு அவனுக்கும் நடனத்தில் ஈடு பாடிருந்தது. அன்றும் அப்படித்தான். தங்கையின் நிகழ்ச்சியைப் பார்க்கப் போயிருந்தான். எப்போதும் முதல் வரிசைகளில் அமரும் அருணனுக்கு அன்று, கடைசி வரிசையில் தான் இடம் கிடைத்தது. குழுவினரின் நடனம் தொடங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியதும், பக்கத்திலிருந்த இளைஞர்களின் விமர்சனமும் தொடங்கியது. விமர்சனம் நடனத்தைப் பற்றியல்ல. ஆடியவர்களைப் பற்றி, அவர்களது உடலைப்பற்றி. அப்போது அவனுக்குப் புரிந்தது, இசைக்கச்சேரியை விட நடனத்துக்கு அதிக இளவட்டங்கள் வருவது ஏனென்று. மனம் அருவருப்பால் நிரம்பிக் கொள்ள அவனால் நிகழ்ச்சியைத் தொடர்ந்து பார்க்கமுடியாமற் போனது. பார்த்தாலும் கலையுணர்ச்சியை மீறி ஒரு குற்றஉணர்ச்சி மனதைநெருடியது. அன்றே தீர்மானித்தான். சுபாவின் நடனத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அவள் எவ்வளவோ மன்றாடினாள். என்றாலும் அண்ணனை மீற முடியவில்லை. நடன நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்குக் கூடத் தானும் போவதில்லை. சுபா வையும் விடுவதில்லை. அப்படிப்பட்டவனுக்கு அருந்ததியோடு பழகும் வரை, அவள் நடனத்தில் ஈடுபாடு காட்டக் கூடும் என்ற சந்தேகமே இருக்கவில்லை. அவளைப் பொறுத்தவரை, மிருதங்க வித்துவானின் கரங்கள் எப்போதும் எதிலாவது தட்டிக் கொண்டிருப்பதுபோல, நடனம் பழகுபவர்களும் நடை, உடை, பாவனைகளில் அதை வெளிக் காட்டுபவர்கள் என்று நம்பினான். அருந்ததியின் நடவடிக்கையில் அப்படி எதுவும் தெரியவில்லை. பதுமைபோல அலட்டிக் கொள்ளாத நடை. சாந்தமான முகம். அவனே நேரில் பார்க்கும் வரை, அவள் நாட்டியம் ஆடக்கூடும் என்று நம்பவில்லை.

அருந்ததி, நான்கு நாட்களுக்கு முன்பு லீவு போட்டுவிட்டு முல்லைத் தீவுக்குச் சென்றிருந்தாள். தங்கள் கோவில் திருவிழாவுக்காகத்தான் போவதாகக் கூறியிருந்தாள். இவனுக்குத் தெரியாது, விழாவில் இவளது நிகழ்வு இருக்குமென்று. உண்மையில் முல்லைத்தீவு போகும் வரை அருந்ததிக்குக் கூடத் தெரியாது. அவள் முல்லைத் தீவுக்குப் போன அன்று, அங்கிருந்து திரும்பி வந்த, அருந்ததியின் தந்தையின் நண்பரான, இவர்களுடன் வேலைசெய்யும் ஒருவர் மூலமே இவ் விஷயத்தைக் கேள்விப்பட்டான் அருணன். அவள் நடனம் ஆடுவாள் என்ற வியப்பும், அதைத் தனக்கு மறைத்துவிட்டாள் என்ற கோபமும் சேர, இவனும் லீவு போட்டுவிட்டு முல்லைத்தீவுக்குப் போனான். கோவிலில் கூட்டத்தில் கலந்திருந்தான். சரியான நேரப்படி திரைவிலக மேடையில் அருந்ததி. அருணனின் சிறிய எதிர்பார்ப்பும் பொய்த்துப் போனது. என்றாலும் எழும்பிப் போய்விடவில்லை. உண்மையிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமையாக ஆடினாள் அருந்ததி. அவளது ஒவ்வொரு அசைவும் ஒவ்வொரு கலையம்சம். முகபாவமோ உச்சம். அவள் அழும் போது சபையும் அழுதது. சிரிக்கும் போது சிரித்தது. சபை முழுக்க அவளிலேயே லயித்திருந்தது.

கைதட்டல் வானைப் பிளக்க அருணனும் இவ்வுலகிற்கு மீண்டான். இதுவரை இருந்த அருவருப்புக் கூட ஏற்படாததையிட்டு வியந்தான். என்றாலும் மீண்டும் அவனது சாத்தான் மனதைச் சந்தேகம் ஆக்கிர மித்துக் கொண்டது. எத்தனைபேர் அவளை வேறுமாதிரி ரசித்திருப்பார்கள். அவளைக் காணப்பிடிக்கவில்லை. நடக்கத் தொடங்கினான்.

"சே! இந்தப் பிள்ளை என்னமாதிரி ஆடுறாளப்பா. இவளுக்காக டான்சோ, இல்லாட்டி டான்சுக்காக இவளோ எண்டு மட்டுக்கட்டேலாமல் கிடக்கு. உப்பிடியொரு நிகழ்ச்சியை என்ரை வாழ்க்கையிலை காணேல்லை" இரு பெரியவர்கள் கதைத்தபடி முன்னால் சென்று கொண்டிருந்தார்கள்.

உண்மையில் இதைக்கேட்டுப் பெருமைப்படவேண்டிய அருணனின் மனசு பொறாமைப்பட்டது. தனக்கில்லாத பெருமை தன் காதலிக்குக் கிடைப்பதில் ஏன் பொறாமை? அருணன் கொதித்துக் கொண்டிருந்தான். அவள் வேண்டுமென்றே தன்னிடம் மறைத்துத் தனக்கு அநியாயம் செய்துவிட்டதாக நம்பினான்.

லீவு முடிந்து வேலைக்குவந்த அருந்ததியிடம் அவன் பெரிதாகக் கதைக்கவில்லை. அன்று பத்துமணிக்கு கோவிலடிக்கு வரச் சொன்னான். நேரம் கடந்துவிட்டது. அதுதான் அவன் கோபத்துக்குக் காரணம்.

தூரத்தில் அருந்ததி வருவது தெரிந்தது. இதுவரை வசந்தமாக இனித்த அவள் வரவு, இன்று கோடைவெயிலாகக் கசந்தது அவனுக்கு. மெதுவாக ஒருகல் மீதுஅமர்ந்தாள் அவள்.
"இவ்வளவு நேரமும் என்னசெய்தனீர?" கடுமையாகக் கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்ரிக்குக் கொஞ்சம் சுகமில்லை. நான் தான் எல்லாவேலையும் செய்தனான். அதுதான்...."

"ஆ.....நான் நினைச்சன் எங்கேனும் ஆடப்போட்டிராக்கும் எண்டு" குத்தலாய் அருணன்.

"என்ன அருணன் வந்ததிலை இருந்துபார்க்கிறன் ஒரு மாதிரி யிருக்கிறீங்கள்" பொறுமையிழந்தாள் அருந்ததி.

"ஒருமாதிரியான ஆக்களுக்கு, ஒருமாதிரித்தான் கதைக்கவேணும்"

"இஞ்சை...என்னென்டாலும் வெளிப்படையாக் கதையுங்கோ, மனசில ஒண்டைவைச்சுக்கொண்டு.... 'ஆடுறா' எண்டால் என்ன அர்த்தம்?"

"ஏன் உமக்கு விளங்கேல்லையோ. ஊருக்கு ஏன் போனீர்?"

"இதென்ன புதிசாக் கேக்கிறீங்கள். திருவிழாவுக்குத்தான்" புரியாமல் அவள்.

"தனியத் திருவிழாதானே? வேறை ஒண்டும் நடக்கேல்லையோ?"

"வேறை...அதிலை என்ரை ப்ரோகிராம் ஒண்டு.... வேறை.... வேறை"

"அதுதான்.... அதுதான்..... உம்மட நிகழ்ச்சி இருக்கெண்டு ஏன் சொல்லேல்லை?"

"எனக்கே அங்கை போனாப்பிறகுதான் தெரியும். வழமையா நடக்கிற நாட்டுக்கூத்து திடீரெண்டு இல்லாமல் போச்சு. அதுதான்...." இழுத்தாள் அருந்ததி.

"அதுகிடக்கட்டும். நீர் டான்ஸ் ஆடுவீரெண்டு ஏன் சொல்லேல்லை?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு அதுதெரியும், இது தெரியும் எண்டு சொல்ற பழக்கம் எனக்கில்லை. உங்களுக்கே தெரிஞ்சதுதானே."

"இல்லை. எனக்கு டான்ஸ் ஆடுறது பிடிக்காதெண்டு தெரிஞ்சு மறைச்சிருக்கிறீர்"

"உங்களுக்குப் பிடிக்காதோ. இதே இப்பதான் எனக்குத் தெரியும். அப்ப நீங்களும் மறைச்சிருக்கிறீங்கள் தானே."

"நீர் ஆடுவீரெண்டு தெரியாது. அதனாலை சொல்லேல்லை."

"உங்களுக்குப் பிடிக்காதெண்டு தெரியாது. அதனாலை சொல் லேல்லை"

"என்ன ஏட்டிக்குப் போட்டியாய்க் கதைக்கிறீர்"

"என்ன அருணன். ஆகத்தான் வெருட்டிறீங்கள். என்னை என்னசெய்யச் சொல்லுறீங்கள்?"

"நீர் இனிமேல் டான்ஸ் ஆடக்கூடாது."

"காரணமென்ன?", நிதானமாகக் கேட்டாள் அருந்ததி.

"எனக்குப் பிடிக்கேல்லை", வெடுக்கென்று அருணன்.

"உங்களுக்குப் பிடிக்காததுக்கு நியாயமான காரணம் இருந்தாச் சொல்லுங்கோ"

"பிடிக்கேல்லை எண்டா விடுமன்"

"அப்பசரி. நீங்கள் சிகரட் பிடிக்கிறது எனக்குப் பிடிக்கேல்லை. அதைவிடுங்கோ முதல்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சிகரட் இல்லாமை என்னாலை இருக்கேலாது”, அருணன்.
“உங்களுக்குக் கெட்டது செய்யிற பழக்கத்தையே விட ஏலாமலிருக்கு உங்களாலை. உண்மையாய் விட ஏலாது எண்டுறதை விட, இவளுக்காக நான் மாறவோ, எண்ட ஆதிக்க உணர்வுதான் தெரியுது. அருணன் ஒண்டுசொல்லுறன். கோபப்படாமைக் கேளுங்கோ. அவரவருக்கு எண்டு சிலதனிப்பட்ட விருப்புவெறுப்பு இருக்கு. அதிலை கட்டின கணவன் எண்டாலும் தலையிடுறது சரியில்லை”

“அப்ப டான்சை விடேலாது என்கிறீர். என்னைவிட டான்ஸ் தான் உமக்குப் பெரிசாய்ப் போச்சு. என்ன?” கோபமாக அருணன்.

“ஏன் இப்படியெல்லாம் கதைக்கிறீங்கள். இதிலை பெரிசுசின்னன் எண்டுறதுக்கு ஒண்டுமில்லை. ரண்டு கண்ணிலை எதுவேணும். எண்டிறது மாதிரிக்கிடக்கு நீங்கள் கேக்கிறது” ஆதங்கமாகக் கூறினாள் அருந்ததி.

“நான் சொன்னவுடனே, மதிப்புத் தந்து என்ரை தங்கச்சி டான்சையே விட்டுட்டாள். ஆனால் நீர்....”

“மதிச்சுவிட்டவள் எண்டு நினையாதேங்கோ. பயத்திலை, உங்கடை ஆதிக்கத்துக்கு அடங்கியிருப்பாள். டான்சிலை சாதாரண ஈடுபாடு அவளுக்கு இருந்திருக்கும். அதுதான் அவளாலை விடமுடிஞ்சிருக்கு. ஆனா எனக்கு அதுபற்றிக் கனக்கக் கனவிருக்கு. விடுறன் எண்டு உங்களுக்காகச் சொன்னாலும் அதுவெறும் உதட்டளவிலை சொன்னதாய்த்தானிருக்கும் அருணன்”

“வீண்கதை வேண்டாம். உமக்குநான் வேணுமெண்டா டான்சைவிடும். இல்லையெண்டால்....”
“இல்லையெண்டா....” கண்கலங்க அருந்ததி.

“நான் ஆட்டக்காரியின்ர காதலனாய் - கணவனாய் இருக்க விரும்பேலை” தீர்க்கமாகச் சொன்னான் அருணன்.
அருந்ததியின் கண்கள் கண்ணீரால் நிரம்ப, நெஞ்சை எதுவோ அடைத்துக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அருணன், எனக்கு நீங்களும் முக்கியம். டான்சும் முக்கியம். ஆனால் நீங்களில்லாமல், உங்கடை நினைவோடை, தனிய, என்னாலை வாழ முடியும். ஆனால் டான்சை விட்டுட்டு உங்களோடை வாழ்ந்தாலும், அது போலிவாழ்க்கையாய்த் தானிருக்கும். உங்கடை வாழ்க்கையும் பாழாகும். டான்சை விடமாட்டன் எண்டுபிடிவாதம் பிடிக்கேலை. விட முடியாமற் கிடக்கு எண்டுதான் சொல்லுறன். உங்களை மனசிலை சுமக்கிறது ஆறுமாசமாய்த்தான். ஆனா, காலிலை எப்ப சலங்கை கட்டினேனோ, அண்டிலிருந்து இருபதுவருஷமாய் அதை, என் உணர்விலை சுமக்கிறன். என்னோடை ஒன்றிப் போனது அது. என்ரை வாழ்க்கையை டான்சுக்காகவே வாழ்ந்திட்டுப் போறன். இப்ப கூட உங்களிலைநான் கோபப்படேல்லை. நீங்கள் என்ன செய்தாலும் உங்களைக் கோபிக்க என்னாலை முடியாது. அதுக்காகப் போலி வாழ்க்கை வாழ்ந்து உங்களை வேதனைப்படுத்த நான் விரும்பேல்லை. உங்கள் மனதுக்கேற்றபடி, மனைவி கிடைச்சு, சந்தோசமாய் நீங்கள் வாழ, எங்கிருந்தாலும் உங்களுக்காக நான் பிரார்த்திப்பேன். வாழ்த் துவேன். போட்டுவாறன். இல்லை... போறன்" மனஉறுதியோடு நடக்கத் தொடங்கினாள் அருந்ததி.

இதைச் சற்றும் எதிர்பாராமல் அரண்டுபோய் நின்றான் அருணன்.

(யாவும் கற்பனை)

(13-19/07/2003 ந் திகதிய சுடர்ஒளி வாரமலரில் பிரசுரிக்கப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. காசுக்கோர் வாழ்க்கை

பத்து ரூபாக்கு விற்கப்பட்ட பொம்மை –அது
ஆடியது நான் சொன்னபடி
பத்துலட்சத்திற்கு விற்கப்பட்ட பொம்மை – அது
ஆட்டுவித்தது என்னை தான் நினைத்தபடி
நானும் ஒரு இயந்திரமாய்"..

கவிதை தொடர்ந்தது. கைகள் பலவீனமாய் சுடரொளி வாரப் பத்திரிகையைப் பற்றியிருக்கக் கண்கள் கவிதைப்புனலை மேய்ந்து கொண்டிருந்தது. அதன்பயனாய் மனது கடந்த காலத்தை மேயப்போனது.

பணத்தால் கீழ்நிலையிலிருந்த சாதாரண கூலித் தொழிலாளியின் குடும்பமது. தாய் தகப்பனோடு மூன்று பெண்மக்கள். ஆசைக் கொரு ஆண்மகன். சௌந்தர்யா பெண்ணில் மூத்தவள். மூன்றும் ஒன்றும் அடுப்பும் நெருப்பும், சேர்ந்திருக்காது என்பார்கள். விதி விலக்காய் அவர்கள் குடும்பம். நால்வருமே படிப்பில் பரவாயில்லாமல் இருந்தார்கள். அண்ணன் பல்கலைக்கழகத்திற்குப் போய் வந்தவன். அவள் வெளிவாரியாகப் பட்டம் பெற்றாள். இருவரும் ஆசிரியர்ப் பயிற்சியிலும் கணணியிலும் தம்மை வளர்த்துக் கொண்டிருந்தார்கள். பணம் குறைவு தான். ஆனால் குணம் நிறைந் திருந்தது. ஒரு மனிதனுக்குத் தேவையான பரிவு, பாசம் எல்லாமே வீட்டிலேயே சௌந்தர்யாவுக்கு அளவுக் கதிகமாகவே கிடைத்திருந்ததால், அதை வெளியே தேடவேண்டிய அவசியமிருக்கவில்லை. அதனால்த் தானோ என்னவோ காதல் கத்தரிக்காய் என்று எந்தப் பூனையும் அவள் வழியில் குறுக்கே வரவில்லை. வந்திருந்தால் அவள் பாதை மாறியிருக்கும்.

அமைதியான சுபாவம். அலட்டல் இல்லாப் பேச்சு. பேரழகு இல்லாத போதிலும் கவர்ச்சியான தோற்றம். இதற்காகவே பல்கலையில் ஒரு சில கலை ஆர்வலர், நேரடியாகவே தம் விருப்பத்தைத் தெரிவித்திருந்த போதும், அதைப் பண்பாய் மறுத்து நட்பைப் பேணினாள். அதுவும் கலைஞர்கள் உணர்ச்சி மிக்கவர்கள். பல பெண்களோடு தொடர்புபட்டிருப்பார்கள் என்று யாரோ கூறியதை நம்பி. அவளுக்கு இருந்த ஒரு முகமும் படிப்பு, கலையென்று திரும்பியிருந்த தால் அதைக் காரணம் காட்டியதால் பல சம்பந்தங்கள் கைநழுவிப் போயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையில் சேர்ந்த பின்பும், அன்றாட வாழ்க்கையில் ஏற்பட்ட பல சம்பவங்களுக்குப் பார்வையாளராக இருந்த காரணத்தால், ஆண்களில் நம்பிக்கை தேய்ந்து போனது. சீதனம் என்று வாய் பிளக்கும் சம்பந்தங்களை ஏற்கமுடியவில்லை. பெற்றோரால் விலை நிர்ணயம் செய்யப்பட்டுப் பெறுமதி போட் மாட்டப்பட்டுத் திருமணச் சந்தையில் மாப்பிள்ளை என்ற பெயரோடு நிறுத்தப்பட்டவர்களை மதிக்க முடியவில்லை. மன்னிக்க முடியவில்லை. சரிசமமாக வாழ்க்கையைத் தொடங்கவே அவள் ஆசைப்பட்டாள். வாழ்க்கையைக் கொள்வனவு செய்ய அவள் விரும்பவில்லை.

வயது முப்பத்தைந்தை எட்டியது. இருபத்தைந்து போல்த் தோற்றம் எனினும், முதிர் கன்னி என்று பட்டம். தங்கைகள் தமக்கான வாழ்க்கையைத் தேடிச்சென்ற பின்பும், அவளது திருமணம் தள்ளிப் போனதால் அவள் கவலைப்பட்டதில்லை. சொல்லப்போனால் ஒவ்வொரு சம்பந்தமும் நழுவிப் போனபோது மிகுந்த நிம்மதியை உணர்ந்தாள். ஆனால் அவளை எண்ணி ஊரே கவலைப்பட்டுக் கொண்டது. பார்க்குமிடமெல்லாம் விசாரணை நடத்தியது. இலவச ஆலோசனைகளை அள்ளி வழங்கியது. தன் பங்குக்குச் சாதகத்தை வாங்கிப் போனது. இதனால் அவளின் பெற்றோர்தான் பெரிதும் கவலைப்பட்டனர். குற்ற உணர்வால் தலை குனிந்திருந்தனர்.

வரன் தேடும் படலம் துரிதமானது. வயது ஏற ஏறப் பல லட்சங்களை அதிகம் கொடுத்து வாழ்க்கையைக் கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. இலட்சங்களைப் புரட்டமுடியாத துர்ப்பாக்கிய நிலையில் பெற்றோர் தத்தளித்தனர். இறுதியாகப் பலரின் அறிவுரையில் அவளண்ணன் சொரூபன், திருமணச் சந்தையில் நிறுத்தப்பட்டான். O/L க்குப் பத்துலட்சம். A/L க்குப் பதினைந்து லட்சம். பல்கலைக் கழகத்திற்கு எடுபட்டால் இருபது லட்சம். படித்து முடித்தால் முப்பது லட்சம்.

இச்சந்தையில் தபால் மூலம் MA முடித்த சொரூபன் நாற்பது லட்சத்திற்கு, வீட்டோடு மாப்பிள்ளையாகப் பணம் படைத்தவருக்கு விற்கப்பட்டான். தன் கொள்கைக்கு மாறாக நடப்பவற்றை எதிர்க்க முடியாத சூழ்நிலையில் சொரூபனும், சௌந்தர்யாவும் கட்டுப்பட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தனர். பெற்றோருக்காக கூடப்பிறந்தவனை விற்று, கூட வாழ்பவனை வாங்கும் தர்மசங்கடமான சூழல் அவளுக்குப் புரிந்தது. தனக்காகத் தன் பெற்றோர் கொடுத்த பெரும் பணம் இன்னொருத்திக்குச் செலவிடப் படுவதை எந்தப் பெண்ணாலும் ஏற்க முடியாதென்பது அவளுக்குப் புரிந்தது. அண்ணன் தன் வாழ்க்கையைத் தங்கைக்காக அடகு வைக்கிறான் என்பதையும், தான் கொள்வனவு செய்யப்போகும் வாழ்க்கை யுடன் முழுமனத்தோடு ஒன்றி, மதித்து, மகிழ்ந்து வாழ முடியாது என்பதையும் அவள் உணர்ந்தாள். தன்னால், முகந்தெரியாத ஒருவனின் வாழ்வு பாதிக்கப்படப் போவதற்காக அனு தாபப்பட்டாள். அதற்கென்ன செய்ய முடியும். அது அவன் தலைவிதி. அவனே தன்னை, தன் சுய மரியாதையை விற்க முன்வரும்போது அவளிடமிருந்து மரியாதையை அவன் எப்படி எதிர்பார்க்க முடியும்.

பெற்றோர் விருப்பப்படியே ஒரு வரன் அமைந்தது. விலை முப்பத்தைந்து லட்சம். பேரம் பேசியபோது விலை குறைக்க மறுத்தார்கள். பெத்து வளர்த்துப் படிப்பித்த செலவு என்றார்கள். அவள் மட்டும் மண்ணி லிருந்து தோன்றி, காற்றைக் குடித்து வளர்ந்து, தோன்றும் போதே BA பட்டத்துடன் தோன்றியவள் என்று யாராவது அவர்களுக்கு உரைத் திருக்கலாம். அவர்களும் நம்பியிருக்கலாம். பேரத்தின் முடிவில், கூடு தலாக ஒரு காணித்துண்டு தரலாம் என்ற மாற்றுக்கருத்துக்கு இணங்கி, விலை ஐந்து லட்சத்தைக் குறைக்கப் பெருந்தன்மையோடு (?) பொருளின் உரிமையாளர்கள் சம்மதித்தனர்.

தம்மகனின் தரத்திற்குப் (?) பெண்தரப் பலபேர் முன்வந்ததாகவும், தாம் தான் அடக்கமான பெண்ணைத் தேடி அதையெல்லாம் தட்டிக் கழித்ததாகவும், அசட்டுத்தனமாய்ப் பெருமிதப்பட்டுக் கொண் டார்கள். கல்லறையில் தேடிப்பார்த்திருந்தால் அடக்கமான பெண் சுணக்கமின்றிக் கிடைத்திருப்பாளே வாய் கேட்கவில்லை அவளது மனது கேட்டது.

இத்தனைக்கும் இருதரப்பும் கொழுவுப்படுவதைக் கண்காணித்துக் கொண்டிருக்கும் கண்காணிப்புக் குழுவினர் போல, மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருந்தான். இடையிடையே சிறு சிரிப்பு வேறு. செளந்தர்யாக்கு அவனை அடியோடு பிடிக்கவில்லை. விருப்பு வெறுப்புக்களைக் கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நழுவிப் போகும் வயது அவளுக்கில்லையே. பெற்றோருக்காக, அவர்களின் குற்ற உணர்ச்சியைப் போக்க, நிம்மதி கொடுக்க, பேசா மடந்தையானாள். அவளை நிற்க வைத்து, நடக்க வைத்து, பேச வைத்து, சிரிக்க வைத்து கால், கை, குரல், பல் நன்றாக இருக்கிறதா என விற்கவந்தவர்கள் பரிசோதித்தனர். வாங்கப்போகும் அவளல்லவா இதைச் செய்ய வேண்டும்? மீண்டும் மனது கேட்டது. வாய் விட்டுக் கேட்கலாமா கூடாதே. பிறகு வாயாடி என்ற ஓசிப்பட்டம் சூட்டப்பட்டு விடுமே.

எடுத்ததுக்கெல்லாம் குற்றம் காணும் ஆணாதிக்க உலகிலே பெண்களுக்குத் தான் எத்தனை விதமான பட்டங்கள் மிகச்சுலபமாக வெறும் உதட்டசைவில் சூட்டப்பட்டுவிடுகின்றன. மேல் நாட்டுப் பாணியில் ஆடை அணிந்தால் ஆட்டக்காரி. ஆண்களுடன் சிரித்துப் பேசினால் நடத்தை கெட்டவள். தன்கருத்தைக் கூற வாய் திறந்தால் வாயாடி. உரத்துக் கதைத்தால் சண்டைக்காரி. இப்படி எத்தனை எத்தனை பட்டங்கள். சமூகத்திலே பத்தினி, அடக்கமான பெண், நல்லவள் என்று பெயரெடுக்க, சொல்வதைச் செய்யும் கிளியாக, அடித்தாலும் வாலாட்டும் வளர்ப்பு நாயாக, உணர்ச்சியற்ற மரமாக, இப்படி எத்தனை அவதாரங்களை ஒரு பெண் எடுக்கவேண்டியிருக் கிறது.

இறுதியில் பெற்றோருக்கு நிம்மதியளிக்கும் விதமாக எட்டுப் பொருத்தங்கள் பொருந்துவதாகக் கூறி முகூர்த்தம் பற்றிப்பேசிக் கொண்டனர். என்ன பொருந்தியென்ன, மனம் பொருந்தாமல் தனக்குத் தானே பேசிக்கொண்டாள் சௌந்தர்யா. ஒருவழியாகத் திருமணம் முடிந்தது. தம்பகுதி ஆட்களைச் சரிவரக் கவனிக்கவில்லையென்று முகத்தை முறுக்கிக் கொண்டார் புதிய மாமியார். மாமியாராகப் பதவி யேற்ற அன்றே, தம் பெற்றோரில் வீண் குற்றம் கண்ட தம் மாமியார் பற்றிய மதிப்பீடு ஒன்று, சௌந்தர்யாவின் ஆழ்மன ஓரத்தில் உட்கார்ந்து கொண்டது. மனம் நிறைந்த போராட்டங்களோடும், உணர்ச்சி துடைத்து விட்ட முகத்தோடும் எந்தவித எதிர்பார்ப்புமின்றிப் புகுந்த வீடு சென்றாள் சௌந்தர்யா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த முன்னறிமுகமுமின்றி, புத்தம் புதிய ஒருவனைக் கணவன் என்ற நெருக்கமான உறவாக எண்ணமுடியவில்லை அவளால். அதுவும் தன்னை நம்பிவந்த ஒரு பெண்ணை, தன் சம்பாத்தியத்தில் வைத்துக் காப்பாற்ற வக்கில்லாமல் அவளிடமே பணத்திற்குத் தன்னை விற்றுக்கொண்டு, சுயமரியாதையை இழந்து நிற்கும் அவனை மதிக்க முடியவில்லை. அவனுடனான உறவு, அருவெறுப்பைத் தந்தது. அவன் சொல்வதை மறுத்துரைக்க வேண்டும் என்ற பிடிவாதம் வளர்ந்தது. இவன் என்னால் வாங்கப்பட்டவன் தானே என்ற குரோத உணர்வு தலைதூக்க முயன்றது. இயல்பிலேயே பொறுமையான சௌந்தர்யா, மிகக்கஸ்ரப்பட்டுத் தன்னைக் கட்டுப்படுத்த முயற்சி செய்தாள். ஆனாலும் அவளது முயற்சியைச் சீர்குலைப்பதாகவே நிகழ்வுகள் நடந்தேறின. "ஆரம்பத்திலேயே இறுக்கிப் பிடிக்க வேண்டுமடா அப்பதான் அடங்கிக் கிடப்பாள். இல்லாட்டில் தலைக்குமேல் ஏறிடுவாள்". கவனம் என்று மாமியாரால் போதிக்கப்பட்டிருந்தான் அவள் கணவன்.

"கிறீச்" என்று கேற் திறக்கப்படும் ஒலி அவள் நினைவை நிகழ் காலத்திற்குக் கொண்டு வந்தது. சங்கமித்திரன், அவள் மகன், மருத்துவ பீட அன்றைய வகுப்புக்கள் முடிந்து வந்துகொண்டிருந்தான். சாயங் கால மலர்போல, கசங்கிய புன்னகையோடு தாயின் தலையைத் தொட்டுக்கொண்டே உள்ளே சென்று முகங்கழுவி வந்தான். அவனுக்குச் சாப்பாடு பரிமாறுவதற்காக எழுந்தவளைத் தடுத்துத் தானே சாப்பிட விரைந்தான். அவன் சிறு வயதிலிருந்தே இப்படித்தான். யாரையும் கஸ்ரப்படுத்த விரும்பமாட்டான். மணவாழ்வில் பட்ட காயத்தால், அவனை மிகுந்த பண்புடன் வளர்த்திருந்தாள் சௌந்தர்யா. சிறிது நேரத்தில் மகன் கிறிக்கட் விளையாடப் புறப்பட, மீண்டும் அந்தக் கதிரையில் போயமர்ந்தாள். அவள் நினைவுகளும் மீண்டும் கடந்த காலத்திற்குத் தாவின.

தாயின் வழிகாட்டலிலே தான் பிடித்த முயலுக்கு மூன்று காலென்ற மனநிலையிலிருந்தான் கட்டியவன். தான் நினைத்ததைக் கூட அவள் ஊகித்தறிந்து பூர்த்தி செய்ய வேண்டும் என்று எதிர் பார்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைவிட அவள் அதிகம் கற்றிருப்பது, அவனுள் ஒரு தாழ்வுச் சிக்கலை உருவாக்கியிருந்தது. அதன் காரணமாக, சிறிய பிரச்சினைகள் ஏற்படும்போது கூட, அவள் தன் தரப்பு நியாயங்களைச் சுருக்கமாகக் கூறினாற்கூட, அவள் வாயாடுவதாகவே அவனுக்குத் தோன்றியது. அதனால் பல சமயங்களில் அவள் ஊமையாக, செவிடாக, குருடாக இருக்க வேண்டியேற்பட்டது. தம்மைப் பாதுகாப்பதற்காகவே தம் மகனுக்குத் திருமணம் செய்து வைத்ததாக வாய்க்கு வாய் அறிவித்துக்கொண்டிருந்த மாமியார், தம் வீட்டில் ஒரு துரும்பைக் கூட அப்பாற் தூக்கிப் போடப் பஞ்சிப்பட்டாள். கணவனாலும் எவ்வித ஒத்தாசைகளும் இல்லாத சௌந்தர்யா, அலுவலகத்தோடு வீட்டிலும் மாடாய் உழைத்து, ஓடாய்த் தேய்ந்தாள்.

இந்நிலையில் ஒரு ஆண்குழந்தைக்குத் தாயானாள் சௌந்தர்யா. குழந்தையையும், வீட்டாரையும் கவனித்து வேலைக்குச் செல்லப் பெரிதும் சிரமப்பட்டாள். உதவிக்கு ஒரு ஆளை ஏற்பாடு செய்யுமாறு கணவனிடம் கேட்டாள். மாமியார் சொற்படி கணவனால் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. வேலையை விட்டுவிடும்படி அறிவுரை சொன்னார்கள். அவள் சுயமாகச் சம்பாதிப்பதால் தான், அவளுக்கு இவ்வளவு திமிர் என்பது அவர்களது நம்பிக்கை. அதையும் நிறுத்திவிட்டால், பல்லிழந்த பாம்பாகி விடுவாள் என்று எதிர்பார்த்தார்கள்.

பெற்றோருக்காகப் பிடிக்காத வரனுக்குத் தன் வாழ்வைப் பணயம் வைத்த சௌந்தர்யா, இதற்குமட்டும் உடன்படவேயில்லை. இந்தக் காலத்தில் யாரையும் நம்பக்கூடாது. தன்கையே தனக்குதவி என்பதில் உறுதியாயிருந்தாள். இதற்கிடையில் மதுவுக்கு அடிமையான அவள் கணவன், அவள் பொறுமையைச் சோதிக்க ஆரம்பித்தான். தினம் அவளை அடிப்பது, பொருட்களை உடைப்பது, நடு வீதியில் விழுந்து கிடப்பது என்றாகியது. மனைவிக்கடங்கிய மாமனார், மௌனமானார். மாமியாரோ மகன் பக்கம். கணவனின் நடுவீதிச் சேட்டைகளால் அலுவலகத்திலும் அவமானம் தான் மிஞ்சியது.

கணவனைத் திருத்த முயன்றாள். அது நாய்வால் என்பது புரிந்தது. நிதானமாக யோசித்தாள். மகன் வாழ்வு சிறப்பாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். இறுதியில் விவாகரத்து இல்லாமலே தனித்து வாழ முடிவெடுத்தாள். பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியுடன், கிட்டத்தட்ட இருபது வருடங்களாகத் தனித்தே வாழ்ந்து விட்டாள். பதினைந்து வருடங்களுக்கு முன், கணவன் இறந்ததற்கு ஒருமுறை மாமியார் வீட்டிற்குப் போனதுதான். பிறகு எந்தத் தொடர்பும் வைக்க விரும்பவில்லை. பிறந்த வீட்டவர்கள் சில தடவை வந்து போனார்கள். சிறந்த பண்புகள் அனைத்தையும் ஊட்டி வளர்த்த தன்மகனின் உயர்வு பற்றிய கனவிலேயே அவள் காலம் கடந்திருந்தது.

மீண்டும் "கிறீச்" ஒலி. சட்டெனக் கலைந்து வாசலைப் பார்த்தாள். ஒரு நாளும் அவளது வீட்டுக்கு வந்தறியாத பக்கத்துத் தெருப் பரமுஅண்ணர் வந்துகொண்டிருந்தார். வியப்போடு வரவேற்றாள் சௌந்தர்யா. வந்தமர்ந்தவர் பையுள் கைவிட்டு, எதையோ வெளி யிலெடுக்க முற்பட்டார். உற்றுப்பார்த்தவளுக்கு விளங்கியது அவர் வந்த நோக்கம். அவர் தரகர் வேலையும் பார்ப்பவர் என்று கேள்விப் பட்டிருந்தாள்.

தொண்டையைக் கனைத்துக்கொண்டு தொடங்கினார் பரமு அண்ணர். "தங்கச்சி நல்ல விசயமாய்த்தான் வந்திருக்கிறன். உம்மட மகனுக்கு இருபத்தைந்து வயதுக்கு மேலை இருக்கும். இனிக் கல்யாணம் செய்யிற வயசுதானை. பக்கத்து ஊரிலை பிரபலமான பணக்காரர் சிவஞானம் இருக்கிறாரெல்லோ... அவருக்கு ஒரு மில், இரண்டு கடை, நிறையத் தோட்டம், வயல், நாலைஞ்சு வீடுகள் எண்டு ஏகப்பட்ட சொத்திருக்கு... காசாயே எண்பது லட்சத்துக்கு மேலே குடுப்பினை. அவர்பிள்ளைக்கு உங்கடை மகனைக் கேக்கினை... நீங்களும் மகனோடை அங்கையே இருக்கலாம். அவரும் டாக்டராகப் போறாரெல்லோ ஹி...ஹி..." என்று இடைவிடாது மொழிந்து நகைத்தார்.

ஒரு சிறு புன்னகையோடு கேட்டுக்கொண்டிருந்த சௌந்தர்யா "அவனுக்கு இப்ப கல்யாணம் கட்ட நினைக்கேலை. முப்பது வயசா கட்டும்..." என்றவளை இடைமறிக்க முயன்றார் அண்ணர். "கொஞ்சம் பொறுங்க பரமு அண்ணை... முழுக்கக் கேளுங்க.. அவன் டாக்டர் தான். அவனுக்கு ஒரு அந்தஸ்த்துப் படிப்பாலையே வந்திட்டுது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தச் சந்தர்ப்பத்திலும் என்ரை பிள்ளையை நான் யாருக்கும் விற்க மாட்டன். படிச்ச ஒரு ஏழைப்பிள்ளையாய்ப் பாத்து, நாங்களே சகல சிலவுகளையும் கொடுத்துத் தான் பொம்பிளை எடுப்பன். இது என்ரை தீர்மானம் மட்டுமில்லை. மகனின்ரையும் தான். அக்கறையாய் வந்து விசாரித்ததுக்கு நன்றி..." என்று கைகூப்பினாள் செளந்தர்யா.

"சே... வாழத்தெரியாத சனங்களப்பா... வலியவாற சீதேவியைக் காலாலை எட்டி உதைக்குதுகள்..." என்ற முணுமுணுப்போடு விசித்திரமான வஸ்துவைப் பார்ப்பதுபோல் விழிவிரியப் பார்த்துக் கொண்டு நழுவுகிறார் பரமுஅண்ணர்.

மீண்டும் அந்தக் கதிரையில் சாய்ந்து கண்மூடுகிறாள் செளந்தர்யா.

**(யாவும் கற்பனை)**
(2005)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. பட்டாபிஷேகம்

"எடேய் அவன்ரை ஸ்ரைலென்ன! மேக்கப்பென்ன! உடுப்புகளென்ன! உவன்தான் முந்தி எங்கடை வளவுகளுக்கை விறகு கொத்தித் திரிஞ்ச கந்தசாமி எண்டு நினைச்சுப் பாக்கவே ஏலாமல் கிடக்கு."

"ஸ்.....அவன் இவன் எண்டு உரத்துக் கதைக்காதையண்ணை. எக்கணம் அந்தாள்டை காதிலை விழப்போகுது."

"ஏன் விழுந்தா என்ன? என்ரை தலையைக் கொய்து போடுவானோ? அவங்களை நாங்கள் அப்பிடித்தானை கதைக்கிறனாங்கள். இப்ப அவை வெளிநாட்டிலை போய் கோப்பை கழுவின காசைக் கொண்டு வந்து ஷோக் காட்டின உடனை அவை பெரியாக்கள் ஆய்டுவினையே?".

மனதுக்குள் சிரித்துக் கொண்டார் மகாதேவன். இரத்தினத்தார் ஏன் இப்படிக் கொதிக்கிறார் என்பது அவருக்குத் தெரியும் தானே. கந்த சாமியின் குடும்பம் தாய், இரண்டு தங்கைகள், இரண்டு தம்பிகள் கொண்ட குடும்பம். இவர்களைத் தாழ்ந்த குலம் என்று மற்றவர்கள் கூறியிருந்தார்கள். தந்தையார் சிறுவயதிலேயே காணாமல் போயி ருந்தார். குடும்பத்தில் முதல் பிள்ளை ஆண்பிள்ளை. குடும்பப் பொறுப்பு அவனுக்கு என்றாகியது. படிப்பை நிறுத்திய அவன், வேலை தேடி அலைந்த போது, அவ்வூரில் பெரும்பான்மையாக வாழ்ந்த உயர்சமூகம் என்று கருதப்பட்டவர்கள் வேலை கொடுக்க விரும்பவில்லை, ஏதாவது களவாடிக்கொண்டு போய்விடுவானென்று. இந்நிலையில் கந்தசாமி அயல் கிராமத்திற்குச் சென்று விறகு கொத்தி உழைத்தான். ஒரு சில மாதங்களிலேயே சிறிது சிறிதாக, அவனது கிராமத்தில் வாழ்ந்தவர் களும் அவனைத் தங்களது வீட்டுக்கு, விறகு கொத்துவதற்காக அழைத்துக் கொண்டனர். விறகு கொத்துவதற்காக அணைத்தார்களே தவிர அவனையோ, அவனது சமூகத்தவர்களையோ, அவர்களும் தங்களைப் போன்ற அனைத்து உணர்வுமுள்ள மனிதர்கள் தான் என்பதை உணர்ந்தார்களில்லை. சிரட்டையில் நீர் கொடுத்தார்கள். மரத்தடியில் அமரச் செய்தார்கள். கிணற்றடிக்கு அருகில் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவிடவில்லை. பொதுவாகச் சொல்லப் போனால், மனிதர் களுக்கு மனிதர் கொடுக்க வேண்டிய எந்த மரியாதையையும் கொடுக்க வில்லை கந்தசாமி இதற்காகத் தளர்ந்து போய்விடவில்லை. அவர் களின் சமூகத்திற்கு இதெல்லாம் புதிதா என்ன? மௌனமாகச் சகித்துக் கொண்டு, தனது உழைப்பைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனது நல்ல நேரமோ அல்லது இரத்தினத்தாரின் கெட்ட நேரமோ, இரத்தினத்தாரின் மாமனார் வீட்டிலும் கந்தசாமி விறகு கொத்த அழைக்கப்பட்டான். வசதியிலும், வளத்திலும் உச்சத்திலிருந்தவர் மாமனார் வரதராஜன். அவரது ஏகபுத்திரி அதாவது இரத்தினத்தாரின் முறைப்பெண் ராசுவிற்கும் கந்தசாமிக்கும் இடையில் மௌனமாகக் காதல் வளர்ந்தது. இரகசிய அரும்பாக இருந்த காதல் வளர்ந்து பூத்து மணம் பரப்பிய போது, வரதராஜப்புயல் அவர்களை வாட்டி யெடுத்தது. தனது ஆசை எப்போதுமே நிறைவேறப் போவதில்லை என்பதை நன்குணர்ந்த ராசு, காதலைக் காப்பாற்றுவதற்காக, பெருந் தொகையான நகைகளுடனும், சில இலட்சங்களுடனும் கந்த சாமியுடன் காணாமற்போனாள். சில வாரங்கள் இச்சம்பவம் மட்டுமே தலைப்புச் செய்தியாகவிருந்த அந்த ஊர், ஒரு சில மாதங்களில் அவர்களை மறந்தே போனது. திருமணம் செய்து கொண்ட கந்தசாமி தம்பதிகள், தம்மிடமிருந்த பணம், நகைகளை வைத்துக் கள்ளத் தோணியில் லண்டன் போய் செட்டிலாகிவிட்டனர். அதன் பின் கந்த சாமியின் ஒரு தங்கையும் தம்பியும் கொழும்பில் ஒரு கம்பனிக்கு வேலைக்குப் போகிறார்கள் என்ற உள்ளூர் அறிவிப்புடன் லண்டனுக்குப் பயணமாகினர்.

இரகசியமாக வைக்கப்பட்ட விடயம், சில மாதங்களுக்கு முன்பு புதுவீடு கட்டுவதற்காகக் கந்தசாமியின் பழைய வீடு அகற்றப் பட்டபோது தான் புகையத் தொடங்கியது. தொடர்ந்து புது வீட்டுக்கான அடித்தளம் இடப்பட்டதும், பலருடைய மனமும் கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. எங்கள் கிராமத்தில் உயர்ந்தவர்கள் நாங்கள். எங்களிடமே இவ்வளவு பெரிய வீடு இல்லை. தாழ்ந்தவன் ஒருவன், அதுவும் எங்கள் வீடுகளில் கூலிக்கு மாரடித்தவன், பெரிய வீடு கட்டுவதா? தங்கள் மரியாதை என்னாவது? என்பது தான் அவர்களது எரிச்சலுக்குக் காரணம். என்றாலும் கந்தசாமி கட்டும் வீட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களால் ஒன்றும் செய்துவிட முடியவில்லை. அது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அழகாக வளர்ந்து கொண்டிருந்தது. எரிச்சல்பட்ட அனைவரும், போகப் போகப் பிரமிப் போடு பார்க்க ஆரம்பித்தார்கள். அந்தக் கிராமத்துக்கே பொருந்தாத வகையில் அவ்வீடு அமைந்துகொண்டிருந்தது. சகல நவீன வசதி களுடனும், அழகிய ஒளி அமைப்பில் கண்ணைப்பறிக்கும் மாடி வீடாக அமைக்கப்பட்டிருந்தது. முன்பு கந்தசாமியின் சமூகத்தினர் இருந்த குடியிருப்புக்கு அடுத்த பக்கம் போவதற்குக் கூட, கந்தசாமியின் தெருப்பக்கத்தை மறுசமூகத்தினர் பயன்படுத்துவதில்லை. அது அண்மையான பாதையாக இருந்தாலும், சுற்றி வேறு பாதையால் தான் போவார்கள். தீட்டுப்பட்டுவிடும் என்பது அவர்களது எண்ணம். அப்படிப்பட்டவர்கள் இன்று கந்தசாமி அமைக்கும் அழகிய மாளிகையைப் பார்த்துப் பிரமிப்படைவதற்கும், பொறாமைப்படுவதற்கும் அவர்களது தெருவுக்குக் காரணமின்றியே சென்றுவரத் தொடங்கினர். தீட்டைப் பற்றி இப்போது யாரும் கதைக்கவில்லை. தீட்டை விட வீடு தான் அவர்களின் மனதை ஆக்கிரமித்திருந்தது.

வீடு கட்டி முடிந்த மறுவாரம், கந்தசாமி குடும்பமும் அவனது சகோதர சகோதரிகளும் கிராமத்திற்கு வந்திறங்கினர். கொழும்புக்கு வந்ததுமே இலகுவான பயணத்துக்காக ஒரு உயர்ந்த ரகக் கார் ஒன்றையும் கொள்வனவு செய்துகொண்டு காரிலேயே கிராமத்துக்கு வந்திருந்தனர். வாகனம் கிராமத்துக்குள் நுழைந்ததுமே மக்கள் அதைச் சூழ்ந்து கொண்டனர். யாரோ அமைச்சரோ அல்லது பெரிய அரசியல்வாதியோ வழிதவறித் தனியாக வந்துவிட்டார் என்பது அவர்களது எண்ணம். கார் கந்தசாமியின் வீட்டின் முன்பு வந்து நின்று, கந்தசாமி இறங்கிய பின்பு கூட யாரும் அவரை இனங்காணவில்லை. அவரது தோற்றம் அந்தளவுக்கு எல்லாவிதத்திலும் மாறியிருந்தது. அவருடைய குடும்பத்தினரும் இறங்கிய பின்பு தான் அவரை இனங்கண்டுகொண்ட பலரும் தெருமுனையிலேயே நின்றுகொண்டு வேடிக்கை பார்த்தனர். ஒரு சிலர் அந்தக் காரைத் தொட்டுப்பார்ப்பதற்கும், அதில் அவர் ஏற்றிவந்த பெரிய பெட்டிகளைப் பார்ப்பதற்குமாக முண்டியடித்தனர். இன்னும் சிலர் காவல் இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினைந்து வருடங்களுக்குப் பிறகு கந்தசாமி குடும்பம் கிராமத்துக்கு வந்து ஒரு மாதமாகிறது. அந்தக் கிராமத்துக்கு மட்டுமல்ல, அயலிலுள்ள குடியிருப்பாளர்களின் கதைகளுக்கும் அவர் தான் கருப் பொருளாகியிருந்தார். அவரது வீட்டின் அழகையும், இரு குழந்தை களின் அழகையும், அவர்கள் ஆங்கிலம் பேசும் அழகையும், அவரது ஆடம்பர நவநாகரிகத் தோற்றத்தையும் தவிர அயலவர்களுக்குப் பேசுவதற்கு வேறு எதுவும் இருக்கவில்லை. அவருக்குப் பட்டா பிஷேகம் நடத்திச் சிம்மாசனம் ஏற்றாத குறைதான். அவரும் பணத்தைத் தண்ணீராக வாரியிறைத்துக் கொண்டிருந்தார். கண்ணில் பட்டவர்களுக்கெல்லாம் பரிசுகள் வழங்கினார். ஆடம்பரக்காரில் கிராமத்தை அடிக்கடி உலாவந்தார். பணம் தான் பாதாளம் வரை பாய்ந்து பத்தையும் செய்யுமே. இங்கேயும் செய்தது.

விறகுவெட்டிக் கந்தசாமியைத் தம் கிணற்றடிப் பக்கம் கூட, வர அனுமதிக்காத பெரிய மனிதர்கள், லண்டன் கந்தசாமியைத் தம் வீட்டுக் கிச்சனுக்குள் இருத்திவைத்து விருந்து பரிமாறினார்கள். அவரது பிள்ளைகளுடன் விளையாடுவதற்காகத் தம் பிள்ளைகளை வலிந்து அனுப்பினர். கிராமத்தில் நடைபெறும் பொது நிகழ்வுகளுக்கு விருந்தினராகவும் அழைத்தார்கள். தனிப்பட்டதோ, பொதுவானதோ எந்த நிகழ்வுக்கு அவர் வந்தாலும், அவருக்கருகில் அமர்ந்து அவருடன் கதைப்பதைப் பெருமையாகக் கருதி அதற்காகப் போட்டி போடும் கூட்டம் ஒன்றும் உருவாகியது.

கந்தசாமியின் பணத்தையும், பகட்டையும் கண்டு ஊரவர்கள் மயங்கிப் போனாலும், இரத்தினத்தார் மட்டும் அவரை எக்காரணம் கொண்டும் மன்னிக்கத் தயாரில்லை. அவருடைய முறைப்பெண்ணைக் கந்தசாமி கூட்டிக் கொண்டு ஓடியதை மறக்கவும் தயாரில்லை. அந்தச் சம்பவத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவர் இரத்தினத்தார் தான். அவருடைய நண்பர் கூட்டம், அவரைக் காணும் போதெல்லாம் நக்கல் கதைகளைக் கதைத்து வேதனைப்படுத்தியிருந்தார்கள். தற்போது, அவர் நல்ல மனைவி மக்களோடு நன்றாகவே வாழ்ந்து கொண்டிருந்தாலும், கந்தசாமி பற்றிய வன்ம உணர்வு ஆழ்மனதில் இருந்து கொண்டே இருந்தது. அதனால்த் தான் காந்தசாமியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றத்தைக் கண்டு பொறுக்கமுடியாமல் நேரங்கிடைக்கும் போதெல்லாம் அவரை மட்டந் தட்டிப் பேசிக்கொண்டிருந்தார்.

"அப்பா, சிவா அண்ணையாக்கள் றோட்டிலை சைக்கிள் ஓடிப் பழகீனை. நானும் போய் ஓடிப் பழகட்டே." கந்தசாமியின் மகன் தீபன் கேட்டுக்கொண்டே தந்தையிடம் வந்தான்.

லப்டாப்பை மடியில் வைத்து எதையோ கிண்டிக்கொண்டிருந்த கந்தசாமி நிமிர்ந்து பாராமலே,
":நீ போய் அவைன்ரை பழைய சைக்கிள்ல பழகப்போறியே? உனக்கென்னத்துக்கு அது? நீ சைக்கிள் ஓட்டப் பழகி என்ன செய்யப்போறாய்? நீ வளந்தாப் போலை பிளேன் ஓட்டவேணுமெண்டு நான் நினைச்சுக் கொண்டிருக்கிறன்".

"....................................."

பதிலேதும் வராததால் நிமிர்ந்து பார்த்த கந்தசாமி, மகனின் வாடிய முகம் கண்டு மனம் பொறுக்காமல்,
"உனக்குப் புதுச் சைக்கிள் வாங்கித்தாறன். அதிலை பழகு. முதல்லை நீ போய் உடுப்பை மாத்து. நல்ல சூட்டாய் பாத்துப் போட்டுக் கொண்டு போ".

"நான் தூரப் போகலையப்பா. உதிலை தெருவிலை தான் நிக்கப் போறன்".

"முதல்லை நான் சொன்னதைச் செய்" என்ற கந்தசாமி

"எனக்கு முந்திச் சேட்டுப் போடக்கூட வசதியிருக்கேலை. நாங்கள் சேட்டுப்போடுறது கூட அவைக்குப் பிடிக்காது. ஒரு துண்டைத் தோள்ல போட்டுக்கொண்டு அவையைக் கண்டவுடனை, அதை எடுத்து இடுப்பிலை கட்டிக்கொண்டு கைகட்டி நிண்ட அடிமைநிலை இன்னும் என்ர மனசிலை ரணமாய் இருக்கடா. இப்ப என்னட்டைப் பணமிருக்கு. அவை சாதித்தடிப்பைக் காட்டீச்சினை. நான் பணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடிப்பைக் காட்டுறன். இப்ப எல்லாம் காசுதான்ரா கடவுள். அதாலை என்னத்தையும் விலைக்கு வாங்கலாம்" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டு இளையதம்பியைக் கூப்பிட்டு,

"தம்பி நீ ஒருக்கா உடனை உதிலை ரவுனுக்குப் போய், நல்ல விலையுயர்ந்த சின்னச் சைக்கிள் ஒண்டு வாங்கிக் கொண்டு வந்து தீபனிட்டைக் குடப்பன்" என்றவாறு தனது கிறடிற் காட்டைக் கொடுத்தனுப்பினார். உடை மாற்றிக்கொண்டு வந்த தீபனை அருகில் அழைத்துக் கையிலிருந்த மோதிரங்களை நேராகத் திருத்தம் செய்தார். உள்ளே இருந்த கழுத்துச் செயினை வெளியே எடுத்து விட்டு அழகுபடுத்தினார்.

"சித்தப்பா இப்ப புதுச் சைக்கிள் கொண்டு வருவார். அதைக் கொண்டுபோய்ப் பழகு. மற்றவைன்ர பழைய சைக்கிளைத் தொடாதே" என்று கூறி அனுப்பிவிட்டு, மகன் செல்லும் அழகை ரசித்துப் பார்த்தார்.

கந்தசாமி ஆரம்பத்தில் கிராமத்திலிருந்தபோது படிப்பிலும் பணத்திலும் குறைந்திருந்தாலும், பண்பில் நிறைந்தவனாகத்தான் இருந்தான். கடுமையான உழைப்பாளி. கடவுள் பக்தியோடு மனச்சாட்சிப்படி நடப்பவன். பிறருடைய ஒரு ரூபாவுக்குத் தன்னும் ஆசைப்படாதவன். ஆனாலும் அவனுடைய நல்ல பண்புகளை மதிப்பதற்கு அங்கிருந்த உயர்சமூகத்தவர் என்று சொல்லப்பட்ட எவரும் தயாரகவிருக்க வில்லை. அவர்களுக்கு அவன் மனிதன் என்பதைவிட, தாழ்ந்த குலம் என்பது தான் முக்கியமாகப்பட்டது. குலத்திலும், குடும்பத்திலும் வறுமையாக இருந்ததால் அவர்கள் அடைந்த அவமானமும் துன்பமும் இலகுவில் மறந்துவிடக்கூடியதல்ல. வீடுகளில் அவமானப்படுத்தப் பட்டார்கள். கோவில்களில் இறைவனைக்கூட அண்டவிடவில்லை. தெருக்கோடியில் நின்று தான் சுவாமி தரிசனம். வீதியிலும் வில்லங்கம். கல்வி பெறப் பள்ளிக்குப் போனால், கடைசி பெஞ்ச். சைக்கிள் ஓடிப் போகும் போது பல்லைக்கழகங்களில் சீனியர்ஸைக் காணும் புதுமுக மாணவர்கள் போல, இறங்கி உருட்டவேண்டும். இவர்களால் வெட்டப்படும் விறகும், இவர்களால் தொட்டுப் பிடுங்கப்படும் தேங்காயும் அவர்களது கிச்சனுக்குப் போனது. ஆனால் இவர்கள் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணற்றடிக்குக்கூடப் போகமுடியாது. இவர்கள் இறக்கும் பனங்கள்ளு அவர்களின் வயிற்றுக்குள் போனது. ஆனால் தெருவில் இவர்கள் மேலப்படும் காற்று அவர்களில் பட்டுவிடக்கூடாது. கதைப்பதும் பத்தடி தள்ளிநின்று தான்.

கந்தசாமி சிறுவனாக இருந்த போது, புரிந்து கொள்ள முடியாத பலதையும் தாயிடம் கேட்பான். அவரோ எல்லாம் எங்கள் தலைவிதி என்று நொந்து கொள்வதோடு மௌனித்துவிடுவார். ஆரம்பத்தில் கோபப்பட்ட கந்தசாமி, பின்பு போகப் போக யதார்த்தத்திற்கு இயைபாகிப் போனான். ஆனாலும் அவன் மனம் மட்டும் குமுறிக்கொண்டே இருக்கும். தூக்கத்தில் அவர்களைப் பழிவாங்குவது போலக் கனவுகளும் வந்து போகும். நிஜத்தில் அப்படியொரு வாய்ப்புத் தங்களுக்கு வராதா? அவர்களுக்கு முன்பு தாங்களும் கௌரவமாக வாழ முடியாதா? என்று அடிக்கடி ஏங்குவான். அவனது ஏக்கத்துக்கு மருந்தாக கடவுள் இரங்கியது போல, ராசு தானாகவே வந்து சேர்ந்தாள். அவள் குணத்தில் நல்லவளாக இருந்தாலும், அவளைப் பற்றிய நல்ல அபிப்பிராயம் ஒன்று அவனுக்கு இருந்தாலும், வலிய வந்த வாய்ப்பை விட்டுவிட விரும்பவில்லை.

லண்டன் சென்ற அவர்கள் கடுமையாக உழைத்ததோடு தனது கல்வியறிவையும் விருத்திசெய்து கொண்டார். தங்கையையும் லண்டனிலேயே சிறப்பாகத் திருமணம் செய்து கொடுத்தார். ராசுவும், அவரது தம்பியும் மிகுந்த பக்கபலமாகச் செயற்பட்டனர். பணத்தைப் பார்க்கப் பார்க்க, இன்னும் இன்னும் சம்பாதிக்க வேண்டும் என்ற வெறி அவருள் ஏற்பட்டது. வீடு கட்டத் தொடங்கியதிலிருந்து அது முடியும் வரை ஊரில் நடைபெறும் சிறு விடயங்களையும், ஊரிலுள்ள அவரது தம்பி தங்கை மூலம் அறிந்து கொண்டே இருந்தார். வீட்டைப் பார்த்து வியந்தவர்கள் பற்றியும், பொறாமைப்பட்டவர்களின் கதை களையும், முன்பு வராத பெரிய மனிதர்கள் எல்லோரும் இப்போது தங்கள் தெருப்பக்கம் அடிக்கடி வந்து செல்வதையும், ஒன்றும் விடாமல் அவருக்குச் சொல்லியிருந்தார்கள். இதையெல்லாம் கேட்கக் கேட்கக் கந்தசாமிக்கு ஒருவித திருப்தியும் கூடவே இறுமாப்பும் ஏற்பட்டது. அடக்கி வைத்த மனவலிகள் மாறிவிட்டதை உணர்ந்தார். தன்னிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டிக் கிடந்த பணத்தை வைத்துத் தன்னை அவமானப் படுத்தியவர்களைத் தன் பின்னால் வரவைக்க முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டது. அதன் பின்பு தான் அவர் தன் குடும்பம் சகோதரர்களுடன் கிராமத்திற்கு வந்தார்.

வீட்டை அழகுபடுத்தினார். விதம் விதமாக அலங்கரித்துக் கொண்டு தினமும் இருவேளையாவது குடும்பத்தினர் சகிதம் வாகனத்தில் வலம் வந்தார். வீட்டிற்கு வருபவர்களுக்கெல்லாம் பணமாகவும் பொருளாகவும் அன்பளிப்புக்களைச் செய்தார். கிராமத்தில் நடைபெற்ற பொது நிகழ்வுகளுக்குப் பிரமுகர் என்ற அந்தஸ்த்தில் சென்றுவந்தார். தனிப்பட்டவர்களின் மங்கல நிகழ்வுகளுக்குச் சென்று நகைகளை அன்பளிப்புச் செய்தார். தங்களை விருந்துக்கழைத்த வீடுகளுக்குச் சென்றபோது, பெறுமதி மிக்க பரிசில்களை வழங்கினார். அக்கம் பக்கங்களில் இருந்த கோவில்களில் பூசை வைத்து அன்னதானம் வழங்கினார். முன்பு தெருவில் நிற்கவைத்துப் பிரசாதத்தைக் கூட சிறுபையனிடம் கொடுத்துவிட்ட குருக்கள், இன்று கந்தசாமி தட்சணையாக வைத்த நோட்டுக்கட்டைப் பார்த்ததும், கருவறைக்குள் அழைக்காத குறையாக வருந்தியழைத்து உபசாரம் செய்தார். பாடசாலை மாணவர்களுக்கு இனிப்பு வழங்கினார். தான் செய்யும் ஒவ்வொரு செயற்பாட்டையும் வீடியோ எடுக்கவும், புகைப்படம் எடுக்கவும் இருவரை நியமித்திருந்தார். அன்றன்று எடுத்த நிகழ்வுகளை வீட்டிலிருந்து மீண்டும் மீண்டும் போட்டுப் பார்த்து ரசித்துத் திருப்திப்பட்டார்.

கந்தசாமி என்ற நல்ல மனிதன் மறைந்து, புகழுக்கு ஆசைப்பட்டு நாடகமாடும் ஒரு சுயநலவாதியாக அவர் ஆகிவருவதைக் கண்ட அவரது குடும்பத்தினரும் நண்பர்களும் கவலைப்பட்டார்கள். சிலர் அறிவுரை சொல்லவும் செய்தார்கள். "கடவுள் சிலருக்குச் சிலதைக் குடுத்துப்பாப்பார். அதை நல்லபடியாய்ப் பயன்படுத்தாட்டி, ஏற்கனவே இருந்ததையும் சேத்து எடுத்துப்போடுவார் தம்பி" என்று கூடச் சொல்லிப் பார்த்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் கந்தசாமி கேட்பதாயில்லை. ஏதோ தான் யாரும் செய்யாத சமூக சேவையைச் செய்தது போலவும், தன்னால் தான் பலரும் வாழ்கிறார்கள் என்பது போலவும் புகழ்மயக்கம் கண்ணை மறைக்க வருவோர் போவோரிடமெல்லாம் தன்பெருமை பேசிக்கொண்டிருந்தார்.

"தம்பி கோயிலுக்கும், இல்லங்களுக்கும், சும்மா ஒரு நாள் இனிப்பை, சாப்பாட்டைக் குடுத்து அதுகளுக்கு ஆசையைக் காட்டிறதை விட, நிரந்தரமாய் அவைக்கு உதவுறமாதிரிச் செய்யிறதுக்கு எத்தினை விஷயமிருக்கு. ஒரு ஏழைக் குடும்பத்துக்கு உதவலாம். இரண்டு பிள்ளைகளைத் தத்தெடுக்கலாம். இரண்டு பிள்ளைகளின்ரை படிப்புக்கு உதவலாம்........ இப்பிடி எத்தினை இருக்கு. இப்பிடி ஏதாவது செய்தா அதுகளுக்கும் ஒரு நல்ல காலம் பிறக்கும். உனக்கும் திருப்தியாகும்."
"ஆனா இப்பிடி பப்பிளிசிற்றி கிடைக்காதே. பேப்பரிலை தினமும் படம் வராதே"...என்ற பதில்தான் கந்தசாமியிடமிருந்து வந்தது.

கோவிலில் அன்னதானம் தரும்போதும், இல்லங்களில் சிற்றுண்டி தரும்போதும் அவர்களின் தேவையெல்லாம் அதுதான் என்பது போலவும், தான் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்து விட்டது போலவும் ஒரு பெருமிதம். அவரைப் பொறுத்தவரை தானே அமைத்த சிம்மாசனத்தில் ஊர் மக்களெல்லாம் சேர்ந்து பட்டாபிஷேகம் செய்து வைத்தது போல, ஒரு வெற்றிக் களிப்பில், யாருடைய ஆலோசனைகளும் காதில் எட்டாத, தனி வானவெளியில் தங்கத் தாம்பாளத்தில் பறந்து கொண்டிருந்தார்.

அன்று அவரது மகனுக்குப் பிறந்தநாள். விலையுயர்ந்த உடை உடுத்தி, பலவித நகைகள் பூட்டி குடும்ப சகிதம் ஆரவாரமாக சிறுவர் இல்லம் ஒன்றுக்குச் சென்று உணவு வழங்கிக் கொண்டாடினார். அங்குள்ள சிறுவர்கள் தன் மகனை ஏக்கத்துடன் பார்த்ததைக் கண்டு ஒருகணம் மனம் தடுமாறினாலும், புதிய வெறிக்குணம் தலைக்கேற உப்பிடியொரு சாப்பாட்டை உதுகள் இதுக்கு முந்திக் கண்டிராது. என்னால் தான் உப்பிடியொரு விருந்து, என்ற எண்ணம் வந்து ஆட்கொண்டது. அனைத்துப் பிள்ளைகளும் ஆர்வத்துடன் உண்பதை முழுவதுமாகப் படம் எடுத்து முடித்துப் போவதற்குக் கிளம்பினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடியோவிற்குக் கையசைத்து போஸ் கொடுத்தவாறு வெளியே வந்துகொண்டிருந்தார்கள். ஏதோ ஒன்று அவரை மெதுவாக இழுத்தது. திரும்பிப் பார்த்தார். ஒரு நான்கு வயதுக் குழந்தை, அவரது உடையைப் பிடித்துக் கொண்டிருந்தது. அது அவரைப் பார்த்துக் கேட்டது,

"மாமா! இனி எப்ப அண்ணாக்குப் பிறந்தநாள் வரும்?"

நெற்றிப்பொட்டில் அடித்தது போன்றதொரு வலி. சிம்மாசனத்திலிருந்து யாரோ தள்ள, குப்புற விழுந்தது போலொரு உணர்வு. தனக்குக் கடவுள் தந்த அளவற்ற செல்வம் என்னத்துக்காகத் தரப்பட்டது என்ற கேள்விக்குப் பதில் அவர் மனதில் உதயமானது.

(யாவும் கற்பனை)

**(வட மாகாண ஆக்க இலக்கியப் படைப்பாற்றல் போட்டி 2008 ல் மூன்றாமிடம் பெற்றது)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. சவால்

"உவளுக்கெண்டால் சரியான விசர் தான். கல்லூரி முதல்வரே வாயாலை கேட்டுப் போட்டார். பேசாமை ஓம் எண்டு சொல்லு றதுக்கு..."

"அதுதானை. எத்தினை பேர் தங்களுக்கு உப்பிடியொரு சான்ஸ் வராதா எண்டு அலையுதுகள். இவள் வலிய வந்த சீதேவியைக் காலாலை தட்டி விட்டுட்டாள். கண்டறியாத ஊருக்குப் போறாளாம் ஊருக்கு. அங்கை என்ன கிடக்கு. உடைஞ்ச வீடும், முறிஞ்ச மரமும் தானை."

"அங்கை போயும் சுருதிப் பெட்டியைத் தானை தூக்க வேணும். ஏதோ G.A. ன்ரை கதிரையிலை உவள் தான் இருக்கப் போற மாதிரிப் பறக்கிறாள்."

நக்கலாகச் சிரிக்கிறார்கள். எல்லாமே அவளுக்குக் கேட்க வேணு மெண்டுதான். கதைத்தது வேறு யாருமில்லை. நேற்று வரை அவளோடு கூடப்படித்த அவளுடைய கல்லூரித் தோழிகள் தான். வாணி தனக்குள் சிரித்துக் கொள்கிறாள். இந்த இசைக் கல்லூரிக்கு வரும்போது இருந்த வாணி வேறு. இரண்டு ஆண்டுகளை இங்கே படித்து முடித்து அடுத்த வாரம் நடைபெறும் பட்டமளிப்போடு வெளியே போகப் போகிற வாணி வேறு. முன்பெல்லாம் அவளது பேச்சு இறப்பைப் பற்றியதாகத் தான் இருக்கும். எடுத்ததற்கெல்லாம் கோபம். பதட்டம். மனதை ஒரு நிலைப்படுத்தி எதையும் செய்ய முடியாத நிலை. உலகமே மோசமானதாகவும் சகிக்க முடியாததாகவும் தோன்றின. எப்போதும் சோகமான மனநிலை. தனக்களிக்கப்பட்ட கடமைகளை நினைவில் நிறுத்திச் செயற்படுவதில் பல தடுமாற்றம். ஆம் அவள் ஒரு அரசாங்க அலுவலர். அதுவும் அதிகாரித் தரத்தில். இப்போதும் அவளது பதவி அவளுடன் தான் இருக்கிறது. இருவருட சம்பளமற்ற விடுமுறையில் தான் இசை படிக்க இந்தியாவுக்கு வந்திருந்தாள். ஆனால் இந்த விடயம் அவளோடு இசை படித்த யாருக்குமே தெரியாது. அவள் ஏன் கடல் கடந்து இசை படிக்கவென்று இங்கே வந்தாள். அவளது வாழ்வில் இசையின் பங்கு என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் மிகுந்த முயற்சி செய்து அடைய வேண்டிய சில அடைவுகள் முயற்சி செய்யாமலே இவளைத் தேடி வந்திருக்க, பலருக்குக் கிடைத்த வாய்ப்பு, அவர்களை விடத் தராதரம் அதிக மிருந்தும், முயற்சி செய்தும் இவளுக்குக் கிட்டாமல் போயிருந்தது. மிகச் சிறியதொரு சோக இழை மின்னி மறைய.

"மற்றவரைச் சொல்லி என்ன? எல்லாவற்றுக்கும் நான் தானே காரணம்" மனம் சொல்லிக் கொள்கிறது. தூரநோக்கிய பார்வையில் தொலைந்த காலங்கள் தளைக்கிறது.

அப்போது ஆரம்பப் பள்ளியில் அவள் கால் வைத்த நேரம். என்ன நினைத்தோ அவளை இசை வகுப்பில் சேர்த்தனர் பெற்றோர். இளம் தளிர் இசைப் பயணத்திலும் கால் வைத்தது. கூடப் படித்த பெரிய மாணவர்களுக்குச் சேராத சுருதி இவளுக்குச் சேர்ந்தது. வராத சங்கதிகள் இவளுக்கு வந்தது. பெரியவர்களுக்கு ரோசம் வரட்டும் என்று இவளது கையால் குட்டவைத்துத் தண்டனை கொடுத்தார் ஆசிரியர். அவர்களுக்கு ரோசம் வரவில்லை. கோபம் தான் வந்தது. அவள் மேல் மட்டும். அதனால் வகுப்பு முடிந்து ஆசிரியர் போன பின்பு பல குட்டுக்கள் வட்டியோடு சேர்த்து அவளுக்குக் கிடைத்தன. ஆசிரியரிடம் சொன்னால் வட்டி கூடும் என்ற மிரட்டல் வேறு. எனினும் தற்செயலாக இதை அறிந்த ஆசிரியர், அவளது தந்தை வரும் வரை அவளுக்குக் காவல் இருப்பது வழக்கமானது.

பள்ளியிலும் அவளது இசையாற்றல் வெளிச்சத்துக்கு வந்தது. பள்ளிப் பாடங்களில் நினைவாற்றல் இன்றிக் கஷ்ரப்படும் வாணிக்கு இசைப் பாடல்களும், ஸ்வரக் கோர்வைகளும் இயல்பாகவே மனதில் பதிந்தன. பாவோதல் வாணி. தனியிசை வாணி. பண்ணிசை, தமிழிசை எல்லாம் வாணி. பாட்டு என்றால் அதிபரிலிருந்து பாதுகாப்பு ஊழியர் வரை வாயில் வரும் பெயர் வாணி தான். குழு நிகழ்ச்சி நடந்தாலும் அதற்கும் தலைமை வாணி தான். ஆசிரியரே சொல்வார். மைக்கை வாணியின் முன்னால் வையுங்கள் என்று.

பள்ளியில் மட்டுமல்ல, ஊரிலும் பாட்டால் பேசப்படுபவளாகவே இருந்தாள் வாணி. ஊரில் எந்தக் கோவிலில் என்ன விழா நடந்தாலும் வாணியின் அல்லது வாணியின் தலைமையில் பாட்டு நிகழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். பூசையில் பஞ்சபுராணம் படிக்கும் நேரத்தில் வாணி அங்கிருந்தால், அவளை இழுத்துக்கொண்டு போய் மைக்கின் முன்னால் விட்டுவிடுவார்கள். தங்கள் பூசையின் போது தேவாரம் பாட வர வேண்டும் என்று அன்புக் கட்டளையிடுவதும் உண்டு. அந்தளவுக்கு அவளது குரலில் இனிமை இருந்தது. பாடலில் இராகம் இருந்தது. வாணி போல் பாட வேண்டும் என்று பலரும் தம் குழந்தைகளுக்கு உதாரணம் காட்டுவதும் உண்டு.

எனினும் இசையால் எந்தளவுக்குப் புகழைச் சம்பாதித்தாளோ அந்தளவுக்கு விரோதத்தையும் தேடிக்கொண்டாள். இவளை இசையில் தோற்கடிக்க முடியாத, கூடப் படித்த மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் இவளைத் தமது விரோதியாக நினைக்கவும் தவறவில்லை. இசை மட்டுமல்ல வாத்தியக் கருவிகள் சில மீட்டுவதிலும் திறமை பெற்றதோடு, படிப்பிலும் சோடை போகவில்லை. பெரும்பாலும் வகுப்பில் முதலிடம் கிடைத்தது.

உயர்தரம் படித்துக் கொண்டிருந்தபோது அவளது எண்ணமெல்லாம் இசையுலகத்தில் தன்னை எப்படி அபிவிருத்தி செய்வதென்பதாகவே இருந்தது. நுண்கலைப் பீடத்தில் இசை படித்துப் பின் இந்தியாவின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கலைகள் பல கற்று இசை யுலகில் பலமாகக் கால் பதிக்க வேண்டும் என்பது அவளது கனவு. மௌன யுத்தம் நடத்தும் குடும்பத்தில் ஒற்றைப் பிள்ளையாகப் பல மனக்கஷ்ரங்களுக்கு மத்தியில் வளர்ந்த போதும், இசையென்ற ஒன்று மட்டுமே அவளது மனதிற்கு அமைதியையும் ஆற்றலையும் கொடுத்தது. எந்த இசைப்பின்னணியும் இல்லாமலேயே, திறமையால் மட்டும் இசைத்துறையில் சிறப்பிடம் பெற்றவள் எனப் பேர் வாங்க ஆசைப்பட்டாள். அதனால் உயர்தரப் பரீட்சைக்கென முயற்சியெடுத்துப் படிக்கவில்லை. பல்கலைக்கழகம் கிடைத்தால் நுண்கலைப் பீடத்திற்குச் செல்லப் பெற்றோர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்ற பயம்.

பரீட்சையும் முடிந்தது. கடைசிப் பரீட்சையன்று பாடசாலை அதிபர் அவளைக் கேட்டார். “என்ன வாணி, நல்ல ரிசல்ட் எடுத்துப் பாடசாலைக்குப் பேர் வாங்கித் தருவீர தானை” என்று. அந்த நிமிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் அவள் மனதில் இனம் புரியாத தடுமாற்றம். எல்லோரும் தன் மேல் இவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்களே. பரீட்சை ஓரளவுக்கு நன்றாகவே செய்திருந்த போதும் நல்ல ரிசல்றுக்காக முயற்சி எடுக்கவில்லையே என்று. நுண்கலைப் பீடத்துக்குப் போவது தான் தனது ஆசை என்று பலரிடம் அவள் சொன்ன போது அவர்கள் காட்டிய பிரதிபலிப்பு அவளது தடுமாற்றத்தை வலுவடையச் செய்தது.

"கம்பசுக்கு மாக்ஸ் காணாட்டித் தான் அக்கடமிக்குப் போறவை எண்டால் பிறகு என்னையுமெல்லோ நல்லாய்ப் படிக்கமாட்டன் எண்டு நினைப்பினை."

பரீட்சை முடிவுகளைப் பயத்தோடு எதிர்பார்க்கத் தொடங் கினாள். அவளது பயத்தை வலுவடைய வைத்தது ஒரு சாத்திரியாரின் கணிப்பு. ஒரு சாத்திரியார் அவளது சாதகத்தைப் பார்த்து விட்டுச் சொன்னார். "என்னதான் நீ நல்லாய்ப் படிக்கிற பிள்ளையாயிருந்தாலும், இப்ப உனக்குக் கம்பஸ் போற பலனே இல்லை" சுலீரென்று தலைக்கேறியது கோபம். "வகுப்பிலை அநேகமாய் முதலாய் வாற நான் கம்பசுக்குப் போகமாட்டனோ?"

"வகுப்பிலை திறமையாய் இருந்திருக்கலாம். ஆனால் கம்பசுக்கு ஒரு மாக்ஸ் எண்டாலும் குறையத்தான் வரும். கம்பஸ் பலன் உனக்கு இல்லைப் பிள்ளை."

நல்லதோ கெட்டதோ வாணிக்கு ஒரு குணம் இருந்தது. யாராவது உன்னாலை ஏலாது. சரியான கஷ்ரம் என்று சொன்னால் அதைச் செய்து காட்ட வேணும் என்று முயற்சி செய்வாள். அதிலொரு சந்தோஷம். "பரவாயில்லை. முடிந்தது முடிந்தது தான். அடுத்த தரம் எக்ஸாம் எடுத்துக் கம்பஸ் போகாட்டிப் பார்." மனம் சவால் விட்டது. பரீட்சை முடிவுகள் வந்தன. கட்அவுட்டை விட இருபத் தொன்பது மாக்ஸ் அதிகம் எடுத்துப் பள்ளியில் முதலாவதாக வந்தி ருந்தாள் வாணி. இலகுவாகக் கிடைத்த முதல் வெற்றி. சாத்திரியாரைத் தேடிப் போய்ச் சொன்னாள். "சந்தோஷம் பிள்ளை. சாதகத்திலை அப்பிடித் தான் கிடந்தது. சில வேளை பிறந்த நேரத்திலை ஏதாவது வித்தியாசம் கிடக்கோ தெரியாது" என்றார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கம்பஸ் மெறிற்றிலை பாஸ் பண்ணிப் போட்டு அக்கடமிக்குப் போகப் போறியே. சங்கீதம் பிறைவேற்றாய்ப் படிக்கலாம். பட்டம் வாங்கலாம் தானை. நீ கம்பசுக்குப் போ." பல அழுத்தங்கள். அறிவுரைகள். எல்லாவற்றையும் ஏற்று கம்பஸ் போனாள். இசையை பிறைவேற்றாகப் படித்தாள். கம்பசில் பட்டம் வாங்க முதல் இசையில் மூன்று பிரிவுகளில் பட்டம் வாங்கினாள்.

பட்டப் படிப்பு முடிந்து சில காலங்களில் அரசதுறையில் வேலை கிடைத்தது. என்ன வேலை பார்த்த போதும், எந்த மாவட்டத்தில் இருந்த போதும், இசையோடு இருந்த தொடர்பை மட்டும் அவள் விடவில்லை. தனிப்பட்ட ரீதியில் ஏதோ ஒரு இசைப் பிரிவில் படித்துக்கொண்டோ, படிப்பித்துக் கொண்டோ இருந்தாள். அவள் மனதிலோ எந்த வழியிலாவது இசை ஆசிரியராக ஒரு நியமனத்தைப் பெற்றுவிட வேண்டும் என்ற எண்ணம் நிறைந்திருந்தது. அதற்காக முயற்சியும் செய்தாள். எனினும் அவள் பெற்ற இசைப் பட்டங்கள் தனியார் துறைக்குரியதாய் இருந்ததால் அவளுக்கு ஆசிரியராக அரச நியமனம் கிடைக்கவில்லை.

அவளது அவாவான இசைத் தொழிலுக்குக் கதவடைப்பாக வந்தது அரச துறையில் அதிகாரித் தர நியமனம். ஆசைப்படாததெல்லாம் இலகுவாகக் கிடைக்கிறபோது, ஆசைப்பட்டது மட்டும் எட்டப் போகிறதே எனக் கவலைப்பட்டாலும், தன்னைப் பற்றி ஒரு துளி பெருமை மனதுக்குள் மின்னி மறையாமல் இல்லை. உறவினர் சந்தோஷப்பட, நண்பர்கள் வாழ்த்த, இலகுவில் கிடைக்காத பதவி எனப் பிறர் உற்சாகப்படுத்த, அந்தப் பதவியை ஏற்றுக் கொள்ளத்தான் முடிந்ததே தவிர, அதை உதறித் தள்ளித் தூரப் போய்க்கொண் டிருந்ததை விரட்டிப் பிடிக்கத் துணியவில்லை. புதிய பதவி தந்த போதையில் பயிற்சிக்குக் கிளம்பினாள்.

பல மாவட்டத்தவர். பல மதத்தவர் எல்லோரும் ஒருவராய்க் குழுமி யிருக்கத் தான் மட்டும் அன்னியஸ்வரமாய் உள்ளே வந்து விட்டது போலொரு தவிப்பு. எந்த நிகழ்வோடும் ஒட்ட முடியவில்லை. அதிகாரிகள் கூடியிருந்த மேடையைப் பார்த்தபோது, "இதுவா எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடை?" என்று உள்மனம் கேட்டது. நல்லூர் உற்சவத்தின் இசைநிகழ்ச்சி மேடையல்லவா எனது மேடை. தியாகராஜர் உற்சவத்தின் கூட்டமல்லவா எனது கூட்டம். அவர்கள் கூறியது எதுவுமே அவளுக்குப் புரியவில்லை. கேட்டால் தானே புரிவதற்கு. அவள் காதில் கேட்டதெல்லாம் கற்பனையில் ஒலித்த தம்புராவின் ஓசை தான்.

பயிற்சிகள் நடந்தன. செய்முறைகள் நிகழ்ந்தன. பிரஸன்ரேஷன் என்று புரஜெக்ரரின் முன் நின்று கூட்டத்தினரைப் பார்க்கும் போது அவளறியாமல் கண்கள் கலங்கும். மைக்கைப் பிடித்துப் பாடிய வாய் மவுசைப் பிடித்துக் கதைக்க வேண்டியிருக்கிறதே என்று. நிருவாகம், முகாமைத்துவம், நல்லாட்சி, கணக்கு நடைமுறை ........... பயிற்சித் தலைப்புக்கள் நீண்டன, அவளது பெருமூச்சுப் போல. அந்தக் கூட்டத்திலும் அவளது இசையாற்றல், தெரிந்தவர்களால் வெளிப்படுத் தப்பட்ட போது அது பிறமொழியிலான போதும் உண்மையிலேயே மகிழ்ந்துதான் போனாள்.

பயிற்சி முடித்து, பதவி ஒன்று அவளது பெயரோடு ஒட்டிக் கொண்டது. பள்ளிக் காலத்தில் "வாதாபி புகழ் வாணி", பல்கலைக் கழகத்தில் "கண்ணோடு காண்பதெல்லாம் புகழ் வாணி", இடம் பெயர்ந்த காலத்தில் "கறுப்பு நிலாப் புகழ் வாணி", பயிற்சிக் காலத்தில் "அன்ன பலன் புகழ் வாணி" என்றெல்லாம் பெயர் கிடைத்தபோது மனதில் ஏற்பட்ட எல்லையில்லா ஆனந்தத்தில் ஒரு சிறு துளி கூட அதிகாரி வாணி என்ற போது அவளுக்கு ஏற்படவில்லை. பாடகர் ஒருவர் மனம் வைத்து முயற்சி செய்தால் அரச அதிகாரி ஆகலாம். ஆனால் அரச அதிகாரி ஒருவர் என்னதான் முயன்றாலும் சிறந்த பாடகர் ஆகமுடியுமா? இசை என்பது இயல்பாகவே கருவிலேயே வரவேண்டிய ஞானமாயிற்றே?

பதவிக் கதிரையில் இருந்து பைல்களைப் பார்க்கும் போதோ, முக்கிய கூட்டங்களில் இருக்கும் போதோ எங்கிருந்தாவது பாவோசை கேட்டால் போதும். அவள் உடல் மட்டும் தான் அங்கிருக்கும். மனமோ அதன் பின்னே போய் கனவுலகில் களித்துக் கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டங்களில் பேசப்படும் எதுவும் அவளுக்குக் கேட்பதேயில்லை. ஐந்து வயதில் படித்த ஸ்வர சாகித்தியங்களை இராகம் தவறாமல் பேணிவைத்திருக்கும் மூளையும் மனதும், ஐந்து நிமிடத்திற்கு முதல் மேலதிகாரி கூறிய முக்கிய விடயத்தை நினைவுக்குத் தருவதற்கு மறுத்தன. பாடகர்களைக் கண்டால், பாடல்களைக் கேட்டால் எனக்கு மட்டும் இந்த வாய்ப்பு அமையவில்லையே என்ற களிவிரக்கம். சரஸ்வதி பூசையன்று நிச்சயம் அழுவாள். ஆறரைக் கட்டையில் நித்தியஸ்ரீயின் பாடல்களைப் பாடிய குரல், இப்போது நாலரைக் கட்டைக்குக் கூட மக்கர் அடிக்கிறதே. உள்மனது வெம்பியழும். அலுவலகத்தில் ஒவ்வொரு நொடியும் முள்ளின் மேல் நிற்பது போல.

இப்படியே இருந்தால் ஒரு வினைத்திறனற்ற அதிகாரி என்ற பெயர் வந்து விடுமே என்ற பயமும் இல்லாமலில்லை. எந்த வகுப்புக்குப் போனாலும் முதலிடத்தில் அல்லது முதலிடத்தில் இருக்கும் ஒருசிலரில் ஒருத்தியாக இருந்து பழகியவள். அலுவலக விடயங்களில் கடைசியாளாக இருந்து விடுவேனோ என்று ஏங்கினாள். வேலையை விட்டு விடுவோமோ என்று சிலகணம் மனம் நினைக்கும். மறுகணமே "பிடித்த துறையில் போய் ஜெயிப்பது வெற்றியா அல்லது பிடிக்காத துறையை பிடித்ததாக்கி அதில் ஜெயிப்பது உண்மையான வெற்றியா?" கண்ணாடி முன் நின்று தன்னைப் பார்த்து தானே கேட்டுக்கொள்வாள். சில தினங்கள் அமைதியாக வளையவருவாள். பின் வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறிவிடும்.

மொத்தத்தில் காதலனின் நினைவில், கைப்பிடித்தவனோடு வாழ முடியாமல் அவஸ்த்தைப்படும் காதலியின் நிலையில் வாணி. பலதையும் யோசித்தாள். இந்தியாவுக்குப் போனால் என்ன? வேலையையும் விடாமல் ஒரு இரண்டு வருடங்களுக்கு நோ பே லீவு எடுத்துக் கொண்டு, ஆசைப்பட்ட அண்ணாமலை இசைக்கல்லூரியில் ஆசை தீரப்படித்தால் என்ன? நல்ல யோசனை. செயற்படுத்த முடிவு செய்தாள். அமைதியாகக் கடமையாற்றினாள். இரு வருட நோ பே லீவு எடுக்கத் தேவையான சேவைக்காலம் முடிந்ததும் விண்ணப்பித்தாள். இசையைத் தேடி இந்தியா வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்பு அவள் நிறையவே மாறிப்போனாள். கோபம் குறைந்தது. மனம் அமைதியடைந்தது. எங்கு கேட்டாலும் இராக ஆலாபனை, வாத்திய இசை, இருபத்தினான்கு மணிநேரமும் தம்புரா ஓசை. அவளது சொர்க்கம் அதுதானே. இசை நுணுக்கங்களைப் பிரபலமானவர்களிடம் தேடித் தேடிக் கற்றாள். மற்றவர்க்கும் சொல்லிக் கொடுத்தாள். இரு வருடங்கள் இனிமையாகக் கழிந்தது. பரீட்சைகளும் முடிந்தது. பேராசையோடு கற்ற பலன் கல்லூரியிலேயே முதல் மாணவி.

முதல்வரே கேட்டுவிட்டார். "இந்தக் கல்லூரியிலேயே லெக்ஷரர் போஸ்ற்றுக்கு உன்னைப் போடப் போறனம்மா. உன்னட்டை இருக்கிற திறமை கல்லூரிக்குக் கட்டாயம் தேவை."

"நன்றி சேர். ஆனால் என்னை மன்னிச்சுக் கொள்ளவேணும் சேர். இந்த நல்ல வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலையிலை இருக்கிறன். நான் ஊருக்குப் போக வேணும் சேர்."

"சரியம்மா. உனக்கும் எத்தனையோ கடமைகள் இருக்கும். அங்கை போனாப் போலை இங்கை வரத் தோன்றினால் உடனே வாம்மா" பின்னால் யாரோ அழைக்கும் சத்தம் கேட்கத் திரும்புகிறாள். தோழிகள் தான்.

"என்ன வாணி. இன்னும் இரண்டு கிழமையில் ஊருக்குப்போறாய் தானே. பிறகேன் இல்லாததைப் பற்றி யோசிக்கிறாள்? மேக மூட்டமாய்க் கிடக்கு. மழை வரப் போகுது போலை. வா... வா..." என்றபடி நடக்கிறார்கள்.

"இவர்களுக்கு எப்போதும் என் ஊரைப்பற்றி இளக்காரம் தான். என்ன இல்லை எங்கட நாட்டிலை. ஏதோ எங்கடை தலைவிதி. பிரச்சினைகளால் அடிபட்டுக் கொண்டம். உது ஒண்டும் இல்லாமை இருந்திருந்தால், இவையாலை எங்களைப் பிடிக்கேலுமே. சாம்பலாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கினாலும் உயிர்த்தெழ எங்களுக்குத் தெரியும்." மனதுக்குள் கூறியபடி பின்னால் நடக்கிறாள்.

ஆசைப்பட்டது கிடைத்துவிட்டது. இனி அங்கே போய் எவ்வளவு பொறுப்புக்களைச் சுமக்க வேண்டியிருக்கிறது. நன்றாகச் செய்ய வேண்டுமே. மனதில் மலைப்பு ஏற்படுகிறது. "என்ன வேண்டுமே... செய்வேன் என்று நினை....." இன்னொரு மனம் கட்டளையிடுகிறது. இயல்பாகவே தனது சாதனைப் பட்டியலை நினைத்துப் பார்க்கிறாள்.

ஆம்...... தனது சாதனைகள் என்று தானே நினைத்துக் கொள்ளும் விடயங்கள் சில இருக்கின்றன. மனம் கலங்கும் போதெல்லாம் அவற்றை நினைத்துத் தான் தனது மனதை உறுதிப்படுத்தியிருக்கிறாள். கஷ்ரப்படாமலே கம்பஸ் போனது, உயர்தரத்திலும், கம்பஸ் முதல் வருடத்திலும் மற்றப்பாடங்களை விடக் குறைந்த புள்ளியை எடுத்த பாடத்தையே பலர் தடுக்கவும் சிறப்புப்பாடமாக எடுத்து அதில் முதல் வகுப்பில் சித்தியடைந்தது, இசைப் பிரிவில் ஆசிரியர் தரப் பரீட்சை எடுக்க ஆறு மாதங்கள் போதாது இரு வருடங்களாவது தேவை என்று ஆசிரியர் சொல்லியும், இசைப் பிரிவோடு வாத்தியப் பிரிவிலும் தானாகவே பயிற்சி செய்து ஆறு மாதத்தில் ஆசிரியர் பரீட்சை எடுத்து முதலாம், இரண்டாம் பிரிவுகளில் சித்தியடைந்தது, வீணை வாத்தியத்தை ஆசிரியர் இன்றிப் படிக்க முடியாது என்று பிறர் கூறியதை நிராகரித்துத் தானாகவே பயின்று ஒன்றிலிருந்து ஆசிரியர் தரம் வரை பயின்று பட்டம் வாங்கியது. அந்நிய மொழியில் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை எடுத்து நிறுவன மாணவர்களிலேயே தனியாளாகச் சித்திபெற்றது, இதற்கென்று முயற்சி செய்யாமலேயே அரச துறையில் அதிகாரித்தரப் பதவி பெற்றது, கதைக்காமல் பிறமொழி வராது என அவ்வினத்தவரே கூறியதைப் பொய்யாக்கி ஒரு வருடத்துக்குள் அம்மொழியில் உரிய பரீட்சையில் சித்தியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றையெல்லாம் நினைக்கும் போது, அவளுக்குள் புதுச்சக்தி ஊறும். அவள் சாதனைகளாக நினைக்கும் எல்லாமே மற்றவர்களின் சவாலுக்காகச் செய்தது. இந்த விடயத்தில் அவளது மனமே இரண்டாகப் பிரிந்து ஒன்றையொன்று சவாலுக்கு அழைக்கிறது.

"நினைத்ததை அடைந்த உனக்கு, அடைந்ததில் ஜெயிக்க முடியுமா?"

"என்ன முடியுமா என்று கேட்கிறாய்? இருந்து பார்..... நான் ஜெயிக்கிறேனா இல்லையா என்று.... நீ பார்க்கத்தானே போகிறாய்... ஒரு வினைத்திறனுள்ள சிறந்த அதிகாரி என்று நான் பெயர் வாங்குவதை...."

அவளது ஒரு மனம் உறுதியளித்துக் கொண்டிருக்கும் போ்து, சுளீர் என்று வெய்யில் அவளைச் சுடுகிறது. திடுக்கிட்டு வானத்தைப் பார்க்கிறாள். மேக மூட்டங்கள் விலகி வானம் தெளிவாக இருக்கிறது. மஞ்சள் வெய்யில் தகதக என்று ஜொலித்துக் கொண்டிருக்கிறது. ஊரெல்லாம் வெளிச்சம். தூரத்தே பார்க்கிறாள். இந்த உலகமே அழகானதாகவும், இனிமையானதாகவும் தோன்றுகிறது.

(யாவும் கற்பனை)

(வட மாகாண ஆக்க இலக்கியப் படைப்பாற்றல் போட்டிக்காக 2010 ல் சமர்ப்பிக்கப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. பெண் (ணா) (நா)ய் நான் பட்ட...

"பெண் என்றால் பேயுமிரங்கும்... பெண்களுக்கு ஏது இரக்கம்......." பாடல் வீட்டுக்குள்ளிருந்து காண்டாவனக் காற்றில் சுழன்று வருகின்றது. பாடல் சுழன்றடித்து என் காதுக்குள் நுழைந்து மோதியபோதெல்லாம், எனக்கு நிழல் தந்துகொண்டிருந்த மரம் தன் இலைகளைப் பொல பொல என்று சொரிந்து கண்ணுக்குத் தெரியாத என்னை ஆசீர் வதிக்கின்றது. சருகு மெத்தை நமைச்சலை ஏற்படுத்த மெதுவாய்ப் புரண்டு திரும்பிப் பார்க்கிறேன். நிலவின் ஒளியில் சற்றுத் தள்ளி என் வாரிசுகள் ஐவரும் ஆழ்ந்து துயில் கொள்ளும் இடம் வெறுமையாக இருந்தது. பஞ்சப்பட்ட பரதேசி எனக்கு பஞ்சபுத்திரர்கள் தந்த பரமனை என்ன செய்ய முடியும்? இந்தியாவில் சில இடங்களில் பெண்பிள்ளைகள் பிறந்தால் கள்ளிப் பால் கொடுத்துக் கொல்கிறார்களாம். அப்படி என்னையும் கொன்றிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். நானும் இருந்திருக்கமாட்டேன். என் பிள்ளைகளுக்கும் இந்த நிலை வந்திருக்காது.

நிரந்தர வீடில்லாத என் தாய், தெருவோரத்தில் எங்கள் நால்வரையும் பெற்றுப்போட்டாள். அப்பா யாரென்று எங்களுக்குத் தெரியாது. என் தாய் கூட அறிவாளோ என்னவோ. குடும்பத் தலைவன் இல்லா விட்டால் போறவன் வாறவன் கூடக் கல்லெறிந்து பார்ப்பானாம். தொல்லை பொறுக்க முடியாமல் இரவோடிரவாக அம்மா எங்கோ ஓடிப்போனாள். அவளின் கால்த்தடம் பார்த்துப் பின்பற்றிப்போன எம்முள், கடைக்குட்டி நான் பின்தங்கிவிட்டேன். எனது சகோதரர்களில் யார் அம்மாவைக் கண்டுபிடித்தார்கள், யார் இடைநடுவில் காணாமல் போய்த் தத்தளித்தார்கள் என்ற விபரம் இதுவரை எனக்குத் தெரியாது. அடிக்கடி அவர்களை நினைத்து வருந்துவதுண்டு.

பின்தங்கிய நான் வீதியில் தேடுவாரற்று நின்ற போது பார்த்தவர்கள் பலர். பரிதாபப்பட்டவர்கள் சிலர். பார்த்தும் பார்க்காதவர்கள் போற் போனவர்கள் பற்பலர். பின்னாளில் எனக்கு ஆதரவு தந்த என் உடன்பிறவா அக்கா, என் தலையைத் தடவியவாறு அடிக்கடி சொல்வா. "நாங்கள் பாபர் மசூதியடி. இடிக்கத்தான் ஆக்கள். கட்ட யாருமில்லை" என்று. அது போலத் தான் என் நிலையும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேற்றில் செந்தாமரை போலிருந்த என்னை அருகில் வந்து பார்த்த சிலரும் நான் பெண் ஜென்மம் என்பதை உணர்ந்ததும் எங்கே தம்மேல் பொறுப்பு விழுந்து விடுமோ என்று அஞ்சிக் காத தூரம் தள்ளிப் போனார்கள்.

நாட்டில் சில நல்லவர்கள் இருப்பதால் தானாம் மழை பெய்கிறது. வீதியில் நின்று அழுது கொண்டிருந்த என்னைக் கண்ட சாரு அக்கா நெருங்கி வந்து என்னைக் கைகளில் எடுத்துக் கொண்டாள். கையில் வைத்திருந்த கோவில்ப் பிரசாதத்தை எனக்கு ஊட்டினாள். அவள் அன்பில் திளைத்த நான், அவள் நெஞ்சோடு ஒட்டிக்கொண்டேன். அவள் முகத்தைப் பார்த்தபோது எனது எதிர்காலம் குறைந்த பட்சம் சாப்பாட்டுக்காவது குறைவில்லாமல் இருக்கும் என்று தோன்றியது.

அவளுடன் அவளது வீட்டுக்கு, புகுந்த வீட்டுக்குப் போகும் புதுப்பெண் போல மிகுந்த எதிர்பார்ப்புடன் போனேன். வாசலிலேயே என் எதிர்பார்ப்பில் மண் விழுந்தது. "கோயிலுக்குப் போன நீ கும்பிட்டுட்டு வராமை, உந்தக் கோதாரியை ஏன் தூக்கிக் கொண்டு வாறாய்? என்று ஏதோ எதுகை மோனை என்று சொல்வார்களே அதன் படி அர்ச்சினை நடந்தது. கிட்ட வந்து பார்த்த அம்மா "அடக் கடவுளே கொண்டு வந்தது தான் வந்தாய். ஒரு ஆம்பிளைப் பிள்ளைக் கொண்டு வந்திருக் காதையன். போயும் போயும் ஒரு பெட்டச்சியைக் கொண்டு வந்திருக்கிறியே. உனக்கு மண்டேக்க ஏதேனும் கிடக்கே?" சந்தேக மாகக் கேள்வி எழுப்பினாள்.

பெண்கள் சக்தியின் சொரூபங்கள். தாய்மையின் சின்னங்கள் என்பார்கள். உனக்கெப்படித் தெரியும் என்று கேட்கிறீர்களா? என்னை ஆதரித்த சாரு அக்கா நல்ல படிப்பாளி. எப்பவும் புத்தகக் கையோடு தான் காணலாம். அவ தனிப்பிள்ளை என்றதாலை எப்பவும் என்னைப் பக்கத்திலை வைச்சிருப்பா. வாய்விட்டுப் படிப்பா. என்னோடை பேசிறது போல தனக்குத் தானே பேசிக்கொள்வா. அப்ப பொறுக்கியது கனக்க. அவவின்ரை பேச்சு நடையும் பிரயோகங்களும் எனக்கும் இடைக்கிடை வரும்.

நல்ல வேளையாக அம்மா கத்தியது எதற்கும் மசிந்து கொடுக்காமல், என்னைக் குளிப்பாட்டி நல்ல பவுடர் போட்டுவிட்டா. அம்மா போல எனக்கு வேறொரு எதிரியும் அங்கிருந்தான். வில்லி அம்மாவுக்கு விசுவாசமான வில்லன் என்று அவனைச் சொல்லலாம். நல்லாய்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்டு பலூன் மாதிரி இருந்தான். ஆனால் ஒரு பருக்கை கூட எனக்குத் தரமாட்டான். சாரு அக்கா எனக்குத்தாற சாப்பாட்டைக் கூட, அவ பக்கத்திலை இல்லாட்டி வந்து பறிச்சுப் போடுவான். என்னை முறைச்சு முறைச்சுப் பார்ப்பான். சிலநேரம் கிட்ட வந்து மோந்து பார்ப்பான். அவன் வயசுக்கு நான் மகள் மாதிரி. பேத்தி எண்டு கூடச் சொல்லலாம். ஆனால் கொஞ்சம் கூட இரக்கமில்லை. காணுற நேரமெல்லாம் என்னைக் கொல்லுற மாதிரிக் கத்துவான். அவன் கத்தக் கத்த அம்மாவுக்குப் பிறசர் ஏறும். பதிலுக்கு அவவும் கத்துவா.

சோலி எதற்கென்று அவன் குரல் கேட்கும் பக்கங்களைத் தவிர்த்தேன். சாரு அக்காவின் வால் போல அவளுடனேயே திரிந்தேன். அவள் இல்லாத நேரம் மறைவாய் ஒரு இடத்தில் ஒதுங்கிக் கொள்வேன். சும்மா சொல்லக்கூடாது. சாரு அக்கா என் வயித்துக்கு வஞ்சனை இல்லாமல் சோறு போட்டாள். தான் என்ன சாப்பிட்டாலும், அதில் ஒரு துளியாவது எனக்குத் தருவாள். நானும் அவள் போட்டதும், வில்லனுக்கு முன்பாகவே விழுங்கிவிடும் வித்தையை வளர்த்துக் கொண்டேன். என் உடலும் பலூன் மாதிரி ஆகத்தொடங்கியது. என்னைப் பார்ப்பவரெல்லாம் என்மேல் ஆசை கொண்டனர். சாரு அக்கா இல்லாத நேரங்களில், அம்மா என்னை விலை கூறாமலே விற்க முயற்சிப்பாள். ஆனாலும் நான் பெண் என்பதனால் எல்லாரும் பிடரியைக் காட்டினர்.

இந்நிலையில் நான் பருவமடைந்ததாய் என் உள்ளுணர்வு சொல்லியது. அந்த உணர்வு வில்லனுக்கும் வந்ததோ என்னவோ, இதுவரை கோபத்தோடு கத்திக் கத்தி முறைத்தவன், இப்போது கத்தாமல் முறைக்க ஆரம்பித்தான். அந்தப் பார்வையில் ஆபத்து இருப்பதாகப் பட்சி சொல்லிற்று. மகள் வயசுக்கு வந்துவிட்டால், தகப்பன் தனது மகனுடைய நண்பர்களைக் கூட வீட்டில் அண்டமாட்டானாம். இது நாள் வரை வில்லன் தன் சகாக்கள் இருவரை அழைத்து வந்து விளையாடுவான். இவன் போயும் விளையாடுவான். இப்போது அவர்களை வேலிப்பக்கமே வர விடுவதில்லை. தானும் போவதில்லை. தப்பித் தவறி வந்துவிட்டால் துரத்திச் சண்டை பிடிக்கிறான். நான் வேலி தாண்டிப் போனால் கூட, காவலுக்கு வாறான். என்னுடன் சினேகம் பாராட்ட முயன்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் எண்ணம் எனக்குப் புரிந்தது. ஒதுங்கி ஒதுங்கிப் போனாலும் விடாமல் துரத்தினான். ஒரே வீட்டில் இருந்துகொண்டு எத்தனை நாள் தான் போக்குக் காட்டுவது? சோர்ந்து போனேன். பிரச்சினையைச் சாரு அக்காவுக்கு உணர்த்த முயன்றேன். வயிற்றுக்கு உணவு போட்ட அவவுக்கு, எனக்குப் பாதுகாப்புத் தர முடியவில்லை. உணரவுமில்லை. இறுதியில் வேண்டா வெறுப்பாகச் சினேகிதமானேன். அதன் பின் என் வயிறு வளர்பிறையாக வளரத் தொடங்கியது. தலைச் சுற்றலில்லை. வாந்தியில்லை. இருந்தாலும், வாரிசுகள் தயாராவதை என் பெண் உள்ளம் உணர்ந்து கொண்டது.

இந்நிலையில் என் துர்ப்பாக்கியம் ஆரம்பமானது. சாரு அக்கா தன் எதிர்கால வாழ்க்கைக்காக வெளிநாடு செல்வதற்கு முயற்சிக்கத் தொடங்கினாள். அடிக்கடி கொழும்புக்குப் போனாள். வாயும் வயிறுமாய் இருக்கும் இந்த நேரத்தில் தான் வாய்க்குருசியாக ஏதோ எல்லாம் சாப்பிடத் தோன்றுமாம். ஆனால் எனக்கு ஒரு வேளை உணவு கிடைப்பதே பெரும் பாடாகிப் போனது. சாரு அக்கா நிற்கும் போது தேவைக்கு அதிகமாகவே சாப்பிட்டுக் கொள்வேன். ஒட்டகம் தனக்குப் பலமாதங்களுக்குத் தேவையான நீரைக் குடித்துச் சேமித்து வைத்துக் கொள்ளுமாமே. ஆனால் கடவுள் எனக்கு அந்த வயிற்றைத் தரவில்லையே. என்ன சாப்பிட்டாலும் ஜீரணமாகி விடுகிறதே. என்னைக் காணும் போதெல்லாம் என் உப்பிய வயிற்றைப் பார்த்துப் பொரிந்து தள்ளினாள் அம்மா. சமயம் வரும் போது என்னைத் திட்டித் தாக்கிய அம்மா, என் நிலைக்குக் காரணமான அந்த வில்லனோடு மட்டும் வழமை போல மிகுந்த உறவு பாராட்டினாள். ஏன் இந்த ஓரவஞ்சனை. "அம்மா நீயும் பெண். நானும் பெண் தானே. ஏன் இப்படி அதர்மம் செய்து பாவத்தைக் கட்டிக்கொள்கிறாய்?" மனது ஓலமிடப் பசியால் சுருண்டு கொள்வேன்.

போசாக்கின்மையால் வயிற்றைத் தவிர ஏனைய பாகங்கள் மெலியத் தொடங்கின. விசா கிடைத்துவிட்ட சந்தோசத்தோடு கொழும்பால் வந்த சாரு அக்கா, என் நிலை கண்டு பரிதாபப்பட்டாள். போசாக் கான உணவு தந்து என்னைப் பழையபடி ஆக்கினாள். குறித்தநாள் வந்ததும் என்னையும் அழைத்து உச்சி மோந்துவிட்டுப் பயணப்பட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் எதிர்காலம் சூனியமாகியது. என்றாலும் ஒரு நிம்மதி. வீட்டை விட்டுத் துரத்தமாட்டார்கள். சாரு அக்கா பயணப்படுமுன் அதற்கான சத்தியத்தை அம்மாவிடமிருந்து வாங்கியிருந்தாள். சாரு அக்காவைப் பிரிந்து பல நாட்கள் அழுதேன். பெண்கள் அழுதழுதே சாதித்து விடுவார்களாம். ஆனால் என் கண்ணீர எதையும் சாதித்து விடவில்லை. யாரும் கவனிக்கவுமில்லை. வீட்டுத் தாவாரத்திலிருந்து வேலியோர மரத்தடிக்கு எனது இருப்பிடத்தை மாற்றிக் கொண்டேன். அதாவது மாற்றிக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தேன். குளிக்கும் நீரைக் குடித்து, மிஞ்சினால் எறியப்படுவதைக் கால் வயிற்றுக்கு உண்டு. ஒரு இராகு கால அமாவாசை இருட்டில், அதே அமாவாசை போல நான்கு பெண் பிள்ளைகளையும், என்னைப் போல பிரகாசமாக ஒரு ஆண் பிள்ளையையும் பிரசவித்தேன். வெள்ளை வில்லன் சந்தேகமாக என்னைப் பார்த்ததை அலட்சியம் செய்தேன். என் உடல் வற்றி யிருந்தாலும் என் குழந்தைகள் ஆரோக்கியமாகத் தான் இருந்தார்கள். என் பிள்ளைகளின் பசிக்குப் போதுமான பால் தரவேணுமே. வாயில் கிடைத்ததை எல்லாம் உண்ண ஆரம்பித்தேன். வாயில்லா சிறு பிராணிகள், அடுத்த வீட்டுக் கோழிக் குஞ்சுகள் கூடச் சிலசமயம் எனக்கு இரையாவதுண்டு. தத்திவரும் பஞ்சுக் குஞ்சுகளைப் பார்க்கத் தயக்கமாகத் தான் இருக்கும். ஆனால் வறண்ட மடியை ஆவலோடு தேடும் கண் திறக்காப் பாலகர்களைப் பார்க்கும் போது, தயக்கம் பறந்து விடும்.

பிள்ளைகள் ஓடியாடத் தொடங்கினர். எல்லோரும் ஓடிப் பிடித்து விளையாடுவதைப் பார்க்கும் போது நான் படும் கஷ்ரமெல்லாம் மறந்து சந்தோஷப்படுவதுண்டு. பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் என்பார்கள். எனது உடலில் பொட்டுப் பொட்டாக மயிர் கொட்டி, உடல் விகாரமடையத் தொடங்கியது. இதைப் பார்த்த அம்மா, என் ஒரேயொரு ஆண்மகனை என்னிடமிருந்து பிரித்தாள். என் நோய் தொற்றி விடுமாம். மகள்மார் பால்குடிக்கும் போது, சிறைக்குள்ளிருந்து என் ஆசை மகன் கதறுவதைத் தூரத்திலிருந்து கண்ணீரோடு பார்க்கத் தான் முடிந்தது. கூட்டுப் பக்கம் போகக்கூட அனுமதியிருக்கவில்லை. "அம்மா ஒரு தாய் மனம் உனக்குப் புரியவில்லையா?" என்று ஊமை யுள்ளம் புலம்பிய போதும், என் மகனின் எதிர்காலம் நன்றாயிருக்கும், அவனாவது சந்தோசமாயிருப்பான் என்று எண்ணி என்னைச் சமாதானப் படுத்திக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்கள் கடந்தன. கறுப்புத் தினம் ஒன்று (எனக்கும் என் மகள் மாருக்கும் மட்டும்) புலர்ந்தது. அன்று ஓர் அதிசயத்தைக் கண்டேன். அன்றுவரை என்னையும் என் மகள்மாரையும் வாசல் பக்கமே அண்டாத அம்மா, என் மகள்மாரை அழைத்து உணவிட்டுக் கொண்டிருந்தா. என் பிள்ளைகளின் கஷ்ரம் எல்லாம் தீரப் போகிறதா? என்ற எதிர் பார்ப்போடு அதைப் பார்த்துக் கொண்டிருந்தாலும், உள் மனது மட்டும் எதையோ எச்சரித்தது. பயந்தது நடக்கத் தொடங்கியது. திடீரென அம்மா என் மகள்மாரை ஒவ்வொருவராகப் பிடித்துப் பையிலே போடத் தொடங்கினா. எல்லாம் புரிந்தது. "ஐயோ வேண்டாம் வேண்டாம்" என்ற கதறலுடன் காப்பாற்ற ஓடினேன். வில்லன் அம்பாய்ப் புகுந்து என்னைத் துரத்தத் தொடங்கினான். என்னால் ஓடமுடியவில்லை. உருட்டி உருட்டிக் கடிக்கப்பட்டேன். மயக்கமானேன்.

சுரீர் என்ற வலியில் கண் விழித்தேன். இரத்தம் வடியும் காயத்தில் எறும்பு கடித்துக்கொண்டிருந்தது. சுற்றுமுற்றும் பார்த்தேன். காயத்தின் வலியை விட, என் கண்மணிகளைக் காணாத வலி என் உயிரைத் தின்றது. பெண்ணாய்ப் பிறந்தது நான் செய்த பாவமா? பெண் பிறப்பெடுத்து, நாய் படாப்பாடு பட்டுவிட்டேன். தற்கொலை செய்யு மளவுக்கு எனக்கு அறிவு போதாது. அதைப்பற்றி என் சாரு அக்கா எதையும் என்னுடன் கதைத்திருக்கவுமில்லை.

வானத்தை நிமிர்ந்து பார்க்கிறேன். நேரம் இரவு பதினொரு மணிக்கு மேல் இருக்கும் போல. என் பிள்ளைகளைப் பிரிந்து முழுசாகப் பன்னிரண்டு மணித்தியாலங்களாவது கடந்திருக்கும். பிள்ளைகள் பசியாறாத மார்புகள் தாமாகச் சுரந்து வேதனையைக் கொடுத்தன. வயிறு உணவுக்காக ஏங்கியது. காயங்கள் ரணமாய் வலித்தன. எப்படியும் இன்னும் இரண்டு நாட்களில் இவ்வுலக வாழ்வு முடிந்துவிடும் என்றது உள்ளுணர்வு. அதுவரை எப்படித் தாக்குப் பிடிக்கப்போகிறேன். போற உயிர் இப்போதே போய்விடாதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தொம் தொம் தொம்" யோசனை கலைந்தது. கலைத்தது மதில் தாண்டி இந்தப் பக்கம் குதித்த மூன்று நான்கு கறுப்பு உருவங்களின் சத்தம். மயங்கிய நிழலிலும், வீட்டை நோக்கி அந்த உருவங்கள் மெதுவாக முன்னேறியது தெரிந்தது. நடக்கப் போவது புரிந்தது. கத்த முயன்றேன். தொண்டை வரண்டு குரல் எழ மறுத்தது. வில்லனை விழிகள் தேடின. காணவில்லை. எங்கே மேயப் போனானோ. சாரு அக்கா கண்ணில் தோன்றினாள். அவளின் பொருளுக்கு மோசம் நிகழ்வதா? அதை நான் பார்த்தும் கல்லாயிருப்பதா? சக்தி அனைத்தையும் திரட்டி முயற்சித்தேன். "ஊ...... ஊ......" ஊளையாய் வெளிப்பட்டது சத்தம். உருவங்களில் ஒன்று எட்டி உதைத்தது. வலியை மீறிய ஆவேசத்தோடு கத்தினேன். அடுத்த உதை கிடைப் பதற்குள் வீட்டுக்குள் வெளிச்சம் பரவியது. "சனியன் ஊளையிடுகுது. அந்தத் தடியை எடுத்து எறி. உதுக்குத்தான் சொன்னனான். அப்பவே தலை முழுகச் சொல்லி" கட்டளையைத் தொடர்ந்து ஜன்னலுக் குள்ளால் தடி பறந்து வந்தது. கறுப்புருவங்கள் மீண்டும் மதில் தாண்டி ஓடின. ரணங்களை மீறிய பரவசம். உயிர் போகும் வதையை மீறிய ஆறுதல். கண் மங்கியது. காது சக்தியிழந்தது. காற்று அசைய மறுத்தது. ஆனால் உடலோ மிதந்தது. ரணங்களுக்கு முடிவு. வதைகளுக்கு முடிவு. வேதனைகளுக்கு முடிவு. இனியெல்லாம் எனக்கு நிம்மதி மட்டுமே.

இப்போதெல்லாம் எனக்கு யாரும் அடிப்பதில்லை. துரத்துவதில்லை. வலியுமில்லை. அதேபோல் பசியுமில்லை. நானொருவன் இங்கே இருப்பதாக யாரும் கண்டுகொள்ளவும் இல்லை. இருப்பதெல்லாம் நினைவுகளோடு கூடிய நிம்மதி மட்டுமே.

(யாவும் கற்பனை)

(கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய. தேசிய கலை இலக்கியப்போட்டி 2010ல். பிரதேச மட்டத்தில் முதலாமிடம் பெற்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. நிழலான நிஜங்கள்

“இண்டைக்கு எப்பிடியெண்டாலும் அதைக் கடத்திப்போட வேணும்.” காலையில் கண் விழிக்கும் போதே கனகசபையின் மனமும் விழித்துக்கொண்டது.

“நானும் தான் நாயாய்க் கத்துறன். வெளவாலாய்த் தொங்குறன். இந்தக் கிழவி ஒண்டுக்கும் மசியாதாம். வெறும் மரத்தைக் கட்டிக் கொண்டு அழுகுது. ஊருலகத்திலை இல்லாததே. உந்தப்பாதை திறந்தாப் போலை அங்காலிப் பக்கத்துச் சனமெல்லாம் வந்து காசின்ரை அருமை தெரியாமல் இங்கினேக்கை கிடக்கிற பழசையெல்லாம் அள்ளிக் கொண்டு போகுதுகள். இருபதாயிரம் எண்டால் சும்மாவா..... ம்....” படுக்கையில் புரண்டார் கனகசபை.

பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப்பட்ட பழைய காலத்துப் பித்தளை, மரப்பொருட்களெல்லாம் முன்பு இருந்தன. அநேகமான வற்றை கனகசபை விற்றுவிட்டார். எஞ்சி இருப்பவற்றை ஒவ்வொரு நாளும் துடைத்து வைப்பாள் தாய் அன்னம்மா. சிற்பவேலைப்பாட மைந்த மேசை, வீட்டின் பெரும்பகுதியை ஆக்கிரமித்திருந்தது. பாட்டியைப் பொறுத்தவரை அது தாஜ்மகாலை விட பெறுமதியான நினைவுச் சின்னம்.

அழகேசனைப் பாட்டி கைப்பிடித்த வேளை, அவளது மாமன் பரிசளித்த பரம்பரைச் சொத்து. அந்த நேரத்தில் பாட்டிக்கும் அதனருமை புரியவில்லை. அழகேசன் தான் புரியவைத்தார்.

“அன்னம், இதைச் சும்மா ஒரு மேசை தானெண்டு நினைச்சிடாதை. உனக்குத்தெரியுமே இதுன்ரை கதை. கனகாலத்துக்கு முந்தி மன்னன்மார் ஆண்டவையெல்லோ. அந்த மன்னர் ஒருவரிட்ட வேலை பார்த்தவர் எங்கடை கொள்ளுத் தாத்தாவின்ரை தாத்தா. அவருக்கு மன்னர் பரிசாகக் குடுத்தது தான் இது. அதிலையிருந்து பரம்பரையிலை பிறக்கும் மூத்த ஆம்பிளைப் பிள்ளையளிட்டை இது இருக்குது.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுக்குப் பிறகு தான் பாட்டியும் அதைக் கவனித்தார். அழகேசன் சொன்ன கதை உண்மையோ என்னவோ. ஆனால் பல பரம் பரையைக் கண்ட மேசை என்பது புரிந்தது. உண்மையிலேயே அழகான மேசை. ஒரு பத்துப்பதினைந்து பேருக்கு வசதியாக உணவு பரிமாறக் கூடியது. எல்லா மேசைகளுக்கும் நான்கு கால்கள். இதுக்கு ஐந்து கால்கள், நடுவிலொரு மொத்தக்கால். தூர இருந்து பார்த்தால் விழுதுகளுடன் ஆலமர மொன்று நிற்பது போல கருந்தேக்கில் செய்யப்பட்டது. அதன் கால்களெங்கும் கலை நுணுக்கங்கள். மேசை விளிம்புகளில் செதுக்கப்பட்ட அருமையான நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகள். திறந்து மூடக்கூடியதாக இருந்த மேசை, உணவுகளை உள்ளே வைத்துப் பாதுகாக்கக்கூடியது. உணவை வைத்து விட்டு அதை மூட வலை தேடும் அவசியமில்லாமல் தேவையுணர்ந்து நுண்கலை யுணர்வுள்ள ஒரு கலாரசிகனால் செய்யப்பட்டது. பரம்பரை இடை வெளியால் நிறம் கொஞ்சம் மங்கியிருந்தாலும் உறுதி சிறிதும் குறையாம லிருந்தது.

அழகேசனார் இருந்தவரைக்கும் அது ஒரு பரம்பரைப் பெருமைக்குச் சான்றாயிருக்கும் ஒரே சொத்து என்ற வகையில், ராஜ மரியாதை அந்த மேசைக்கு. வீட்டில் என்ன நடந்தாலும் நடு நாயகமான சுமைதாங்கியாக இருப்பது அதுதான். சாதாரண நாட்களில் அவரது அறைக்குள் இருக்கும். அதைத் தூக்கவென்று கூலிக்கு ஆட்களை அமர்த்துவார். சுருங்கச் சொன்னால் உணர்வு பூர்வமான, உண்மையான ஒரு வாத்தியக் கலைஞன் தன் கருவியை எப்படிப் பேணுவானோ அப்படிப் பேணினார்.

அவருக்குப் பின்பு, மனைவி அன்னம்மா அதனைப் பின்பற்றினாள். பரம்பரைக் கலைப்பொருள் என்பதோடு, தன் கணவனால் நேசிக் கப்பட்ட பொருள் என்ற உணர்ச்சியும் சேர்ந்தது. வீட்டுக்கு யார் வந்தாலும் அதைக் காட்டாமல் இருக்கமாட்டாள்.

"உப்புடி ஒரு வடிவான மேசையை எங்கையெண்டாலும் கண்ட னீங்களே?" எனக் கேட்டுக் கேட்டுப் பெருமைப்படுவாள்.

அப்படிப்பட்ட அரும்பொருளை மகன் கனகசபை விலை பேசுகிறார். அப்படியொன்றும் கலையுணர்வில்லாதவராக கனகசபை வளரவில்லை. சிறுவயதிலேயே தந்தையின் வழிகாட்டலில் அதனருமையை உணர்ந்தவர். தினம் அதில் ஏறியிருந்து படித்தவர். விளையாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது கூட அதற்குள் ஒளிந்தவர். அதில் தன் பெயர் எழுத வேண்டும் என்று தந்தையிடம் அடம்பிடித்து கீழ்ப்பகுதியில் A.K. என்று எழுதியவர். அப்படியிருந்தவர் இன்று பணத்துக்காக மாறிவிட்டார்.

"மேசையை விக்கப்போறன்." அனுமதியாகக் கேட்கவில்லை, அதிகாரமாகக் கூறி வைத்தார் கனகசபை. அன்றிலிருந்து பாட்டி ஒரு இடமும் வெளிக்கிடுவதில்லை. அவள் இல்லாத நேரத்தில் மேசையை மகன் தூக்கிக் கொடுத்துவிடுவானோ என்ற பயம். ஏற்கனவே பல பொருட்கள் போய்விட்டன. பழைய வீடுகூட மாறிவிட்டது.

"அவரிருந்தால் இப்படியெல்லாம் நடந்திருக்குமே. என்ன மாதிரி நாற்சார் வீடு. எங்கடை தமிழ்ச்சனங்களின்ரை கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையின் அடையாளமே அது தானே. இப்ப கூட்டுக் குடும்பமுமில்லை. நாற்சார் வீடுமில்லை. எல்லாம் தனித்தனியா, தாங்களும் தங்கட குடும்பமும். உப்பிடியிருந்தா ஏறிமிதிக்காமல் என்ன செய்வாங்கள்... என அன்னம்மாப் பாட்டி தினமும் கூறுவாள். "அம்மா கடைசியாய்ச் சொல்லுறன். வீண் பிரச்சினை கிளப்பாதை. இண்டைக்குப் பின்னேரம் மேசை வாங்க வாறாங்கள். கரைச்சல் தராமல் இரு. எப்படிச் சொன்னாலும் கேட்கிறாயில்லை. சும்மாவே குடுக்கிறன். இருபதினாயிரம் தாறாங்களாம். இந்தப் புது வீட்டுக்கு பழைய மேசை பொருத்தமில்லையெண்டு மகன் அருண் சொல்லுறான். அவன்ர பிறன்ஸ் எல்லாம் நக்கல் அடிக்கிறாங்களாம். பழசுகள் என்னத்துக்கு என்கிறான்?"

"அப்ப நானும் பழசு தானே, என்னையும் எங்கயும் கொண்டு போய்ப் போடன்."

"விதண்டாவாதத்துக்குக் குறைச்சல் இல்லை. உனக்கு ஆர் இருபதினாயிரம் தாறாங்கள்." முணுமுணுத்தபடி நகர்ந்தார் கனகசபை. மனமும் உடலும் சோர மேசையின் கால்களை வருடியவாறு அமர்ந்திருந்தாள் பாட்டி. இவர்கள் ஏன் இப்படிச் சிந்தனை மரத்துப் போனவர்களாக இருக்கிறார்கள். தங்களைத் தாங்களே அழித்துக் கொள்கின்றார்களே. கனகசபை தான் இப்படி என்றால் இவன் அருண் கூட இப்படி இருக்கிறானே. தங்கட பரம்பரை வரலாற்றைத் தெரியாதவன் படிச்சு என்ன பிரியோசனம். காசு இண்டைக்கு வரும் நாளைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகும். நாங்கள் வாழ்ந்தோம் என்றதற்குச் சாட்சி என்ன? என்னத்தை விட்டிட்டு போறம். சிங்களச் சனம் எல்லாம் கொழும்பில மியூசியம் வைச்சுத் தங்கட பரம்பரையைப் பாதுகாக்குதுகள். நாங்கள் என்ன செய்தம். இனிவாற எங்கட பரம்பரைக்கு எங்கட இனப்பெருமையை அறிவிக்க எங்களிட்ட என்ன இருக்கு. எதைக்காட்டப் போகிறம். இருந்ததுகளை அழியவிட்டிட்டம். அருமையாய் இருப்பதைக் கூட அறியாமல் இதுகள் தாரை வாக்குதுகள்.

மேசையைப் பார்த்தாள் பாட்டி. அது இல்லாத அந்த வெறுமை யான கூடத்தை அவளால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. விக்கிரகம் இல்லாத கோவிலில் அர்ச்சகர் இருந்து என்ன பயன்? வீட்டை இடிக்கும் போது கூட எவ்வளவோ மன்றாடினாள். எடுப்பார் கைப்பிள்ளையாகிப்போன கனகசபையின் கையால் கடைசிக் கொள்ளியாவது வேண்ட வேண்டுமே என்று பொறுத்துக் கொண்டாள். இறந்த பின் கொள்ளி போட்டு என்ன, போடாட்டி என்ன. இங்கே உயிரோடையே நெருப்பு வைக்கிறார்களே. சாட்சிக்காரர்களிடம் மன்றாடுவதை விட சண்டைக்காரனிடம் கேட்கலாம்.

"அருண், என்ர ராசா இங்க ஒருக்கா வாடாப்பா"

"என்ன பாட்டி கெதியாச் சொல்லு." அவசரத்தில் அருண்.

"இந்த மேசையை விக்காதை மோனை. எத்தனை சாமான் இருந்தது. இப்ப ஒண்டும் இல்ல. வீட்டக்கூட மாத்திப் போட்டாய். இது ஒண்டு தான் இப்ப கிடக்கு. இதையாவது விடு தம்பி. உனக்குப் புண்ணியம் கிடைக்கும்."

"ஏன் தான் உதைக்கட்டிக்கொண்டு சாகிறாயோ தெரியாது. நாங்கள் இடம்பெயர்ந்து போகேக்க எத்தனை சாமான்களை கள்ளங்கள் எடுத்தவங்கள். அவங்களே இந்த மேசையைக் கழிச்சு விட்டுட்டாங்கள். அப்படிப்பட்ட மேசையை அங்க ஒரு விசர் இருபதினாயிரத்துக்குக் கேட்குது. நீ வேண்டாம் என்கிறாய்."

"நான் இல்லாத காலத்தில என்னண்டாலும் செய் தம்பி. நான் சாகும் வரையாவது அது கிடக்கட்டுமடா." இறங்கி வந்தாள் பாட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்ல கதை. இப்ப பாதை திறந்து இருக்கிறாங்கள். நல்ல விலை கேக்கிறாங்கள். எந்த நிமிசம் என்ன நடக்கும் என்று சொல்லேலாது. பாதை மூடினாங்களோ பிறகு விக்கேலாது."

"தம்பி அருண் உத விட்டிட்டு, இதைத் தூக்கிப் பறிக்க நாலைஞ்சு பேரிட்டச் சொல்லிப் போட்டு வா. அவங்கள் வரப்போறாங்கள்." என்றார் தகப்பன் கனகசபை............

"அப்பு! எணேய் அப்பு! கனவே காணுறாய். வவுனியா வந்திட்டுது எல்லே. எழும்பன். உந்த வயதிலே ஏன் தனிய வெளிக் கிட்டனி அப்பு, கொண்டக்டர் கனகசபையைத் தட்டி எழுப்பினார். மூடிய கண்களுக்குள் உலா வந்த அவரது இறந்தகாலக் கோலங்கள் இடை நடுவில் தடைப்பட்டுப்போக, பரபரப்புடன் கைத்தடியைத் தேடி எடுத்துக் கொண்டு பஸ்ஸை விட்டு இறங்கினார். உடலை நிமிர்த்தவே முடியவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து ஒரேயடியாக இருந்து வந்ததில் ஒரே வலி. கண்ணாடியைச் சரி செய்து கொண்டு சுற்றும் முற்றும் பார்த்து பெருமூச்சு விட்டபடி நடக்கத் தொடங்கினார்.

அவர் அந்த மேசையை விற்றதும், அதே ஏக்கத்தில் அன்னம்மாப்பாட்டி மரணமானாள். பணத்தாசை தாயைப் பலி வாங்கியது என்ற உணர்வு கனகசபைக்கு ஏற்பட்டது. சில காலத்தின் பின் அருணுக்குத் திருமண மானது. மனைவி சொற்கேட்டு கனகசபையை முதியோர் இல்லத்தில் சேர்த்தான். அன்றுதான் பழசுகளை என்னத்துக்கு எண்டு அருண் சொன்னதன் அர்த்தத்தை அவர் புரிந்துகொண்டார். பதினைந்து வருடங்களாக கைதடி முதியோர் இல்லத்தில் கனகசபை தங்கி யிருக்கிறார். அவரைப்போல, பிள்ளைகளால் கைவிடப்பட்டவர்களும், யாருமே இல்லாதவர்களும் எனப்பலர் அங்கே இருந்தார்கள். சிறு வயதிலேயே தாயை இழந்த தன் ஒரே மகன் அருணை, தாயாக தந்தையாக இருந்து அருமையாக வளர்த்தும், அவன் இப்படிச் செய்து விட்டானே என்ற வருத்தம் தவிர வேறு குறைகள் எதுவும் அவருக்கு இருக்கவில்லை. எந்தக் குறையுமின்றி அவர்களை ஆதரவாகக் கவனித்துக் கொண்டார்கள் முதியோர் இல்லத்து நிர்வாகிகள்.

முதியோர்களுக்காக அநேக புத்தகங்கள் அந்த இல்லத்துக்கு வருவது வழக்கம். அப்படித்தான் ஒரு புத்தகம் அவர் கையில் கிடைத்தது. அப்புத்தகம் பெரும்பான்மையினரால் திறந்து வைக்கப்பட்ட அருங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சியகம் ஒன்றைப் பற்றியது. அங்கு வைக்கப்பட்டுள்ள பல அரும்பொருட்களின் படங்களுடன் அவற்றின் உரிமையாளர்களினால் கொடுக்கப்பட்ட விளக்கங்களும் பிரசுரமாயிருந்தன.

அசிரத்தையாகப் பக்கங்களைப் புரட்டியவரின் கண்கள் திடீரென ஒரு பக்ககத்தில் குத்திட்டு நின்றன. உடல் சிலிர்த்தது. பதற்றத்தோடு மூக்குக்கண்ணாடியைக் கழற்றித் துடைத்து மீண்டும் அணிந்து கொண்டு உற்றுப் பார்த்தார். அங்கு பிரசுரிக்கப்பட்டிருந்தது, ஒரு பழைய கால மேசை கரிய மேசை, ஐந்து கால்கள். விளிம்பெங்கும் கலைச் சிற்பங்கள். இருபதாயிரத்துக்கு விற்கப்பட்ட மேசையை மீண்டும் பார்ப்பது போல ஒரு மயக்கம். பரபரப்புடன் அதன் கீழ் கொடுக்கப் பட்டுள்ள விளக்கத்தை வாசித்தார். அது கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு மேல் பழைமையானது என்றும், அரச பரம்பரையால் உபயோகிக்கப்பட்டது என்றும், தம் வாழ்க்கை முறை, கலையுணர் விற்குச் சான்றாக இருக்கும் ஆதாரம் என்றும், உரிமையாளர் கூறி யிருந்தார். உரிமையாளரின் பெயரைப் பார்த்தார். சுனில் தயானந்த என்றிருந்தது.

என் மேசை போல ஒன்று, என ஒரு மனம் ஆறுதல் சொல்லியது. அதை நம்ப மறுத்தது வேறு ஒரு மனம். அவரால் இயல்பாக இருக்கமுடியவில்லை. இரவில் கனவு கூட வந்தது. விடிய முன்பே ஒரு முடிவோடு எழுந்தார். நான் வவுனியா செல்ல வேண்டும் என்று அனுமதி கோரினார். தற்சமயம் அழைத்துச் செல்ல முடியவில்லை என்று பதில் வந்தது. அதுவே தன் கடைசி ஆசை என்றும், தான் தனியாகவே போய்விடுவது என்றும் மன்றாடி அனுமதி பெற்றார்.

கனகசபை இடைக்கிடை தன் கையிலிருந்த முகவரியைச் சரிபார்த்துக்கொண்டார். போக வேண்டிய இடத்தையும் கண்டு பிடித்து விட்டார். உள்ளே அடியெடுத்து வைக்கும் போது கால்கள் தள்ளாடின. இவ்வளவு நேரம் மனதிலிருந்த ஆவல் மறைந்து, ஒருவித பயவுணர்வு சூழ்ந்துகொண்டது. பார்க்காமலே போய்விட்டால் என்ன என்றது மனம். அந்த மேசை தன்னுடையது தான் என்றால், எம் இன வரலாற்றைக் கொல்லத் துணையாக இருந்த குற்றவுணர்வு தன்னை எரிக்குமே எனக் கவலைப்பட்டார். தாயை நினைத்துக் கொண்டார். அலுவலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியாளரின் வழிகாட்டலுடன் ஒவ்வொரு பொருளாகப் பார்த்துச் சென்றார். கண்கள் தான் பாரார்த்தனவே தவிர மனதில் ஒன்றும் பதியவில்லை. பார்க்கும் இடமெங்கும் மேசையும் அன்னம்மாப் பாட்டியுமே தெரிந்தார்கள். ஒருவாறு மேசை இருக்கும் இடத்தை அண்மித்துவிட்டார். நிமிர்ந்து பார்த்த அவர் விழிகள் விறைத்தன. மேசைக்கு அருகில் கண்கள் பளபளக்க அன்னம்மாப் பாட்டி அமர்ந் திருப்பது போல ஒரு பிரமை. உடல் நடுங்கியது. உதவியாளருக்கு எப்படித் தெரியும் கனகசபையின் மனப் போராட்டம்? "பாவம் தொண் ணூறு வயது இருக்கும் போல, எவ்வளவு ஆர்வம்? தனியாக வந்திருக்கிறாரே" என்று அனுதாபப்பட்டு கிழவரின் கையைப் பற்றிக் கொண்டார்.

இது அதல்ல, அதல்ல, என்று முனகிக் கொண்டே அருகில் சென்ற கனகசபை மேசையைத் தடவினார். ஏதோ ஒரு உணர்வு அவர் கைவழியே மனதிற்குள் புக, மெதுவாகக் குனிந்து பார்த்தார். அந்த இருட்டிலும் கலங்கிய கண்களுக்கு முன்னே பளிச்செனத் தெரிந்தன A. K. என்ற எழுத்துக்கள். அந்த எழுத்துக்கள் பூதாகாரமாய் அவர் முன் கையை நீட்டி 'நீ பாவி' என்றன. கனகசபைக்குச் கண்கள் இருண்டு கொண்டு வந்தன.

'எழுதப்படும் வரலாறுகள் அனைத்தும் உண்மையானவை அல்ல' எங்கோ எப்போதோ வாசித்தது நினைவில் வந்தது.

பற்றிப் பிடிக்கத் தன் கைத்தடியைத் தேடினார். தெரிந்தோ..... தெரியாமலோ....அந்த ஆதாரம் அவர் கையை விட்டு நழுவியிருந்தது.

(யாவும் கற்பனை)

(கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய. தேசிய கலை இலக்கியப்போட்டி 2011ல். பிரதேச மட்டத்தில். மாவட்ட மட்டத்தில் மற்றும் தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெற்றது. சுடர்ஒளி வாரமலரிலும் பிரசுரிக்கப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. எங்கே போகிறோம்?

2033/05/10ந் திகதிய அன்றைய பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்த அரூஸ் என்கின்ற அருணாசலம், ஷா... சூப்பர் அதிஸ்டம் அடிச்சிருக்கு இதை விடக்கூடாது என்று நினைத்துக் கொண்டே "ஷாண்டி ஷாண்டி ஓடிவா ஓடிவா" என்று கூச்சலிட்டார். சத்தம் கேட்டுத் திருநங்கை போன்றதொரு நபர் வெளியே வந்து "ஏனப்பா என்ன ஏலம் போடுறியள்? அடுத்த வீட்டுப் பாட்டி ஓடிவரப் போகுது" எரிச்சல்ப்பட்டார். "இதைப் பார்..... இதைப்பார்...." என்று பரபரத்தவாறு பத்திரிகையை மகளிடம் கொடுத்தார். அது ஒரு விளம்பரப்பகுதி. தேவை, சேவை, விற்பனை என்று குவிந்திருந்தன. ஒரு பக்கத்தைப் பார்த்த ஷாண்டியின் கண்கள் பளிச்சிட்டன. பல நாட்கள் மழையைக் காணாத விவசாயி வானம் இருண்டு வருவதைப் பார்த்து எவ்வளவு மகிழ்வானோ அப்படியொரு மகிழ்ச்சி. "சேலை கட்டுவது எப்படி?" அப்படியொரு விளம்பரம்.

இந்த விளம்பரத்திற்கும் இவர்களின் பரபரப்பிற்கும் என்ன சம்பந்தம் என்று தலைமுடியைப் பிய்ச்சுக் கொள்ள வேண்டாம். இனித்தான் பிளாஸ்பாக் வரப்போகுது.

அருணாசலம் பகவதி தம்பதியரின் பெற்றோர் யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்டிருந்தாலும் இவர்கள் சிறு வயதிலேயே கொழும்பில் குடியேறி வாழ்வில் இணைந்திருந்தார்கள். கொழும்பின் நாகரிக முன்னேற்றத்துக்கு அடிமைப்பட்டுத் தமது தமிழ்ப்பண்பாட்டைக் காற்றில் பறக்க விட்டிருந்தார்கள். அருமையான தமது பெயர்களைக் கூட அரூஸ், பக்கி (பாக்கியம்) என்று மாற்றுமளவுக்கு நாகரிக மோகத்தில் ஊறியிருந்தார்கள். இவர்களுக்கு மூன்று பிள்ளைகள். மூத்த மகன் கமிஷன். ஒரே மகள் ஷாண்டி. கடைசி மகன் மிஷன். பெற்றோரே இப்படியானால் அவர்களின் வாரிசுகளைப் பற்றிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லவே வார்த்தையில்லை. பணபலமும் அதிகமாகவே இருந்தது. முற்றுமுழுதான ஆங்கிலேயர் போல அவர்களின் நடை உடை பாவனை பேச்சு அனைத்துமே மாறியிருந்தது. தமது பரம்பரையின் அடிவேர் யாழ்ப்பாணத்தில் உள்ளது என்று சொல்வதே அவர்களுக்கு அவமான மாகத் தோன்றியது. தமிழ் சரியாய் வராது என்று சொல்வது தான் தமது அந்தஸ்தை உயர்த்தும் என்பது இவர்களின் முடிந்த முடிவு. வீட்டில் தமிழ் சினிமா பார்ப்பதென்றால் ஹெட்போன் மாட்டித்தான் பார்ப்பார்கள். தமிழ் வெளியே கேட்டுவிட்டால் மரியாதையில்லையாம். ஆங்கிலப் படங்கள் போட்டால் வீடே அதிரும். தமது வீட்டு மருமக் களைக்கூட வெள்ளைக்கார இனத்திலிருந்து தான் தெரிவு செய்வதாக இருந்தார்கள்.

இதற்கு முன்னோடியாக கமிஷன் அமெரிக்காவுக்குப் படிக்க அனுப்பப் பட்டான். அவன் அங்கே படித்தானோ இல்லையோ, மாதம் தவறாமல் ஆங்கில மொடல் சஞ்சிகைகளை அனுப்பிக் கொண்டிருந்தான். வெள்ளைக்கார நண்பர்களை மட்டும் அதிகமாகத் தேடிக் கொண்டான். அங்கு நடந்த நிகழ்வொன்றை வீடியோ எடுத்து அனுப்பியிருந்தான். அதில் காணப்பட்ட ஆணழகன் ஒருவனை ஷாண்டிக்கும் பெற் றோருக்கும் நன்றாகப் பிடித்துப் போயிருந்தது. அவனது பெற்றோருடன் கமிஷன் கதைத்த போது அவர்கள் தமிழர் மீது மரியாதை கொண்டிருந்தார்கள் என்பதும் தெரியவந்தது. அதனால் ஷாண்டியை மருமகளாக்கத் தம் சம்மதத்தைத் தெரிவித்ததோடு, தமது மகளைக் கமிஷனுக்கு மணம் செய்யவும் விருப்பம் தெரிவித்தனர். இப்படியொரு வாய்ப்பைக் கமிஷன் எதிர்பர்க்கவேயில்லை. வானத்தில் மிதந்த அவனை அவ் வெள்ளைக்காரர்கள் தொடர்ந்து கூறிய கருத்துக்கள் அதல பாதாளத்தில் விழ வைத்தது. தமிழர்களின் பாரம்பரியம் பற்றியும், பண்பாட்டைப் பற்றியும் அவ்வளவு தெரிந்து வைத்திருந்தார்கள். தமிழ்ப் பண்பாட்டை நேசித்தார்கள். கமிஷன் இதற்கு முன் கேட்டே அறியாத தமிழர் வரலாறுகளையும், தமிழர் வீரத்தையும், தமிழ்ச் சான்றோர் பற்றியும் பிரமிப்போடு பேசினார்கள். தமிழைப் பேசவும் கேட்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைப்பட்டார்கள். அடுத்த பிறவியிலாவது தாம் ஒரு தமிழ்க் குடும்பத்தில் பிறக்க வேண்டும் என்று கண்கலங்கினார்கள். கமிஷன் குடும்பத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டதே அவர்கள் இலங்கைத் தமிழர் என்பதற்காகத்தான்.

தமிழன் என்று சொல்வதே அவமானம், தமிழைப் பேசுவதே மரியாதைக் குறைவு என்ற தொனியில் வளர்க்கப்பட்ட கமிஷனுக்கு இவை எல்லாவற்றையும் கேட்கக் கேட்கத் தூக்கிவாரிப்போட்டது. தமிழர் என்று சொல்வதில் இவ்வளவு மதிப்பு இருக்கிறதா? தமிழர் வரலாற்றில் இவ்வளவு பெருமை இருக்கிறதா? அவர்கள் கூறக் கூற இவனுக்குப் புல்லரித்தது. தன்னின வரலாற்றுப் பெருமைகளை, எந்தத் தொடர்புமற்ற அந்நிய இனத்தவர் சொல்லித் தான் அறியுமளவுக்குத் தன் நிலை இருப்பதனை நினைக்க நினைக்க அவனுக்கு அவமானமாக இருந்தது. தன்னை அவ்வாறு வளர்த்த பெற்றோர் மீது கோபம் கோபமாக வந்தது.

இதையெல்லாம் எடுத்துச் சொல்லி இனிப் பெற்றவர்களை மாற்றுவது கடினம். சில செயற்பாடுகளால் தான் அவர்களுக்கு புரியவைக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் தனது பேரைக் கண்ணன் என்று மாற்றிக் கொண்டான். அவர்களுடைய புகைப் படங்களைப் பெற்றோருக்கு அனுப்பி வைத்தான். படங்களைப் பார்த்த பெற்றோர் திகைத்தனர். காரணம் படத்திலிருந்தவர்கள் சேலை வேட்டியணிந்த வெள்ளைக்காரத் தமிழர்களாக இருந்தார்கள். வெள்ளைத்தோல் மாப்பிளையின் படத்தைத் தன் தோழிகளிடத்திலும் அயல் வீடுகளிலும் பெருமையாகக் காண்பிக்கலாம் என்று கனவு கண்ட ஷாண்டியின் ஆசையிலும் மண் விழுந்தது. ஏதோ படத்துக்காகத்தான் இவ்வாறு போஸ் கொடுக்கிறார்கள் என்று நினைத்தவாறே அண்ணனின் நீண்ட கடிதத்தைப் படித்த ஷாண்டி சிலையானாள். மாப்பிளையின் அருமை பெருமைகளையும், பணம் செல்வாக்கையும் எடுத்துரைத்த கமிஷன் இப்படிப்பட்டவனை அடைவதற்கான நிபந்தனைகளையும் எழுதியிருந்தான். அதாவது ஷாண்டி அமெரிக்காவுக்கு வரமுன்பு சகல விடயங்களிலும் அசல் தமிழ்ப் பெண்ணாக மாற வேண்டுமாம். அமெரிக்கா போவதற்கு இன்னும் மூன்று மாதங்கள் மட்டுமே இருந்தது. அதற்குள் தமிழ்ப் பெண்ணாக மட்டுமல்ல தமிழ்க் குடும்பமாகவும் மாற வேண்டுமாம். நடக்கிற காரியமா இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிலிருந்து ஷாண்டியின் வீடு இரண்டாக அல்லோகலப்பட்டது. முதலில் அப்துல்கலாம் மாதிரி இருந்த அவ்வீட்டுப் பெண்களின் தலைமுடியை அன்னபூர்ணியாக இல்லாவிட்டாலும் அனுஷ்கா மாதிரியாகவாவது உருவாக்க வேண்டும் என்ற காரணத்தால் தொலைக்காட்சி விளம்பரங்களில் வரும் எருவா மாட்டின் தைலம் முதல் இந்துலேகா எண்ணெய் வரை அனைத்தும் வாங்கி அவர்களது அலுமாரியில் அடுக்கப்பட்டது. குடும்பத்தினர் அனைவருக்கும் தமிழ்ப் பண்பாட்டு உடைகள் தைப்பதற்கு அளவு கொடுக்கப்பட்டது. அவளதும் அவளது தம்பியுடையதுமான ஷாண்டி, மிஷன் என்ற பெயர்களும் சாம்பவி, மித்திரன், என்றவாறு மாற்றப்பட்டன. எனக்குத் தமிழ் அவ்வளவாய் வராது என்று பெருமையாக (?) சொல்லித் திரிந்த ஷாண்டி தமிழ்ப் புத்தகங்களைத் தேடிப் பிடித்துப் படிக்கத் தொடங்கினாள். தமிழ்ச் சுலோகங்கள் சிலவற்றையும், தேவார திருவாசகங்கள் சிலவற்றையும் கஸ்ரப்பட்டு மனனம் செய்தாள். கர் நாடக சங்கீதத்தைக் கர்னகொடூர சங்கீதம் என்று நையாண்டி செய் தவள், அப்பாடற் பதிவுகளைக் கடையில் வாங்கிப் போட்டுக் கேட்டாள். தமிழர் பண்பாட்டைக் கூகுளில் டவுண்லோட் செய்து படித்தாள். ரீ சேட்டையும் ஜீன்சையும் தவிர வேறெதுவும் போட்டறியாத ஷாண்டி, பாவாடை சட்டை அணிந்து கோவில் பூசை முறைகளைத் தெரிந்து கொள்வதற்காக அயலவர் வியக்கும் வண்ணம் கோவிலுக்குப் போனாள். யாழ்ப்பாணத்துச் சமையல் முறைகளையும் பாரம்பரிய உணவு வகைகளையும் அறிந்து கொள்வதற்காகக் கொழும்பிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றின் சமையல்க் கலை நிபுணரை, அதிக பணம்கொடுத்து வீட்டிற்கு அழைத்து வந்து ஒரு வாரமாக சமைத்தும் பழகினாள்.

எல்லாவற்றையும் திட்டம் போட்டு வெற்றிகரமாக நிறைவேற்றிய அவர் களுக்கு ஒரு விடயம் மட்டும் பெரிய தலையிடியைக் கொடுத்தது. ஆயிரம் அலங்காரங்களுடன் பெண்கள் நிறைந்திருந்தாலும், தமிழ்ப் பெண் என்று இனங்காண்பதற்கு முக்கிய தேவையாகக் கருதப்படுவது புடைவை, பொட்டு, பூ இவைகள்தான். இதில் இந்தப் புடைவை என்பதுதான் அவர்களுக்குப் பெரிய பிரச்சினையாக இருந்தது. அவர் கள் யாருக்கும் சேலை கட்டத் தெரிந்திருக்கவில்லை. கொழும்பில் இருக்கும் இவர்களது நட்புக் குடும்பங்கள் எல்லோருமே ஆங்கில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகத்திற்கு ஆசைப்பட்டு அவ்வழியில் வாழ்பவர்கள்தான். தமிழர் கலாசாரத்தை நேசித்து அதற்கு மதிப்புக் கொடுத்து வாழும் யாரையும் அவர்கள் மதித்ததுமில்லை. தமது நட்புவட்டத்திற்குள் அணுக விட்டதுமில்லை. அதனால் இங்கே யாரிடமும் அவர்கள் உதவி கேட்க முடியாது. யாழ்ப்பாணம், வவுனியாவிலிருந்து உறவினர்கள் யாரையாவது அழைத்து உதவி பெறலாம் என்றால் இவர்களது போக்கைப் பார்த்து இவர்களைத் தலைமுழுகி விட்டவர்களாகத் தான் அனேகர் இருந்தார்கள். இவர்கள் கேட்டுக் கொண்டதும் வந்து உதவக் கூடியவாறு இவர்கள் யாரையும் மதித்ததுமில்லை. தமக்குள் உறவைப் பேணியதுமில்லை. நிலைமை இப்படியிருக்க எந்தத் தமிழ்ப் பெண்ணிடம் இவர்கள் உதவி கேட்க முடியும்?

புடைவை கட்டத் தெரியாமல் அசல் தமிழ்ப் பெண்ணாக மாறுவது எப்படி? ஷாண்டியும், பக்கியும் வெளியில் புறப்படும்போதெல்லாம் சேலை அணிந்த பெண்களை உற்று உற்றுப் பார்க்கத் தொடங்கினார்கள். வீட்டுக்கு வந்து தாமே கட்டிப்பார்க்கத் தொடங்கினார்கள். அரூஸ், மிஷன் கூட வீதியில் பெண்களைப் பார்த்து விட்டு வந்து இப்பிடிக் கட்டு அப்படிக் கட்டு, இங்கே சொருவு அங்கே சொருவு என்று ஐடியாக்களை அள்ளி வழங்கினர். கடைசியில் புடைவைக் கட்டு கிமோனாக் கட்டானது தான் கண்ட பலன்.

சேலைக்காக இவர்கள் தலை முடியைப் பிய்த்துக் கொண்டிருந்த போதுதான் கடவுளருளோ, பூர்வ ஜென்ம புண்ணியமோ இப்படியொரு விளம்பரம் இவர்களின் கண்ணில் பட்டது. இது ஒரு கிழமைப் பயிற்சி நெறியாம். பலவிதங்களில் கட்டப் பழக்குவார்களாம். கட்டணம் ஐயாயிரம் ரூபாயாம். பழக்கப் போகும் ஆசிரியரின் பெயர் கலையரசியாம். உடனடியாகவே அதில் போடப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொண்டாள் ஷாண்டி. ஆங்கிலத்தில் பேசிய அவள் தான் ஒரு தமிழ்ப்பெண் என்ற விபரத்தைச் சொன்னதும் மௌனமாகிய மறுமுனை, இனிய குரலால் செந்தமிழில், தமிழராயின் தமிழில் கதைக்குமாறு கேட்டுக் கொண்டது. எரிச்சல் வந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை அடக்கியவாறே தன் பதிவை மேற்கொண்டுவிட்டு ரிசீவரைப் படாரென வைத்தாள் ஷாண்டி.

"என்னகோவம் உனக்கு? ஏன் ரிசீவரில் அதைக் காட்டுகிறாய்? என்னவாம் அந்தக் கலையரசி?" என்று கேட்டாள் பக்கி.

"ஷாண்டி என்று என்ரை பேரைச் சொல்லிப் பதிய, அந்தப் பேருக்கு என்ன அர்த்தம் எண்டு கேட்கிறாள் அவள். என்ன அர்த்தமாய் இருந்தால் அவளுக்கென்ன? எதோ தான் தான் தமிழற்ற ஒட்டுமொத்தப் பிரதிநிதி மாதிரிக் கதைக்கிறாள்."

"சரிவிடு. கோபப்படாதை. இப்ப இவளை விட்டா எங்களுக்கு வேற வழியில்லை. போய்ப்படிச்சு முடிச்சுப்போட்டு பிறகு வேணுமெண்டா நல்லாய்ப் பேசிப்போட்டு வா" சமாளித்தார் அரூஸ்.

"எனக்கெண்டா உவள் எப்பிடிப் பழக்குவாளோ தெரியேலை. பேரைப் பாக்கத் தெரியேலையே எங்கேயோ கிராமப் புறத்தில இருந்து வந்த பட்டிக்காட்டுப் பெரிசு போலை கிடக்கு. இங்கிலீஷ் கூடத் தெரியாது போலை".

"ஓமக்கா இது ஒரு தமிழ்ப் புத்தகமும் எழுதியிருக்குதாம். இந்தா பேப்பரில அந்த விளம்பரமும் பக்கத்தில போட்டுக்கிடக்கு. தேவை யெண்டா வாங்கலாமாம்". என்றான் மிஷன்.

"இப்ப ஆர் தமிழ்ல புத்தகம் எழுதீனை. இங்கிலீஷ்ல எழுதினாத் தானை பெருமை. தமிழ்ல எழுதிப்போட்டு அதுக்கொரு விளம்பரமும் போட்டிருக்கே..."

"சரி சரி ஏன் எங்களுக்கு வீண் கதை. நல்லபடி போய்ப் பழகினாக் காணும்" முற்றுப்புள்ளி வைத்தார் அரூஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சிக்கான நாளும் வந்தது. தயாராகக் குறித்த முகவரிக்குச் சென்று அழைப்பு மணியை அழுத்தினாள் ஷாண்டி. கதவைத் திறந்த பெண்ணைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள். ஆசைப்பட்டாள் என்று கூடச் சொல்லலாம். வெள்ளைக்காரப் பெண்ணொருத்தி. சீன நாட்டவரைப் போலிருந்தாள். இருபத்தைந்து வயதுக்குள் தான் இருக்கும். அழகாகச் சேலை உடுத்திப் பேரழகியாக மின்னினாள். அங்கு சுவர்களிலிருந்த படங்களில் பல வெள்ளைக்கார மற்றும் சிங்களப் பெண்கள் சேலை களில் அழகுப் பதுமைகளாக ஜொலித்துக் கொண்டிருந்தனர். 'ஷண்டி விழிபிதுங்க அவற்றைப் பார்ப்பதைக் கண்ட அப்பெண் "இவை இங்கே வந்து சேலை கட்டப் பழகிய பிற பண்பாட்டைச் சேர்ந்த பெண்கள்" என்று விளக்கியதுடன் சேர்த்து இன்னொன்றையும் சொன்னாள், முதன் முதலாகத் தமிழ்ப் பெண் ஒருவர் சேலை கட்டப் பழகுவதற்காக வந் திருக்கிறீகள் என்று ஒரு மாதிரிக் குரலில். அவள் கூறிய தொனியிலும் அவள் கதைத்த செந்தமிழிலும் திகைப்படைந்த ஷாண்டி, மெல்லச் சுதாகரித்து கலையரசி இருக்கிறாவோ? என்று கேட்டவாறே உட்பக்கம் பார்த்தாள்.

மெல்லச் சிரித்த அப்பெண் "எனது இயற்பெயர் ஷாங் யுவாங். தமிழைப் படிக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அம்மொழியைப் படிக்கப் படிக்க அம்மொழியிலும் அப்பண்பாட்டிலும் பற்றும் மரியாதையும் அதிகமாகியதால் எனது பெயரை மாற்றிக் கொண்டேன் கலையரசி என்று" என்றாள்.

ஷாண்டி பேயறைந்தது போல் பேச்சிழந்து சிலையாய் நின்றாள். அவள் முகத்தில் தெரிந்தது வெட்கமா? வேதனையா? பெருமையா?

(யாவும் கற்பனை)

(கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய. தேசிய கலை இலக்கியப் போட்டி 2013ல். பிரதேச மட்டத்தில் இரண்டாமிடம் பெற்றது!)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. தாலிக்கொரு தாலி

"திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது. திருடாதே பாப்பா திருடாதே...." பக்கத்து வீட்டிலிருந்து காற்றிலே மிதந்து வந்து, கண்மூட முடியாமல் முகட்டைப் பார்த்தவாறே மல்லாந்து படுத்திருந்த, முகிலனின் காதுக்குள் புகுந்தன இசைவரிகள். கவர்ச்சியான கரியநிறம் – களையான முகம் – கஷ்டப்பட்டு உழைக்க ஏற்ற வலிய தேகம் – அலையலையாய்த் தலைமுடி – மூன்று நாட்கள் தேடப்படாத அரும்புத் தாடி – மொத்தத்தில் மதிப்போடு ரசிக்கத்தக்க தோற்றம். ஆனால் அவனுக்குள்ளேயிருக்கும் மறு பக்கம்....? அவனைத் தவிர வேறு மனிதருக்குத் தெரியாதே.....?

பிறக்கும்போது யாருமே கெட்டவர்களாகப் பிறப்பதில்லை. சமூகமும் சூழ்நிலைகளுமே ஒருவனது ஆளுமைப் பண்புகளை நிர்ண யிக்கின்றன, என்றாலும் ஒருவன் தான் செய்யும் நற்செயல்களையிட்டுப் பெருமிதம் கொள்வதும், தீய செயல்களுக்காக மனதிற்குள்ளே மறுகுவதும் தவிர்க்க முடியாத விடயங்களே. முகிலன் மட்டும் இதற்கு விதிவிலக்கா என்ன?

தாய் தந்தையர்க்கு ஒரே ஆண்பிள்ளை. மூத்தது இரண்டும் இளையது ஒன்றுமாக மூன்று பெண்பிள்ளைகள். இவன் பிறந்து ஐந்து வயது வரை வாழ்க்கை நன்றாகத்தான் போய்க்கொண்டிருந்தது. தந்தை தனியார் கம்பனியொன்றில் சாரதியாக இருந்தார். இரவு பகலாக உழைத்தார். கிடைத்த சம்பளத்தில் சிக்கனமாகவும் அதேநேரம் சந்தோசமாகவும் இருந்தார்கள். ஒரே ஆண்பிள்ளை என்பதால் முகிலன் தான் வீட்டுக்கே செல்லப்பிள்ளை. நிலத்தில் நடக்கக்கூட அனுமதிக்காமல் பெற்றோரும் அக்காமாரும் சுமந்தே திரிவர். பிள்ளை களைவிட இதர சொத்துக்களாக அவர்கள் வசிக்கும் சிறிய வீடும், ஒரு மோட்டார் சைக்கிளுமே இருந்தன. வீட்டில் அடுப்பும் நெருப்பு மாகப் பிள்ளைகள் இருப்பது நல்லதல்ல என்பார்கள். அதனால்த் தானோ என்னவோ அவர்களது தந்தை கடமையிலிருந்த போது விபத்தொன்றில் சிக்கித் தன் உலக வாழ்க்கையை முடித்துக் கொண்டார். அதன்பின்பு எல்லாமே தலைகீழாகிப் போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துவயதுக்குட்பட்ட நான்கு பிள்ளைகளோடு இளமை மாறாத தாய் வருமானத்திற்கு வழிதெரியாது நிர்க்கதியானாள். கம்பனி தந்த பணத்தில் சிலநாட்கள் குடும்பத்தை நகர்த்திய தாய், தன் பொறுப் புணர்ந்து அயல்வீட்டுப் பெண்ணின் உதவியுடன் செல்வந்தத் தம்பதி யொன்றுக்கு உதவியாளரானார். பத்தே வயதான அக்கா அகிலா குடும்பச்சுமையைத் தாங்கிக்கொண்டாள். தன் படிப்பை நிறுத்திவிட்டு வீட்டு வேலைகளையும் தாயுடன் சேர்ந்து கவனித்து, தாய் சென்றதும் சகோதரியைப் பள்ளிக்கும் சகோதரனை முன்பள்ளிக்கும் அனுப்பி குட்டித் தங்கை மிதுளாவையும் பராமரிக்கும் தாயானாள். எனினும் தாயின் வருமானம் போதாததால் வீட்டில் உணவு மற்றும் சிற்றுண்டி தயாரித்து விற்கும் பணியையும் மேற்கொண்டனர்.

சில வருடங்களின் பின் முகிலனும் பள்ளி நேரம் போக, சிறு கடை யொன்றில் உதவிக்குநின்று சிறிது சம்பாதித்தான். உழைப்பது பசிக்கும் படிப்புக்கும் போதுமானதாக இருந்ததே தவிர சிறிதும் சேமிக்க முடியவில்லை. இறுதி முயற்சியாக எல்லோரும் சேர்ந்து வீட்டுத் தோட்டமும் செய்தனர். முகிலனும் சாதாரணதரத்துடன் பள்ளியை நிறுத்திவிட்டு முழுநேர உழைப்பாளியானான். இரண்டாவது அக்கா பாமிலா பல்கலைக்கழகப் படிப்பை நிறைவுசெய்து வேலை தேடிக் கொண்டிருந்தாள். அகிலாவுக்கு வயது முப்பதை எட்டியதால் வரன் தேடும் படலம் நடந்து கொண்டிருந்த போது மீண்டும் ஒரு துயரம் அவர்களின் வாசலைத் தட்டியது. உழைப்பின் மும்முரத்தால் தன் உடலைக் கவனிக்க மறந்த அகிலா அடிக்கடி மயக்கமடைந்தாள். மருத்துவரிடம் ஆலோசனை பெற்றபோது, அவளின் உடல் மற்றும் கர்ப்பப்பையின் மோசமான நிலையையும் திருமண வாழ்க்கை வாழ்ந்தால் அவளுக்கு ஏற்படப்போகும் விபரீதத்தையும் அறிந்தார்கள். தாய் ஸ்தானத்தில் தம்மை வளர்த்த அகிலாவின் வாழ்க்கை இப்படியானதில் முகிலன் சோர்ந்துபோனான். தாயாரும் துக்கம் தாளாமல் நோய்வாய்ப்பட்டார்.

மீண்டெழுந்த முகிலன் பாமிலாவுக்கு வரன் தேடும் முயற்சியி லிறங்கினான். அவளுக்குச் செவ்வாய்க் குற்றம் இருந்ததால், பலநாட் களாகியும் எதுவும் பொருந்திவரவில்லை. அப்போது எதிர்பாராத வாய்ப்பாக, ஒரு நல்ல இடத்து வெளிநாட்டு வரன், உயர்தரம் படித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுச் சிறு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டி ருந்த, கடைக்குட்டி மிதுளாவின் அழகுக்கு ஆசைப்பட்டு வாசல் தேடிவந்தது. பொருத்தமான வரன் என்பதால், தனது சக்திக்குமீறிக் கடன்பட்டுத் திருமணத்தை நல்லபடி முடித்துவைத்தான் முகிலன். மிதுளாவும் விசா வரும்வரை மாமனாரின் வீட்டில் வசிப்பதற்குப் போய்விட்டாள்.

மிதுளா போய் எட்டுமாதங்கள் கழியமுன்பே பாமிலாவுக்கு ஒரு வரன் அபூர்வமாய்ப் பொருந்திவிட்டது. ஆனால் மாப்பிள்ளை வீட்டார் பேராசைக்காரர்களாக இருந்தார்கள். வரதட்சணையாகப் பதினைந்து இலட்சங்களைக் கேட்டார்கள். காரணம் பெண் கறுப்பு என்றார்கள். கறுப்பைக் கரன்சிகளால் மட்டுமே வெளுக்க முடியும் என்பது, தாம் திருமணச்சந்தையில் விற்கப்படும் உண்மையை, ஏற்றுக்கொள்ள விரும்பாத ஆண்களின் சித்தாந்தம் போலும். முகிலனுக்குப் பல சந்தர்ப்பங்களில் நாவரைக்கும் வார்த்தைகள் வந்துவிட்டாலும், இக்கட்டான தனது நிலையை எண்ணி வாயை மூடிக்கொண்டான்.

நான்கு வருடங்களுக்கு முன் பாமிலாவின் குறிப்பைப் பார்த்த சோதிடர் இருவர், ஐந்து வருடங்களுக்குள் திருமணமாகாவிட்டால் பின்பு பலனில்லை என்று வரையறுத்திருந்தனர். அதற்கு இன்னும் நான்கு மாதங்களே இருந்தன. இப்போது தான் முதன்முதலில் ஒரு வரன் பொருந்தியிருக்கிறது. எப்படி இவனால் விடமுடியும்? கையில் ஒரு சதமில்லை. தலைக்குமேல் கடன். இருந்தும் சம்மதம் என்று தலையை ஆட்டிவைத்தான். தனது கையறு நிலையை வெளிப்படுத்த விரும்பாமல் தங்கையின் திருமணம் நடந்து ஓராண்டு பூர்த்தியா காமையைக் காரணம் காட்டி, நான்கு மாதங்கள் காலக்கெடு கேட்டான். அதற்கு அவர்கள் சம்மதித்தார்கள் ஒரு நிபந்தனையடிப்படையில். அதாவது, ஒரு மாதத்திற்குள் சீதனப் பணம் முழுதும் தரப்படவேண்டும். வேண்டுமானால் திருமணப்பதிவை அன்றே வைத்துக்கொள்ளலாம் என்று. தலையாட்டக்கூட முடியாமல் மரத்துநின்ற முகிலனின் மௌனத்தைச் சம்மதமாய் எடுத்துச் சென்றனர் மாப்பிள்ளை வீட்டார். செய்வதறியாமல் தடுமாறிய முகிலனின் நிலையோ வேதனையானது. வீட்டில் யாருக்கும் சொல்லவும் முடியவில்லை. எப்படிப் பணம் புரட்டுவது என்று தலையை உடைத்து யோசித்ததிலேயே மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் நகர்ந்துவிட்டன. நேர்வழியில் இயலாமல் போகவே, குறுக்கு வழியிலாவது குறுகிய காலத்தில், பணம் புரட்ட ஏதாவது வழி கிடைக்குமா என்று யோசித்ததில் மீதி நான்கு நாட்கள் நழுவின. நேர்மையான எண்ணங்கள் நிரம்பிய முகிலனின் மனதுக்கும் அறிவுக்கும், குறுக்குவழி எதுவும் தட்டுப்பட மறுத்தது. யோசித்ததிலேயே உடல் சோர்ந்துபோனது. தடுமாறிக் கொண்டிருந்தவனுக்குத் தானாக ஒருவழி தாமோதர் சில்லறைக் கடையில் கிடைத்தது.

வீட்டுத் தேவைக்குப் பொருட்கள் வாங்கக் கடைக்குச் சென்ற வனின் காது அங்கிருந்த சிலரின் உரையாடலில் ஈர்க்கப்பட்டது

“இதைவிடப் பிச்சையெடுக்கலாமடா இவங்கள்” இது ஒருவர். “அவங் களும் தான் என்னண்ணை செய்யிறது? விலைவாசி ஏகிறிக் கொண்டு போகுது. வேலையும் ஒண்டுமில்லை. சாப்பிட என்ன செய்யுறது? கனக்க இருக்கிறதுகள் காட்டிக்கொண்டு போகுதுகள். அதைக் கழட்டி யெடுக்கிறாங்கள். முந்தியெல்லாம் உப்பிடி உந்தளவுக்கு நடந்ததே? இப்பதானை உப்பிடி. இந்தளவுக்கு உவங்களைக் கொண்டு வந்தது யார்? கொஞ்சம் யோசிச்சுப் பார் பாப்பம்” இது மற்றவர்.

மனதுக்குள் ஆர்வம் உந்தினாலும் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமல் அவர்களருகில் சென்ற முகிலன் “என்ன பரமலிங் கண்ணை என்ன நடந்தது?” என்று பேச்சுக் கொடுத்தான். “வாடாப்பா முகிலா”. இதொண்டும் புதினமில்லை. இப்ப நெடுக நடக்கிறது தான். உவள் கனகத்தின்ரை பெட்டை நேற்றுக் கோயிலுக்குப் போட்டு வரேக்கை, யாரோ கழுத்தானை அறுத்துப்போட்டானாம். அவளே இதைப் பெரிசுபடுத்தேலை. அவையிட்டைக் கிடக்கிற காசுக்கு உதெல் லாம் பெரிய விசயமே. இப்ப உதுதானை காசு சம்பாதிக்க லேசான வழி. ஹூம்— அவனவனுக்கு என்ன கஷ்ரமோ..? பெருமூச்சு விட்டவாறே போகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகிலனுக்கு மின்னல் வெட்டியது போலொரு உணர்வு. இந்த வழியை நான் நினைச்சே பாக்கேலையே, என்று நினைத்துக்கொண்டே வீடு வந்த முகிலன், அன்றிரவு முழுதும் பலவித நினைவுகளால் அவஸ்தைப்பட்டான். தர்மசங்கடம், கழிவிரக்கம், குற்ற உணர்வு, பயம், கோபம் இப்படிப் பலவித உணர்வுகள் அவனுடன் தர்க்கம் செய்து, ஒரு முடிவும் காணாமல் விடியும் நேரத்தில் உறங்கிப் போனான்.

விடிந்த பின்பும் எழுந்திராத அவனை, தாயார் அவசரமாக எழுப்பினார். கலக்கத்துடன்கூடிய தாயின் முகத்தைப் பார்த்ததும் தூக்கமயக்கம் தெளியக் கேட்டான்,
“என்னம்மா?”

“புறோக்கர் வந்திருக்கிறார் தம்பி. இன்னும் பத்து நாளிலை காசைத் தரட்டாம். இல்லையெண்டால் சொல்லட்டாம். வேறை ஒரு வரன் அவைக்கு வந்திருக்காம். சொன்னமாதிரிக் காசு தந்திடுவினையோ எண்டு உறுதிப்படுத்திக் கொண்டு வரச்சொல்லித் தன்னை அனுப் பினதாம்”.

அந்த ஒரு நொடியில் முதல்நாளைய எல்லாக் குழப்பங்களும் தெளிய, உடனடி முடிவோடு சொன்னான் முகிலன்,
“ஓமம்மா தந்திடுவம் எண்டு சொல்லுங்கோ”.

(புறோக்கர் போனபின் முகிலனிடம் வந்த தாய்)

“என்னண்டு தம்பி உவ்வளவு தீர்க்கமாய்ச் சொல்றாய்? கையிலை ஒண்டுமில்லை. வாங்கின கடனே நிறையக் கிடக்கு. ஒருத்தனும் நம்பித் தரமாட்டான். சும்மா யோசிக்காமைக் கதைச்சுப் போட்டு, எக்கணம் நாளைக்கு மாப்பிள்ளை வீட்டார் வந்து பிரச்சினை பண்ண எல்லாருமாத் தூக்கில தொங்கிறதே....?

இயலாத்தன்மையில் சட்டென்று கோபம் உச்சிவரை ஏற, “உங்கடை அலுவலைப் பாத்துக்கொண்டு போங்கம்மா அரியண்டம் தராமை. எனக்குத் தெரியும் என்னசெய்யவேணுமெண்டு” வெடுக்கெனச் சொல்லிக்கொண்டு உள்ளே போனவன் அன்று முழுதும் வெளியே வரவில்லை. தனியே இருந்து கடும் யோசனையில் ஆழ்ந்தான் எங்கே? எப்போது? எப்படி? எந்த வகையில்? மாட்டினால்...? இப்படிப் பலவாறு யோசித்துத் திடமான திட்டத்தை உருவாக்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் இருள் சூழ்ந்த நேரம் கருநீலக் கைக்குட்டைகள் மூன்றைத் தேடி எடுத்துக்கொண்டு கெல்மேட்டையும் கொழுவியவாறு மோட்டார் சைக்கிளில் ஆள்நடமாட்டம் குறைந்த தெருவில் இறங்கினான். இரு கைக்குட்டைகளால் சைக்கிளின் இலக்கங்களை மறைத்துக் கட்டி விட்டு, மற்றதால் பாதி முகத்தையும் கட்டிவிட்டுப் படபடக்கும் நெஞ்சோடு மறைவாகக் காத்திருந்தான். எதிர்பார்த்தவாறு இரு பெண் மணிகள் வந்துகொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் அணிந்திருந்த இரு கழுத்தணிகளில் ஒன்றைக் குறிவைத்து பைக்கை ஓட்டிச் சென்று அறுக்க முற்பட கைநழுவ, பைக்கும் நழுவ கீழே விழுந்து உருண்டான். அவர்கள் கூக்குரலிட, தப்பித்தால் போதுமென்று, பைக்கை எடுத்துக் கொண்டு பறந்தான். பழக்கமில்லாததால் முதல் முயற்சி தோற்றாலும், மீண்டும் பதறும் நெஞ்சை அமைதிப்படுத்திப் பாமிலாவின் முகத்தை முன்னிறுத்தித் திடமாக முயன்று மறுநாள் வெற்றி பெற்றான். முதலில் கிடைத்த அணிகலத்துடன் நேரே பிள்ளையார் கோவில் போய் முழந்தாளிட்டுக் கண்களிலிருந்து நீர்வழிய சில நிமிடங்கள் நின்றுவிட்டு, அதில் ஒரு பகுதியை அறுத்து உண்டியலில் போட்டான்.

அடுத்து வந்த சில நாட்களில் ஒரு சில இலட்சங்களைச் சேர்த்து விட்டான். தொழில் இழிவானதாக இருந்தாலும் அதிலும் ஒரு தர்மத்தைக் கடைப்பிடித்தான். வயது முதிர்ந்தவர்கள், குழந்தைகளுடன் செல்பவர்களைக் குறிவைப்பதில்லை. ஒருவரை நன்கு எடைபோட்ட பின்பே குறிவைப்பான். கழுத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவை இருந்தாலும் அதில் சிறிதான பொருளையே தெரிவு செய்வான். அடித்த பொருட்களை வங்கிகளிலேயே அடகுவைப்பான். ஒவ்வொரு நாளும் தவறாமல் பத்திரிகை படிப்பான். அதில் இத்திருட்டைப் பற்றிய செய்தி வரும். பாதிக்கப்பட்டவரின் விபரம் வரும்போது அதைக் குறித்து வைப்பான். எப்போதாவது அந்நகைகளை மீட்டு உரியவரின் வீட்டு முற்றத்திலாவது போட்டுவிடவேண்டும் என்பது அவனது எண்ணம். தினமும் இத் திருட்டைச் செய்வதும் இரவில் மனம் புழுங்கி வேதனைப்படுவதும், இறுதியில் தமக்கைக்காகச் சில நாட்களுக்குத் தானே, அதன்பின்பு உழைக்கிறதைத் தானதர்மங்களுக்குத் தரவேண்டும் என்று தனக்குத் தானே சமாதானம் செய்து தூங்கிப்போவதுமாகக் குறித்த நாளும் நெருங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மாலை நான்கு மணிக்குக் காசு கொடுத்துத் திருமணப் பதிவையும் மேற்கொள்ள வேண்டும். இன்னும் ஒருசில மணித்தியாலங்களே இருந்தன. அதற்குள் இரண்டு இலட்சங்கள் பெற வேண்டும். முடியுமா? முடியாவிட்டால்...? இவ்வளவு நாளும் ஈனத் தொழில் செய்ததிலும் அர்த்தமில்லையே. காத்திருந்தான். ஆனால் சிலமணித்தியாலங்கள் தேடியும் சரியான வாய்ப்பு அகப்படவில்லை. நேரமோ இரண்டரையாகிவிட்டது. இன்னும் அரைமணித்தியாலத்தில் வங்கிகள் பூட்டப்பட்டுவிடுமே. இவ்வளவு நாட்கள் நான் பட்ட கஷ்ரம் வீணாகிவிடுமோ பயத்தில் அதிகளவு வேர்த்துக் கொட்டியது. எச்சிலை விழுங்கிக் கொண்டான். "பிள்ளையாரே... பிள்ளையாரே..." அவன் கண்கள் மின்னின. அவன் முன் ஓர் இளம்பெண் கழுத்தில் கொழுத்த சங்கிலியுடன் தனியே அவசரமாகச் சென்றுகொண்டிருந்தாள். வீதியிலும் யாருமில்லை. எப்படியும் நாலு பவுணுக்கு மேல் தேறும். சங்கிலியையே இவ்வளவு பவுணில் போட்டிருப்பவள் நிச்சயம் வசதி படைத்தவளாகத் தானிருப்பாள். இதைவிட்டால் வேறு வழியில்லை. கழுத்தில் கைவைத்தபோது திடுக்கிட்ட அவள், இரு கைகளாலும் அதைப் பற்றிப்பிடித்தவாறு,

"ஐயோ அண்ணா விடுங்கோ... விடுங்கோ.... என்ரை வாழ்க்கையே இதுமட்டும்தான்... ஐயோ விடுங்கோ..." கதறினாள்.

ஆனால் அவனுக்கு எதுவுமே காதில் விழவில்லை. மூன்று மணிக்கு முன் வங்கிக்குப் பொருளோடு போகவேண்டும் என்பது மட்டும் தான் மனம் முழுதும் வியாபித்திருந்தது. பலவந்தமாக அறுத்துக்கொண்டு திரும்பிப் பாராமல் பறந்தான். வங்கிக்குச் சென்று தான் பொருளைப் பார்த்தான். "சுரீர்" என்றது. அது சங்கிலியல்ல. தாலி இணைக்கப் பட்டிருந்தது. அதுதான் அப்படி அழுதாளா? ஒரு தாலிக்காக இன்னோர் தாலியை அறுத்த பாவியாகி விட்டேனே.. உடனடியாக அறுத்த இடத்திற்குச் சென்றான். அங்கே அவளில்லை. அவனது தொலைபேசி அலறியது. புறோக்கர் தான். அவன் தொலைபேசியையும் கையிலிருந்த பொருளையும் மாறி மாறிப் பார்த்தான். பெருமூச்சோடு மீண்டும் வங்கிக்குச் சென்றான். தாலியை எடுத்துவிட்டுச் சங்கிலியை மட்டும் அடகுவைத்தான். உரிய நேரத்தில் பதிவாளர் முன்பு பணத்தை மாப்பிள்ளையிடம் கொடுத்து திருமணப் பதிவை மேற்கொண்டான். என்றாலும் மனதில் சந்தோசமில்லை. இனம்புரியாத துக்கம் மனதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டிப்படைத்தது. அன்று முழுக்க அவன் சாப்பிடவில்லை. பசியோடு உணவில் கைவைத்த போதும் சாப்பிட முடியவில்லை. தாலியை அறுக்கும் போது அவனது மனதைத் தொடாத அப்பெண்ணின் குரல், இப்போது அவனது காதை அரித்துக் கொண்டிருந்தது. முகத்தையும் மீள நினைவுக்குக் கொண்டு வந்தான். அந்த முகம் ஏற்கனவே அழுதழுது வீங்கியிருந்ததோ...? கண்கள் சிவந்து கலங்கி யிருந்ததோ....? ஏன்...? அவளுக்கு என்ன கஷ்டம்..? தனியாக எங்கே போனாள்...?

முகட்டைப் பார்த்து மல்லாந்து கிடந்து இதைத்தான் யோசித்துக் கொண்டிருந்தான். இதுவரை இந்த ஈனத்தொழிலால் பாதிக்கப் பட்டவர் களுக்கு பொருள் இழப்பு என்பதைத் தவிர வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டதாக அவன் அறிந்திருக்கவில்லை. ஆனால் இவளுக்கு ஏதாவது நேர்ந்திருக்குமோ..? புரண்டு புரண்டு படுக்கும் போதே விடிந்திருந்தது. அவசரமாகக் கிளம்பி வாசிகசாலைப் பக்கம் போனான். ஒரு பேப்பரில் இதைப் பற்றி ஒன்றுமில்லை. மறு பேப்பரிலும் இல்லை. ஒரு நிம்மதி மறுநாளும் வந்து பக்கங்களைப் புரட்டியவனின் கண்களில் "இளம்பெண் தற்கொலை முயற்சி" என்ற தலைப்புப்பட்டது. "ஏனாக்கும்.." நினைத்தவாறே பார்த்தவனின் இதயம் வெடிப்பது போலி ருந்தது. அயலூரில் இளம்பெண் ஒருத்தி தற்கொலைக்கு முயற்சி செய்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும், காரணம் தெரியவரவில்லை என்றும், எனினும் அவள் தன் தாலியை இரு நாட்களுக்கு முன்பு திருடனிடம் பறிகொடுத்திருந்ததாகவும் போடப் பட்டிருந்தது. அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. நேரே பிள்ளையாரிடம் சென்று மனம் விட்டழுது, அப்பெண்ணின் உயிருக்காகப் பிரார்த்தித்தான். எவ்வகையிலாவது அவளது இழப்பை ஈடுசெய்ய வேண்டுமென்று தோன்றியது.

மறுநாள் அவள் பற்றிய மேலதிக தகவல்களைப் பெற வைத்திய சாலைப் பக்கம் போனான். திரும்பும் போது மிச்சம் மீதியாக இருக்கும் நிம்மதியையும் இழக்கவேண்டி வரும் என்று அவனுக்குத் தெரியாதே. பார்வையாளர் பகுதியில் வந்திருந்த அவளது அயல் வீட்டவர், அவனது அமைதியைப் போக்கடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாதத்திற்கு முன்பு, தன்னைக் காதலித்த தனது நண்பனால், பலவந்தமாக அழைத்துவந்து தாலி கட்டப்பட்டுக் குடும்பமான தாகவும், சாதி வேறுபாட்டால் இரு குடும்பமும் அவர்களை ஒதுக்கித் தள்ள, யாரோ ஒருவரின் தயவில், வாடகைக்கு ஓட்டோ எடுத்து ஓடி, அந்த வருமானத்தில் வாடகைக் குடிசையில் தங்கியிருந்த தாகவும், சில நாட்களின் பின், கணவன் திடீர் சுகவீன மடைந்ததாகவும், தனது சங்கிலியில் தாலியைக் கோர்த்து, கணவன் அவளுக்குக் கட்டியதை அடகு வைத்து, அவனுக்கு சத்திரசிகிச்சை செய்வதற்காக, அவசரமாக வங்கிக்குச் சென்றபோது, இருந்த அந்த ஒருபொருளும் திருடனால் பறிபோக, கணவனது உயிரைக் காப்பாற்ற முடியாமல் போனதாகவும், அதனால் அடுத்த வேளை வாழ்வதற்கு யாருமின்றிய விரக்தியில் அவள் மருந்து குடித்ததாகவும், தற்போது தேறிவருவ தாகவும் கூறிய அவர், தாலியறுத்த திருடனையும் அவனது குடும்பத் தினரையும் திட்டிச் சாபம் போட்டார்.

அதன்பின் அவன் அங்கிருக்கவில்லை. எப்போது, எப்படி வீடு வந்தான் என்பது அவனுக்கே தெரியாது. தொடர்ந்து ஒரு வாரமாக வீட்டுக் குள்ளேயே முடங்கிக் கிடந்தான். சாப்பாடு தண்ணீ ரில்லை. வீட்டிலிருந்தவர்களின் அன்போ, ஆதரவோ, கரிசனையோ, கேள்வியோ எதுவுமே அவனது கண்ணில் காதில் படவேயில்லை. ஒரு வாரத்தின் பின் தெளிந்த முகத்தோடு முகச்சவரம் செய்து சுத்தமாக வெளியே வந்தான். நேராகப் பாதிக்கப்பட்ட பெண்ணின் வீட்டுக்குப் போனான். அவள் அங்கிருப்பதை உறுதிசெய்துகொண்டு கதவைத் தட்டினான். இது அழைப்புத்தட்டலல்ல – பிராயச்சித்தத்தட்டல் அறுத்ததைக் கொடுப்பதற்காகவல்ல – கட்டுவதற்காக.

(யாவும் கற்பனை)

(கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய. தேசிய கலை இலக்கியப்போட்டி 2014 ல். பிரதேச மட்டத்தில் முதலாமிடம் பெற்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. உன்னால் முடியும்

என்ரை மகன் செத்திட்டான்.

நேற்றுவரை என் பின்னால் துள்ளித் திரிந்த..................என் அருமை மகன் செத்திட்டான்.

நாலு பெட்டையளுக்கு ஒருத்தனாய்ப் பிறந்த..................ஒரே மகன் செத்திட்டான்.

கறுப்புப் பொம்பிளைக்கும் பால் போலை வெள்ளை மகன் பிறக்க முடியும் என்று நிரூபித்த என்ரை அழகு மகன் செத்திட்டான்.

கனநாள் வாழ வேண்டிய..................என் இள மகன் அநியாயமாய்ச் செத்திட்டான்.

நோய் வந்து செத்தாலும் பரவாயில்லை. வாய்க்குள்ளே போகவெல்லோ வாழ்விழந்து போனான். கொண்டது யார் தெரியுமே? வெளியிலை நல்ல மனிசன், கோவில் பரிபாலனசபைத் தலைவர், கருணைவள்ளல், நடந்தால் புல்லுக் கூடச் சாகாது எண்டெல்லாம் ஊர்ச்சனம் கொண்டாடுற உந்த வெள்ளை வேட்டிக்காரர் தான் உள்ளுக் குள்ளாலை வேட்டுவைச்சது. நான் என்ன செய்யிறது? என்னாலை என்ன செய்ய முடியும்? கத்துறதைத் தவிர..................

❖

என்ரை வாழ்க்கையே செத்துப்போச்சு. நானாய்ப் பார்த்துத் தேடிக் கொண்ட என்ரை வாழ்க்கை செத்துப்போச்சு. இப்பிடி இருக்கோணும். அப்பிடியிருக்கோணும் எண்டு ஆசைப்பட்டுக் கட்டிக்கொண்ட என்ரை வாழ்க்கையே செத்துப்போச்சு. ஏன் இப்படி நடந்தது? நான் யாருக்கு என்ன துரோகம் செய்தேன்? இனி நான் எப்பிடி வெளியிலை தலை காட்டுறது? ஊர் முழுக்க என்ரை கதை தானை. பெண்ணாய்ப் பிறந்தது தான் நான் செய்த குற்றமா? இல்லை வலிய வந்த ஒருத்தனை நம்பிக் கழுத்தை நீட்டியதுதான் குற்றமா? எல்லாம் நல்லாய்த்தான் இருந்தது. எல்லாவிதத்திலும், ஒப்பீட்டளவில், என்னைவிடக் கீழ்மட்டத்திலை இருந்தாலும், என்மேலுள்ள அன்பிலே உச்சத்தில் இருப்பதாய் நம்பினேன். இப்பிடிப்பட்ட அன்பான ஒருத்தன் எனக்கு கிடைச்சதாலை நான் கொடுத்து வைச்சவள் என்றுகூடச் சந்தோசப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டேன். எது வரைக்கும்? நான் கரம்பிடித்தவன், பல பெண்களை ஏமாற்றியவன் என்பது தெரியும் வரை. நான் என்ன செய்யிறது? என்னாலை என்ன செய்ய! முடியும்? அழுவதைத் தவிர.....

❖

என் எதிர்காலமே சூனியமாய்ப் போச்சு. எவ்வளவெல்லாம் கனவு கண்டேன். எப்பிடியெல்லாம் உயர வேணும் எண்டு ஆசைப்பட்டேன். என்ரை எதிர்காலமே சூனியமாய்ப் போச்சு. ஒவ்வொரு விஷயத்தையும் எப்பிடிப் பாத்துப் பாத்துச் செய்தேன். ஏன் இப்பிடி நடந்தது? எங்கே பிழை விட்டேன்? நானா பிழை விட்டேன்? அவரவர்க்குப் பிடித்ததைப் படிக்கக் கூட ஒரு சுதந்திரம் வேண்டும். கொடுப்பினை வேண்டும். அவன் சாந்தன், கண்ணன் ஆக்களெல்லாம் என்னமாதிரித் தாங்கள் விரும்பினதைப் படிச்சாங்கள். இந்தா கம்பசுக்கும் என்ரர் பண்ணீட்டாங்கள். இது எனக்கு வீட்டிலேயே ஒரு தடைக்கல்லு இருக்குதே. வீண் பகட்டுக்கு ஆசைப்பட்டு, தன்ரை பாட்னரின்ரை மகன் மெடிசின் படிக்கிறான் எண்டு, துளி கூட விருப்பமில்லாத என்னையும், அடிக்காத குறையாய், கட்டாயப்படுத்தி இழுத்துவிட்டு என்ன பலன்? மீன் வெட்டினதைக் கண்டால் கூட இரண்டு நாளைக்குச் சாப்பிடக் கஷ்ரப் படுகிற நான், எப்பிடி மெடிசின் படிக்கிறதெண்டு கொஞ்சமாவது யோசிச்சாரே. லாபுக்குப் போறதெண்டாலே எனக்கு ஏதோ செய்யும். முதல் தரம் கம்பசுக்குக் காணாது எண்டபோதாவது விட்டாரே. இரண்டாம் தரமும் விடாப்பிடியாய் நாண்டு கொண்டு நிண்டு என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கிட்டாரே அப்பா. நான் என்ன செய்யிறது? என்னாலை என்ன செய்ய முடியும்? ஏங்கிறதைத் தவிர.....

❖

கத்தினாப்போலை தான் என்ன பிரயோசனம். செத்துப் போன என்ரை பிள்ளை திரும்பி வரப்போறானோ? அவனைத் தான் திண்டு ஏப்பம் விட்டாயிற்றே. யாரிடம் நீதி கேட்பது? மணியடித்து மன்னனிடம் மனுநீதி கேட்க, இது என்ன சோழர் காலமா? அழுதழுது கண்ணீர் வற்றியது தான் கண்ட மிச்சம். பசி வேறு காதை அடைக்கிறது. என்ரை மகன் பான பின் இரண்டு நாளாக வெள்ளை வேட்டி வைத்த சாப்பாட்டைச் சாப்பிடக் கூட மனசு வரேல்லை. பெத்த வயிறைக் கத்த வைத்துவிட்டு, மறுபக்கம் அதே வயிற்றுக்கு கஞ்சி ஊத்துகிறார்கள். எத்தினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்புக்களைச் செய்கிறார்கள் இந்த மனிதர்கள்? இவர்கள் செய்வதின் பாவபலன் பிள்ளைகளுக்குத்தானே. அதோ வீட்டின் ஜன்னல்ப் பக்கம் எந்த இலக்கும் இல்லாமல் வானத்தை வெறித்தபடி நின்று கொண்டிருக்கிறாளே அவரின் மகள். இவள் வாழ்க்கையை யார் மீட்டுத் தருவது? இதோ இந்த மரத்தின் கீழிருந்து மண்ணைக் கிழறிக் கொண்டிருக்கிறானே அவரது மகன். இவனது எதிர்காலத்தை யார் சீர் செய்வது? தாம் செய்யும் பாவத்தின் பலன்களைப் பிள்ளைகள் அனுபவிப்பதை நேரே கண்ட பின்னும், ஏன் உணர மறுக்கிறார்கள். எனக்குப் புரிவது கூட ஏன் இவர்களுக்குப் புரியவில்லை? ம்...அவரவர் தலைவிதி. எனக்குப் பசிக்கிறது. வெள்ளை வேட்டியிடம் சாப்பாடு கேட்க எனக்கு மனமில்லை. நானே தான் முயற்சி எடுக்க வேண்டும். அதோ சிறிது உயரத்தில் நல்ல உணவு இருக்கிறது. அடக் கடவுளே எட்டவில்லையே அட..... அட...... இரண்டு காலை மேலே வைத்து இரண்டு காலில் நின்று எம்புகிறேன். நீயா நானா பார்த்து விடுவோமே..... எம்பிக்கொண்டே இருக்கிறேன். கிடைக்காமலா போய்விடும்?.......

❖

**அ**ழுகிறதாலை என்ன பலன்? எனக்கு ஏன் இந்த நிலை? எப்பிடி இருந்தவள் இப்பிடியாகிவிட்டேனே......... எல்லோரோடும் சண்டை பிடித்துப் பிடிவாதமாய் ஏற்றுக்கொண்டேனே. அந்தளவுக்கு நம்பித்தானே செய்தேன். என்னை ஏமாத்த எப்பிடி மனசு வந்தது? ஆரைப் பழிவாங்கவென்று யார் எனக்கு இந்த நிலையைத் தந்தார்கள்? ஆனால் ஒன்று, இன்று என்னைப் பார்த்துக் கவலைப்படும் அப்பாவுக்கு இப்போதாவது புரிந்திருக்கும், தன்னால் எத்தினை குடும்பங்கள் பிரிந்திருக்கும், கவலைப்பட்டிருக்கும், என்பது. என்றாலும் எனக்கு இந்த தண்டனை பெரிது தான்.

"சே..... இதென்ன கரைச்சலப்பா.... உந்தக் கறுப்பி ஏனிப்பிடிக் காட்டுக் கத்தலாய்க் கத்துறாள்...... சூ... சூ... இந்தா... சாப்பாடு வைச்சாத் தின்னாமை லெவல் காட்டிறது. பிறகு எட்டாததுக்கெல்லாம் ஆசைப்பட்டுத் தொங்கிறது. உன்னையும் சட்டிக்குள்ளை வைச்சாத்தான் அடங்குவாய் ..."

ம்..... அதுக்கென்ன கவலை. ஆர் செத்தா என்ன, யார் வாழ்ந்தா என்ன. அதுஎன்ரை பசி அதுக்கு. என்ரை வேதனை அதுக்குத் தெரியுமே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான அவமானமெல்லாம் மனிசருக்கு மட்டும் தானே. வீட்டை விட்டு வெளியே போனால் வலிய வருகுது விசாரிப்பு. அக்கறையிலா கேட்கிறார்கள்? இனி என்ன செய்யப் போறாய்? எல்லாம் விடுப்புக்குத் தான். ஆனாலும் இனி என்ன செய்வது என்ற கேள்வி எனக்குள்ளும் எழாமலில்லை. சாதாரணமாய்க் கோலம் போடேக்கை, ஒரு கோடு கோணலாய்ப் போனால் கூட கவனிச்சுச் சரியாக்கும் நான்..... இனி......

❖

ஏங்கினாப் போலை மட்டும் அநியாயமாய்ப் போன காலங்கள் திரும்பி வந்திடுமே. றோட்டிலை போகவே வெக்கமாய்க் கிடக்கு. ஓ.எல்லிலை என்னைவிடக் குறைஞ்ச றிசல்ட் எடுத்தவை கூட கம்பசுக்கு எடுபட்டிட்டினை. வகுப்பிலேயே தமிழுக்குக் கூட மாக்ஸ் எனக்குத் தான். ரீச்சரே சொல்றவ. உனக்கு நல்ல ரசனையடா. நல்லாய் எஸ்ஸே எழுதுறாய். நல்லாய்ப் பாடமாக்கிறாய். ஆட்ஸ் எடுத்தாயெண்டால் மாவட்டத்திலேயே முதலாய் வரலாம் எண்டு. அது மட்டுமே. நான் எவ்வளவு நல்லாய்ப் பாடுவேன் தெரியுமே. இந்தியாவுக்கெல்லாம் போய்ப் படிச்சு நல்ல இசைக் கலைஞராய் வரவேணும் எண்டு மனசுக்கை நினைச்சிருந்தனான். அப்பாவுக்குத் தெரிய வந்ததும் வானத்துக்கும் பூமிக்கும் குதியாய்க் குதிச்சார். தமிழ் படிக்கிறது அவருடைய கௌரவத்துக்குக் (?) குறைச்சலாம். எங்கடை மொழியை நாங்கள் படிக்கிறது எந்த விதத்தில கௌரவமில்லாமல் போகும்? எனக்கென்றால் புரிந்ததில்லை. இசை நிகழ்ச்சிக்கு விருந்தினராய்ப் போய்த் தலையை ஆட்டிப் போட்டு வாற அப்பா, என்ரை மகனாய்ப் பிறந்திட்டுத் தொடையிலை தட்டிக்கொண்டிருக்கப் போறியோ என்கிறார். ஒரு கலைஞன்ரை பவர் தெரியாத மனிசன். அததுக்கு கொடுத்து வைச்சிருக்க வேண்டும்.

அட.... இதென்ன இப்பிடி வீறிட்டுக் கத்துது கறுப்பி. (திரும்பிப் பார்க்கிறேன்) அலங்கோலமாய் விழுந்து கிடந்தது கறுப்பி. உனக்குக் காணாது. நேத்தெல்லாம் சாப்பாடு வைக்கத் தின்னேல்லை. இப்ப எட்டாததுக்கெல்லாம் எட்டிப் பார்த்து விழுந்தெழும்பிறாய். ஐஞ்சறி வெண்டது சரியாய்த் தான் கிடக்கு.

ம்..... உனக்கென்னப்பா..... படிப்பா.... கிடிப்பா..... ஒண்டும் தேவேல்லை. குடுத்து வைச்ச பிறவி. என்னாலை எண்டால் இனிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கேலாது. படிக்கிற மூட்டே இல்லைப் போலைக் கிடக்கு. முந்தியெல்லாம் ஒரு கணக்கைச் செய்யேக்கை ஒரு பிழை விட்டாக்கூடி அதைத் திருத்திச் சரியாக்கும் வரைக்கும் சாப்பிடாத நான் .................. இனி...................

❖

ஆ.............சரியாய்த் தான் அடிபட்டுப் போச்சு, நடக்கவும் நோகுது. என்ன செய்யிறது? என்ரை பசியை நான் தானே போக்க வேணும். சும்மா இருந்தா எல்லாம் கிட்ட வருமே? விழுந்தாப்போலை அது புளிக்கும் எண்டு சொல்றதுக்கு அது திராட்சையுமில்லை.......... நான் நரியுமில்லை.............. அதுகள் இரண்டு பேரும் இருந்து யோசிச்சுக் கொண்டிருக்கிற மாதிரி நானும் இருக்கேலுமே? பாப்பம்.... கொஞ்சம்..... இன்னும் கொஞ்சம்........ அட....அ.... அப்பிடித்தான்....... கொஞ்சம்...... மனசிலை சந்தோசம்.... ஒரு பொருளுக்காக முயற்சி செய்வதில் எத்தினை சந்தோசம்? முயற்சியின் முடிவில் அது கைக்கெட்டும் போது தான் எத்தினை பெருமிதம்? அதை அனுபவிச்சால் தான் அருமை தெரியும். இதோ இன்னும் ஒரே எம்பில் அந்தக் கொப்பு என் வாயில் வந்துவிடும்..... வந்து விடும்.... ஆஹா.... வந்தேவிட்டது.... அருமையான சாப்பாடு... அடிபட்ட வருத்தம் கூட இப்போது இல்லை. சும்மாவா சொன்னார்கள் மனிசர், "முயற்சி திருவினையாக்கும்" எண்டு. ம்........ ம்...... ம்மே........

❖

தலைக்குள் ஏதோ ஒன்று அடிபட்டது போல ஒரு உணர்வு. உண்மைதான். கோலம் போட்டது நான். கோணலைச் சரிப்படுத்தியதும் நான். ஏன் அது போல என் வாழ்க்கையைச் சீராக்க முடியாது. ஒருமுறைதான் வாழ்க்கையா? மற்றவரில் தங்கியிருந்தா அவர்களின் பாட்டுக்குத் தாளம் போடவேண்டியது தான். ஏன் எனக்கென்று ஒரு தொழில் தேடக் கூடாது? என் வாழ்க்கையை நான் தானே வாழ்ந் தாகணும். மற்றவர்களுக்காக வாழ்வது இயலுமா? எல்லோர்க்கு முன்னாலும் மீண்டும் புதுமைப் பெண்ணாக நிமிர்ந்து நிற்க ஏன் முடியாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்செயலாகத் திரும்ப, வாய் நிறையத் தளைகளை மென்றபடி கறுப்பி தென்பட்டாள். விழுந்து அடிபட்ட பின்னும் கூட கறுப்பி வெற்றி யடைந்திருக்கிறாளே.... நான் மட்டும் ஏன் நிமிர முடியாது? உடலுக்குள் புதுப்பலம் வந்தது போல் ஒரு உணர்வு. மனதுக்குள்ளேயே ஜன்னலிடம் விடைபெறுகிறாள் அவள்......

❖

மூளையில் பளீர் என்றொரு மின்னல். கணக்குச் சரியாகும் வரை திருப்பிப் போட மூளையில் பலம் இருந்த எனக்கு, ஏன் இன்னொரு தரம் கம்பசுக்குப் போக முயற்சி செய்ய மனபலம் இல்லாமல் போனது? ஏன் நான் ஆசைப்பட்டதைப் படிக்கக்கூடாது? எதிர்காலம் என்னுடையது தானே. இன்னும் அது என் கையில் தானே இருக்கிறது. இன்று முட்டுக்கட்டை போடுபவர்கள் கடைசிவரை என்கூட இருப்பார்களா? எல்லோர்க்காகவும் எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்க முடியுமா?

ம்மே...... சந்தோசமான குரல் அவன் யோசனையை மறிக்கத் திரும்புகிறான். வெற்றிக்களிப்பில் கறுப்பியின் கண்கள் "அட ஆறறிவு மனிதா ...." என இளக்காரமாய்ப் பார்ப்பது போலிருந்தது. அவனுக்கு வெட்கமாக இருந்தது. கல்லெறிந்து அதன் கவனத்தை வேறு பக்கம் திரும்பினான்.

❖

மீண்டும் திரும்பி மரத்தடியைப் பார்க்கிறாள் கறுப்பி. மரத்தடியில் யாருமில்லை. ஜன்னலடியிலும் யாருமில்லை.இனிமேல் அந்த மரத்தின் கீழ், ஜன்னலடியில் யாரிருப்பார்களோ இல்லையோ, நிச்சயமாய் அவன், அவள் இருக்க மாட்டான்\ள்.......

(யாவும் கற்பனை)

(கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய. தேசிய கலை இலக்கியப்போட்டி 2015ல். பிரதேச மட்டத்தில் முதலாமிடம் பெற்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. புதுமைப் பெண் ?

'படீர்...' நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு சிதறியது அந்தச் சத்தம். திடுக்கிட்டு சுயநினைவுக்கு வந்தேன் நான். என் வாழ்க்கைப் பாதையிலிருந்து தவறிப்போன அவளைப் போல அவளது பிறேம் போட்ட படமும் என் கையிலிருந்து தவறியிருந்தது.

கீழே குனிந்து பார்த்தேன். கலங்கிய நீருக்குள் தெரியும் நிலவு போல, கலங்கிய என் கண்களுக்குள் அவள் முகம். சிதறிக்கிடந்த கண்ணாடித் துகள்களில் என் கண்ணீரும் பட்டுச்சிதறியது. மனம் மட்டும் கதறி அழுதது. "ஏன்? ஏன் இப்படிச் செய்தாய்?.... ஏன் செய்தாய் அர்ச்சனா?..."

உடைந்த சட்டத்துக்குள்ளிருந்து சிரித்தாள் அவள்.

"ஐயோ.... சிரிக்காதே. என்னால் தாங்கமுடியவில்லையே...? ஆத்மா அழுதது. எனக்கு விசர் பிடிக்கப்போகிறதோ...? பயப்பட்டேன். பின்னே, இப்படியொருத்தி சிநேகிதியாய் வாய்ச்சதுக்கு விசர் பிடிக்காமல் என்ன செய்யும். தன்னையும் குழப்பி... என்னையும் குழப்பி... ஏன் கடவுளே இப்படி ஒருத்தியைப் படைச்சாய்?...... சிநேகிதி என்றே யாருமில்லாமல் இருந்த எனக்கு இப்படி ஒருத்தியைக் கொடுத்துப் பறிச்சுப்போட்டான் கடவுள்.

நாலு வருஷப் பழக்கம். இன்றுவரை அவளைப் புரிஞ்சுகொள்ள ஏலாமல் போச்சு. நான் மட்டுமென்ன உங்களாலை கூட ஏலாது தான். எல்லாத்துக்கும் நல்லவள். ஒரு விசர்க்குணம், ஆண்களை வெறுக்கிறது.

எங்கட கல்லூரிக்கு முதல் நாள் வந்த போது எனக்குப் பக்கத்தில தான் இருந்தாள். ஆண்களின்ரை பக்கமே திரும்பமாட்டாள். திரும்பினாலும் முகம் 'உர்' என்றிருக்கும். கொஞ்சம் பழகினாப் போலத்தான் தெரிஞ்சது, அவள் சரியான பெண்ணியவாதியெண்டு. பெண்ணியம் எண்டால் என்னவென்று சரியாய் எனக்குத் தெரியாது. அவள் தான் அப்பிடிச் சொல்லுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளோட பழகப்பழக இப்படியும் ஒருத்தியோ எண்டு ஆச்சரியமாய்ப் போச்சு. எடுத்ததுக்கெல்லாம் ஆண்களிலை பிழை கண்டுபிடிச்சுக் கொண்டே இருப்பாள். அவளின்ரை கண்ணிலை படும் எந்த ஆம்பிளையும் இதுக்கு விதிவிலக்கில்லை. படிக்கிற பாடம் – பார்க்கிற படம் – கேக்கிற பாட்டு எதுவும் தப்பேலாது.

"என்ன இது..... அவள் 'உன்னை மறக்க முடியாது' எண்டு பாடுறாள். இவன் 'உனை நான் மறப்பது கடினம்.' எண்டு பாடுறான். அப்ப மறந்திடுவானோ? உந்த ஆம்பிளையளே உப்பிடித்தான்" என்பாள்.

'வெங்காயத்தை வெட்டும் போதும் கண்கலங்கக் கூடாதம்மா வெங்காயமே வேண்டாம் கண்ணே.....' "ஏன் அந்த வெங்காயத்தை இவர் வெட்டிக்குடுத்தா என்ன? அது ஏலாது. கண்டறியாத பாட்டு" என்பாள்.

இது அவளுடைய வாதம். (விதண்டா வாதமோ....? ) ஔவையார் கூட அவளிடம் அடிபட்டுப் போனா. பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை....' என்ட பாட்டு அவளின்ரை கண்ணிலை பட்டுட்டுது. "இப்பிடி எழுதினவ நிச்சயம் ஒரு பெண்ணாய் இருக்கேலாது. ஓரிஜினல் ஆம்பிளை" (இது அவள் தீர்ப்பு) திட்டிக்கொண்டே

"மனையாளுக் கேற்ற மணவாள னாயின்
மினைக்கெட்டுக் கூடியிரு மாற்றான் – மனைநாடி
ஏறுமாறா யிருப்பா னெனின் பெண்ணேநீ
கூறாமல் டைவேர்ஸ் எடு...." எண்டு மாற்றினாள்.

இவள் ஏன் இப்படியென்று பிறகு தான் தெரிந்தது. குடும்பத்தில் தாயும் இரு சகோதரரும் தான். தாய்க்கு அடங்காத அண்ணன்கள். மூத்த தமையனால் அண்ணி படும் கஷ்டம். சிறிய அண்ணன் ஊர்ப் பெண் களோடை விடுகிற சேட்டை. இவளையும் தாயையும் பெண் என்றால் அடிமை மாதிரி நடத்திறது. தகப்பன் இருந்த போது தாயாரை ஆட்டி வைத்தது. எல்லாம் சேர்ந்து ஆண் வர்க்கம் மேலேயே வெறுப் பாகிவிட்டது. ரோட்டில, பஸ்ஸிலை, கோவிலிலை என்று ஒவ்வொரு கணமும் இவள் சந்திக்கும் ஒவ்வொரு ஆண்களும், ஏதோ ஒரு விதத்தில் இவளது வெறுப்பை வளர்க்கவே உதவினார்கள். "எல்லாம் கல்யாணம் செய்யச் சரிவரும்" என்று நான் சொன்னால் என்னோடை சண்டை தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் அவங்களுக்கு வேலைக்காரியாய் இருக்கவோ? அவேன்ரை ஆணவத்துக்கு நாங்களே ஆக்கள். எனக்குத் தேவையில்லை. நான் தனிய இருப்பன். படிச்சு முடிய வேலை கிடைக்கும். பிறகென்ன?" என்பாள்.

ஆண் என்றாலே காததூரம் ஓடுறவள், எங்களோடு படித்த காண்டீ பனால் எதிர்பாராமல் மாறிப்போனாள். இனிப்பிரச்சினை இல்லை என்று சந்தோசப்பட்டேன் நான். "காண்டியோடை இதைப்பற்றிக் கதையடி. நான் தூது போகட்டே" விளையாட்டாய்க் கேட்டேன்.
"எப்பவோ சாகிற என்னை, இப்பவே சாக வைக்காதை" பட்டென்று வந்தது பதில்.

"ஏன் சாகிற கதை கதைக்கிறாள் இவள்?" எனக்கு எரிச்சல் தான் வந்தது.

"பின்னே நீ மட்டும் அவனை நினைச்சுக்கொண்டிருக்கப்போறியே. அவன்ரை முடிவையும் கேட்டால் தானே....?"

"உனக்கென்ன விசரே. நானெல்லே சொன்னனான், எனக்கு ஆண் தொடர்பே வேண்டாம் எண்டு. பிறகென்ன கதைக்கிறாய்"

"அப்ப அவனை ஏன் விரும்பினனீ?"

"நானே விரும்பினனான்? ஏதோ என்ரை விதி" ஒரு ஈர்ப்பு வந்திட்டுது. ஒண்டு சொல்றன் தீபா. கல்யாணமே செய்யக் கூடாதெண்டது தான் என்ரை ஆசை. செய்தாலும் பெரியாக்களே பார்த்துச் செய்து, வாறவன் கூடாதவனாயிருந்தா பாவம் பெட்டை.. எண்டு சனம் அனுதாபப்படும். அதே நானாகத் தேடினதென்டா, 'உவளுக்குக் காணாது' எண்டு பேசும்".

"நீ ஏன் வாறவர் கூடாதவராயிருப்பார் எண்டு நினைக்கிறாய்?"

"நான் கல்யாணத்துக்கு முதலே கருமாதியை நினைக்கிறவள். விவாகத்துக்கு முதலே விவாகரத்தை யோசிப்பவள். நானோ என்ர வாழ்க்கையோ தோற்கலாம். ஆனால் என் தெரிவு... என் நினைவில் காண்டீபன்.. தோற்கவே கூடாது. கல்யாணத்துக்குப் பிறகு 'சே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப்பட்டவரையா நான் விரும்பினனான்.. எண்டு ஒரு கணம் நினைச்சால் கூட பிறகென்ன, வாழ்க்கையே நரகம் தானே. 'காதல் முடிவது கல்யாணத்தில, கல்யாணம் முடிவது விவாகரத்தில எண்டு ஒரு கவிதையே இருக்கு.. தெரியுமே" என்பாள் அர்ச்சனா.

"என்னைக் குழப்பிறதே உன்ரை வேலையாய்ப் போச்சு" சலிப்பேன் நான்.

"நீ கு. ப. ராவின்ரை கதை வாசிக்கிறனியே. 'காதல் நிலை' எண்டு ஒரு கதை. அதிலை ஒரு பேராசிரியர் வருவார். அதை வாசி விளங்கும்."

"உப்பிடிப்பட்ட கதை – பாட்டு – கவிதை எல்லாம் என்னெண்டு உன்ரை கண்ணிலை பட்டுத் தொலைக்குதோ தெரியாது." எரிச்சலோடு நான்.

கடவுளாவது இவளை மாற்றட்டும் என்று கோவிலுக்கு இழுத்துச் செல்வேன். கண்களில் நீர் வடியக் கும்பிடுவாள். "என்ன கும்பிட்டனி" என்று கேட்டால் "காண்டீபன் நல்லாயிருக்கோணும். எல்லாக் காதலரும் சேரோணும். எல்லாரும் நல்லாய் இருக்கோணும். நான் மட்டும் சாகோணும். என்று சுப்ப சொனிக் வேகத்தில் பதில் வரும். தொடர்ந்து "மணமகளாய் என் கழுத்தில் மாற்றான் மாலை போட முன்னே, பிணமகளாயப் பாடையில் நான் படுத்திருப்ப தெக்காலம்" பாட்டும் வரும்.

கேட்டால் "நான் ஒரு புதுமைப்பெண்" என்பாள். மண்ணாங்கட்டி. சுத்த முட்டாள்.

போன கிழமை கல்லூரிக்கு வந்த அர்ச்சனா ஒரு படத்தைக் காட்டினாள். அழகாய் ஒரு இளைஞன். அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தேன். "என்ர வருங்காலக் கணவனாம்." குரலைப் போலவே அவளின் முகத்திலும் எந்த உணர்ச்சியையும் கண்டுபிடிக்க முடிய வில்லை. கண்கள் மட்டும் வறண்டிருந்தன. நல்லாய் அழுதிருக்கிறாள். நான் கேட்டேன் "ஏன்டி இப்படி உன்னையே அழிச்சுக் கொள்ளுறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்டியை விரும்பிறதை அம்மாவிடம் சொல்லி யிருக்கலாம் தானே. அவன் ரொம்ப நல்லவனடி."

"தூர இருக்கேக்கை அப்படித்தான் இருக்கும். கிட்டப்போனாத்தானே சுயரூபம் தெரியும். எங்கட அண்ணி எவ்வளவு வடிவு. நல்லவ. ஆனா அண்ணா.... காண்டீபனும் பொம்பிளையளோடை நல்லாய்க் கதைக் கிறவர் தானே."

"இதென்ன கரைச்சலப்பா. முட்டாள்தனமாயெல்லே கதைக்கிறாய். ஆராயிருந்தாலும் வகுப்பிலை கதைக்கிறது தானே!"

"ஏன் நான் அப்பிடியே? காண்டீபனோடையே கதைக்கிறேல்லை. மற்றவையைப் பார்க்கிறது கூட இல்லை. காண்டீபனும் அப்பிடி யிருக்கலாம் தானே."

"உன்னை மாதிரி விசித்திரப் பிராணி ஒண்டே போதுமப்பா. இன்னொண்டும் இருந்தா உலகம் தாங்காது." நக்கலடிப்பேன் நான். "உனக்குத் தெரியுமே தீபா. பஸ்ஸில பெடியள் ஆரேன் பக்கத்திலை நிண்டாலே எனக்கு அழுகை வரும். காண்டீபனுக்குத் துரோகம் செய்யிறன் எண்டு. அப்படிப்பட்டவள் என்னெண்டு இன்னொருத் தனோடை வாழ்றது. கடைசிலை காண்டிக்கும் துரோகம் செய்து, வாறவனுக்கும் துரோகம் செய்து, என்னை நானே ஏமாத்தி.... கண்கள் குளமாயின அர்ச்சனாவுக்கு.

"அப்ப சொல்லித் தொலைக்கிறது தானே. கலியாணமே வேண்டா மெண்டு"

"அம்மா ஏனெண்டு கேப்பாவெல்லே. என்னத்தைச் சொல்றது........."

"ஏன் உன்ரை புதினமான வேதாந்தங்களைச் சொல்றது தானே. உனக்கே தெரியுது உது மடத்தனமான கொள்கை எண்டு. பிறகேன் அதைக்கட்டிக்கொண்டு அலையுறாய்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ர நிலையில் இருந்தாத்தான் உனக்கு விளங்கும். வாழ்க்கையிலை எந்த சந்தோசத்தையும் நான் அனுபவிக்கேல்லை. அன்பென்றால் சுரண்டல் எண்டு சொல்லுறாங்களடி. என்னைப் பொறுத்தவரை அன்பென்றால் தியாகம் – தியானம் அவ்வளவு தான். என்னாலை யாரும் கவலைப்படக் கூடாது."

"அப்ப ஒண்டு செய். கல்யாணம் நடக்கிறவரை, மாப்பிள்ளையின்ரை படத்தை இரவும் பகலும் பார். காண்டியை மறந்திடுவாய். எல்லாம் சரி வரும்...." பகிடி விட்டேன் நான். உலகத்துச் சோகங்களை யெல்லாம் கண்களில் குவித்து என்னை ஒரு பார்வை பார்த்தாள். அவள் என்னைப் பார்ப்பது இதுவே கடைசியாக இருக்கும் எண்டு நான் கனவிலும் நினைக்கவில்லை.

நேற்றுக் காலை எனக்குக் கோல் வந்தது. அர்ச்சனா மருந்து குடிச் சிட்டாள் என்று. பதறியடித்துக்கொண்டு ஓடினேன். அதற்குள் எல்லாம் முடிந்தாயிற்று. உலகத்தின் விசித்திரமான புதுமைப் பெண்ணை மண்ணுடன் கலந்துமாயிற்று. என்னால் யாரும் கவலைப்படக்கூடா தென்றவள், எல்லாரையும் துடிக்க வைத்துத் தொலைந்து போனாள். ஏதோ கிறுக்குத்தனமாய் உளறுகிறாள். கல்யாணம் முடியச் சரிவரும் என்று நினைத்தேன். யாராவது பெண்கள் தற்கொலை செய்ததை அறிந்தால், நிச்சயம் ஓர் ஆண் தான் காரணமாயிருப்பான் என்று உடனடித் தீர்ப்பு வழங்குவாள். (உண்மை எப்படியோ)

இன்று.... அளவின்றி ஆண் வர்க்கத்தை வெறுத்தாள். அதே வர்க்கத்திலிருந்து ஒருவனை அளவுக்கதிகமாய் நேசித்தாள். இவள் சாவுக்கும் தெரிந்தோ தெரியாமலோ ஆண் வர்க்கமே காரணமாகி விட்டது. (அல்லது இவளது மடத்தனமான கொள்கைகள் தான் கொன்றதோ?) இறந்தவளைக் குற்றம் சாட்ட என்மனம் இடம் தரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் படத்தை உற்றுப்பார்க்கிறேன். அவளை இப்படி ஆக்கிய முகம் தெரியா ஆண்கள் மீது வெறுப்பு வருகிறது. அவளின் சாவீட்டில், உலகத்துச் சோகங்களை எல்லாம் கண்களில் குவித்து அர்ச்சனா பார்த்த இறுதிப் பார்வையை, காண்டீபனின் கண்களில் கண்டதை மனம் நினைக்கிறது. காண்டீபனும் அவளை விரும்பி யிருப்பானோ? ஏன் சொல்லவில்லை? அவனும் அர்ச்சனாவைப் போல புதுமை ஆணோ? சே..... என்ன இது? அப்ப அர்ச்சனா புதுமைப்பெண் என்று நான் அங்கீகரிக்கிறேனா?....... மனம் குழம்புகிறது.

'அர்ச்சனா..... என் அர்ச்சனா...... நீ புதுமைப் பெண்ணா? இல்லை... முட்டாள்ப் பெண்ணா?...... உன்னை அப்பிடிச் சொல்லலாமா? புலம்புகிறது மனசு.

"ப்ளீஸ் நீங்களாவது சொல்லுங்களேன்... என் அர்ச்சனா புதுமைப் பெண்ணா.....?"


(யாவும் கற்பனை)

**(கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய, தேசிய கலை இலக்கியப்போட்டி 2016ல். பிரதேச மட்டத்தில் இரண்டாமிடம் பெற்றது)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. (ஏ)மாற்றம் வேண்டுமே(மா?)

## காட்சி 1

(மேடையில் திரை விலகுகிறது.)

இடம் - வீட்டு விறாந்தை

(பாத்திரங்கள் - சண்முகம். புறோக்கர் சுப்பு)

(மாலை நேரம். கதிரையில் சண்முகம் அமர்ந்திருக்கிறார். அடிக்கடி தலையைத் திருப்பி மணிக்கட்டைப் பார்த்துக் கொள்கிறார். உச்சுக் கொட்டிக்கொள்கிறார். அந்த நேரம் கேற் திறபடும் ஓசை கேட்கிறது. பாய்ந்தடித்துப் பக்கத்திலிருந்த பேப்பர் ஒன்றை எடுத்து முகத்தை மறைத்துக் கொள்கிறார்.

ஒரு குரல் :- அண்ணே சண்முகண்ணே................

சண்முகம் :- ஓமோம். சுப்பு வாரும் வாரும்............

சுப்பு :- (வந்தமர்ந்து கொண்டே) அப்பாடா ..... என்னண்ணை வலு மும்முரமாய்ப் பேப்பர் வாசிக்கிறீங்கள் போலை.....

சண்முகம் :- பின்னை, நாலு விஷயத்தைச் சுடச்சுடப் படிச்சு வைச் சாத்தானை நாலு பேரோடை கதைக்கேக்கை எடுத்து விடலாம். இல்லையென்றீரோ?

சுப்பு :- அது சரிதான் அண்ணை. பேப்பர் சொல்லுது?

சண்முகம் :- நீர் என்னப்பா...... எந்த உலகத்திலை இருக்கிறீர்? நேத்திரவெல்லே திருகோணமலை இரண்டு தரம் கதி கலங்கிப் போச்சாம். இனிமே ஒரு இரவும் உவையள் நிம்மதியாய் நித்திரை கொள்ளாயினை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுப்பு :-** (மனதுக்குள் – உது எப்பத்தையான் பேப்பரையப்பா பாக்குது..) அண்ணை உந்த விஷயம் நடந்தது போன கிழமையண்ணை........

**சண்முகம் :-** 'ஹி....'. 'ஹி'...... (அசடு வழிய) பேப்பர் மாறீட்டுது போலை 'சரி சரி'. விஷயத்தை எடுத்து விடுமன்.

**சுப்பு :-** ஓமோம். அதுக்குத் தானை ஓடி வந்தனான். (பைக்குள் கையை விட்டு ஏதோ எடுத்துக் கொண்டே) நீங்க சொன்ன மாதிரி ஒரு அமெரிக்க மாப்பிளையின்ரை சாதகம் கிடைச்சிருக்கு. அது தான் .......... இதை ஒருக்காப் பாருங்கோ.....

**சண்முகம் :-** தாரும்.. தாரும்... (வாங்கிக் கொண்டே) இதென்ன படத்திலை நாலைஞ்சு உருவம் தெரியுது. இதிலை எதப்பா பொடியன்?

**சுப்பு :-** எல்லாம் பொடியள் தான் (பகிடி விட்டுக் கொண்டே) அந்த நீலச் சட்டை போட்ட பொடியன் அண்ணை. உங்கடை பிள்ளையின்ரை சாதகத்தை தந்தியளெண்டால் பொருத்தம் பாக்கலாம்.

**சண்முகம் :-** என்ன தாறது... சொல்லுறன் கேளும்... இப்ப அவளுக்கு ராகு பகை, கேது பகை, அட்டமத்திலை சனி நிக்கிதாம், ஏழிலை செவ்வாயாம், உச்சத்திலை வியாழன் நிக்கிதாம், சுக்கிரன் நேராய்ப் பாக்குதாம், சூரியன் ஓரப்பார்வை பாக்குதாம்... பிறகு....

**சுப்பு :-** இதென்ன சாதகமப்பா..??? (மனதுக்குள் நினைத்துக் கொண்டே) மொத்தத்திலை கிரகங்களெல்லாம் உங்கை தான் குடியிருக்குதுகள் போலை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சண்முகம்** :- என்ரை மோளின்ரை பவர் அப்பிடி. பொடியன் சுப்ப ராய்த்தான் இருக்கிறான். எதுக்கும் சாதகத்தைத் தாறன் பாரும்.. பிறகு மிச்சத்தைக் கதைப்பம் என்ன....

சுப்பு :- நம்பியிருங்கண்ணை. இந்தப் பெடியனுக்கும் செவ்வாய் இருக்கு. இவன் உங்களுக்குத் தான். நல்ல சேதி யோடை கோல் எடுக்கிறன். அப்ப.. போட்டு வாறன் என்ன....

**சண்முகம்** :- சரி சரி வாரும். புஷ்பா. இஞ்சாரும் புஷ்பா.. (கூப் பிட்டுக் கொண்டே அடுப்படிக்குள் நுழைகிறார்)

(மேடையில் திரை மூடுகிறது.)

## காட்சி 2

(மேடையில் திரை விலகுகிறது.)

**இடம் - சமையலறை**

(பாத்திரங்கள் - சண்முகம், அவரது மனைவி புஷ்பா)

புஷ்பா :- அடுப்படிலை தானப்பா இருக்கிறன். அமெரிக்காவுக் குக்கேட்கிற மாதிரிக் கத்திறியள்.... என்ன தேத்தண்ணி தாறதே?

சண்முகம் :- ஷா.. என்ன சகுனமப்பா.... அமெரிக்கா வரன் வந்த நேரம் அமெரிக்காவைப் பத்திக் கதைக்கிறாள் என்ரை மனிசி. இனித் தேத்தண்ணி எல்லாம் குடிக்கக்கூடாது. ஐஸ் கோப்பி தான் குடிக்கப் பழகவேணும் சரியே..

புஷ்பா :- என்ன தலைகால் புரியாமல் குதிக்கிறீங்கள். புறோக்கர் வந்தவர் போலை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகம் :- பாத்தியே இப்பவெல்லாம் உனக்கும் விஷயம் டக் கெண்டு பத்துது என்ன?

புஷ்பா :- இருபத்திமூண்டு வருஷமாய் உங்களோடை குப்பை கொட்டுற எனக்குத் தெரியாதே நீங்கள் எப்ப குதிப் பீங்கள் எப்ப பதுங்குவீங்கள் எண்டு.

சண்முகம் :- சரி சரி. உந்தக் கதையை விடும். ஒரு அமெரிக்கா வரன் வந்திருக்கு. பொருத்தம் சரியெண்டா சுப்பு இர வைக்குக் கோலெடுப்பார். அநேகமாய்ச் சரிவந்திடும் எண்டு நினைக்கிறன் பிறகென்ன. எனக்கும் ஒருக்கா ஜோர்ஜ் புஷ்ஷையும், பில் கிளின்ரனையும் பாக்க வேணும் எண்டு சரியான ஆசை..(மெதுவாக..) யாரைத் தான் பாக்காட்டாலும் மோனிக்காவைக் கட்டாயம் பாக்க வேணும்..

புஷ்பா :- ஆசை தானை பிழைப்பைக் கெடுக்கிறது. மீசை நரைச் சுப் போச்சு. ஞாபகமிருக்கட்டும்.

சண்முகம் :- உந்தப் பொம்பிளையளே உப்பிடித்தான். சரியான பொறாமை..

புஷ்பா :- எனக்கென்ன பொறாமை. நீங்கள் எங்கை போனா லென்ன.. யாரைப்பாத்தாலென்ன...

சண்முகம் :- சரி சரி முணுமுணுக்காதை. நானொருக்கா வெளி யிலை போட்டு வாறன். சுறுக்காத் தேத்தண்ணியைத் தாவன்.

(மேடையில் திரை முடுகிறது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 3

(மேடையில் திரை விலகுகிறது.)

**இரவு– வீட்டு விறாந்தை**

(பாத்திரங்கள் - சண்முகம், புஷ்பா, மகள் தீபா)

**புஷ்பா :-** இவள் தீபாவை இன்னும் காணேல்லை. மணி ஏழாகுது. காலம் கெட்டுக் கிடக்கு. பொம்பிளைப்பிள்ளை எண்ட சுரணை கொஞ்சமும் இல்லை. இருட்டாகு முந்தி வீட்டுக்கு வரத் தெரியாதே?

**சண்முகம் :-** அவள் என்ன சின்னப் பிள்ளையே? அதுவும் கொஞ்ச நாளிலை அமெரிக்கா போகப் போறாள். அவளை ஆம்பிளைப் பிள்ளை மாதிரியெல்லே வளத்திருக்கிறன். அவளுக்கு என்ன பயம்?

**புஷ்பா :-** விசர்க்கதை கதைக்காதேங்கோ. ஆம்பிளையும் பொம்பிளையும் சரிசமம் எண்டு மேடையிலை முழங்கிறதைக் கேட்க நல்லாய்த்தானிருக்கும். எண்டாலும் சில விஷயங்களிலை பொம்பிளையள் அடக்கமாய் இருக்கிறது அவையளுக்குத்தான் நல்லது. இந்தா.. கேற் சத்தம் கேக்குது. தீபா தான் வாறாள்.

**தீபா :-** என்னப்பா? அம்மா இந்த முழி முழிக்கிறா.... வயித்திலை புளியைக் கரைச்சிருக்குமே?..... கம்பியூற்றர் கிளாஸ் கொஞ்சம் லேற்றாய்ப் போச்சம்மா

**புஷ்பா :-** உனக்கு விளையாட்டு. உப்பிடியே திரி. வீட்டு வேலையொண்டும் செய்யாதை. போற இடத்திலை எப்பிடிச் சமாளிக்கப் போறியோ தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபா :- வீட்டு வேலை பழக எனக்கு நேரமில்லை. போற இடத்துக்குப் போறதுக்கு இன்னும் நிறைய நாளிருக்கு.

புஷ்பா :- அது சரி கொப்பரைக்கேள். இன்னும் எத்தினை நாளிருக்கெண்டு

தீபா :- அப்பா இந்த அம்மா என்னவாம்... விசர்க்கதை கதைச் சுக்கொண்டிருக்கிறா.

சண்முகம்:- ஓம் பிள்ளை. உனக்கும் கல்யாணம் கட்டிப் பாக்க எங்களுக்கும் ஆசை தானை. இப்பென்ன அவசரம் எண்டு கேக்காதை. உனக்கு இப்ப இருபத்திரண்டு வயசாகுது. உன்ரை கொம்மாவை நான் கட்டேக்கை அவவுக்கு வயசு பதினெட்டு. இப்பவே கட்டுறது நல்ல தம்மா. வயசிருக்கெண்டு பின்னுக்குப் போட்டா பிறகு வயசு போடும். சீதனமும் கனக்கக் குடுக்க வேணும். அதோடை இது அமெரிக்க மாப்பிளை. உனக்குத் தானை வெளிநாடென்றால் நல்ல விருப்பமே. சரி வந்தால்..... (கதைத்துக் கொண்டிருக்கும் போதுமணி யடிக்கிறது) மணியடிக்கிது. சுப்புவாய்த் தானிருக்கும். (ஓடிப்போய் ரிசீவரைக் காதில் வைக்கிறார்.)

டெலி :- ........................

சண்முகம் :- ஓமோம். நான்தான் சுப்பு. என்ன பொருத்தமே?

டெலி :- ........................

சண்முகம் :- நான் நினைச்சன். எனக்கு அப்பவே தெரியுமப்பா. பொருத்தம் வருமெண்டு. எனக்குப் பொடியன்ரை படத்தைப் பாத்த உடனை நினைச்சிட்டன். இது தான் மாப்பிளையெண்டு. சும்மா ஹீரோ மாதிரி பால் போலை யிருக்கிறார்.

டெலி :- ........................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகம்:- உமக்கென்ன விசரே. அந்தாளைப் போய் பொது நிறம் எண்டுறீர். சுத்தப்பால் அப்பா. சரி சரி அவையள் என்ன மாதிரி. என்ன எதிர்பாப்பினை.

டெலி :- ........................

சண்முகம்:- அப்பிடியே நல்லதாய்ப் போச்சு. (திரும்பி) எடியப்பா பொடியனுக்குச் சீதனம் வாங்குறது விருப்பமில்லையாம். காசுக்கு விலைபோற ஆள் நானில்லை எண்டுறாராம்.. (மீண்டும் திரும்பி) ஓமோம் சொல்லும் சுப்பு. அமெரிக்க மாப்பிளைக்கேத்த தரத்தோடைதானை பெத்தவை பொம்பிளை பாப்பினை. என்ரை பிள்ளைக்கு எல் லாம் இருக்கு. ஓமோம்..

டெலி :- ........................

சண்முகம் :- நீர் அவையிட்டைச் சொல்லும், நான் சொல்லுறதை. சொன்னா நீர் நம்ப மாட்டீர். அந்தளவு படிப்புப் படிச் சிருக்கிறாள்.

டெலி :- ........................

சண்முகம் :- அது சரி. பள்ளிக்கூடப் படிப்புக் குறைவு தான். அதுக் காகத் தராதரம் குறைவு எண்டு சொல்லேலுமே. அமெரிக்க ஸ்ரைலெல்லாம் நல்லாய்த் தெரியும். உந்தத் தலைமயிரைச் சுருட்டுற நெளிக்கிற கோஸ் இருக்கெல்லோ....

டெலி :- ........................

சண்முகம் :- ஓமோம் கெயஸ்ரைலோ, பயஸ்ரைலோ என்னவோ.. அதுக்குப்போய் ஒரு அஞ்சாறு மாசம் படிச்சவள். துணியளுக்கு ஜன்னல் வைச்சு, கதவு வைச்சுத் தைக் கிறதுக்கும் படிச்சவள். முகத்துக்கெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாய்ப் பூசுவாள். ஓமோம், வந்து பாருமன் அவள் டை அறையை. எத்தினை மாக்கள், களிகள், கூழுகள், கட்டையள், தடியள் எல்லாம் கிடக்கெண்டு. இந்த நிகம் இருக்கெல்லே. அதுக்கு எப்பிடிப் பெயின்ற்அடிக் கிறது எண்டு கூட ஒரு மாசம் போய்ப் படிச்சவள். காலுக்குப் புறம்பாய், கையுக்குப் புறம்பாய், முகத்துக்குப் புறம்பாய் எண்டு ஒண்டொண்டுக்கும் ஸ்பெஷலா யெல்லே போய்ப் படிச்சவள். உடுப்புகளிலை கூட புதுப்புது டிசைன் கண்டு பிடிப்பாள் தெரியுமே.

டெலி :- ........................

சண்முகம் :- சீச்சீ அவள் தைச்சுக் குடுக்கிறேல்லை. ஒவ்வொரு ஷெற்றாய் ஒரு மூண்டு நாலு வாங்குவாள். ஒண்டிலை கீழானையும், மற்றதிலை மேலானையும், அடுத்த திலை நடுவானையும் எடுத்து ஒண்டாக்கிப் போடு வாள் பாரும். சும்மா சொல்லக் கூடாது என்ன வடிவு தெரியுமே. அண்டைக்கொரு நாள் உப்பிடித்தான் போட்டுக் கொண்டு வரேக்கை அடுத்த வீட்டு பொமே ரியன் குட்டியுமெல்லே பின்னாலை வந்திட்டுது எண் டாப் பாருமன்.

டெலி :- ........................

சண்முகம் :- சேட்டிவிக்கற்றோ? அது தான் பெரிசாய் அவளிட்டை இல்லை. அவள் செய்யிற டிசைனுக்கு விளங்கிக் கொள்ள இஞ்சத்தவைக்கு விளக்கம் காணாது பாரும். அது தான் சேட்டிவிக்கேற் ஒண்டும் குடுக்கேல்லை யாம். ஓமோம் வெளிநாட்டுச் சாப்பாடுகளும் செய்யி றதுக்குப் படிச்சவள். அவளின்ரை பவர் வெளிநாட்டுச் சனத்துக்கு விளங்குமப்பா. நீர் அவையை நல்ல நாள் பாத்து வரச்சொல்லும். ஓமோம் பிறகு கதையும் சரி சரி வைக்கிறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஷ்பா :- என்னப்பா கண்ட மாதிரி விளாசிறியள்

சண்முகம் :- நான் சொன்னது சரியாய்ப் போச்சு. சாதகம் நல்ல பொருத்தமாம். சீதனமும் வேண்டாமாம். நல்ல புளியங் கொம்பு மாதிரி இடமப்பா. நல்ல பணக்காரர். நல்ல உத்தியோகம். பொடியனும் ஹீரோ மாதிரி.

புஷ்பா :- ஹீரோ மாதிரியோ..... ஓமோம் இப்ப அப்பிடித்தான் இருக்கும். பிறகு தானை எல்லாம் தெரியும். என்ன வாச்சும் செய்யுங்க. எங்களுக்கிருக்கிறது அருமை யாய் ஒண்டு. இருக்கிறதெல்லாம் அவளுக்குத்தானை. அவள் சரியெண்டால் சரிதான். அவளின்ரை சந்தோசம் தான் தேவை.

சண்முகம் :- அதுக்குத் தானை நானும் ஓடுப்படுறன். தீபா......... ஆ..... போட்டோ பாக்கிறீயோ...... உந்தா உதிலை நீலச்சட்டையோடை இருக்கிற பொடியன் தான்.....

தீபா :- நீலமோ..... இரண்டு பேர் நிக்கினை.......

சண்முகம் :- இரண்டு பேரோ..... எங்கை பாப்பம்......

தீபா :- இந்தா.... கடும் நீலம்...... வெளிர் நீலம்......

சண்முகம் :- அது நீலமோ வெள்ளை மாதிரியெல்லோ கிடக்கு. அந்தக் கறுப்பு நீலம் தான். நல்ல வடிவான வெள் ளைப் பொடியன். அவன் தான் ஆள்.

தீபா :- (தனக்குள்) ஷா அஜித் மாதிரித்தான் இருக்கிறார்.

சண்முகம் :– எனக்குத் தெரியும் தானை. பாத்ததோடை உனக்குப் பிடிக்குமெண்டு.. சரி சரி வா சாப்பிடுவம்.

(மேடையில் திரை மூடுகிறது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 4

(மேடையில் திரை விலகுகிறது.)

**இடம்:- வீட்டு விறாந்தை**

(பாத்திரங்கள் - சண்முகம், புஷ்பா, தீபா,)

**சண்முகம்** :- (வெளியிலிருந்து வந்து கொண்டே) தீபா.... தீபா.... (என்றவாறு திருப்பியவர் சட்டெனத் திடுக்கிட்டு அதிர்ந்து) ஐயையோ.......

**தீபா** :- என்ன? என்னப்பா? ஏன் பயப்பிட்டனீங்கள்?

**சண்முகம்** :- அட...... நீதானா...... வெயிலுக்காலை வந்தவுடனை வீடெல்லாம் இருட்டு. அதுக்குள்ள உந்தப் பூச்சு களோடை உன்னைப் பாத்தவுடனை நான் ஏதோ எண்டு நினைச்சுப் பயந்து போனன். அது சரி. வாற கிழமை மாப்பிளை உன்னைப் பாக்க வாறாராம். இப்பவே றெடியாக வேணும். வெயிலுக்கை திரியாதை. நல்ல ஸ்ரைலாய் நடக்க, கதைக்க வேணும். அமெரிக்கப் பொடியன் அங்கத்தையான் பெட்டை யளைப் போலை இருக்கிறதைத் தான் விரும்புவான். பொடியன் வந்தவுடனை நெளிஞ்சு கொண்டிருக் காமல்...

**தீபா** :- எனக்குத் தெரியுமப்பா... உடனை ஓடிப்போய் கட்டிப் பிடிச்சுக் கொஞ்சி, கையிலை பிடிச்சு இழுத்துக் கொண்டு வந்து சோபாவிலை இருத்தி அவரோடை ஒட்டிக் கொண்டிருந்து கதைக்க வேணும். பிறகு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஷ்பா :- சீச்சீ...... என்ன வெக்கம் கெட்ட கதையடி கதைக் கிறாய். நானெல்லாம் கல்யாணத்திலை பால்பழம் சாப்பிடேக்கை தான் கொப்பற்றை முகத்தையே பாத்தனான்.

தீபா :- அது பழைசு. இது அமெரிக்க பஷன்.

சண்முகம் :- அதுக்காக ஆகவும் ஓவராய்ப் போகக் கூடாது பிள்ளை. நோமலாய் அவரோடை கை குலுக்கிப் போட்டுக் கதை. உன்ரை திறமையள் எல்லாத்தையும் சாடை மாடையாய்ச் சொல்லு. கதைக்கேக்கை உனக்குத் தெரிஞ்ச இங்கிலீசு சொல்லையெல்லாம் போட்டுக் கதை. நல்ல பஷன் உடுப்புப் போடவேணும். புதிசாய் எண்டாலும் வாங்கு. உன்ரை ஸ்ரைலைப் பாத்துப் பொடியன் அசந்து போய் நிக்கணும். சரியே

புஷ்பா :- (தனக்குள், அசந்து போய் நிக்கப்போறனோ, அரண்டு போய் ஓடப் போறானோ கடவுளுக்குத்தான் வெளிச்சம்) ஆ....... பிள்ளை......... அண்டைக்குப் பக்கத்து வீட்டுக் கஸ்தூரியையும் வரச்சொல்லு ஒத்தாசையாயிருக்கும்.

தீபா :- அவளை என்னத்துக்கு. அவள் பட்டிக்காடு. ஸ்ரைலாய் உடுப்புப் போடவும் தெரியாது. மேக்கப் போடவும் தெரியாது. றோசியைக் கூப்பிடுவம்.

சண்முகம் :- வேண்டாம். றோசி பாக்கிறதுக்குக் கொஞ்சம் ஸ்ரைலாயிருப்பாள். அவள் வேண்டாம். கஸ்தூரியையே கூப்பிடு.

தீபா :- சரியப்பா.. சீச்சீ. சரிடாடீ. (தன் பூச்சுக்களைத் தொடர உள்ளே போகிறாள்)

(மேடையில் திரை மூடுகிறது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 05

(மேடையில் திரை விலகுகிறது.)

**இடம் :- வீடு** (அமர்க்களப்படுகிறது.)
(பாத்திரங்கள் – சண்முகம், புஷ்பா, தீபா, இருவர்)

**புஷ்பா :-** பிள்ளை.. வெளிக்கிட்டாச்சே. எத்தினை மணிக்காம் வருவினை.. எத்தினை பேராம் வருகினை..

**சண்முகம் :-** சரியாய் நாலரைக்கு வருவினமாம். மாப்பிளையயும் அவற்றை ப்ரெண்டும் மட்டும் தானாம். பொடியனுக்குக் கூட்டம் பிடிக்காதாம். சரி தீபா. வெளிநாட்டு ஸ்ரைலிலை ஒரு கேக் ஒண்டு செய்தனியெல்லே.. வெட்டியாச்சோ...

**தீபா :-** (உள்ளேயிருந்து) ஓமப்பா மறந்து போச்சு. நேற்றுச் செய்ததுதானை. காலமை வெட்டலாமெண்டு பாத்தன். சும்மா வெட்டேலாதாம். கொஞ்சம் இறுகிப்போச்சு. ஒரு வாள்பிளேற் எடுத்து ஒருக்கா அரிஞ்சு விடுங்கோப்பா.......

**சண்முகம் :-** கேக்கை வாள்பிளேற்றாலை அரியிற முதல் மனிசப் பிறவி நானாய்த்தான் இருக்கும். ம்.. என்ன செய்யிறது? வறுத்த கேக் எண்டு சொல்லுவம்.... கஸ்தூரி. தீபாவை நல்லாய் வெளிக்கிடச் சொல்லு. நீயும் கொஞ்சம் நல்ல உடுப்பாய்ப் போடு. தீபாவுக்குப் பக்கத்திலை இருக்க வேணும்.
(வெளியில் கேற் சத்தம் கேட்கிறது. இருவர் வருகின்றனர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சண்முகம்** :- (எட்டிப் பார்த்துவிட்டு) புஷ்பா.. தீபா.. வருகினை... வருகினை. வாங்கோ வாங்கோ.. ஹி.. ஹி... இருங்கோ.....

(அஜித் போல் அட்டகாசமாய் ஒருவனும், அடக்க மாய் ஒருவனும் வந்தமர்கிறார்கள். தீபா கதவிடுக் கால் பார்க்கிறாள். வெளியே வந்து இருவருடனும் கை குலுக்கி விட்டு மாப்பிளைக்கருகில் அமர்கிறாள். அடுத்தவனுடன் ஒப்புக்காகச் சிரித்து விட்டு இவ னுடன் சிரித்துச் சிரித்துப் பேசுகிறாள். சண்முகமும் அவனுடனேயே பேசுகிறார். வந்தவர்கள் இருவரும் ஒன்றும் புரியாமல் ஒருவரையொருவர் பார்த்துக்கொள் கிறனர். நடக்கட்டும் நடக்கட்டும் என்பது போல் கண் களால் சைகை செய்கிறான் அடுத்த இளைஞன். கஸ்தூரி அடக்கமாக ஒரு புறத்தில் அமர்ந்திருக் கிறாள். அடக்கமான இளைஞனின் பார்வை அடிக்கடி கஸ்தூரியை வட்டமடிக்கிறது. சண்முகமும் இதைக் கவனிக்கத் தவறவில்லை. தனக்குள் சிரித்துக் கொள் கிறார். "பட்டிக்காட்டுக்குப் பட்டிக்காடு பொருத்தம் தானை" என்று தனக்குள் சொல்லிக் கொள்கிறார்.)

**இருவரும்** :- சரி நாங்கள் போட்டு வாறம்.

**அடக்கமான இளைஞன்** :- சுப்பு அங்கிள் பிறகு உங்களோடை கதைப்பார்.

**சண்முகம்** :- சரி சரி வாங்கோ (தனக்குள்) ஏன் மாப்பிளை சொல்லாமல் மற்றவர் சொல்லுறார்?

(தீபாவும் மாப்பிளையும் கைகாட்டி விடை பெறுகின் றனர். அடுத்த இளைஞனின் ஆழமான பார்வை கஸ் தூரியைத் தாக்குகிறது. அது தாளாமல் தலை குனி கிறாள் கஸ்தூரி)

(மேடையில் திரை மூடுகிறது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 6

(மேடையில் திரை விலகுகிறது.)

**இடம்:- சமையலறை**

(பாத்திரங்கள் – சண்முகம், புஷ்பா, தீபா)

**சண்முகம்** :- (பதட்டமாய் வருகிறார்.) புஷ்பா.. இஞ்சை பாத்தியே புஷ்பா நடந்த அநியாயத்தை..இப்பிடியும் எங்கேனும் நடக்குமே?

புஷ்பா :- என்ன. என்ன நடந்தது. ஏன் கத்துறியள்? புறோக்கர் என்னவாம்?

**சண்முகம்** :- மாப்பிளைக்குத் தீபாவைப் பிடிக்கேல்லையாம். ஒரு பேச்சுக் கூடத் தன்னோடை கதைக்கேலை எண்டு சொன்னவராம்.

புஷ்பா :- இதென்ன கூத்து. முழுக்க அவரோடை தானை கதைச்சுக் கொண்டிருந்தவள்..

**சண்முகம்** :- அங்கைதானை விஷயம் பிழைச்சுப் போச்சு. உண்மை யிலை மாப்பிளை யார் தெரியுமே? அந்த மற்றப் பொடி யனப்பா. நான் படத்திலை மாறிப் பாத்து எல்லாத் தையும் குழப்பிப் போட்டன்.

புஷ்பா :- அடக் கடவுளே.. அதுக்காக வேண்டாம் எண்டுறதோ?

**சண்முகம்** :- இல்லையப்பா. அவன் அமெரிக்காக்காரன் எண்ட வுடனை நான் ஏதோ நினைச்சுத் தீபாவையும் ஏத்தி விட்டுட்டன். அவனுக்குச் சிம்பிளாயிருந்தாத் தான் பிடிக்குமாம். ஸ்ரைலை விரும்பியிருந்தா அமெரிக்கா விலையே கட்டியிருப்பானாம். சுத்தமான குடும்பப் பாங்கான பிள்ளையைத் தானாம் தேடி வந்தவன். ஆனாலும் அது எங்கடை குடும்பத்திலை கிடைக் காட்டியும் எங்கடை வீட்டிலை கிடைச்சிட்டுது எண்டு சொன்னவனாம். விளங்குதோ....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஷ்பா :- நீங்க என்ன சொல்லுறியள்........ அப்பிடியெண்டா....... கஸ்தூரியை..

சண்முகம் :- அதே தான்...... இப்ப இதை என்னண்டு தீபாவுக்குச் சொல்லுறது? அவள் எப்பிடித் தாங்கப் போறாள்?..... (சிரிப்புச் சத்தம் கேட்க அதிர்ந்து போய்த் திரும்பு கிறார்கள்) தீபா...

தீபா :- இதுக்கேனப்பா கவலைப்படுகிறீர்கள்? எல்லாம் கேட்டுது......... இவர் தான் மாப்பிளையெண்டு சொன் னீங்கள்........... கதைக்கச் சொன்னீங்கள்.. கதைச்சன் சிரிச்சன்.. இப்ப அந்த ஆள் மாப்பிளையே இல்லை யெண்டுறீங்கள். சரி அந்தாள் தான் எனக்குப் பொருத்த மெண்டா பேசிக் கட்டிவையுங்க.. இல்லாட்டி வேறை யாள். நானென்ன லவ்வே பண்ணினனான். இவர்தான் வேணுமெண்டு அழ? இது சிம்பிள் மற்றர்.. ஆனால் ஒண்டு மட்டும் விளங்குது. எப்பவும் நாங்கள் நாங்க ளாய்த் தான் இருக்க வேணும். அவை அப்பிடி இவை இப்பிடி எண்டு அவைக்கேத்த மாதிரி நாங்களும் வேஷம் போட வெளிக்கிட்டா இருக்கிறதும் கெட்டு ஒண்டுமில்லாமல் இருக்க வேண்டியது தான்.

"கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி.. தானும் அதுவாக..."(என்று ராகமிழுத்தவாறு தீபா உள்ளே போகிறாள்)
(ஒரு விதத்தில் வேதனையாக இருந்தாலும் ஒரு விதத்தில் பெருமையாக ஒருவரையொருவர் பார்த்துக்கொள்கின்றனர் தம்பதியர்)

(மேடையில் திரை மூடுகிறது.)

(யாவும் கற்பனை)

(வட மாகாண ஆக்க இலக்கியப் படைப்பாற்றல் போட்டி 2008ல் மூன்றாமிடம் பெற்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. நாளும் நடப்பும்

## காட்சி 1

(திரை விலகுகிறது)

**இடம் :- வீட்டு விறாந்தை**

(பாத்திரங்கள் – அருணாசலம், அவரது மனைவி சிவனேஸ்வரி, அவர்களது மூன்றாவது மகள் சாவித்திரி)

**(விறாந்தை மூலையில் சிவனேஸ்வரி சேலையைச் சரிசெய்தவாறு கண்ணாடியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அருணாசலம் தலையில் கை வைத்தவாறு சாய்ந்தபடி மனைவியையே உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கிறார். வாய் மட்டும் தெரிந்தும் தெரியாதவாறும் ஏதோ முணுமுணுத்துக்கொண்டிருக்கிறது. எதிர்ப்பக்கமாகக் கதிரையில் அமர்ந்து புத்தகத்தை மடியில் வைத்துப் படிப்பதாகப் பாவனை செய்து கொண்டிருந்த சாவித்திரி, தாயையும் தந்தையையும் மேல்கண்ணால் மாறிமாறிப் பார்ப்பதோடு இடைக்கிடையே புத்தகத்தில் உள்ளதையும் எந்தத் தொடர்பும் இல்லாமல் உரத்து வாசித்துக் கொண்டும் இருக்கிறாள்.)**

**அருணாசலம்:-** (பொறுமையிழந்து) என்னப்பா செய்யிறீர்? ஒண்டரை மணித்தியாலமாய்? சாத்திரக்காரன் கடையைப் பூட்டிப்போட்டு போகப்போறான். நீர் தானே சொன்னனீர் மூண்டுக்கும் மூண்டரைக்குமிடையில் நல்லநேரம், அதுக்குள்ள போக வேணுமெண்டு. நான் சொன்னனான் தானே ஒரு மணிக்கே வெளிக்கிடுமெண்டு. (மெதுவாக) உதிலை இருக்கிற சாத்திரியாரிட்டைப்போக மூண்டு சீலை மாத்த வேணுமே. சில வேளை லக்கான கலர் வேணுமெண்டு யோசிச்சு யோசிச்சுக்கட்டுறாளோ தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனேஸ்வரி:-பொறுங்கோவன் வாறன். சாப்பிட்ட உடனை அவசரத்துக்கு வெளிக்கிடேலுமே சட்டை யெல் லாம் இறுக்குது, மூச்சு முட்டுது. வேத்துக் கொட்டுது. பவுடரும் கிறீமும் வேர்வையும் சேர்ந்து கூப்பன்மாக்களி மாதிரிமுகத் தைப்பார்க்க ஒரே அரியண்டமாய்க் கிடக்கு.

அருணா:- இல்லாட்டி ஐஸ்வர்யா மாதிரித்தானை. அந்தக் காலத் திலை மஞ்சளும் பயறும் பூசின முகத்துக்கு கிறீம் பூசினா உப்பிடித்தானே இருக்கும்.

சிவா:- முணுமுணுக்கிறதை விட்டுட்டு உந்தப் பஞ்சாங்கத்தை ஒருக்காப் பாருங்கோவன். மூண்டரைக்குப் பிறகு எப்ப நல்ல நேரமெண்டு.

அருணா:- அடியே. நாங்கள் போறதே கலியாணத்துக்கு நல்ல நேரம் பாக்கத்தானை. அதுக்கும் பஞ்சாங்கம் பாத்துக் கொண்டிருக்கிறாய். நாளும்........ கோளும்........ என்ன செய்யும்...

சாவித்திரி:- வேயுறு தோழி பங்கன்......... (புத்தகத்தைப் பார்த்துப் பாடுகிறாள்)

சிவா:- விசர்க்கதை கதையாதேங்கோ. எங்கடை ஆக்கள் சும்மா சொல்லேல்லை. நல்ல நேரம் பார்த்துச் செய்யவேணு மெண்டதிலை விசயம் இருக்குது தெரியுமே. முந்தி உப்பிடித்தான்...

அருணா:- இந்தா...இந்தா...பஞ்சாங்கத்திலை... (என்றவாறு பாய்ந்து போய்ப் பஞ்சாங்கத்தை எடுத்து விரிக்கிறார்.) (மெது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக) நல்ல காலமடாப்பா. உப்பிடித்தான் உவள் என் னிலை ஏதாலும் கோபம் எண்டால் தன்ரை இதிகாசக் கதையை எடுத்து விடுவாள். அதுக்குள்ள என்ர அப்பர் அம்மாவையும் எடுத்துக் கதைக்கத் தொடங்க எனக்கும் கோபம் வந்து வாயைத் திறக்க அவளுக்குப் பெருங் கோபம் வந்து கையில் பட்டதை எடுத்து அவள் எறிய – நான் ஒளிய, நான் ஒளிய – அவள் எறிய, ஒரே கலவரமாப் போச்சு. எனக்குத்தான் நஷ்டம்........ ஏனென்று கேக்கிறியளே, அவள் எறியிறதெல்லாம் நான் மட்டும் பாவிக்கிற சாமான்தான். (சத்தமாக) எடி பிள்ளை பஞ்சாங்கத்தை ஒருக்காப் பாரடி என்ரை கண்ணாடி யையும் காணேல்ல.

**சாவித்திரி:-** ஒம்பது மணிக்கும் ஏதோ ஒரு மணிக்கும்.....

**அருணா:-** ஏதோ ஒரு பாட்டு எண்டுதான் கேள்விப்பட்டிருக்கிறன். ஏதோ ஒருமணி எண்டு இப்பதான் கேள்விப்படுறன். எங்கை பார்ப்பம். (எட்டிப்பார்க்கிறார்) அட தலைகீழாய்ப் பிறந்தவளே, ஏன்ரி தலைகீழாய்ப் பாக்கிறாய். இஞ்சை கொண்டா........ (பறித்து தானே உற்றுப் பார்க்கிறார்.) அதப்பா அஞ்சரைக்கும் ஆறுக்கும் பரவாயில்லையாம்.

**சிவனேஸ்:-** அப்ப சரி ஆறுதலா போகலாம். முகமெல்லாம் ஒரு மாதிரிக் கிடக்கு. முகத்தை ஒருக்கால்க் கழுவிக் கொண்டு வாறன்.

**அருணா:-** என்னெண்டாலும் செய். நான் கொஞ்சம் இதிலை சரிவம். (கதிரையில் சாய்ந்து அமர்கிறார்.)

**சாவித்திரி:-** இறவாத இன்ப அன்பு வேண்டி... (உரத்துப் படிக்கிறாள்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணா:- ஏன்ரி உந்தக்கத்து கத்துறாய். பொம்புளைப்பிள்ளை மாதிரி மெதுவாய்ப் படியனப்பா. கொஞ்சம் கண்ணை மூட......

சாவித்திரி :- ஏன் ஆம்பிளைப் பிள்ளைக்குத் தான் வாயிருக்கோ. இரவில அம்மா இரண்டு சிங்கம் உறுமுற மாதிரி கொறட்ட விடுறா. அதுக்கே அந்தமாதிரி நித்திரை கொள்ளுறியள். நான் படிக்கிறதுதான் கஸ்ரமாய் இருக்கோ.

அருணா:- அது இப்ப இருபத்திநாலு வருசமாய்ப் பழகிப்போச்சு. என்ரை மனிசீன்ரை தாலாட்டுக் கொறட்டை கேட்காம நித்திரையே வராதே.

சிவனேஸ்:- சாவி... சாவி... துவாயை ஒருக்காக் கொண்டா.....

அருணா:- அருமையாய்ச் சாவித்திரி எண்ட புண்ணியவதியின்ர பெயரை வச்சுப்போட்டு... உவள் சாவி சாவி...... எண்ட, என்னை யாரோ பாவி பாவி எண்டு திட்டுற மாதிரிக் கிடக்கு. (கண்ணை மூடுகிறார்... சிவனேஸ்வரி வருகிறார்.)

சிவனேஸ்:- ஒரு கதிரையும் கொஞ்ச நேரமும் இருந்தால்ப் போதுமே... உடனை கைலாசத்திற்குப் போடும். கும்பகர்ணனுக்குப் பிறந்த மனுசன்.

அருணா:- (சத்தம் கேட்டுத் திடுக்கிட்டெழுந்து) நேரம் சரியே. இந்தா வாறன் வாறன். (துண்டைத் தோளில் போட்டுக் கொண்டு புறப்படுகிறார்)

(திரைமூடுகிறது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 2

(திரை விலகுகிறது)

**இடம் :- சாத்திரியாரின் அறை**

(பாத்திரங்கள்:- அருணாசலம், சிவனேஸ்வரி, சாத்திரியார்)
(சாத்திரியார், தான் புதிதாய் வாங்கிய மூக்குக் கண்ணாடியைத் தேடிக் கொண்டிருக்கிறார். அருணாசலம் தம்பதியர் உள்ளே நுழைகிறார்கள்.)

அருணா:- எங்கை ஐயா..... வீட்டை வெளிக்கிட்டியளே....

சாத்திரியார்:-வாங்கோ இருங்கோ. வீட்டை போகக் கொஞ்சம் சுணங்கும். புதுக்கண்ணாடியொண்டு வாங்கினனான். இங்கைதான் எங்கையோ வைச்சனான். மற்றது உடைஞ்சு போச்சு. கண்ணாடியில்லாமல் என்னால ஒண்டும் செய்யேலாது பாருங்கோ........ ஆ இந்தா கிடக்கு... (கையிலெடுத்துக் கொண்டு அமர்கிறார்) அப்ப சொல்லுங்கோ...

அருணா:- எங்கட மகளுக்குக் கலியாணம் ஒண்டு சரிவந்திருக்கு. அதுதான் நாள்ப் பார்க்க வந்தனாங்கள். நல்ல நேரம் ஒண்டு குறிச்சுக் குடுத்தியெளெண்டால்.......

சாத்திரியார்:-அதுக்கென்ன...... பிள்ளையின்ரை சாதகத்தை முதலே தந்திருந்தியளெண்டா லேசாய் இருந்திருக்கும். கிரகங்கள் எல்லாம் என்னமாதிரியெண்டு பார்க்க வேணுமெல்லே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவனேஸ்:-** அதைப்பற்றிக் கவலைப்படாதையுங்கோ. எங்கையெங்கை என்ன நிக்குது எண்டு எனக்கு நல்லாதெரியும். போன கிழமைதான் வீட்டை ஒரு சாத்திரியார் வந்தவர். ஏழிலை செவ்வாய் நிக்குதாம், ஏழுக்குக் கொஞ்சம் தள்ளி வியாழன் நிக்குதாம். அட்டமத்துக்குக்கிட்ட சனி நிக்குதாம்.....

**சாத்திரி:-** (மனதுக்குள்) அப்ப எல்லாக் கிரகமும் உங்கைதான் நிக்குதுகள் போலை.... (சத்தமாக) சரி சரி பாப்பம்.... பார்க்கத் தெரியும் தானே. (சாதகத்தைக் கையிலெடுத்து, கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பார்த்தவர் அதிர்ந்தார்) இதென்னடா இது பூதக்கண்ணாடிக்குப் போடுற லென்சை இதுக்குப் போட்டிருக்கிறாங்கள் போலை. ஒவ்வொரு கட்டமும் காணி மாதிரித் தெரியுது.

**சிவனேஸ்:-** ஹி ஹி... ஹி... அது நான்தான் சாதகம் எழுதேக்கை பிழைவிடாமப் பாக்க வசதியாய் இருக்குமெண்டு பெரி சாய்க் கீறச்சொன்னான்.

**சாத்திரி:-** (கடதாசியைப் பார்க்கிறார், கையை மடிக்கிறார், முகட்டைப் பார்க்கிறார்) ம்... வாற மாதம் 24ந் திகதி நல்ல நாள் ஒண்டிருக்கு....

**சிவனேஸ்:-** 24ந் திகதியோ...... சே வேண்டாம். அண்டு செவ்வா யெல்லோ. பொல்லாத நாள். வேறை பாருங்கோ

**சாத்திரி:-** ம்.... அடுத்த மூண்டாந் திகதியும் பரவாயில்லை.

**சிவனேஸ்:-** என்னடப்பா இது... வியாழனெல்லோ வருது. கள்ள வியாழன் கழுத்தறுக்கும் எண்டு சொல்லுவாங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாத்திரி:-** அடுத்த ஒரு நாள். ஞாயிறு பரவாயில்லை 13ந் திகதி...

**சிவனேஸ்:-** என்னது பதின்மூண்டாந் திகதியோ.... என்ன சாத்திரியார் நீங்கள்... நல்ல நாள் பார்க்கச்சொன்னால் கண்ட கண்ட நாளெல்லாம் பார்த்துச் சொல்லுறியள். பதின்மூண்டாந் திகதி ஆரேன் நல்லவிசயம் செய்யிறவையே. வெளிநாட்டிலை பதின்மூண்டாம் திகதி யெண்டாலே பயப்பிடுவாங்கள்.

**சாத்திரி:-** சரியம்மா அதுக்கேன் கோப்படுறியள்..... பிறகு...... பதினாறாந் திகதி நல்லாயிருக்கு. ஏழாம் நம்பர் சோகம் எண்டு சொல்லாதேங்கோ. லக்கி செவன் எண்டும் சொல்லுறவை. அது எடுக்கிறவையைப் பொறுத்தது. பிள்ளை இராண்டாம் நம்பர். ஏழு நல்லது. மற்றது புதன் கிழமை நல்லநாள் தானை. பொன் கிடைச்சாலும் புதன் கிடைக்காது எண்டுறவை.

**சிவனேஸ்:-** (யோசிக்கிறார்) அப்ப சரி சாத்திரியார். பதினாறிலை நல்லநேரம் ஒண்டு பாருங்கோ.

**சாத்திரி:-** காலமை ஏழுமணியிலையிருந்து....... (தொடங்குகிறார்)

**சிவனேஸ்:-** என்னது ஏழுமணியோ... (பதறியபடியே அருணாசலத்தைப் பார்க்கிறார்)

**அருணா:-** (அசடு வழிந்தபடியே)... இல்லைப்பாருங்கோ. எங்கடை பிள்ளை கல்யாணம் கட்டிக் கனகாலத்துக்குப் பிறகு பிறந்ததாலை சரியான செல்லம். அவள் காலமேலை எழும்ப எட்டு மணியாய் போகும். கட்டிலுக்குப் பக்கத்திலை குண்டு போட்டாலும் எட்டு மணிக்கு முதல் எழும்பமாட்டாள்... ஒரு பத்து மணிக்குப் பிறகு நல்ல நேரம் பாருங்கோ சாத்திரியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்திரி:- (இருவரையும் ஒருமாதிரிப் பாத்துக் கொண்டே மனதுக் குள்) நாசமாய்ப் போச்சு. கட்டுறவன் பாடு திண்டாட்டம் தான். (சத்தமாய்) உங்கடை மாப்பிளைக்குச் சமைக்க தெரியுமே.....

சிவனேஸ்:-இதென்ன இருந்தாப்போலை இப்படிக் கேக்கிறியள்.. நாங்கள் மாப்பிளை பார்க்க அவரின்ர வீட்டைபோகேக்கை அவர் சுட்ட பலகாரம் தான் தந்தவை. நல்ல ருசியா யிருந்தது.

சாத்திரி:- அடி சக்கை.......... பாப்பம்........... அப்படியெண்டா பத் தரைக்கும் பன்ரண்டு மணிக்கும் ஒரு நேரம் இருக்குது. அதைக் குறிச்சுத்தாறன் என்ன....

சிவனேஸ்:- என்னவோ ஐயா. நல்ல நேரத்திலை செய்யிற காரியம் தான் நிலைக்கும் என்ன........ வாழ்க்கேலை ஒருக்கா நடக்குற விஷயம். சரியான நேரம் பாக்கவெல்லே வேணும்.

சாத்திரி:- சரியாய்ச் சொன்னீங்களம்மா..... பத்தரை நல்லநேரம் தான். (எழுதிக்கொடுக்கிறார்)

அருணா:- நல்லது ஐயா. இந்தாங்கோ (காசு கொடுக்கிறார்) அப்ப நாங்கள் போட்டு வாறம்.

சாத்திரி:- சந்தோசம் போட்டுவாங்கோ (போகிறார்கள்)

(திரை மூடுகிறது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 8

(திரை விலகுகிறது)

**இடம் :- ஒரு சிறு விறாந்தை**

(பாத்திரங்கள் :- அருணாசலம், சிவனேஸ்வரி மற்றும் சிலர்)
(விறாந்தையோடு ஒட்டிய அறையின் கதவு பூட்டப்பட்டுள்ளது. அதை இடைக்கிடையே பார்த்துப் பார்த்து அங்குமிங்கும் நடந்தவாறு தனக்குள் கதைத்துக் கொண்டிருக்கிறார் அருணாசலம்)

**அருணா:-** நேரம் பத்துமணியாகுது உவளை இன்னும் வெளிக்கிடுத்தி முடியேலையே. பத்தேகாலுக் கெண்டாலும் மண்டபத் துக்குப் போனாத்தானை....

(அந்த நேரம் இரண்டு மூன்று ஆண்கள் கமரா, வீடியோ, சாக்குகளோட வந்து அறைக்கதவை தட்டுகிறார்கள். கதவு திறக்க உள்ளே போகிறார்கள். உள்ளே இருந்து இரண்டு பெண்கள் வெளியே வருகிறார்கள்)

**அருணா:-** என்ன பிள்ளை சரியே பூசுறதெல்லாம் பூசியாச்சே. பத்தரைக்கெல்லே நேரம்.

**வந்தபெண்:-**பொறுங்க மாமா. இப்பதான் வீடியோக்காரன் உள்ள போனவன்..... படமும் எடுக்க வேணுமெல்லே (போகிறார்கள்) (அருணாசலம் தலையில் கை வைத்தவாறு கதிரையில் அமர்ந்து கைக்கடிகாரத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறார். நேரம் பத்தரை... பதினொன்று ஆகிறது. பொறுமையிழந்து எழும்புகிறார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருணா:-** எடியப்பா..... நேரம் பதினொண்டாச்சு. என்னப்பா செய்யிறியள். இவ்வளவு கஸ்ரப்பட்டு நாள் தேடி நல்லநேரம் குறிச்சுப்போட்டு கடைசியிலை ராகு காலத்திலையே தாலி கட்டப்போறியள்? (எந்தப் பதிலுமில்லை. கதவைத்தட்டுகிறார்.) இஞ்சாரும் சிவா... சிவா... என்னப்பா செய்யிறீர். நல்ல நேரம் நல்ல நேரம் எண்டு விழுந்து விழுந்து பாத்துப்போட்டு.. நேரமெல்லே போகுது. 12.00 மணிக்குப் பிறகு கூடாதப்பா.

(சடாரெனக் கதவு திறக்கப்படத் தடுமாறிச் சமாளிக்கிறார் அருணாசலம்)

**சிவனேஸ்:-** குடிமுழுகிப்போன மாதிரி என்னத்துக்குக் கத்துறியள். வீடியோவெல்லே பிடிக்கிறாங்கள்.

**அருணா:-** எடியப்பா நீதானை விழுந்து விழுந்து நல்லநேரம் பாத்தனி. நேரமென்னண்டு தெரியுமே.

**சிவனேஸ்:-** எல்லாம் தெரியும். பேசாம இருங்கோ. கலியாணம் எண்டா சும்மாவே. இவ்வளவு காசு குடுத்து வீடியோ பிடிக்கிறம். எத்தினை போசிலை படம் பிடிக்க வேணும் தெரியுமே. இருந்து நிமிர்ந்து வளைஞ்சு குனிஞ்சு..... நேரம் போகுதெண்டு சும்மா எடுத்தா பாக்கிறவங்கள் எங்களைப் பத்தி என்ன நினைப்பாங்கள். வெளிநாட்டிலை இருக்கிற எத்தினை பேருக்கு வீடியோக்கொப்பி குடுத்து விடவேணும். நல்ல மாதிரி எடுக்காட்டி எங்களை மதிப்பாங்களே. உங்களுக்கு ஒரு கோதாரியும் விளங்காது. உங்கடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தலைக் கேட்டு வெருண்டு வீடியோக்காரங்கள் பிள்ளையை வடிவில்லாமல் எடுக்கப் போறாங்கள். உதிலை வாயை மூடிக்கொண்டு சும்மா இருங்கோ. எனக்குத் தெரியும் எதை எப்ப செய்யிறதெண்டு. (கோபமாக உள்ளே போகிறார்.)

**அருணா:-** இது தாண்டா காலம்....... (என்றவாறு முகட்டைப் பார்த்துக் கொண்டு அசந்து போய் நிற்கிறார் அருணாசலம்)

(திரை மூடுகிறது.)

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. எதுவரை...?

**(சூழல்)** பொழுது இப்போது தான் புலரத் தொடங்குகிறது. தலைவிரி கோலம் கொண்ட கறுப்புப் பேய்கள் பல கூட்டமாக நிற்பது போல நின்ற மரங்களின் இடையில், கதிரவன் தனது சிவப்பும் மஞ்சளும் சேர்ந்த ஒளிக்கற்றைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக உள்நுழை கின்றான். கற்றைகளின் ஒளி கண்களைக் கூச வைக்கிறது. மரங்களின் அடிப்பாக இடைவெளியில் தெரிகிறது கருங்கடல். கடலின் மேற்பரப்பில் வைரங்கள் மிதப்பது போல் சூரிய ஒளி மிதக்கிறது. கரிய பாய்மரக் கப்பல்களில் கரிய உருவங்கள் போகும் சத்தம் கேட்கிறது.

**(காட்சி சற்றே நகர்கிறது.)** முகில்கள் நிறைந்த விடியலில் சாம்பல் நிற வயல்கள் வளைந்தாட வெண் புள்ளியாய் கொக்குகள் பறப்பதும், இருப்பதும் தூரத்தில் தெரிகிறது. குருவிகள், குயில்கள், காகங்கள் போன்ற பறவைகளின் இன்னிசை மனதுக்கு உற்சாகத்தைத்தரு கின்றது. அதே உற்சாகத்தோடு விவசாயிகள் காளைகளோடும் தனித்தும் சலசலத்தவாறு சென்று கொண்டிருக்கின்றனர்.

(காட்சி நகர, தூரப்பார்வையில் கிராமம் தென்படுகிறது.)

கிராமத்தில் உற்சாகமான ஆரவாரம் கிளம்பியிருந்தது. அவரவர் தம் தேவைகளுக்காக ஆயத்தம் செய்வதும், ஓடுவதுமாக இருக்கி றார்கள். பள்ளிச் சீருடையில் வெண்புறாக்கள் பல வருவதும் போவது மாயிருக்கின்றன.

தூரப்பார்வை சிறிது சிறிதாக மையமிட்டு ஒரு தெருவில் பாய்ந்து தெருவின் ஆரம்பத்தில் இருந்த பெயர்ப்பலகையில் குத்திடுகிறது. அதில் “மாடி மனைத் தெரு” என்று அந்த வீதியின் பெயர். பெயருக் கேற்ற அந்த வீதியின் இருமருங்கும் அழகிய சிறிய பெரிய மாடி வீடுகள். அதில் ஒரு அழகிய பெரிய மாடி மனையின் வாசலில் காட்சி மையம் கொள்கிறது. அந்த மாடியின் வாசலில் இரு பக்கமும் சிறிதும் பெரிதுமாக வாகனங்கள் வரிசையாக நிற்கின்றன. பலவிதங் களில், பலதரங்களில் மனிதர்கள் உள்ளே போய்க்கொண்டிருக் கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(காட்சியும் வாசல் வழியே உள்ளே நுழைகிறது.)

அற்புதமான வீடு. பல கோடிகளைக் கொட்டிச் செய்யப்பட்ட அலங்காரங்கள். சோபாக்களிலும், பாயிலும், தரையிலுமாக கூட்டம் நிறைந்திருக்கிறது. எங்கே சத்தம் கேட்டு "அம்மா" கோபம் கொண்டு விடுவாரோ என்ற பயத்தில் கூட்டம் இயன்றவரை கைகளையும், கண்களையும் உபயோகித்துப் பேசிக்கொண்டிருக்கிறது. சிலரின் கைகளில் பூமாலையும், சிலரின் கைகளில் பூங்கொத்தும் அமர்ந் திருக்கிறது. அநேகமாக எல்லோரும் அம்மாவைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார்கள். சோபாவில் இருந்த சிலரோ தாம் அதிகாலை யிலேயே எழுந்து வந்து இந்த சோபாவில் இடம் பிடிக்க எவ்வளவு கஷ்ரப்பட்டோம் என்பதைப் பெருமையாகப் பேசிக் கொண்டிருக் கிறார்கள்.

இத்தனை ஆரவாரத்துக்கும் காரணமாயிருந்த அந்த அம்மா சரோஜாதேவி சொகுசுப் பஞ்சணையில் ஆனந்தமாய்க் கண்விழித்துச் சோம்பல் முறித்துக் கொண்டிருக்கிறார். தனது ரீவியை ஓன் செய்து வாசலில் நடப்பதைப் பார்த்தவாறே தன்னைத் தயார்படுத்திக் கொள்கின்றார். அலங்காரத்தை முடித்து அடியார்கள் சூழ ஒவ்வொரு படியாக (ஸ்லோ மோஷன்) இறங்கி வருகிறார். எல்லோரும் எழுந்து நிற்கின்றனர். எல்லோருக்கும் பொதுவாக ஒருவர் முன் வந்து இவ்வாறு பேசுகிறார்.

"அம்மாவுக்கு வணக்கம். கனநாளாய்க் கனபேர் போட்டி போட்ட அந்தக் கம்பனி நேத்து உங்களிட்டை வந்திட்டுது எண்டு அறிஞ்சமம்மா. அதுதான் அம்மாவை வாழ்த்த எண்டு வந்தனாங்கள்"

என்றவாறு பூங்கொத்தை நீட்ட அடியாள் பெற்று அப்பால் போடுகிறார். மேலும் தொடர்ந்த அவர்

"என்ன இருந்தாலும் அம்மாடை பவர் யாருக்கும் வராதம்மா. அப்பிடியே அந்தக் கம்பனியிலை எங்கடை பிள்ளையளுக்கும் ஏதாவது வேலையிருந்தால் போட்டுத் தாங்கம்மா"

என்று கூறி அவர் முடிக்குமுன்பே ஒரு தலையசைப்போடு வெளியே போய்த் தன் படகுக் காரில் ஏறிக் கொள்கிறார் அம்மா. கார் தெருமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைத் தாண்டும் போது, இயல்பாகவே அவரின் பார்வை அடுத்த தெருவிலுள்ள ஒரு சாதாரண வீட்டைக் குறிப்பாகப் பார்க்கிறது. அங்கேயும் சிலர் வட்டமாகக் கூடித்தான் இருந்தார்கள். ஒரு ஏளனச் சிரிப்போடு நன்றாய்ச் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டார் சரோஜினி அம்மா. மூடிய கண்களுக்குள் முன் நிகழ்ந்தவை நிழலாடுகிறது.

**பாடசாலையின் வகுப்பறை ஒன்று.** மாணவ மாணவிகள் நிறைந்திருக்கின்றனர். ரீச்சர் புள்ளிகளை வாசிக்கின்றார்.

"கணிதம் ரொப் மாக்ஸ் நர்மதா, தமிழ் ரொப் நர்மதா, ஆங்கிலம் ரொப் நர்மதா........"

எல்லோரும் கை தட்டுகிறார்கள் வகுப்பின் முதல் மாணவி நர்மதா. பொறாமையின் உச்சத்தில் சரோஜா நகத்தைக் கடித்தவாறு. மீண்டும் ரீச்சர் அறிவிக்கிறார்.

"வகுப்புக்கு மொனிற்றராக நர்மதாவை விட சரோஜா பொருத்தமாய் இருப்பதால் சரோஜாவை நியமிக்கிறேன்."

பிள்ளைகள் குழம்புகிறார்கள். வகுப்பிலை முதலாய் வாறவர் தானே மொனிற்றர் என்று தங்களுக்குள் பேசிக்கொள்கிறார்கள். ஆனால் இதை முன்கூட்டியே அறிந்தது போல் சரோஜா மட்டும் ஒரு குரூரப் பார்வையை நர்மதா மேல் படியவிடுகிறாள். நர்மதா எப்போதும் போல் நிர்மலமாய். இந்த நிலை இறுதி வரை தொடர்கிறது. திறமை காட்டுவது நர்மதாவாக இருந்தாலும் பேர் எடுப்பதும் பள்ளி விழாக்களில் முன்னுக்கு நிற்பதும் சரோஜா தான். எதிலும் தானே முதன்மையாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தாலும் நர்மதாவில் உள்ள பொறாமையாலும் நர்மதாவையும், அவளின் குணத்துக்காக அவளோடு சேர்ந்த கூட்டத்தையும் பல வழிகளில் ஏளனப்படுத்துகிறாள் சரோஜா. இதற்கு அவளால் விலை கொடுத்து வாங்கப்பட்ட ஒரு கூட்டமும் உடந்தை. அவளின் தந்தையின் பணத்துக்கும், பலத்துக்கும் பள்ளி நிர்வாகம் அடிபணிந்திருந்தது. பழைய நினைவுகளில் மூழ்கியிருந்த சரோஜாதேவி சற்றே கண்ணயர்கிறாள்.

அதே நேரம் சரோஜாதேவி குறிப்பாகப் பார்த்த **அந்த வீடிருக்கும் தெரு காட்சிக்கு வருகிறது.** தெருமுனையில் "ஆனந்தம் தெரு" என்ற பெயர்ப் பலகை. அதில் அந்த வீடு. ஆடம்பரமற்ற எளிமையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே நேரம் தூய்மையான வீடு- மனிதர்கள் சிலர் கூடியிருக்கிறார்கள். பார்க்கவே புரியும் ஏழைகள் என்று. அவர்களின் கையில் பூங் கொத்துக்கள் இல்லை. பூமாலைகள் இல்லை. ஆனால் அநேகரின் கையில் திருநீறு முதலிய கோவிற் பிரசாதங்கள் இருந்தன. அவர்கள் யாருக்காகவும் வரிசையில் காத்திருக்கவில்லை. அவர்களுடைய அம்மா நர்மதாதேவி ஒரு சாதாரண கைத்தறிப் புடவையில் சுத்தமாக அவர்களுள் ஒருத்தியாக அமர்ந்திருக்கிறார். அம்மாவுடன் கதைப் பதற்காக பெரியவர் ஒருவர் எழுந்திருக்கிறார்.

**அந்நேரம் அம்மாவின் வசனம்:-**

"இந்தப் புதுப் பழக்கம் என்னத்துக்கு ஐயா. எப்பவும் நான் உங்களிலை ஒருத்திதான். நேற்று நீங்கள் எப்படி உரிமையோடு என்னைத் தேடி வந்தீங்களோ அதே போலத்தான் எண்டைக்கும்".

**பெரியவரின் வசனம்:-**

"அதில்லையம்மா. நேத்து வரைக்கும் எங்கடை சுகதுக்கங் களிலை பங்கெடுத்துத் தேவைப்பட்ட நேரத்திலை அறிவுரைகளைத் தாற நல்ல படிச்ச ஒரு சமூக சேவகியாய் இருந்தீங்கள். அப்ப எங் களிட்டையிருந்து எந்த மரியாதையையும் நீங்கள் எதிர்பார்க்கேல்லை. ஆனா இப்ப கலெக்டெர் எக்ஸாமிலை மாவட்டத்தில் முதலாவதாய் எடுபட்டிருக்கிறீங்கள். அதுக்காக எண்டாலும் நாங்கள் மரியாதை தரத்தானை வேணும்".

**அம்மா:-**

"இங்கை தான் எல்லாரும் பிழைவிடுகிறது. பதவி என்றதை எப்பவும் மற்றவைக்குச் சேவைசெய்யிறதுக்கு ஒரு உதவியாய்த்தான் கருத வேணும். அதை விட்டுட்டுத் தன்ரை தேவையை நிறைவேற்ற அல்லது தன்னைக் காப்பாத்திக்கொள்ள கவசமாய் நினைக்கக் கூடாது. பதவி கூடக் கூட எவனொருவன் பணிவு கொள்கிறானோ அவனைத் தேடித்தான் பதவி ஓடிவரும். அவன் தான் நல்ல தலைவன். அதோடை இண்டைக்குத் தான் பேப்பரிலை பேர் வந்திருக்கு. நான் இன்னும் பதவி ஏற்கேலை. ஏற்றாலும் கலெக்டர் அலுவலகத்திலையும், பதவி சம்மந்தப்பட்ட விழாக்களிலும் மட்டும் தான் நான் கலெக்டர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் மக்கள். அந்த நேரங்களில் அந்தக் கதிரைக்குரிய மரியாதையை நீங்கள் கொடுக்கிறது தான் சம்பிரதாயம். மற்றபடி நான் எப்பவும் உங்கடை சமூக சேவகி நர்மதா தான். ஒண்டை மட்டும் எல்லாரும் மனதிலை வைச்சிருக்க வேணும். எந்தப் பதவியும் மக்களுக்காகத் தானே தவிர எந்தப் பதவிக்காகவும் மக்களில்லை. பதவியிலை வருவாங்க, போவாங்க. நிரந்தரமில்லை. நிரந்தரம் நீங்கள் தான்."

வந்திருந்த ஏழைகளில் பலரும் அழுதுவிடுகிறார்கள். கலங்கிய கண்களுடன் விடை பெற்றுப் போகும் போது இப்படிக் கதைத்துக் கொள்வது அம்மாவுக்குக் கேட்கிறது.

> "அம்மாவுக்கென்னடி..... எந்தக் கவலையுமில்லை. அதனாலை எங்களைப் பத்தியே யோசிக்கிறா..."
>
> "எண்டாலும் இப்பிடி எங்கையாவது இருப்பினமே. அம்மாடை படிப்புக்கும் திறமைக்கும் எத்தனை பெரியாக்களெல்லாம் வீட்டை கூட வந்து கேட்டவை, தங்கடை கம்பனிகளிலை நிறையச் சம்பளத்தோடை வேலை தாறமெண்டு, ஒண்டுக்கும் மசியேலையே. தனக்கெண்டு ஒரு குடும்பத்தைத் தேடிக் கொள்ளாமல், எல்லாரையும் தன்ரை குடும்பம் போலை நினைக்கிற அந்த குணத்துக்குக் கடவுள் நல்ல வழியைக் காட்டியிருக்கிறார். இன்னும் பெரிய பதவியெல்லாம் கிடைக்கவேணும் பிள்ளையாரப்பா..."

அம்மாவின் இதழ்களில் அமைதியான புன்னகை. அந்தப் புன்னகைக்குள் ஏதோ ஒரு வலி தெரிகிறது. தன் பள்ளிப் பருவத்தை நினைத்துக் கொள்கிறார்.

**(மெல்லிய இசையின் பின்னணியில் தனது கதையைத் தானே சொல்வதாக நர்மதாவின் ஆழ்ந்த குரலோசையுடன் குறும் காட்சிகளும் விரிகின்றன.)**

அநாதை ஆச்சிரமத்தில் நூறிலே ஒரு குழந்தையாக அன்புக்காக எவ்வளவு ஏங்கியிருப்பேன். அந்த ஏக்கத்தைப் போக்க என்று நானே என்னைப் படிப்பிலே ஈடுபடுத்திக்கொண்டேன். ஒவ்வொன்றையும் தேடித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிப் படித்தேன். பாராட்டுப் பெற்றேன். படிப்பே வாழ்க்கையாகிப் போனது. சரோஜா என்ற ஆணவக்காரி குறுக்கிட்டாள். அவளது பணத்தால் எனது விருதுகளைத் தடுக்கலாம். மனிதரை வாங்கலாம். பிரபலத்தை வாங்கலாம். எனது படிப்பை வாங்க முடியுமா? பெயரைத் தான் வாங்க முடியும். பெறுபேறு எனக்குத் தானே. நான் அவளைக் கணக்கிலையே எடுக்கவில்லை. இதனால் அவளின் கோபம் கூடும் என்பதும் புரிந்தது. எனக்கு எந்தச் சிந்தனையும் இருக்கவில்லை என் படிப்பைத் தவிர. இது எல்லாம் எது வரை..? சாகரன் என் மனதில் நுழையும் வரை. அந்த நாள்...அந்த நாள்...

(காட்சியாக விரிகிறது)

மாகாண மட்ட விவாதப் போட்டி என்பதால் தேசிய பாடசாலை ஒன்று ஆரவாரமாகக் காட்சியளிக்கிறது. மேடையில் நர்மதாவின் அணித்தலைவன் சாகரன். சீதனம் தேவையில்லை என்பது தலைப்பு. தேவையில்லை என்று நர்மதா வாதாட, தேவை என்று எதிர்க்கட்சி வாதாட, மீண்டும் தேவையில்லை என்று சாகரன் நர்மதாவின் கருத்தை வலியுறுத்த எதிர்க்கட்சியிலிருந்த சரோஜா இது பொறுக்காமல்,

"அப்பிடியென்றால் சீதனம் வாங்காமல் அநாதைப் பெண் ணுக்கு வாழ்க்கை குடுப்பீரோ? ' என்று கேட்டுவிட 'சத்தியமாக' என்கிறான் சாகரன். "அப்ப நர்மதாவைக் கட்டும் பார்ப்போம்" என்று அவள் சவால் விட, "அவ ஓம் எண்டால் நான் தயார்" என்று இவனும் சவால் விடப் பிரச்சினையாகிப் போகிறது.

(நேரடிக் காட்சி முடிந்து மீண்டும் நர்மதாவின் குரலோடு குறுங்காட்சிகள் திரையில்...)

பிறகு மன்னிப்புக் கேட்க என்று சாகரன் என்னைச் சந்தித்ததும், இந்த நட்புத் தொடர்ந்து காதலாக மாறியதும் ஒரு காலம். சாகரன் மெடிசின் படிக்கவென்றும், நான் பீ.எஸ்.ஸீ படிக்கவென்றும் கம்பஸ் போய் அங்கும் எமது அன்பை வளர்த்து வந்தோம். கம்பஸ் வரமுடியாத சரோஜா, என்னைப் பழிவாங்க கையில் எடுத்த ஆயுதம் சாகரன். சாகரனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்ர நிலையையும், அவரது மூன்று தங்கைகளையும் பயன்படுத்தி அவனைப் பல லட்சங்களுக்கு விலைக்கு வாங்கினார் சரோஜாவின் தந்தை. கடைசியாகக் கண்ணீரோடு விடை பெற வந்த சாகரனை, உயிர் பிரியும் வேதனையோடு, அதே நேரம் முழு மனதோடு விடை கொடுத்தவள் நான். அதே நேரம் நான் அவளுக்குச் சொல்லி யிருந்தேன், உன் பகட்டும் பணமும் எதுவரைக்கும் என்பதை பார்ப்போம் என்று. பிறகு அவளோடு அடிமையாய் வாழ முடியாமல், எங்கே யென்றில்லாமல், சாகரன் காணாமற் போனதை அறிந்து நான் பட்ட வேதனை....... ம்..... ஒவ்வொருவர் வாழ்விலும் எத்தனையோ வேதனைகள். அதையெல்லாம் வெளியே காட்ட வேண்டுமா என்ன?

நிஜத்துக்கு வந்த நர்மதா எழுந்து போய்ப் பிள்ளையாரின் படத்தின் முன்னால் நின்று படத்தோடு பேசுகிறாள்.

> “பிள்ளையாரே, எல்லோரும் நல்லாயிருக்க வேணும். அநியாயம் செய்பவரை அழிப்பதை விடத் திருத்திவிடு. அது தான் நாட்டுக்கு நல்லது. அதே போலப் பணமும் பகட்டும் எதுவரைக்கும் என்பதையும் எல்லோரும் உணர வேண்டும்”

**சில மாதங்களின் பின்...**

அதே கிராமம் தூரப் பார்வையில் பட்டு மெதுவாக அண் மிக்கிறது. உருத்தெரியாமல் உருக்குலைந்த கிராமம். காட்சி குறுகி ஒரு இடத்தில் நிலைக்கிறது. மாடி மனைத் தெரு என்ற பெயர்ப்பலகை உருக்குலைந்த நிலையில். நிமிர்ந்து நின்ற மனைகளும் துகள்களாகப் படுத்திருந்தன. அந்த ஊரைக் கடல் கொந்தளித்து அள்ளிச் சென்ற தாகவும், அங்கிருந்த மக்கள் பக்கத்து கிராமத்தில் தங்க வைக்கப் பட்டிருப்பதாகவும் சிலர் பேசிக் கொள்கின்றனர்.

**முகாம் ஒன்றின் காட்சி திரையில்.**

முகாம் ஆரவாரப்படுகிறது, அன்று கலெக்டர் வருகிறார் என்பதால். நர்மதாதேவி வந்திறங்கி மென்மையாகச் சிரித்தபடி முகாமை பார்வையிடுகிறார். கட்டளைகளைப் பிறப்பிக்கிறார். குழந்தைகளைத் தட்டிக் கொடுக்கிறார். முதியவரைத் தடவிக் கொடுக்கிறார். அப்படியே மேடையில் உரையாற்றுவதற்காக ஏறுகிறார். கூட்டத்துக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை மறைந்து மறைந்து இருந்த பெண் சிறிது விலகி மேடையைப் பார்க்கிறாள். அவள் முகம் சிவந்திருந்தாலும் தெளிந்திருக்கிறது.

"இவ தானப்பா சரோஜாதேவி, இவன்ரை சொத்தெல்லாம் கடல் கொண்டுபோட்டுது. வியாபாரத்திலையும் எல்லாரும் ஏமாத்திப் போட்டங்களாம். பாத்தியே இப்ப இவன்ரை நிலமையை...

யாரோ கூட்டத்துக்குள் கூறுகிறார்கள். எப்போதும் இந்த முகாமுக்குள் எல்லாரையும்போல் எல்லாம் இழந்து வந்தாளோ அப்போதே அவளுக்குப் புரிந்து விட்டது. தனது பணமும் பகட்டும், ஆணவமும் எதுவரை என்பது. வெட்கத்தோடு நர்மதாவையே பார்த்தவாறு பொம்மைபோல் அமர்ந்திருக்கிறாள். இதை எதுவுமே அறியாத நர்மதா தன் கண்ணீர்க் குரலில் குழந்தைகளுக்கப் புதிர் கூறிக் கொண்டிருக்கிறாள்.

"அழித்தாலும் அழியாது, உடைத்தாலும் உடையாது<br>
அள்ளவும் முடியாது, களவிலும் போகாது<br>
கழித்தாலும் கழியாது.. பிரித்தாலும் பிரியாது<br>
கொடுத்தாலும் குறையாது.. கடலிலும் கரையாது<br>
அது எது???"

கூட்டத்திலிருந்த பிள்ளைகள் "கல்வி", "கல்வி" என்று கூச்சலிட புன்சிரிப்போடு மேடையிலிருந்து இறங்கி நடை போடுகிறாள் நர்மதாதேவி.

காட்சி அசைவற்று அப்பிடியே நிற்க அலை போன்ற எழுத்துக்களில் அதே புதிர் மெதுவாக அசைந்து போகிறது.

கீழே எதுவரை....? கடைசி வரை.... என்ற பெரிய எழுத்துக்கள் இடையில் வந்து நடுவில் நிற்க கீழே......

முற்றும்.

(யாவும் கற்பனை)

(வட மாகாண ஆக்க இலக்கியப் படைப்பாற்றல் போட்டி 2008ல் சமர்ப்பிக்கப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. இனி.. அவன்..... இனியவன்

## காட்சி I

**(ஆரம்பப் பின்னணிக் காட்சி)**

(காலைச் சூரியன் கடலில் இருந்து மஞ்சளாய் எழும்புகின்றான். மரங்களைச் சுற்றிக் குருவிகளும் குயில்களும் பறக்கின்றன. பாடுகின்றன. அப்படியே ஊருக்குள் நுழைகிற கமரா சன நடமாட்டம் குறைந்த அமைதியான வீதிகளுக்கூடாக "ஷஷ்டியை நோக்கச் சரவண........" பாடல் வந்த திசையிலே செல்கின்றது. ஒரு அழகான நாற்சார் வீடு. உள்ளே போய் விறாந்தையை முழவதுமாகச் சுற்றி வந்து ஒரு பக்கமாகத் திரும்பிப் படுக்கை அறை ஒன்றுக்குள் நுழைந்து, படுக்கையில் குவிகிறது. படுக்கையில் ஒருவன் நல்ல தூக்கத்தில் சிரித்துக் கொண்டிருக்கிறான். காட்சி அசைவற்று நிற்கிறது.)

**ஒரு குரல் அவனை அறிமுகப்படுத்துகின்றது.**

"இவன் சதீஸ். வயது 26. குடும்பத்தில் கடைசி ஆண்பிள்ளை. அதனால் செல்லப் பிள்ளை. ஆனாலும் அப்பாவுக்கு அடங்கின பிள்ளை. படிப்பு M.Sc. தனியார் துறையில் நல்ல வேலை. மாதம் ஐம்பதாயிரம் ரூபா சம்பளம். எதிர்காலம் பற்றி நிறையக் கனவுகள். மனைவி அழகாக, வெள்ளையாக, நன்றாகப் படித்து, நாகரிகம் தெரிந்தவளாக, நுனி நாக்கில் ஆங்கிலம் பேசுபவளாக இருக்க வேண்டும். நல்ல பணத்தோடு நகரத்தில் வாழ்பவளாக, பார்ட்டிகளில் பங்குபற்றத் தெரிந்தவளாக இருக்க வேண்டும். இப்படிப் பல. ஒரு மாதத்திற்கு முதல்தான் இவனுக்குத் திருமணமாகி இருந்தது.

(அவனை அப்படியே தூங்க விட்டுவிட்டு நேராக அடுப்பங்கரைக்குப் போகிறது கமரா. அங்கே தேனீர் தயாரித்துக் கொண்டிருக்கிறாள் ஒரு இளம் பெண். தலையில் பூவிதழ். நெற்றியில் நீற்றுக் கீறு. கீழே வட்டக் குங்குமம். அழகிய கருமஞ்சள் நிறம். விக்கிரகம் போல் களை. காட்சி அசையாமல் நிற்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவளை அறிமுகப்படுத்துகின்றது ஒரு குரல்**

"இவள்தான் ஷகிலா. வயது 23. படிப்பு B.Com. அரச துறையில் வேலை. குடும்பத்தில் ஒரே பெண். பிறந்து வளர்ந்தது பக்கத்து கிராமம். படிப்பு, பாட்டு, எழுத்து, சமையல், கைவேலை.. எனத் தெரிந்தது நிறைய. தெரியாதது குறைய. இந்த வீட்டிக்கு வந்து ஒரு மாதந்தான் ஆகிறது. மொத்தத்தில் இதுவரை எல்லோருக்கும் அவள் அருமையான பிள்ளை"

(அவளையும் அப்படியே விட்டுவிட்டு வாசற் படியில் ஓடிவந்த ஜிம்மிக் குட்டியைத் தாண்டி ஒவ்வொரு அறையாக யாரையோ தேடுகிறது கமரா. யாரையும் காணாமல் கடைசியாக பின் வாசல் பக்கம் விரைந்து திண்ணையில் குவிகிறது. பெரியவர் ஒருவர் வேப்பங் குச்சியால் பல் துலக்கிக் கொண்டிருக்கிறார். அவரது காலுக்கருகில் சில சிட்டுக் குருவிகள் அன்னியோன்னியமாக அளவளாவிக் கொண்டு எதையோ தேடித் தேடித் தின்று கொண்டிருந்தன. அவரது மடியில் இருந்த பூனைக் குட்டி அவைகளையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது. அவரது காட்சி அசைவற்று நிற்க)

**ஒரு குரல்...**

"இவர் கருணாமூர்த்தி. பெயருக்கேற்பக் கருணை உள்ளம் படைத்தவர். வயது 67. தோற்றத்தில் 55. இரண்டு மகன்கள். இரண்டு மகள்கள். பன்னிரண்டு வருடங்களிற்கு முன் துணையை இழந்தவர். பிள்ளைகள் எல்லோரும் கூட்டுக் குடும்பமாக இந்த வீட்டிலேயே வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டு நாற்சார் வீட்டைக் கட்டியவர். ஆனால் பிள்ளை கள் படிப்பு, வேலை, திருமணம் என்று எங்கெங்கோ செற்றிலாகி விட, சதீஸை மட்டும் வீட்டுக்காகவும், தனக்காகவும் இங்கேயே கட்டி வைத்திருக்கிறார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி விரிகிறது.
(பாத்திரங்கள் :- கருணாமூர்த்தி, சதீஸ், ஷகீலா)

பால்க்கோப்பியை வைத்து விட்டுக் கணவனை எழுப்புகிறாள் ஷகீலா. சதீஸ் தூங்குவது போல நடிக்கிறான். ஷகீலா பேசாது வெளியே வருகிறாள். அவளது வாடிய முகத்தைப் பார்த்த கருணாமூர்த்தி அருகில் வந்து வாஞ்சையோடு கேட்கிறார்.

**கருணாமூர்த்தி:-** "என்னம்மா............... இண்டைக்கும் அவன் கதைக் கேல்லையே?........"

**ஷகீலா:-** "ஒரு மாதமாய் நடக்கிறது தானை மாமா. என்னை அவருக்குப் பிடிக்கேலை எண்டு தெரியுது. பிடிக்காமை ஏன் கட்டினவர் எண்டு விளங்கேலை. ஏதாவது சொன் னாத்தானை அதுக்கேற்ற மாதிரி ஏதாவது செய்ய.......... என்னைக் கண்டாலே முகத்தைத் திருப்பிறார். வேண்டா வெறுப்பாய்ச் சாப்பிடுறார். போறார். வாறார்......... நான் நினைக்கிறன் என்ரை முகமே அவருக்கின்னும் சரியாய்த் தெரியாதெண்டு"

(கண்கள் கலங்குவதை மறைத்துக் கொண்டு அவசரமாக உள்ளே போகிறாள். யோசனையோடு சதீஸிடம் போகிறார் கருணாமூர்த்தி. அவரைக் கண்டதும் மேலும் இறுக்கமாகக் கண்ணை மூடிக் கொண்டு திரும்பிப் படுக்கிறான் சதீஸ்.)

கருணா:- "எட சதீஸ்.... ஏன்ரா இப்படிச் செய்யிறாய்?..... ஷகீலா பாவமடா..... உன்னைத் தானை நம்பி வந்திருக்கிறாள். கட்டினதுக்கு அவளை ஒரு இடமும் கூட்டிக் கொண்டு போகேலை. அவளை நிமிந்து பாத்துக் கதைக்கக் கூடியில்லை. அவள் நல்ல பிள்ளையெடா."

சதீஸ்:- "அவள் பாவம் தான். அதுக்கு நான் என்ன செய்யிறது. எல்லாம் நீங்கள் பாத்த வேலை தானை. உங்களுக்கு தெரியும் தானை, என்ரை விருப்பம் என்னெண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவுணிலை கலராய், மொடேணாய், பணத்தோடை ஒருத்தியைச் செய்து வைச்சிருந்தா நானும் அண்ணர் அக்காக்கள் மாதிரி ரவுணிலை செற்றிலாகியிருப்பன். இப்பிடி இங்கை கிடந்தேன் கஷ்ரப்படோணும். இண் டைக்கெல்லாம் பார்ட்டி ஒண்டிருக்கு. உவன் ரவியும் சிவாவும் எனக்குக் கீழை வேலை செய்யிறவங்கள். ஆக்களும் அவ்வளவு வடிவெண்டில்லை. தங்கடை பெண்டாட்டிமாரோடை வருவாங்கள். அதுகளைப் பாக்கோணும். சும்மா எலுமிச்சங் கலரிலை ஸ்ரைலாய் வருங்கள். என்ரை கலருக்கும் வடிவுக்கும் நானென் னண்டு உவளைக் கூட்டிக் கொண்டு போறது. என் னைப் பத்தி அவங்கள் என்ன நினைப்பாங்கள்."

கருணா :- "உன்ரை பெண்டாட்டியை நீ மட்டும் பாத்தாக் காணாதே. றோட்டிலை போறவன் வாறவன் எல்லாம் பாக்க வேணுமே."

சதீஸ்:- "என்ரை பெண்டாட்டி வடிவாயிருந்தா எனக்குத் தானை பெருமை. நான் அப்பவே சொன்னான் தானை. நீங்கள் தான் உங்கடை ப்ரெண்டுன்ரை மகளை என்ரை தலையிலை கட்டவேணுமெண்டு சல்லிக்காசு கூட வாங்காமைக் கட்டி வைச்சனீங்கள். வேறை இடத் திலை யெண்டா எவ்வளவு சீதனம் தந்திருப்பாங்கள் தெரியுமே...." (எழும்பிப் போகிறான்.)

கருணாமூர்த்தி (தனக்குள்ளே) 'இவன் வடிவெண்டு என்னத்தைச் சொல்லுறான். ஷகீலா கொஞ்சம் நிறம் குறைவு தான். ஆனா அவள்டை வடிவும் களையும் யாருக்கு வரும். வெள்ளை நிறத்திலை என்ன இருக்கு. கறுப்பிலை இல்லாத வடிவு. படிச்ச,பண்பான, அன்பான, அடக்கமான பிள்ளை. இதை விட என்ன வேணும்?...... (பெருமூச்சு விடுகிறார்) உலகம் அடி படேக்கை அந்தப் பிள்ளையின்ரை அருமை விளங்கும் தானை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி II

(பாத்திரங்கள் :- சதீஸ், சுரேஷ்)

(மீண்டும் மாலை வெயிலில் அதே வீடு. பாத்றூமில் சலசல ஓசை. பாத்றூம் வாசலில் குவிகிறது கமரா. கதவைத் திறந்து கொண்டு அவசரமாகச் சதீஸ் வருகிறான். படுக்கையறைக்குள் நுழைகிறான். அறையின் மாற்றத்தைச் சட்டென உணர்கிறான். "ஒரு நிமிஷத்திலை எல்லாத்தையும் மாத்திப் போடுவாள் பாவி. உவள் மட்டும் கலராயும் பணத்தோடையும் இருந்திருந்தா..." மெதுவாகச் சொல்லிக் கொண்டே கட்டிலில் தயாராக வைக்கப்பட்டிருந்த உடையைப் போடுகிறான். போட்ட பின்தான் யோசிக் கிறான். அது திருமணமான பின் ஷகீலாவின் முதல் மாதச்சம்பளத்தில் அவள் அவனுக்காக வாங்கி, புதிதாகவே இருக்கும் உடை. திருப்பி மாற்ற நேரமின்றி அப்படியே போகிறான். போகும் வழியில், சுரேஷ் வீட்டின் முன் காரை நிறுத்திக் கோர்ன் அடிக்கிறான். சுரேஷ் வருகிறான். முகத்திலே சோகம்.)

**சதீஸ்** :- "என்னடா நீ வரேலையோ?...."

**சுரேஷ்** :- "இல்லை... சதீஸ்... என்ரை வைவ்பை அவவின்ரை ப்ரெண்ட் வீட்டை கூட்டிக்கொண்டு போகவேணும்...." (இழுக்கிறான்)

**சதீஸ்** :- "ஏன் ஏதாச்சும் விஷேசமோ..."

**சுரேஷ்** :- "இல்லையெடா கனநாளாய்ப் போகேலையாம்..."

**சதீஸ்** :- "என்னடா நீ... அது நாளைக்கும் போகலாம் தானை.. இது முக்கியமான பார்ட்டியெல்லே"

**சுரேஷ்** :- "இல்லை... நான் ஓமெண்டிட்டன்..... நீ போ..."

**சதீஸ்** :- "என்னடா உப்பிடித் தலையாட்டியாய் மாறினனீ...... எனக்கெண்டால் நம்பேலாமல் கிடக்கு...."

**சுரேஷ்** :- "எல்லாம் என்ரை தலைவிதி... அவைன்ரை வீட்டிலை இருபத்தைஞ்சு லட்சம் வாங்கித்தானை என்ரை தங்கச் சிக்குக் குடுத்தனாங்கள். நான் ஏதாவது சொன்னால் அதுக்கு எதிர் மாறாய்த்தான் அவ நிப்பா. அவ காசுக்குத்தான் என்னை வாங்கினவவாம்.......... ம்... என்ரை சோகக் கதையைச் சொல்லி...... நீ போடா...."

(சதீஸிக்கு முதல் முறையாய் ஒரு உணர்வு.) "நல்ல காலம் நான் சீதனம் வாங்கேலை" (தனக்குள் சொல்லிக் கொள்கிறான்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி III

(பாத்திரங்கள் :- **சதீஸ், அவனது நண்பர்கள் சிலர்)**

(**விருந்து மண்டபம்** - நவநாகரிகமாக ஆண்களும் பெண்களும் கூடியிருக்கிறார்கள். சிலர் வருகிறார்கள். சிலர் போகிறார்கள். சிலர் இசைக்கேற்ப ஜோடி ஜோடியாக நடனமாடிக் கொண்டிருக்கிறார்கள். சிலர் உண்டபடி, குடித்தபடி, என்று ஒரே கலகலப்பு. உள்ளே சென்ற சதீஸ் சிலருடன் கைகுலுக்கிக் கதைக்கிறான்.

"சா.... நல்ல கலர்லை சேட் போட்டிருக்கிறீரப்பா.... நல்ல ஷெலக்சன்.... எங்கை வாங்கினீர்?' கூட வேலை செய்யும் திவாகர் கேட்கிறான்.

**சதீஸ்** :- "அது எங்கையெண்டு தெரியேலை என்ரை வைவ் தான் எடுத்தது."

**திவாகர்** :- "குடுத்துவைச்ச ஆளப்பா நீர். என்ரை ஆளெண்டா வாங்கித் தா, வாங்கித் தா எண்டு என்னைத்தான் துளைப்பா. உமக்கெண்டால் அவவே வாங்கிறதோடை நல்ல ஷெலக்சனாயும் எடுக்கிறா"

"ஹி... ஹி..." சிரித்துச் சமாளிக்கிறான் சதீஸ்.

(கூல்றிங்சை எடுத்துக் கொண்டு ஒரு பக்கம் அமர்கின்றான். பக்கத்திலிருந்த ஆண்கள் இருவரின் மெதுவான பேச்சு இவன் காதிலும் விழுகின்றது. அங்கிருந்த சில பெண்களையும் அவர்களின் உடைகளையும் பற்றி மிக மோசமாக வர்ணித்துக் கொண்டிருக்கிறார்கள். மீண்டும் அதே உணர்வு தலை தூக்குகிறது. "அழகைப் பார்த்துப் பெருமைப்படும் ஆண்கள் போல, இப்படிப் பிறர் மனைவிமாரை அசிங்கமாக வர்ணிக்கும் ஆண்களும் இருப்பார்கள் என்று ஏன் நான் நினைத்துப் பார்க்கவில்லை". இதையும் மெதுவாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனகிக்கொண்டு அதிலிருக்கப் பிடிக்காமல் அப்பால் போய் இருந்த வனின் பார்வை, திடீரென்று குத்திட்டு நிற்கிறது. அவனின் கீழ் வேலை செய்யும் சிவாவின் அழகிய மனைவி, இன்னொருவனோடு மிக நெருக்கமாக நடனமாடிக்கொண்டிருக்கிறாள். சிவா ஒரு மூலை யிலிருந்து எங்கோ வெறித்துக் கொண்டிருக்கிறான். அவனுக் கருகில் போய் அமர்கிறான் சதீஸ்.)

சதீஸின் முகத்தையும், அவன் பார்க்கும் திக்கையும் கவனித்த சிவா "என்னை ஒண்டும் கேட்காதேங்கோ சேர். அவவுக்கு இதெல்லாம் பழகிப்போச்சு. நான் ஏதாவது சொல்லப்போனால் கரவு, சந்தேக வியாதி, அழுக்கு மனசு எண்டு சண்டை பிடிப்பா. ரவுணிலை பிறந்து வளந்த பொம்பிளையை எடுக்கேக்கை நான் யோசித்திருக்கோணும். இனி யோசிச்சு என்ன பலன்."

சதீஸிக்கு மீண்டும் அதே உணர்வு. "நல்ல காலம் நான் ரவுணிலை கட்டேல்லை."முனகிக் கொண்டான்.

"என்ன சதீஸ் ... இண்டைக்கும் உம்மட வைவ்வுக்கு உடம்பு சரியில்லையோ." சிரித்தவாறு அருகில் அமர்கின்றார் மேலதிகாரி ஒருவர்.

"இல்லை.... ஓம்....." என்று தடுமாறுகிறான் சதீஸ்.

"ஏன் சதீஸ் தடுமாறுகிறீர்? எனக்குத் தெரியும். நான் அண்டைக்கு உம்மடை வீட்டை வந்திருந்த கொஞ்ச நேரத்திலையே அவவை நல்லா நோட் பண்ணீட்டன். அவ வேறைடைப் எண்டு. உண்மை யிலேயே நீர் லக்கியப்பா. படிச்சிருக்கிறா. வேலைக்குப் போறா. வீட்டையும் என்ன மாதிரி வைச்சிருக்கிறா. அந்தப்பிள்ளை கதைக் கிறதையே காலம் முழுக்கக் கேட்டுக் கொண்டிருக்கலாம் தம்பி. என்ன ஒரு அடக்கம், மரியாதை. என்ரை வைவ்புக்கு நல்லாய்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிச்சுப் போச்சு. அவவை மாதிரி ஒரு களையான முகத்தைப் பாத்தாலே சோம்பல் பறக்கும் எண்டு சொல்றவ....” சொல்லிக் கொண்டே யாரோ கூப்பிட எழுந்து போகிறார்.
(முதல் முறையாக யோசிக்கிறான் சதீஸ்.)

“அவர் சொன்னது உண்மைதான்”. வாய் சொல்லிக் கொள்கிறது. (பக்கத்தில் வந்திருந்த இருவருடன் அளவளாவுகிறான். அப்போது தான் கவனிக்கிறான். ரவியைக் காணவில்லை. அவன் கட்டாயம் வந்திருப்பானே..... சேகரைக் கேட்கிறான்.)

**சேகர்:-** “என்னப்பா...உமக்குக் கீழே வேலை செய்கிறான் ரவி. இது தெரியாதே. ரவியின்ரை வைவ்பெல்லோ பக்கத்து ப்றாஞ்சிலை வேலை செய்யிற ஒரு ஆளோடை போட்டா. அதுதான் ரவி வேலைக்கும் மூண்டு நாளாய் வரேல்லை.”

(சதீஸிக்குத் திடுக்கிட்டது மனசு. இதென்ன இது இப்படியெல்லாம் நடக்கிறதே என்று. பலதையும் யோசிக்க யோசிக்க சதீஸிக்குத் தலை இடிப்பது போல் உணர்கிறான். வீட்டுக்குப் போகப் புறப்படுகிறான். போகும் வழியில் தன் நண்பன் காண்டீபன் வீட்டுக்குப் போகலாம் என்று இறங்குகிறான். அவனை அழைத்தவாறு உள்ளே பார்க்கிறான்.)

“வாங்கோ...உள்ளை தான் நிக்கிறார்..” என்றவாறு திரும்பிக்கூடப் பார்க்காமல் கால் மேல் கால் போட்டவாறு அமர்ந்து ரீ.வி பார்த்துக் கொண்டிருக்கிறாள் காண்டீபனின் மனைவி.

(சதீஸிக்கு ஒரு மாதிரிப் போகிறது. அதை விட அவளது முகத்தைப் பார்க்க அதிர்ச்சி தோன்றியது. பார்ட்டிகளில் மேக்அப்புக்கு மேல் அழகாகத் தெரியும் அவளது முகம், வெறுமையாகப் பார்க்கும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பமுடியாமல் இருந்தது. அதற்குள் காண்டீபன் வந்து கதைக் கிறார்கள். இடையில் காண்டீபன் எழுந்து போய் தேநீர் கொண்டு வந்து கொடுக்கிறான். அவனது மனைவி அசையக் கூட இல்லை.)
சதீஸ் ஊகிப்பதை உணர்ந்த காண்டீபன்
"உனக்கு தெரியும் தானை சதீஸ். என்ரை வைவ் பெண்ணியம் பெண்ணியம் என்று சொல்லிக் கொண்டு திரியுறா. இப்ப நான் தேத் தண்ணி கேட்டால், ஏன் பொம்பிளையள் தான் தேத்தண்ணி ஊத்த வேணுமெண்டு எங்கையாலும் சட்டம் இருக்கோ எண்டு கேப்பா. ஏனப்பா அந்தத் தொல்லையை. நானே செய்திட்டாப் போச்சு. தாரமும் குருவும் தலைவிதிப்படியெடா. எல்லோருக்கும் உன்னை மாதிரி ஒவ் வீசிலையிருந்து எப்ப வருவான் புருஷன் எண்டு வாசலிலேயே புன்னகையோட காத்திருக்கிற மனிசி வாய்க்குமோ. அப்பிடி ஒரு முகத்தைப் பாத்தாலே களைப்புப் போடுமப்பா... அதுக்கெல்லாம் குடுத்து வைச்சிருக்க வேணும்.

"உண்மைதான். என்ரை ஷகீலா மாதிரி யாருக்கும் கிடைக்காது" மனதிலே சொல்லிக் கொண்டான்.

(தன்னையுமறியாமல் "என்ரை ஷகீலா" என்று சொல்லியதை உணர்ந்தபோது ஒருவித உணர்வு அவன் மனதை நிறைக்கிறது. உடனே அவளைப் பார்க்க வேண்டும் என்று அவன் மனது துடிக்கிறது. அவசரமாக விடைபெற்று காரில் ஏறுகிறான். வரும் வழியில் காரை நிறுத்திப் பூவும் இனிப்பும் வாங்கிக் கொண்டான். இது வரை எதையும் அவளுக்காகத் தான் வாங்கியிருக்கவில்லை என்ற நினைப்பும் உடனே வருகிறது.)

(வீட்டுக்குள் நுழைகிறான்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனைக் கண்டதும் மரியாதைக்காக எழுந்து நின்றவளைப் பார்த்து "ஷகீலா ஒருக்கா உள்ளை வாருமன்......" அழைத்தவாறே உள்ளே போகிறான்.

(முதன்முதலாகத் தன் பெயர் அவனது வாயில் ஒலித்த பரவசத்தோடு அவன் பின்னே ஓடிப் போகிறாள் ஷகீலா. அவளை நிறுத்தி அவள் தலையில் பூவை வைத்து, வாயில் இனிப்பைப் போடுகிறான் சதீஸ். தன் கணவனுக்கு என்ன நடந்தது என்று புரியாமலேயே மகிழ்ச்சிப் பெருக்கில் அவன் மார்பில் சாய்கிறாள். அவன் கைகள் ஆதரவோடு அவளைத் தட்டிக் கொடுக்கிறது.)

தற்செயலாக இதைப்பார்த்த கருணாமூர்த்தி, தன் கண்களில் வழிந்த கண்ணீரைத் தட்டிவிட்டுக் கொள்கிறார்.

(யாவும் கற்பனை)

**(வட மாகாண ஆக்க இலக்கியப் படைப்பாற்றல் போட்டி 2009 ல் சமர்ப்பிக்கப்பட்டது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நகைச்சுவை விருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. ஆங்கில மோகம்

"அம்மா போட்டு வாறன்" சொல்லிக் கொண்டே காலில் சப்பாத்தைத் திணித்தான் அதரன். படாரெனத் தலையில் அடித்துக் கொண்டாள் வெளிநாட்டில் இருந்து வந்திருந்த சித்தி.

"ஷட் அப் மை சன். உனக்கு எத்தனை தடவை சொல்லியாச்சு. சின்னச்சின்னச் சொல்லுகளையாவது இங்கிலீஷில கதையெண்டு. அம்மா என்கிறதையாவது மம்மி என்று கூப்பிடென்று. சொல்லிக் களைச்சுப்போனன். அம்மே என்று சும்மா மாடு மாதிரிக் கத்துறாய். அலுத்துக் கொண்டாள் சித்தி.

"ஓமோம். அம்மா என்று கூப்பிடிறது பஷனில்லைத் தானே. மம்மி என்கிறது எவ்வளவு மங்களகரமான வார்த்தை தெரியுமே. எகிப்திலை செத்த சவங்களை மம்மி எண்டு தான் சொல்லுறவங்களாம்". அறைக்குள்ளிருந்து முணுமுணுத்தார் சித்தப்பா.

"என்ன உள்ளுக்கையிருந்து மூக்காலை முணுமுணுக்கிறீங்கள். சொல்லுறதைத் தைரியமாய் சொன்னால் தானே விளங்கும்." வெளியேயிருந்து சித்தி.

"தைரியமோ, அது முந்தி என்னிட்ட தான் இருந்தது. எப்ப உன்னைக் கண்டுதோ, வைரவரைக் கண்ட நாய் மாதிரி, உன்னிட்டை வந்திட்டது! மனசுக்குள் சொல்லிக் கொண்டே "நானொன்டும் சொல்லேல்ல. மூக்குக்கை கொசு போட்டுது. அதுதான் தும்மினனான்." என்றார் சித்தப்பா. இவர்களின் அன்பான உரையாடலுக்குள் நைசாக நழுவிப் போனான் அதரன்.

அதரன் பெற்றோருக்கு ஒரே குலக்கொழுந்து. 14 வயசாகுது. தகப்பன்ரை அருமையான மூளையும் (மூளேக்கை களிமண் எண்டு அம்மா சொல்லுறவ) தாயின்ரை சோக்கான மூளையும் (மூளையே வைக் கேல்லை கடவுள் எண்டு அப்பா சொல்லுறவர்) சேர்ந்ததாலை அதரனுக்கு மூளைமுட்ட நிறைய விஷயங்கள் நிரம்பியிருந்தது (பன்னாடை மாதிரி). அதனால ஒவ்வொரு வகுப்பிலும் குறைஞ்சது ரெண்டு வருஷமெண்டாலும் இருந்து ஆறுதலாய்க் கழிக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுக்கு மேலையும் இருக்க விருப்பந்தான். ஆனால் படிப்பிக்கிற வாத்திமாருக்குத்தான் கஷ்டம். இவன் இருக்கிற வகுப்புக்கு ஆரோக்கியமாய் வாற வாத்திமார், போகேக்கை தலையிடியோடை தான் போவினம்.

விடியச் சூரியன் உதிக்குதோ இல்லையோ 8.30 க்குத் தொடங்கிற பள்ளிக்கூடத்துக்கு 7 மணிக்கே வந்துவிடுவான். கேட்டால் பள்ளிக்கூடத்திலை இருக்கிற சுதந்திரம் வீட்டை இருக்கே என்பான். இவனது புத்திசாலித்தனத்தைக் கேள்விப்பட்ட வெளிநாட்டில் இருக்கிற இவன்ரை சித்தி, இவனைத் தங்களிட்டை அனுப்ப வேண்டுமென்டு ஒரே கரைச்சல். இவனுக்கும் அங்கை போக நல்ல விருப்பம். ஏன் தெரியுமே. வெள்ளையாய் வரலாமெண்டு. அப்பிள் மாதிரிக் கன்னம் வர வேண்டும். மிளகாய்ப்பழம் மாதிரி மூக்கு வரவேணும். கொவ்வைப்பழம் மாதிரி வாய் வரவேணும் எண்டெல்லாம் நிறைய ஆசை.

கனடாவுக்கு வாறதாயிந்தால் இங்கிலீஷ் கதைக்கப் பழக வேணும் எண்டு சித்தி சொல்லிப்போட்டா. கனடாச் சித்தீன்ரை சொல்லை மறுக்கேலுமே. அதரனும் கண்டபடி இங்கிலீஷிலை கதைக்கத் தொடங் கினான். இங்கிலீஷ் ரியூசனுக்கும் போனான். சின்னச்சின்ன இங்கிலீஷ் சொல்லுகளைப் பாடமாக்கிப் புது இங்கிலீஷ் மொழியை உருவாக் கினான். தமிழ்ச் சொல்லுகளுக்கு "ஸ்ஸ்" எண்ட சத்தத்தைச் சேர்த்து இங்கிலீஷ் சொல்லாக்கினான்.

ஒரு நாள் இங்கிலீஷ் ரியூசன் வாத்தியார் "மைசெல்வ்" எழுதிக் கொண்டு வா எண்டு இவனிட்டைச் சொல்லிவிட்டார். இவனும் எழுதிக்கொண்டு போனான். இவன் எழுதிக்கொண்டு வந்த இங்கிலீஷைப் பார்த்து வாத்தியார் பயந்துபோனார். தெரிஞ்ச இங்கிலீ ஷெல்லாம் மறந்துபோன மாதிரி ஒரு நிமிடம் தள்ளாடிப் போனார்.

"உங்கடை பிள்ளைக்கிருக்கிற மூளைக்குக் கனடாவுக்குப் போனா னெண்டால் ஒரு கிழமைக்கையே அங்கத்தயான் இங்கிலீஷையே மாத்திப் போடுவான். அவன்ரை வேகத்துக்கு என்னாலை ஈடுகொடுக்க ஏலாதையா" என்டு வாத்தியார் சொல்லிப்போட்டார்.

தகப்பனுக்கோ ஒரே புழுகம். அதரனும் தன் இங்கிலீஷை விளங்கிக் கொள்ள, இங்கே இருக்கிற ஆக்களுக்குப் புத்தியில்லையே எண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்காக அனுதாபப்பட்டுக் கொண்டான். கனடா செல்லும் வரை இனி தமிழில் கதைப்பதில்லை என்று சபதம் எடுத்துக் கொண் டான்.

இவனைக் கூட்டிக்கொண்டு போக சித்தி தம்பதியர் வந்து இறங்கி னார்கள். வந்து இறங்கின நாளிலை இருந்து அதரனை ஒரு இங்கிலீஷ் வார்த்தையாவது உச்சரிக்க வைக்க சித்தி படாதபாடு பட்டாலும் பலன் கிடைக்கவில்லை. இவர்களோடை தன்ரை மேதாவி விலாசத்தைக் காட்டி என்ன பலன். வெள்ளைக்காரரோடையெல்லோ கதைக்க வேணும்.

யாருமில்லாத நேரங்களில் கண்ணாடிக்கு முன் நின்றும், நாய், பூனை, பல்லி, புழு, மரம், மட்டை எல்லாத்தோடையும் தன்ரை இங்கிலீஷைக் கதைத்துக் கொள்வான் அதரன். சாடைமாடையாய் ஒட்டுக் கேக்கிற சித்திக்கு "ஸ்,ஸ்" என்கிறது மட்டுந்தான் கேட்கும். தான் கனடா போய்ப் பத்து வருஷமாகியும் ஒழுங்காய் இங்கிலீஷ் கதைக்க வரேல்லை. இவன் கொஞ்ச நாளிலை என்ன மாதிரி சத்தம் போடுறான். அபிநயம் பிடிக்கிறான் என்று சித்தி வியந்து போனாள். அதரன் கனடா போற நாளும் வந்தது. ஊரில் நல்ல சந்தோஷம். ஊரை ரெண்டு படுத்திற குட்டிச் சாத்தான் போகுதெண்டு.

கொழும்புக்குப் போயாச்சு. விமான நிலையத்திலை பயணம் போற ஆட்களைச் செக்கிங் செய்து கொண்டிருந்தார்கள். அதிலை நிண்ட வெள்ளைக்காரர் அவனைக் கண்டதும் "வெயார் ஆர் யூ கோயிங்?" எண்டு கேட்டார். அவரையும், ஆவலாய்த் தன்ரை வாயைப் பாத்த சித்தியையும் அலட்சியமாய் ஒரு பார்வை பாத்திட்டு..."ஐ கனடா ரூ பிளேன் அப் கோ...யிங்" எண்டு ராகத்தோடு இழுத்து நாட்டிய முத்திரை பிடித்து நிண்டான் அதரன்." இவன் எங்கேயிருந்து வந்திருக்கக்கூடும் எண்ட சந்தேகத்தில் கேட்டவர் மிரண்டு நிக்க, இவனைக் கூட்டிக் கொண்டு போய் என்ன பாடுபடப்போறேனோ எண்ட பயத்திலை திகைத்து நின்றாள் கனடாச் சித்தி.

(யாவும் கற்பனை)

(01-07/06/2003 ந் திகதிய சுடர்ஒளி வாரமலரில் பிரசுரிக்கப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. ஏலுமெண்டால் பாப்பம்

"இண்டைக்கு இவனை எப்படியாவது கடத்திப்போடவேணும்"

விடிவதற்கு முந்தி முழிக்கும் போதே, அலாம் வைத்தது மாதிரி கந்தசாமிக்கு இந்த எண்ணமும் முழித்துக்கொண்டது. கூடவே சலிப்பும் வந்து ஒட்டிக்கொண்டது. பின்னே சலிப்பு வராமல் என்ன செய்யும்? கந்தசாமியின் வீட்டில் குடும்ப உறுப்பினர் போல இவனும் வளர்ந்து வாறான்.

அதிலும் கந்தசாமியின்ரை பெண்சாதிக்கு இவனெண்டால் காணும். புருஷன் கூட இரண்டாம் பட்சம் தான். தன்ரை மனிசிக்குப் பிடிச்சவன், நெருக்கமானவன் எண்ட ஒரு காரணத்தாலேயே இவனைக் கண்டால் கந்தசாமிக்குப் பிடிக்காது. இவனும் அப்படித் தான். கந்தசாமியைக் கண்டால் அவர் இருக்கிற கதிரையிலை ஏறி இருக்கிறது. அவரின் சட்டை, வேட்டியிலை ஏறியிருக்கிறது. ஊத்தை பிரட்டுறது. கிடைச்ச நேரமெல்லாம் அவரை விறாண்டுறது. எல்லாத்துக்கும் மேலாக காலமை விடிவதற்கு முந்தியே அவரின் ஜன்னல் பக்கம் நிண்டு அவரை நித்திரை கொள்ள விடாமல் சத்தம் போடுறது. எல்லாம் சேர்ந்து இவன் எலியெண்டால் அவர் பூனையாய் நிப்பார். அதனாலை இவனை எப்பிடியெண்டாலும் வீட்டை விட்டுத்துரத்த வேண்டும் என்று குறியாயிருந்தார்.

இவன் உள்ளவரை வீட்டுக்கை ஒண்டும் வைக்க இயலாது. தான் தின்னிறது காணாதெண்டு, பெட்டையளையும் கூட்டிக்கொண்டு வந்து எல்லாத்தையும் கொட்டிப் பரப்பி வைப்பான். எல்லாத்துக்கும் மேலை கூடப் பிறந்ததுகள் எண்டு நினைக்காமல் ஆறேழு பெட்டையளையும் எப்பவும் துரத்திக் கொண்டு திரிவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப என்ன விஷயமெண்டால், கந்தசாமியின் மனிசி மூன்று நாளுக்கு முந்தித் தங்கடை சொந்தக்காரர் வீட்டை போட்டா. இந்த நேரத்திலை இவனை நைசாகக் கடத்திப் போடவேணுமெண்டு நினைச்சார் கந்தசாமி.

விடிவதற்கு முதலே எழும்பி, சாக்கு ஒண்டை எடுத்து நனைச்சுக் கொண்டு இவன் இருக்கிற அறைக்குப் போய் எட்டிப் பார்த்தார். திடுக்கிட்டுப் போனார். இவனைக் காணவில்லை. இவன் எங்கே தெரியுமே? பக்கத்து வீட்டை போய்ப் படுத்திட்டான்.

முன்வைத்த காலைப் பின்வைக்க முடியுமே. என்ன செய்வதெண்டு யோசிச்சவர், உள்ளுக்கை போய்க் கொஞ்சச் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு பெட்டையளையும் இவனையும் மிகமிக அன்பாகக் கூப்பிட்டார். பெட்டையள் விழுந்தடிச்சுக் கொண்டு வந்து சாப்பிட்டினம். இவன் மட்டும் வரவில்லை.

கந்தசாமி கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார். பின்னேரம் மெதுவாக நடந்து கடைக்குப் போய் மயக்க மருந்து வாங்கிக் கலந்து ஸ்பிறே போத்திலுக்குள் விட்டுக் கொண்டார். நிம்மதியாகப் படுத்துக் கொண்டார்.

நாளைக்கு விடிய மனிசி வந்திடுவாள். அவள் வரும்போது நீ இங்கு இருக்க மாட்டாய். உனக்கு உவ்வளவெண்டால் எனக்கு எவ்வளவு இருக்கும், கறுவிக் கொண்டே தூங்கிப்போனார். அதுதான் இன்றைக்கு வெள்ளண அந்த நினைப்போடையே முழிப்பு வந்திட்டுது.

சத்தம் போடாமல் போத்திலை எடுத்துக்கொண்டு இவனது அறைப் பக்கம் போனார். நேற்றையைப் போலவே இன்றும் இவன் இல்லை. இவர் எதிர்பார்த்தது தான். வேலிக்குள்ளால் பக்கத்து வளவுக்குள் போனார். அங்கேயும் இவனைக் காணவில்லை. யோசித்தபடி திரும்பும் போது நாய் குரைக்கத் தொடங்கியது. கட்டி நிண்ட நாய் குரைக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது அவிட்டு நிக்கிறதெண்டு பயந்து, வேலிக்கம்பி கீற, விழுந்தெழும்பி வீட்டுக்குள் வந்தார். வியர்த்து வழிந்தது. அழுகையும் வந்தது. நிற்க நேரமில்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் மனிசி வந்து விடுவாள். மீண்டும் இவன் தங்கும் இடம், பின்கோடி, பரண் எல்லாம் தேடினார்.

'எங்கே போனான் இந்த எமன்' யோசித்தபடி முற்றத்துக்கு வந்தார். படலை திறக்கும் ஓசை கேட்டது. இவர் பயந்தது போல் மனிசி தான். அரண்டு நிண்ட கந்தசாமியைப் பார்த்து

"என்ன விடிய ஸ்பிறேயோடை நிக்கிறீங்கள்" என்றாள் மனிசி.

"ஹி... ஹி... அதொண்டுமில்லையப்பா. நீர் சொன்னனீரெல்லோ இந்தப் பூக்கண்டிலை புழுக்குத்துதெண்டு. அதுதான் அடிக்க ஹி... ஹி..." அசடு வழிந்தார் கந்தசாமி. மனசிற்குள் இவள் வந்ததற்காய் ஆதங்கம், இவனைக் காணாததற்காய் ஆத்திரம்.

இந்த நேரம் பாத்து வீட்டுக்குள்ளை இவரின் அறைக்குள் இருந்து கம்பீரமாய் நடந்து வந்து, இவரை ஒரு அலட்சியப் பார்வை விட்டுக் கைகளைத் தட்டிக் 'கொக்கரக்கோ' என்று சிரித்தான் 'இவன்'.

(யாவும் கற்பனை)

(15-21/06/2003 ந் திகதிய சுடர்ஒளி வாரமலரில் பிரசுரிக்கப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. நல்ல நேரம்

"இஞ்சே சாத்திரியார், உண்ணாணை இவளுக்கொரு நல்ல நேரம் குறிச்சுக் குடுங்கோ. உங்களுக்கு புண்ணியமாய்ப் போகும்" குலச்சாத்திரியாரிடம் சரணடைந்தார் சதாசிவம். சாத்திரியார் பயந்து போனார். ஏனெண்டால் சதாசிவத்தாற்றை மனிசி ஈஸ்வரி வலு மோசமான ஆள். எதிலையெண்டு தெரியுமே, மற்றவையைச் சண்டைக்கு இழுக்கிறதிலை. இவவிட்டை வாய் குடுத்தாத் தப்பேலாது. முட்டையிலை முடி புடுங்கிற மாதிரி, மனிசி நடந்தாலும் குற்றம் சொல்லும். நிண்டாலும் குற்றம் சொல்லும். திருப்தி எண்டதே வராது.

உப்படித்தான் ஈஸ்வரி அக்கா ஒருக்கால், சைக்கிளிலை லொட்றிச் சீட்டுவிக்கிற ஆளிட்டை 16 சீட்டுகள் வாங்கினா. அதுவும் ஒரேயடியாய் பத்தையும் கிழிச்சு எடுக்கமாட்டா. மேலை ஒண்டு, கீழை ஒண்டு, நடுவை ஒண்டு. எப்படி எடுத்தென்ன, பத்திலை ஒண்டுக்கும் ஒரு சதமும் விழேல்லை. சீட்டு வித்தவரோடை சண்டை. நல்ல சீட்டு தரேல்லையெண்டு. அவர் என்ன செய்யிறது. இந்த வகைச் சீட்டுக்கு அநேகமாக காசு விழுகிறேல்லை அக்கா என்று ஆறுதல் சொன்னார். அக்காவுக்கு வந்துதே கோபம். இதை ஏன் முதலிலேயே சொல்லேல்லை, என்னை ஏமாத்திப் போட்டாய் எண்டு கத்தினா.

பிறகும் ஒரு நாள் இவ சீட்டு வாங்கப் போக, அவர் வேறை வகைச் சீட்டைக் குடுத்தார். இவவோடை சீட்டு வாங்கிய பக்கத்து வீட்டுக்காரி இவ முதல் வாங்க இருந்த சீட்டை வாங்க அதுக்கு 500/= விழுந்திட்டுது. ஈஸ்வரி அக்காவுக்கு ஒண்டும் விழேல்லை. ஈஸ்வரி அக்காவுக்கு வயிறெரியத் தொடங்கிவிட்டது. ராசியில்லாத ஆள் எண்டு சீட்டு விக்கிறவரைக் கண்டபடி ஏசிப்போட்டா. அதுக்குப் பிறகு அந்த ஆள் அந்தப் பக்கமே வாறேலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி அக்காவைப் பற்றிக் கனக்கச் சொல்லலாம். இந்த நல்ல (?) பண்பு கொண்ட அக்காவுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தது அருணன். அறிவிலை ஆதவன் மாதிரி இருக்கவேணும் எண்டு பேரன் பெயரை வைக்க, இவன் அறிவில்லாதவனாய் வளர்ந்து ஊரார் வீட்டு பிரச்சினைக்கெல்லாம், மூக்கை நுளைத்துத் தீர்ப்பு சொல்லப்போய் அடிவாங்கியதால் 18 வயதில் பரதேசம் அனுப்பினார்கள் பெற்றோர்.

மற்றவள் அருணா. அவளுக்குப் படிப்பைத் தவிர மற்றதெல்லாம் பிடித்துப்போக, பத்தாம் வகுப்புடன் பள்ளியை முடித்து விட்டு பக்குவமாய் சமைக்கப் பழகினாள். பரதேசம் போன அருணன், புத்தி வந்து பாடுபட்டு உழைச்சுப் பார்சலில் பணம் அனுப்ப, சிக்கனமாய் இருந்ததாலே இவளின் பெயரில் பல லட்சங்கள் பதிவாகின. இப்பதான் லட்சங்களைக் குடுத்து மாப்பிள்ளைகளை வாங்கலாந்தானே. எல்லா இடத்திலேயும் திரிஞ்சு எக்கவுண்டன் மாப்பிள்ளையை வாங்கிப் போட்டினை. கல்யாணம் நடத்த நல்ல நாள் வேணுமெல்லே. அது தான் ஓடித்திரியினை.

முதல்ல ரெண்டு சாத்திரிமாரிட்டைப் போய்க் கேட்டவை. அவை சொன்ன நாள் ஒண்டும் ஈஸ்வரி அக்காவுக்கு பிடிக்கேல்லை. இவவின் ஆக்கினை தாங்கேலாமல் இந்த வரிசத்திலை நல்ல நாளே இல்லை யெண்டு சொல்லி நழுவிவிட்டினை. கடைசியாய்க் குலச் சாத்திரி யாரிட்டை வந்திருக்கினை.

சாத்திரியாரின் கண் நிறைய மண் விழத்தக்கதாய், திண்ணையைச் சடார் சடார் என்று தட்டிவிட்டுக் குந்தினா அக்கா. சதாசிவத்தாரும் ஒரு ஓரத்தில் அமர்ந்து கொண்டார். சாத்திரியார் கண்ணைக் கசக்கி, தொண்டையைச் செருமி

“இப்ப உங்களுக்கு எத்தினையாந் திகதிக்குள்ளை எப்படிப்பட்ட நாள் வேணும்?” என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“வாற மாசத்துக்குள்ளை, உந்த சனி, ராகு கிரகங்கள் இல்லாமல், எல்லாக் கிரகங்களும் நல்ல நிலையிலை நிக்கிற மாதிரி ஒரு நாள் வேணும்.”

“அதுக்கென்ன அம்மா. பிள்ளை என்ன நட்சத்திரம்?”

“உங்களுக்கென்னத்துக்கு அவளின்ரை நட்சத்திரம்? அவளின்ரை சாதகத்தையே சொல்லுறன் கேளுங்க. அவளுக்கு ஏழிலை செவ்வாய் நிக்கிறார். அட்டமத்திலை வியாழன் இருக்கிறார். உச்சத்திலை சனி பார்க்கிறார்......” தொடர்ந்த ஈஸ்வரியை.

“காணும் காணுமம்மா......” இடைமறித்தார் சாத்திரியார். மனதுக்குள் மொத்தத்தில எல்லா கிரகங்களும் அங்கே தான் நிக்குது போலை என்று நினைத்து கொண்டே பஞ்சாங்கத்தை படுவேகமாகப் புரட்டினார்.

“வாற 13ஆம் திகதி நல்லதம்மா”

“என்ன பதின்மூண்டோ, ஹோட்டல்லை கூட அந்த நம்பர் அறையே இல்லையாம். அவ்வளவு கூடாத நம்பரிலை நீர் கல்யாணத்தை வைக்கச்சொல்லுறீர்.”

“அம்மா 11 ஆம் திகதி பரவாயில்லை”

“ஐயோ! அது வேண்டாம். அந்தத்திகதியிலை தானே பின்லேடன் அமெரிக்காவை இடிச்சவன்.”

“ஏதோ உரலுக்கை அரிசியைப் போட்டு இடிச்ச மாதிரிச் சொல்லுறீர். அமெரிக்காவிலை ஒரு கட்டடத்தை தான் இடிச்சவன்” குறுக்கிட்டார் சதாசிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னத்தையோ இடிச்சவன், அது வேண்டாம்"

"அப்ப 19 ஆம் திகதியம்மா......" இழுத்தார் சாத்திரியார்.

"இதென்ன இந்த ஆள் எல்லாம் அநியாயமான நாளாய்ச் சொல்லுது. அந்தத் திகதியிலை தான் என்ரை ஒண்டுவிட்ட தாத்தாவின்ரை மருமோளின்ரை மச்சாள் கிணத்துக்கை விழுந்து செத்தவ. இப்பவும் ஆவியாய் அலைகிறாவாம்."

"அப்ப 22 ஆம் திகதி....." "வேண்டாம் அண்டைக்குத்தான் மாப்பிள்ளை மூண்டாவது தசாப்தத்துக்குள்ளை கால் வைக்கிறாராம். அந்த நாளிலை இன்னொண்டுக்கை கைவைக்கிறது சரியில்லை" சாத்திரியாருக்குக் கோபம் வந்தாலும் பொறுமையாக, "என்னம்மா நீங்கள் இனி 25 ஆம் திகதி ஒண்டு தான் இருக்கு. அதை விட்டா ஜீலை தான்" என்றார்.

"என்ன ஜீலையோ? கறுப்பு ஜீலையிலை கல்யாணமோ? 25ஐக் கூட்டினால் 7. அந்த நம்பர் சோகம் எண்டு சொல்லுவினம். என்ன செய்ய? அதையே பாருங்கோ, கவலையோடு கூறினாள் அக்கா.

"ஆ... காலமை 6.30க்கு நல்ல நேரம்"

"ஆறரையோ? என்ரை மோள் நித்திரையாலை எழும்பிறதே எட்டு மணிக்குத்தான். முந்தி எழும்பினாத் தடிமன் வரும். அவள் எழும்பி வெளிக்கிட எப்படியும் 2 மணியாகும். அதுக்குப் பிறகு பாருங்கோ"

'இரவு 11.59க்கு ஒரு நேரம் இருக்கு. பாக்கட்டே" கிண்டலாய் சாத்திரியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விளையாடாதேங்கோ சாத்திரியார். வடிவாய் பாருங்கோ".
11.30க்கு மட்டும் ஒரு நேரம் இருக்கு. எப்படியெண்டாலும் அதுக் குள்ளை தாலி கட்டிப்போடவேணும். ஒருவாறு முடிவுக்கு வந்து புறப் பட்டனர் தம்பதியர்.

கல்யாண ஏற்பாடுகள் தடபுடலாய் நடந்தது. ஒரு பொம்பிளைப் பிள்ளை எண்டு காசை அள்ளி எறிஞ்சா அக்கா. சாறி எடுக்கப்போக, தாலி செய்யப்போக எண்டு எல்லாத்தையும் பஞ்சாங்கம் பாத்துப் பாத்துத் தான் செய்தா. கடவுள் செய்யாததை நல்ல நேரம் செய்யும் எண்டு சொல்லிக் கொண்டா. வெளிநாட்டுக்கு தகவல் பறந்தது. தங்கையின் கல்யாணத்தை பார்க்க அருணுக்கு ஆசை வந்திட்டுது. நாளைக் கொஞ்சம் பிந்தி வைச்சால் தான் வருவதாய்ச் சொன்னான். சதாசிவத் தாரும் சிபாரிசு செய்தார்.

ஆனால், நல்ல நாள் கிடைக்காதெண்டு அக்கா மறுத்திட்டா. வடிவாய்ப் படம் எடுத்து அனுப்பலாந் தானே பார்க்கலாம் எண்டு சமாதானஞ் சொல்லிப்போட்டா. தமையன் வாறதுக்காக நல்ல நேரத்தை விட ஏலுமே.

ஒருமாதிரி கல்யாணத்தண்டு அருணாவை அடிச்சு எழுப்பி தோய வாத்து வெளிக்கிடுத்திற அறேக்கை விட்டாச்சு. அதுக்கை வரிசையாய் ஏழெட்டுப் பொம்புளையள் போச்சினை. முதல் போனது குரு. மற்றவை சிஷ்யராம். பழகப்போகினையாம். கதவைப் பூட்டிக் கன நேரமாச்சு. பத்தேகால் அளவிலை கதவு லேசாகத் திறக்க ஒரு தலை எட்டிப்பார்த்தது. தொடர்ந்து கொஞ்சப் பொடியன்கள் உள்ளுக்குள்ளை போச்சினை. வயறுகள், பொல்லுகளோடை. (வீடியோ பிடிக்கவாம்) மணவறையிலை மாப்பிள்ளையும் வந்தாச்சு. பொம்பிளை வாற சிலமன் இல்லை. இன்னும் ஒரு நிமிசத்துக்குள்ள தாலி கட்ட வேணும். கதவைத் தட்டப்போன சதாசிவத்தைக் தடுத்த ஈஸ்வரி அக்கா ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையாகச் சொன்னா, "அதுகளைக் குழப்பாதேங்கோ. எவ்வளவு காசு குடுத்து புடிச்சனாங்க. வடிவாய் எடுத்தாத் தானே எல்லோருக்கும் போட்டுக் காட்டேக்கை பெருமையாயிருக்கும். வெளிநாட்டுக்கு மெல்லே அனுப்பவேணும். பிறகு வெளிநாட்டாக்கள் எங்களைப் பற்றி என்ன நினைப்பினை. ஆறுதலாய் எடுக்கட்டும்". அக்கா சொல்லிக் கொண்டிருக்கும் போது கதவு திறக்க அருணா வெளிப்பட்டாள்.


அருமை மனைவி சொன்னதை கேட்டோ, அல்லது பின்னாலை நாய் துரத்த மைல்க் கணக்கிலை ஓடினதைப் போலை வேர்த்து வழிய நின்ற மகளைப் பார்த்தோ என்னவோ அதிர்ந்து நின்றார் சதாசிவத்தார்.

(யாவும் கற்பனை)

**(19-25/04/2004ந் திகதிய சுடர்ஒளி வாரமலரில் பிரசுரிக்கப்பட்டது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. சிறுவர் மற்றும் பெண்களின் பாதுகாப்பும் முன்னேற்றமும்

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் சமூகக் கட்டுப்பாடு இன்றியமையாத இடத்தை வகிக்கின்றது. சமூகத்தில் குற்றங்கள், கலகங்கள் குறைந்து காணப்பட்டாலே நாட்டு அபிவிருத்தியில் பூரண கவனம் செலுத்த இயலும். சமூகத்தைக் கட்டுக்கோப்பாக வைத்திருப்பதில் சட்டங்களும் வழக்காறுகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. காலத்தின் தேவைக்கேற்பச் சட்டங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டும், வழக்காறுகளில் பொருந்தாதன கழிக்கப்பட்டும் தேவையானவை புகுத்தப்பட்டும் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. உலகமயமாதலுடனொட்டிய நவீனத்துவத்தின் வழியில் நவீன வசதிகளும் தொழிநுட்ப வாய்ப்புக்களும் அதிகமாகவே சமூகத்தில் ஊடுருவியுள்ளன. இவை சமூக மேம்பாட்டுக்கு உதவி செய்தாலும், இன்னொரு வகையில் எமது பண்பாட்டின் கட்டுக்கோப்புக் குறைவிற்கும், கலாசாரப் பிறழ்வுக்கும் வழிவகுக்கவே செய்கின்றன.

நாட்டிலுள்ள மனிதர்கள் அனைவருக்கும் பொதுவாகவும் பிரிவிடையிட்டும் சட்டங்கள் இயற்றப்பட்டுப் பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளது. ஆயினும் நடைமுறை வாழ்வில் சட்டம் எந்தளவிற்குப் பின்பற்றப்படுகிறது, மீறப்படும் சந்தர்ப்பத்தில் என்ன தண்டனை வழங்கப்படுகிறது என்பது ஆய்வுக்குரியது. நாட்டிலுள்ள சிறுவர்கள், பெண்கள், விசேட தேவையுடையவர்களின் பாதுகாப்பு அரசியலமைப்பில் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் சமூகம் அதை மதிக்கத் தவறினால், உரியவர்களுக்கு அதில் போதியளவு விழிப் புணர்ச்சி இல்லையாயின் அதனால் எதிர்பார்த்த பயன் கிடைக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சிறுவர்களே நாட்டின் எதிர்காலத் தலைவர்கள். அவர்களது உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் சமவாயம் சர்வதேச வாரியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்று. பிள்ளைகள் உயிர் வாழும் உரிமையுடையவர்கள் என்பதை ஒவ்வொருவரும் அங்கீகரிக்க வேண்டும். அந்தரங்கத்தைப் பேணும் உரிமையும் அவர்களுக்குண்டு. மேலும் கல்வி கற்கும் உரிமையும், விபச்சாரம், பாலியல் சுரண்டல், இம்சையிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமையும், சட்டவிரோத போதை, மதுபாவனை, அதன் உற்பத்தி, விநியோகத்தில் ஈடுபடுதலிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமையும் ஆகிய இன்னோரன்ன பாதுகாப்பு அம்சங்கள் வழங்கப் பட்டுள்ளன. ஆனால் நடைமுறையில் எத்தனை குழந்தைகள் கண்திறந்து உலகைப் பார்க்குமுன்பே மண்ணுக்குள் பெற்ற தாயாராலேயே புதைக்கப்படுகின்னறன. எத்தனை பிள்ளைகள், பெற்றோரின் சுயநலப் போக்கால் பராமரிப்பு நிலையங்களிலும் உறவினர் களிடமும் விடப்படுகின்றன. எத்தனை பிள்ளைகளின் கல்வி, பொருளா தாரத்தைக் காரணம்காட்டி இடைநிறுத்தப்படுகின்றன. எத்தனை பிள்ளைகள், பெற்றோர் உறவினராலேயே மது உற்பத்தி மற்றும் விநியோகத்தில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். எத்தனை பிள்ளைகள் தெருவிலும் கல்விநிலையங்களிலும் பாலியல் துன்புறுத்தல்களுக் குள்ளாகின்றனர். இதில் எத்தனை விடயங்கள் வெளிவருகின்றன. எத்தனை மூடி மறைக்கப்படுகின்றன. இவற்றை ஆராய்ந்து பார்த்தால் சிறுவர்களின் எதிர்காலமும் அவர்களது பாதுகாப்பும் கேள்விக்குரியதே.

சிறுவர்களின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு அனைவருக்கும் இருத்தல் மூலமே அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும். 1883ல் முதன்முதல் கோவைப்படுத்தப்பட்ட தண்டனைச் சட்டக் கோவை மூலம் சிறுவர்களின் பாதுகாப்புத் தன்மைக்கான பழமைவாய்ந்த சட்டங்களின் ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி 12 வயதிலும் குறைந்த பிள்ளை, பெற்றோர் அல்லது பாதுகாவலர்களால் கைவிடப்படல் தண்டனை பெறும் குற்றமாகும். சிறுவர் பாதுகாப்பில், 1939ம் ஆண்டின் சிறுவர் மற்றும் இளம்பராயத்தினர் பற்றிய கட்டளைச்சட்டமும் முக்கியமானது. முறையற்ற விதத்தில் உழைப்பைப் பெறுவதைத் தடுப்பதற்கு 1956 ம் ஆண்டின் 47ம் இலக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் இளைஞர் மற்றும் சிறுவர்களை வேலையில் ஈடுபடுத்தும் சட்டம் கொண்டுவரப்பட்டது. 1998ம் ஆண்டின் 50ம் இலக்க தேசிய சிறுவர் அதிகாரசபைச் சட்டம் மூலம் சிறுவரின் பாதுகாப்பு வேலையைச் செய்யும் பிரதான நிறுவனமான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நிறுவப்பட்டது. பராயமடையாத சிறுவரை வேலையிலீடுபடுத்தல் பற்றிய அறிக்கையிடல் கடமையைத் தொழிற்திணைக்களம் ஆற்றுகின்றது. நன்னடத்தைத் திணைக்களம் குற்றச்செயலிகளில் ஈடுபட்ட சிறுவர்களின் வாழ்வைச் சீர்செய்தல், சமூகத்திற்கு விரோதமான மாணவரை நல்வழிக்குக் கொண்டுவரல், பாதிக்கப் பட்டவர்களைப் பாதுகாத்தல் போன்ற கடமைகளைச் செய்கின்றன.

என்னதான் சட்டங்களும் உரிமைகளும் இருந்த போதும் சிறுவரைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தல் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அநேகமான சிறுவர்கள் பயம், குற்ற முரண்பாடான உணர்வு, வேதனை, அவமானம் போன்ற காரணிகளால் வெளியே கூறாது விடுவர். இது, மீண்டும் மீண்டும் துஷ்பிரயோகம் தொடரவும், நிரந்தரமான பலவீனத் திற்கும் வழிவகுக்கும். எனவே சிறுவருக்கு இதைப்பற்றிய அறிவூட்டல் அவசியம். நல்ல தொடுகை எது? கெட்ட தொடுகை எது? என அவர்கள் அவசியம் தெரிந்திருக்க வேண்டும். பாதுகாப்பற்ற சூழலில் தாம் இருப்பதாகத் தோன்றினால் வேண்டாம் (No) என்று சொல் வதற்கும், அவ்விடத்திலிருந்து தப்பியோடுவதற்கும் (Run) அதைப் பற்றிப் பெரியவர்களிடம் சொல்லுவதற்கும் (Tell) அவர்களுக்குக் கற்றுத்தருவதவசியம். இது ஒவ்வொரு பெற்றோரும் ஆசிரியர்களும் கவனிக்க வேண்டிய விடயம்.

எனினும் உரிமை பற்றிப் பேசமுன்பு கடமை, பொறுப்பு என்பன முதன்மையானது. பெற்றோர், ஆசிரியர்கள், வயதுவந்தோரைக் கௌரவப்படுத்தல் சிறுவரின் கடமையாகும். அதைச் செய்யாமல் உரிமையின் பாதுகாப்பைப் பெறுவது பயனற்றது என்பதையும் அவர்களுக்கு புரியும்படி கூறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள் அனைவரும் சுதந்திரமானவர்களாகவே பிறக்கின்றனர். ஒவ்வொருவருக்குமான மதிப்பும் உரிமையும் சுதந்திரமும் சமமானவை. வாழ்வதற்கும் பாதுகாப்புப் பெறுவதற்குமான உரிமையும் சமனானதே. ஆனால் பெண்களின் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாகவே அமைகிறது. பெண்களின் உடலியற் தன்மையைக் காரணம் காட்டிப் பாதுகாப்பு என்ற பெயரில் சுதந்திரம் பறிக்கப்படுகிறது. இதற்கு வக்கிரத் தன்மையுள்ள சில ஆண்கள் காரணமாகின்றனர். பெண் என்றால் போகப்பொருளாக மட்டும் பார்க்கும் சிலரால் முழு ஆண்வர்க்கமும் அவமானப்பட வேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக, புங்குடுதீவுக் கொடூரக் கொலையில் சம்பந்தப்பட்டவர்களின் வாக்குமூலத்தில் “கொலை செய்யவே திட்டமிட்டோம். ஆனால் பார்த்ததும் வல்லுறவுக்குட்படுத்தத் தோன்றியது. அதனால் செய்தோம்” என்று கூறியதாக ஊடகம் ஒன்று வெளிப்படுத்தியிருந்தது. இவ்வாறானவர்களுடன் ஒரே வீட்டில் வாழும் தாய், சகோதரி, மகள்களின் நிலை எவ்வாறிருந்திருக்கும்? இவ்வாறானவர்கள் சுதந்திரமாக நடமாடும் பூமியில் பெண்களின் நிலை என்ன? முன்னேற்றம் எங்கிருந்து வரும்?

ஆளெவரும் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தலாகாது. அவரது சுதந்திரத்தில் தலையீடோ அல்லது மரியாதை, நன்மதிப்பு மீதான தாக்குதலோ இருக்கக்கூடாது என அடிப்படை உரிமைகள் கூறுகின்றது. ஆனால் பெண் என்ற காரணத்தால் இழிவான நடாத்துகைக்கு ஆளாகவேண்டி ஏற்படுகின்றதே. வீதியில் செல்லும்போது கூட வக்கிரமான வாய்ச் சொற்களுக்கு ஆளாகவேண்டியுள்ளதே. சட்டத்தின் முன் ஆட்களெல்லோரும் சமம் என்பதுடன் சட்டத்தால் சமமாகப் பாதுகாக்கப்படவும் உரித்துடையவர்கள் என அதே அடிப்படை உரிமைகள் கூறுகின்றது. ஆனால் சமூகத்தில் குற்றவாளிகள் அப்பாவிகளோடு சரிசமமாக நடமாடுகிறார்கள். அதைவிட ஒருபடி மேலே சென்று அப்பாவிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கிவைத்து அதிகாரம் செய்கிறார்கள். குற்றம் செய்து நீதிமன்றம் சென்றவன் பிணையில் வெளிவந்து சாட்சி சொன்னவர்களைக் கொல்கிறான்.

தாய்மை நிலையும், குழந்தைகளும், அவை திருமண உறவில் ஏற்படுவதாயினும், அவ்வுறவின்றி ஏற்படுவதாயினும் சரிசம சமூகப்பாதுகாப்பு அனுபவிக்கும் உரிமை இருப்பதாகக் கூறப்படுகிறது. காதலன் கைப்பிடிப்பான் என்ற நம்பிக்கையில் கரு சுமக்கும் அபலைகளை எத்தனை குடும்பங்கள் ஏற்றுக்கொள்கின்றன? நம்பிக்கையால் ஏமாற்றப்பட்ட அந்த அபலைகளையும் பிறக்கும் குழந்தைகளையும் பாவச்சின்னங்களாகக் கருதுவார்களேயன்றிச் சமூகப்பாதுகாப்புக் கொடுக்கும் குடும்பங்கள் எத்தனை? சில பெண்குழந்தைகள் எழுந்து நடக்கமுன்பே ஆண் என்றால் என்ன என்பதை அறிந்துவிடுகின்றனரே. குழந்தை முதல் பாட்டி வரை பாலியற் கொடுமை நிகழ்த்தப்படுகின்றதே. கருவறை தவிர, வேறெங்கும் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லையா? இந்நிலை தொடர்ந்தால் முந்நாளில் அயல்நாட்டில் சில மாநிலங்களில் பெண்குழந்தை பிறந்தால் கள்ளிப்பால் தந்து கொன்றுவிடுவது போல் நம்நாட்டிலும் ஒருகாலத்தில் நடக்கக்கூடும். அதற்குமுன் சட்டம் பெண்களைக் காக்கட்டும்.

பெண்களின் பொருளாதாரத் தேவையை ஆதாரமாக வைத்துக் கொண்டு எத்தனை தொலைக்காட்சிகள் அவர்களைப் போகப் பொருளாகக் காட்டுகின்றன? பெண்ணுக்கும், காட்சிப்படுத்தப்படும் பொருளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லாமலிருந்தாலும் பாதி ஆடையோடு பெண்களைக் காட்சிப்படுத்திப் பணம் சம்பாதிக்கின்றனர். புத்தகங்களிலாகட்டும் பத்திரிகைகளிலாகட்டும், குடும்பப்பாங்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களைப் படமாகத் தீட்டும்போதுகூட உடற்பாகங்களை வெளிப் படுத்திக் காட்டிப் பிழைப்பு நடத்துபவர்களே அநேகமுள்ளனர். இவர்கள் தம் வீட்டில் இருக்கும் பெண்களைப் பார்ப்பது எவ்வாறு? இவ்வாறி ருக்கையில் பெண்களுக்கு முன்னேற்றம் எவ்வாறு கிடைக்கும்?

ஆணும் பெண்ணும் சரிசமமாக எத்தகைய வேலைவாய்ப்பாயினும் தமது தகுதியடிப்படையில் தெரிவுசெய்யப்படுகின்ற இக்காலகட்டத்தில் கூட நிறுவனங்களில் பெண்தலைமையை ஏற்றுக்கொள்ள மறுக்கும் சிலர் இல்லாமலில்லை. திறமையைக் கொண்டு போட்டி போட முடியாத சிலர் பெண்களின் தனிப்பட்ட வாழ்க்கையை, அவர்களது ஒழுக்கத்தை விமர்சிப்பதன் மூலம் அவர்களை அடக்க முயற்சிக் கின்றனர். எத்துறையாயினும் அவரவரது வினைத்திறனுக்கேற்பவே பிரகாசிக்க முடியும். தவறுவிடுவது மனித இயல்பு. ஆயினும் பெண்கள் விடும் தவறுகள் விமர்சிக்கப்படுவது அதிகம். உதாரணமாக, ஒரு பெண் நிர்வாகியின் நிர்வாகத்தில் சில குறைபாடுகள் இருந்தால் பெண்கள் நிர்வாகத்திற்குப் பொருத்தமானவர்கள் அல்லர் என்று முடிந்த முடிபாகக் கூறி விடுவர். ஆண் நிர்வாகிகள் தவறுபுரியவில்லையா என்பதைச் சிந்தித்துக்கூடப் பார்க்கமாட்டார்கள். பெண்களின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு அவர்கள் போடும் தடைக்கல்லிது.

பெண்கள் பல துறைகளிலும் முன்னேறிவிட்டார்கள். அவர்கள் இல்லாத தொழில் எதுவுமே இல்லை எனலாம். அலுவலகங்களாயினும், பாடசாலைகளாயினும், பெண்பாலாரின் எண்ணிக்கையே அதிகமாகக் காணப்படுகிறது. கற்பூரம் வாங்கக்கூடக் கணவனின் கையை எதிர்பார்த்திருக்கும் பெண்கள் இன்று இல்லை. ஒவ்வொரு பெண்ணும் குடும்பத்தின் பொருளாதாரத் தேவையை நிறைவேற்ற ஏதோ ஒரு வழியில் முயற்சிக்கின்றாள். மாதர் சங்கங்கள் மற்றும் நிறுவனங் களூடாகச் சுயதொழில் கடன்கள் வழங்கப்படுகின்றன. அத்தோடு உழைப்பிற்காக அரபு நாடுகளுக்குச் செல்கின்றனர். ஒரு விதத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் தம் பொருளாதாரத்தில் தன்னிறைவடைவது மகிழ்ச்சி யாயினும், மறுபுறம் இத்தன்னிறைவு குடும்பங்களின் கட்டுப்பாட்டைச் சீர்குலைக்கின்றதோ என்ற எண்ணமும் எழாமலில்லை. தம்பதி களுக்கிடையான சிறு சிறு முரண்பாடுகள் பெரிதாக்கப்பட்டு விவா கரத்தில் முடிகிறது. கணவனை யிழந்த பெண் மறுமணம் புரிவது வரவேற்கத்தக்கது. ஆனால் அடிக்கடி விவாகரத்துக்களும் மறுமணங் களும், விட்டுப்பிரிவதும் அதிகரித்துச் செல்வது, எதிர்காலச் சமூ கத்தை எவ்வாறு பாதுகாத்து நல்வழிக்கு இட்டுச்செல்லும்? இத் தகைய குடும்பங்களிலுள்ள சிறுவர்களின் நிலை மிகக் கவலைக் கிடமானது. இருப்பிடம் தந்தையுடனா அல்லது தாயுடனா என்று ஆரம்பித்து இறுதியில் பேரன், பேர்த்தியுடன் அல்லது உறவின ருடன் அல்லது அயல் வீட்டாருடன் என்று முடிகிறது. பெற்றோரி ருந்தும் அநாதைகளாக்கப்படுகின்றனர். இவ்வாறான பிள்ளைகளில் சிலரே எதிர்காலச் சமூகத்தின் விரோதிகளாக மாறுகின்றனர். பணத் திற்காக அரபு நாடுகளுக்குச் செல்லும் சில பெண்கள் தம் பிள்ளை களை இழந்து, கணவனைப் பிரிந்து, தொழில் தருநர்களால் துன்புறுத் தப்பட்டு மனநலம் பாதிக்கப்பட்டவர்களாக அல்லது உயிரற்ற உடல் களாகத் திரும்பி வருவதும் உண்டு. வெளிப்படையாக முன்னேற்றமாகத் தோன்றும் சில அம்சங்கள் கூட மறைமுகமாகத் தீமையைத் தருகின்றன.

பெண்களின் முன்னேற்றத்தைச் சீர்குலைப்பதில் தொடர்நாடகங்களும் பங்களிக்கின்றன. பெண்களை எவ்வளவு மோசமானவர்களாகக் காண்பிக்க முடியுமோ அவ்வளவு கீழ்த்தரமானவர்களாகக் காட்சிப் படுத்துகின்றனர். அடுத்தவர் குடும்பத்தைச் சிதைப்பது எப்படி, நம்பிக்கைத்துரோகம் செய்வது எப்படி, சிரித்துக்கொண்டே சிறையில டைப்பது எப்படி, இன்னும் ஒருபடி மேலாகத் தான் பெற்ற பிள்ளையின் குடும்பத்தைப் பிரிப்பது எப்படி, கட்டிய கணவனைப் பழிவாங்குவது எப்படி இவைக்கெல்லாம் நம்பமுடியாத உத்திகளைக் கற்றுத் தருகின்றன. கொடூரமான முகபாவனைகளுடன், ஆணவ அலறல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும், அட்டூழியங்களும் பார்க்கச் சகிக்கமுடியாதளவுக்கு அதிகரித்துச்செல்கின்றன. ஆனால் பள்ளிவிட்டு வந்த பிள்ளைக்கு உணவு தரக்கூட மறந்து தொலைக்காட்சி முன்பு தவம் கிடப்பதும் இதே பெண்கள் தான். நடிப்பவர்கள் உழைக்கிறார்கள். பார்ப்பவர்களுக்கு என்ன கிடைக்கிறது? பொழுதுபோக்கு என்று ஆரம்பித்து இறுதியில் கிடைப்பது நேர இழப்பும், குடும்ப முரண்பாடும், தலைவலியும் தான். இதனால் எந்த முன்னேற்றமும் கிடைக்கப்போவதில்லை.

நம் நாட்டில் சட்டம் கடுமையானதாக்கப்பட வேண்டும். சட்டத்தில் காணப்படும் சில நெகிழ்ச்சித் தன்மையைப் பயன்படுத்தியும் சட்டத்தரணிகளின் வாதத்திறமையைப் பயன்படுத்தியும், அரசியல் தலையீடுகளாலும் குற்றவாளிகள் தப்பித்துக்கொள்கின்றனர். நூறு குற்றவாளிகள் தப்பினாலும் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்று கூறிக்கூறிக் குற்றவாளிகள் மலிந்த பிரதேசமாக நம்நாடு மாறிவிட்டது. சமூகவிரோதச் செயல் ஒன்றில் சந்தேகநபராக இனங் காணப்படுபவர் பற்றிய தகவலும், விமர்சனமும் பத்திரிகைகளில் வெளியிடப்படும்போது, அவர் ஏற்கனவே இவ்வாறான செயல்களில் ஈடுபட்டுத் தண்டனை பெற்றவர் அல்லது பிணையில் வெளிவந்தவர் என்று குறிப்பிடப்படுவது வழமையாகிவிட்டது. உதாரணமாக, புங்குடுதீவுக் கொடூரக் கொலைச் சந்தேகநபர்கள் ஏற்கனவே பல திருட்டுக்கள், கொலை போன்றவற்றில் ஈடுபட்டவர்கள் என்று கூறப்படுகிறது. இதன் மூலம் நாம் உணர்வது ஒன்று மட்டுமே. நம் சட்டங்கள் வழங்கும் தண்டனை கடுமையானதாக இல்லை.

குற்றம் ஒன்றுக்குத் தண்டனை வழங்கும் போது குறைந்தபட்சம், அதிகபட்சம் என்ற எல்லைகள் காணப்படுகின்றன. அனைத்துக் குற்றங்களுக்கும் அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாகத் தண்டனைச் சட்டக்கோவை 363ல், பாலியல் வல்லுறவுக்கு ஏழு வருடங்களிலிருந்து 20 வருடங்கள் வரையான சிறைத்தண்டனை, அல்லது நட்டஈடு அல்லது இவையிரண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படலாம் என்றால், 20 வருடச் சிறைத்தண்டனையும் நட்டஈடும் சேர்த்தே வழங்கப்படவேண்டும். 16 வயதிற்குட்பட்ட பிள்ளை மீது புரியப்பட்ட வல்லுறவுக் குற்றத்திற்கு 15 வருடங்கள் முதல் 20 வருடங்கள் சிறைத்தண்டனை அல்லது நட்டஈடு அல்லது இரண்டும் வழங்கப்படலாமாயின் 20 வருடச் சிறைத்தண்டனையும் நட்டஈடும் சேர்த்தே வழங்கப்படவேண்டும். முதலில் குற்றங்களுக்கு நட்டஈடு மட்டும் வழங்கி விடுபடுவது நிறுத்தப்பட வேண்டும். பணபலமுள்ள அநேக குற்றவாளிகள், சிரித்துக்கொண்டே இலகுவாகத் தப்பிக்கின்றனர்.

தண்டனை, திருந்தி வாழ்வதற்காகவே வழங்கப்படுகிறது. ஆயினும் ஒரு தடவை தண்டனை பெற்று மீண்டும் குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு ஏன் மரணதண்டனை வழங்கக்கூடாது? திருந்தாத மனிதர்களால் சமூகத்திற்கென்ன பயன்? ஒரு குற்றவாளியின் உயிரைப்பற்றிக் கவலைப்படும் சட்டம், ஏன் அவனால் சித்திரவதையை அனுபவிக்கும் சமூகத்தை, பல உயிர்களைப் பொருட்படுத்தத் தவறுகிறது? இரண்டாம் முறையும் குற்றம் செய்பவர்களுக்கு வழங்கப் படும் தண்டனை ஏனையவர்களுக்குப் படிப்பினையாக இருக்க வேண்டும். அனைவரும் பார்க்கக் கூடியவாறாக, அக்குற்றத்தைப் புரிவது தொடர்பாக எண்ணிக்கூடப் பார்க்க முடியாத வகையில் பொது இடத்தில் வழங்கப்பட்டால் என்ன? போதைப்பொருள் கடத்தலில் பிறநாட்டில் தண்டிக்கப்பட்ட நம்நாட்டு மயூரனுக்கு, பத்து வருடங்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு அவர் திருந்தியபின்பு வழங்கப்பட்ட மரணதண்டனை ஏற்றுக்கொள்ள முடியாதாயினும், அவர் அனுபவித்த கஷ்ரங்கள், தண்டனை நிறைவேற்றப்படும் வரை அவரது குடும்பத்தினர் அனுபவித்த அவலம் அனைத்தையும் நேரடியாக அனுபவித்த ஒருவன் இவ்வாறான குற்றச்செயலைப் புரிவதற்குக் கனவில் கூட எண்ண மாட்டான். எனவே தண்டனை கடுமையாக்கப்பட வேண்டும். சமூகத் திற்குக் கேடு விளைவிக்கும் விஷமிகள் பிணையில் வெளிவருவதை முற்றாகத் தடை செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமாக, பெண்களின் உரிமையைத் தடுக்கும் ஏதேனும் வழக்காறு, பாரம்பரியம் மற்றும் மதரீதியான விடயங்களை அரசு தடை செய்யலாம். வீட்டில் அல்லது சமூகத்தில் வன்முறை புரிபவரைத் தண்டிக்க குற்றவியல், குடியியல், தொழில் மற்றும் நிர்வாகச் சட்டங்களில் ஏற்பாட்டைச் செய்வதோடு, சட்டங்களின் வினைதிறனான தன்மையை உறுதிப்படுத்தச் சட்டவாக்கங்களைக் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யலாம். குறைந்த பட்சம் அடிப்படை உரிமைகளில் "இவ்வுறுப்புரை யிலுள்ளதெதுவும் பெண்கள், பிள்ளைகள், இயலாதவர்களின் முன்னேற் றத்திற்காகச் சட்டம் மூலம் அல்லது துணைநிலைச் சட்டவாக்கம் மூலம் அல்லது ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் சிறப்பேற்பாடு செய்யப்படுவதைத் தடுத்தலாகாது" என்று குறிப்பிடப்படுவதற்கிணங்க வாயினும் சிறப்பேற்பாடுகளைச் செய்து பெண்களினதும் சிறுவர் களினதும் பாதுகாப்புக்கும் முன்னேற்றத்திற்கும் உதவுவதோடு பாதிக்கப் பட்டவர்கள் சட்டம் மூலம் நிவாரணம் பெறுமுரிமையை அறியச் செய்வது அவசியமாகும்.

மறுபுறம், குடும்பங்களில் ஏற்படும் விழிப்புணர்ச்சி, சிறுவர் மற்றும் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும். "பிள்ளைகளின் வாழ்க்கை வெள்ளைக் காகிதத்தை ஒத்தது. அவர்களின் வாழ்க்கையூடாகப் பயணிக்கும் அனைத்தும் நீங்காது நிலைத்துநிற்கும" என்பது சீனப்பழமொழி. "பொய் சொன்னால் சாமி கண்ணைக் குத்தும் என்று அச்சப்படும் குழந்தை வளர்ந்து கொலை செய்கின்றது என்றால் யார் காரணம்? குழந்தை பிறக்கும் போது களிமண் போலவே இருக்கின்றது. அதை எந்த உருவமாகப் பிடிக்க வேண்டும் என்பது பெற்றோர் கையில் தான் உள்ளது. சொல்லி வளர்ப்பதை விடக் காண்பித்து வளர்ப்பது சிறந்தது. உரிய வழிகாட்டியாக இருக்க வேண்டிய கடமை பெற்றோர் களுக்குரியது. பெரியவர்கள் கடவுளுக்கும், மனச்சாட்சிக்கும் பயந்து நல்ல காரியங்களைச் செய்தால், அதைப் பார்த்து வளரும் பிள்ளையும் ஆன்மீக பலத்துடன் நற்பண்புகளோடு வளரும். கணவன் தன் தாயை, சகோதரியை மதிப்பது போலவே தன் மனைவியையும், ஏனைய பெண்களையும் மதிக்கும் போது பிள்ளையும் பெண்களை மதிக்கக் கற்றுக்கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய் சொல்லக் கூடாது என்று கூறிக்கூறிப் பிள்ளையை வளர்க்கும் தந்தை, தமக்குக் கடன் கொடுத்தவர் வீடு தேடி வரும் போது, வீட்டில் நின்று கொண்டே அதே பிள்ளையிடம் தான் இல்லை என்று கூறும்படி அறிவுறுத்துகின்றார். இச்சமயத்தில் பிள்ளையின் மனதில், எது மெய்? எது பொய் என முரண்பாடு தோன்றும். இறுதியில் பொய் சொல்லக்கூடாது என்று பிறருக்கு அறிவுரை சொல்ல வேண்டும். ஆனால் நாம் பொய் சொல்லலாம் என்று தீர்மானிக்கும். பொய் திருட்டுக்கு அடிப்படை. இவ்வாறு படிமுறையாகத் தவறுகள் பெருகும்.

பிற உயிர்களை மதிக்கும்படி, அதனிடம் அன்பு செலுத்தும்படி வளர்க்க வேண்டும். நல்ல விடயங்களை விடக் கெட்ட விடயங்களைக் கற்றுக்கொள்வது இலகுவானது. அதே சிறுவரின் மனதை முதலில் கவரும். வன்முறையைப் பார்த்து வளரும் பிள்ளை வன்முறையாளனாக வருவது தவிர்க்க முடியாதது. அண்மையில் பத்திரிகையில் படித்து அதிர்ச்சியடைந்த சம்பவம் ஒன்றை இத்தருணத்தில் குறிப்பிடுவது பொருத்தமாயமையும். பிறநாடொன்றில், உணவுக்காக இறைச்சி கொள்வனவு செய்வதற்காகக் கடைக்குச் சென்ற ஒருவருடன் அவரது 4 வயது மகனும் கூடச் சென்றிருந்தான். அவன் கண்முன்னால் விலங் கொன்று உரிக்கப்பட்டது. வீடு சென்ற அவன், பெற்றோர் கவனிக்காத சமயம் கத்தியெடுத்துத் தூங்கிக்கொண்டிருந்த தனது ஒன்றரை வயதுத் தம்பியின் நெஞ்சில் கீறி உரிக்க முயன்றுள்ளான். உடனடியாகக் கவனிக்கப்பட்டதால் குழந்தையின் உயிர் காப்பாற்றப் பட்டது. இது யார் தவறு? குழந்தைகள் கண்ணாடி போன்றவர்கள். பார்ப்பதையே பிரதிபலிக்கிறார்கள். முழு அவதானத்துடன் இருந்து அவர்களை நற்பிரஜையாக உருவாக்குவது பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் கையில் உள்ளது.

அநேகமான பிள்ளைகள் தமது வீட்டில் நல்லவர்களாகக் காட்டிக் கொள்கின்றனர். வாசல் தாண்டியதும் நம்பமுடியாத துர்நடத்தைகளில் ஈடுபடுகின்றனர். இது தொடர்பில் பெற்றொரிடம் காணப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தவறு, இது தொடர்பில் போதிய அவதானம் செலுத்தாமையே. இக்காலப் பிள்ளைகள் தொடர்பில் அளவுக்கதிகமான நம்பிக்கை வைப்பது நல்லதல்ல. பிறர் தமது பிள்ளைகள் தொடர்பில் ஏதாவது தகவல்கள் கூறினாலும் அதைப் பொருட்படுத்தாமல் சொன்னவர் களுடனேயே முரண்படுவார்கள். பிறரிடம் தம் பிள்ளையை விட்டுக் கொடுக்காமல் கதைப்பது அவர்களது அன்பு சம்மந்தப்பட்ட விடய மாயினும், அக்கூற்றை ஒரேயடியாகப் புறக்கணிக்காது இரகசியமாகக் கண்காணிக்க வேண்டியது அவசியம். அவசியமற்ற வசதிகளைப் பிள்ளைகளுக்கு வழங்காது, தேவையான விடயங்களில் நெகிழ்ச்சிப் போக்கைக் கையாண்டு ஆளுமையுள்ள நற்பிரஜையாக உருவாக்க வேண்டியது பெற்றோர் கடமை. பெற்றோர் தம் கடமையைச் சரிவரச் செய்தால் சட்டத்திற்கு வேலையே இருக்காது. சமூகமும் நல்ல ஆரோக்கியத்தோடு இருக்கும்.

எனவே, முதலில் பெற்றோர்கள் தமது கடமையைச் சரிவரச் செய்தால் நாட்டிலுள்ள குற்றங்களில் பெரும்பகுதி இல்லாமற்போகும். சட்டத்துறை மற்றும் பாதுகாப்புத்துறை தம் கடமையைச் சரிவரச் செய்தால் மீதமுள்ள சிறுபகுதிக் குற்றங்களும் ஒழிந்துவிடும். இதில் நாட்டு மக்கள் அனைவருக்கும் பங்குண்டு. ஒவ்வொருவரும் விழிப்புடனும், மனிதத்தன்மையுடனும் இருப்பது அவசியம். அவ்வாறிருந்தால் மட்டுமே சிறுவர்களும் பெண்களும் பாதுகாப் பாகவும், சுயமரியாதையுடனும் வாழ முடியும். எந்த நாட்டில் சிறுவரும் பெண்களும் பாதுாப்பாகவும், மரியாதையுடனும் வாழ முடியுமோ அந்த நாடே சிறந்த நாடாக வரலாற்றில் இடம்பிடிக்கும்.

**(மாவட்டச்செயலக சிறுவர் பெண்கள் பிரிவினரால் 2016ல் வெளியிடப்பட விருந்த மாவட்ட சிறுவர் செய்தி மடலுக்காக எழுதப்பட்டது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ. காலம் கடந்[த] [தும்] கர்நாடக இசை

இசை ஒரு உலக மொழி. இன மத பிரதேச வேறுபாடற்ற, அனைவருக்கும் பொதுவான, மனிதனை மட்டுமன்றி அனைத்து உயிரினங்களையும் தன்பால் இசைய வைக்கக்கூடியது என்பத ணாலேயே இதற்கு இசை என்ற காரணப்பெயர் ஏற்பட்டது என்பர். பண்ணோடு பாடப்படும் திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத் திற்கும் உருகார் என்பது பழமொழி. இசையைக் கேட்பதால் மனிதன் மட்டுமன்றி விலங்குகள், ஊர்வன, பறப்பன, மரம், செடி, கொடிகள் கூடப் பயனடைவதாகப் புராண இதிகாசங்கள் கூறுகின்றன. இசைக் கருவிகளிலிருந்து உருவாகும் இசை மூலம், சாந்தி, சமாதானம் ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கூறப்படும் அதே நேரம் இசை மூலம் விலங்கு மற்றும் மரங்களிலிருந்து அதிக பயனை அடையமுடியும் என்பது விஞ்ஞான ஆராய்ச்சி மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இசை அப்பியாசம் மூலம் நுரையீரல் பலம்பெற்று நோய்கள் அணுகாதிருக்கும் என்பதும் வாத்தியங்களைக் கையாள்வதன் மூலம் கை மற்றும் விரல் களுக்கு நன்மை கிடைக்கும் என்பதும் மருத்துவ உண்மைகளாகும்.

இலங்கையில் விஜயனுடன் வந்த பரிவாரங்கள் மூலம் இந்திய இசை அறிமுகப்படுத்தப்பட்டதாகவும், பின்பு படிப்படியாக, பாண்டிய நாட்டுடன் திருமண உறவு மூலம் கர்நாடக இசை இங்கு புகுத்தப் பட்டிருக்கலாம் என்றும், இலங்கையின் வடபுலத்தை ஆண்ட தமிழ் அரசர், இந்திய சோழருடன் உறவு ஏற்படுத்தியதால் கர்நாடக இசை வடபுலத்தில் வலுவானது என்றும் கூறிக்கொண்டாலும் புராண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திலேயே இலங்கேஸ்வரன் சிறந்த இசை விற்பன்னன், வீணை வித்துவான், வீணைக்கொடியோன், சாமகானம் இசைத்தவன் என்ற குறிப்புக்களினூடாக இலங்கையின் இசைப் பாரம்பரியம் புலப்படுத் தப்படும்.

இலங்கையிலே இசை, பல்கலைக்கழகப் பட்டத்துக்குரிய கல்வியாக இல்லாதிருந்த காலத்திலே, ஈழத்தவர்கள் இந்தி யாவுக்குச் சென்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்றனர். இவ்வாறு சென்றவர்களில் பாலசுப்பிரமணிய ஐயர் மற்றும் பே. சந்திர சேகரம் ஆகிய இருவரும் "சங்கீத பூஷணம்" எனும் பட்டத்தை முதலில் பெற்றனர். இதன் பின்பு கர்நாடக இசை ஈழத்தில் வலு வடையத் தொடங்கியது. எனினும் போதியளவு ஆசிரியர்கள் இல்லாமையால் பிரபலம் வாய்ந்த பாடசாலைகளில் மட்டும் இசை ஒரு பாடமாகப் போதிக்கப்பட்டது. 1960 களில் மருதனார்மடத்தில் "இசை அக்கடமி" என்ற இசைப்போதனை நிலையம் உருவாக்கப்பட்டு இலங்கை மற்றும் இந்திய இசை விற்பன்னர்களால் வகுப்புக்கள் நடாத்தப்பட்டு, "சங்கீத ரத்னம்" என்ற பட்டமும் வழங்கப்பட்டது. இந்நிறுவனம் 1980களில் பல்கலைகழகத்தின் ஒரு பிரிவாக்கப்பட்டுப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

இது தவிர யாழ்ப்பாணத்தில் கல்விப் பணிமனையினர் வட இலங்கைச் சங்கீத சபை எனும் நிறுவனத்தை 1931ம் ஆண்டு நிறுவி இசைப் பரீட்சைகள் நடாத்தி இசை வளர்ச்சிக்கு அரும் பங்களிப்புச் செய்துவருகின்றனர். கர்நாடக சங்கீதத்தின் தரத்தை உயர்த்துதல் இதை ஊக்குவிக்க விழா எடுத்து உற்சாகப்படுத்துதல், இசை நூலகம் உருவாக்கி இசைப்புத்தகங்கள், பதிவேடு மற்றும் பண்டைய வாத்தி யங்களைச் சேகரித்துப் பாதுத்தல் ஆகிய நோக்கங்களைக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சபை, ஒன்று முதல் ஆறாந் தரப்பரீட்சைகளை நடாத்தி இன்று பட்டமளிப்புவிழா நடாத்துமாளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளது. இச் சபையின் பொன்விழா நிகழ்வில், கலையரசு ந. சொர்ணலிங்கம் அவர் களுக்கு "நடிககேசரி" என்ற பட்டமும் உடுவில் நா. சண்முகரத்தினம் அவர்களுக்கு "இசைவேந்தன்" பட்டமும், கீதாஞ்சலி வே.க. நல்லையா அவர்களுக்கு "நாட்டிய ஆசிரியமணி" என்ற பட்டமும் வழங்கப்பட்டது. அக்காலத்தில் வயலினுக்கு புத்துவாட்டி சோமசுந்தரம் அவர்களும், தவிலுக்குக் காமாட்சி சுந்தரம் அவர்களும், பண்ணிசைக்குக் குப்பிளான் செல்லத்துரை அவர்களும், புராணபடனத்துக்குப் பொன்னம்பலபிள்ளை அவர்களும், கதாப்பிரசங்கத்துக்கு ஞானசம்பந்த பரமாச்சாரியார் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்களாக இருந்தனர். பிற்காலங்களில் அனைத்துப் பாடசாலைகளிலும், அழகியல் ஒரு பாடமாகக் கொண்டுவரப்பட்டுக் கல்விப் பொதுத்தராதர சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சையிலும் ஒரு பாடமாக இசையைப் பயிலும் வாய்ப்புக்கிட்டியது. இத்துடன் பல்கலைக்கழகத்திலும் உரிய வெட்டுப் புள்ளியிலிருந்து ஓரிரண்டு குறைவாகப் பெற்றவர்கள் அழகியற் பாடங் களை விசேட பாடமாகப் படிப்பதற்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

கர்நாடக இசையை வளர்ப்பதற்குக் கல்வித்துறையினரும், தனியார் மன்றங்களும் முயற்சியெடுத்துவரும் நிலையில் உரிய அடைவுமட்டம் இன்னும் எட்டவில்லை என்பதே வெளிப்படையான தாகும். அநேகமான பெற்றோர், ஆசிரியர் மற்றும் மாணவர்களின் மனப்பாங்கு கர்நாடக இசை சம்பந்தமாக மிகவும் வருந்தத்தக்க நிலையிலேயே காணப்படுகின்றது.

நுண்கலைகள் என்ற தலைப்பின்கீழ் முதலாவதாக இடம் பெறுவது இசையாகும். நுண்கலை என்பதன் கருத்து நுட்பமான பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களைக் கொண்ட கலை என்பதாகும். எனவே இக்கலையில் பண்டித்தியம் பெறுவதற்கு பல்நுட்பங்களைக் கையாளக்கூடியவர் களாகவும், நுண்மதியுடையவர்களாகவும், விவேகம் உடையவர்களாவும் இருக்க வேண்டியது அவசியம். இவ்வாறான மேன்மை வாய்ந்த இக்கலையை, தமிழ்நாட்டு மக்களுடன் ஒப்பிடும்போது எமது மக்கள் நேசிப்பது குறைவு. தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு கலையில் பரிச்சயம் அல்லது ஈடுபாடு உள்ளவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் ஈழத்தில் அந்நிலையை நாம் காணமுடிவ தில்லை.

எம்நாட்டில் கல்வியை மூலதனமாக்கி வாழ்க்கை நடத்து பவர்களே அதிகம். எனவே அவர்கள் மருத்துவம், பொறியியல், கணக்கியல், கணனி போன்ற தொழிற் கல்வியைப் பெறுவதற்கு காட்டும் ஆர்வத்தில் ஒரு பகுதியைக்கூடக் கலைஞர்களாக உருவாவதில் காட்டுவதில்லை. கலைஞர்கள் தம் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்களும் ஏனையவர்களோடு ஒப்பிடும் போது குறைவாகவேயுள்ளது. இதனால் பெற்றோர், பிள்ளைகளின் பாடசாலைக் கல்வியிலே பெரிதும் அக்கறையுடையவர்களாக இருக் கின்றார்கள். பாலர் வகுப்பிலிருந்தே பல்வேறு தனியார் வகுப்புக் களுக்கு மாணவர் அனுப்பப்படுகின்றனர். அவர்களது மாணவப்பருவம் முடியும்வரை கலை முயற்சிகளிலோ விளையாட்டுக்களிலோ பொழுது போக்கு விடயங்களிலோ ஈடுபட நேரம் கிடைக்கமாற் போய்விடுகின்றது.

இசை பயிலவரும் மாணவர்களைப் பொதுவாக நான்கு வகையாகப் பிரிக்கலாம். உண்மையான ஆர்வத்தோடு பயில்பவர்கள், பெற்றோரின் வற்புறுத்தலுக்காகப் பயில்பவர்கள், வேறுவழியின்றிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசித் தெரிவாகப் பயில்பவர்கள், சமூக அந்தஸ்துக்காகப் பயில் பவர்கள். இப்பிரிவினில் முதல் வகையினர் மட்டுமே ஓரளவுக்காவது அத்துறையில் பிரகாசிக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். ஏனை யவர்கள் இப்பரீட்சையில் சித்தியெய்தவோ அன்றித் தம் இசைத் துறையை ஒரு உரிய இலக்குவரையும் இட்டுச் செல்லவோ இயலாத வர்களாகி இடையிலேயே கைவிட்டு விடுவார்கள்.

பாடசாலையிலும் ஏனைய பாடங்களோடு ஒப்பிடும்போது இசைக்கு ஒதுக்கப்படும் பாடவேளை குறைவு. ஆனால் பாடவிதானம் அதிகம். ஏனைய சில பாடங்களை வீட்டில் தனித்தோ அல்லது சில மாணவர்கள் சேர்ந்தோ வாசித்தறியலாம். ஆனால் இசையைப் பொறுத்தவரை நேரடியான குரு ஒருவர் மூலமே திருத்தமாகக் கற்றுக் கொள்ளமுடியும். குறைந்த பாட வேளைகளில் கூடிய பாடப்பரப்பை பாடசாலைகளில் மட்டும் பூர்த்திசெய்ய முடியாது. எனவே இசைக்கும் தனியார் வகுப்புக்குச் செல்வது கட்டாயமாகின்றது. பொருளாதார வளம் குறைந்த குடும்பங்களில் மாணவர்கள், தொழில் வாய்ப்புக்கு அவசிய தகுதியாகக் கொள்ளப்படுகின்ற பாடங்களுக்கே தனியார் வகுப்பிற்கு அனுப்பப்படுவர். இதனால் இசைப் பாடத்தில் உரிய தேர்ச் சியைப்பெற இயலாதவர்களாகின்றனர். இதனால் இப்பாடமே தவிர்க்கப்படும்.

பாடசாலைகளில் பாடங்கள் அட்டவணைப்படுத்தப்படும் போது தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சமூகக்கல்வி ஆகியவை பிரதான பாடங்களாவும் அழகியற் பாடம் இறுதியாகவும் குறிப்பிடப் படுவது இயல்பு. இதனை ஒரு மாணவன் நோக்கும்போது அழகியற் பாடம் மிகவும் வேண்டற்பாலதன்று - இதைக்கற்கப் பயன்படுத்தும் நேரத்தில் இன்னோர் தனியார் வகுப்பிற்குச் சென்று கணிதத்தையோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானத்தையோ கற்பது நல்லது என்ற சிந்தனை ஏற்படும். அத்தோடு அநேகமான கிராமப்புறப் பாடசாலைகளில் அனைத்துப் பாடங்களுக்கும் வகுப்பறை இருக்கும். இசை பயில்வதற்குத் தனி இடம் இருப்பதில்லை. மரத்தின் கீழிருந்து பாடினால் மரம் வளரும் என்ற ஒரு கூற்றைக்கூறி இசையாசிரியையும் மாணவர்களையும் ஒரு மரத்தின்கீழே தள்ளிவிடுவார்கள். இது உண்மையிலேயே இசையை நம் வீட்டிலிருந்து ஒரு கோடியிலே தள்ளி விடுவதற்கு ஒப்பானதாகும். இச்செயற்பாடு ஆசிரியரிடத்திலும் மாணவர்களிடத்திலும் ஒருவிதத் தாழ்வு மனப்பான்மையை உருவாக்கி உரிய அடைவுமட்டத்தை அடை வதில் செல்வாக்குச் செலுத்தும்.

பெரும்பாலும் இசையினுடைய நுட்பங்கள் பற்றியோ, அதைப் பயில்வதில் உள்ள சிரமங்களைப் பற்றியோ இசையில் பரிச்சய மில்லாதவர்கள் அறிந்திருப்பதில்லை. பல பெற்றோர்கள் அழகியற் பாடங்களான இசை, நடனம், சித்திரம் ஆகிய இவற்றில் ஒன்றைத் தெரிவு செய்யவேண்டிய நிலையில் தம்பிள்ளைகள் உள்ளபோது, இலகுவான ஆலோசனை ஒன்றை வழங்குவர். நடனம் பயின்றால் உடைகள், அலங்காரப் பொருட்களுக்குச் செலவு அதிகம். சித்திரம் பயின்றால் கலர், பேப்பர், பெயின்ற் எனச் செலவு அதிகம். சங்கீதத்தைத் தெரிவு செய்தால் ஒரு வெள்ளைப் பாவாடை சட்டை அல்லது வேட்டி தானே. செலவு குறைவு என்பதற்காக ஒரு பாடத்திற்குள் தள்ளப்படும் மாணவரால் அக்கலைக்கு என்ன மதிப்பு அல்லது அந்த மாணவருக்குத் தான் அதனால் என்ன லாபம்? உரிய தேர்ச்சியை அடைய முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுதுறைகளில் உரிய அடைவு மட்டத்தை அடைந்து தமது கல்வியைத் தொடரத் தவறிய அல்லது பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தை இழந்த ஒரு சில மாணவர்கள், இசையை ஒரு பாடமாக கல்விப்பொதுத்தராதர உயர்தரத்தில் கற்ற காரணத்தால் ஒருவாறாக நுண்கலைப் பீடத்திற்குள் நுழைகின்றார்கள். தனியார் வகுப்புக்களுக்குச் சென்றும் கடும் பிரயத்தனப்பட்டும் அல்லது சலுகைகளைப் பெற்றும் மற்றும் செல்வாக்கினைப் பயன்படுத்தியும் பட்டத்தோடு வெளிவரும் இவர்கள் இசையை வளர்க்கச் செய்யப் போகும் பங்களிப்பு என்ன? வாத்தியத்துறையில் பட்டம்பெற்ற பின்பும் அவ்வாத்தியத்தை ஸ்ருதி சேர்க்கத் தடுமாறியவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். பாடசாலைகளில் இசை ஆசிரியர்களாகக் கடமை யாற்றும் இவர்களில் ஒரு பாடலுக்குத் தாமாகவே மெட்டமைத்துப் பழக்கி மாணவர்களைப் போட்டிக்கு அனுப்பும் திறன் எத்தனை பேருக்குண்டு? பாடசாலைகளில் தமிழ்த்தினப்போட்டிகள் வந்துவிட்டால் ஆற்றலும் அனுபவமும் மிக்க பிரபல இசை விற்பன்னர்களின் வசிப்பிடத்தில், பாவரிகளையும் ஒலிப்பதிவுக் கருவியையும் வைத்துக் கொண்டு மெட்டுக்காகத் தவமிருக்கம் இசைப்பட்டதாரிகள் எத்தனைபேர்? ஏன் இவர்களுக்குத் தாமாகவே மெட்டமைத்துப் பயிற்சியளித்துப் போட்டியை எதிர கொள்ளும் ஆரோக்கியமான தன்மை வரவில்லை. எப்போது முயற்சி செய்யப்போகின்றார்கள்?

இசை ஆசிரியர்கள் மாணவர்களின் இசை தொடர்பான சகல எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றும் வகையில் தம்மை வளர்த்துக் கொள்ளவேண்டும். போட்டிகளில் தகுதியான நடுவர்கள் நியமிக்கப்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். போட்டியாளர்களின் பின்புலமோ அல்லது செல்வாக்கோ கவனத்தில் எடுக்கப்படாமல் திறமை அடிப்படையில் மட்டும் தெரிவு செய்யப்பட வேண்டும். இதனால் மட்டுமே இசை தொடர்பான எதிர்கால நம்பிக்கை வலுவடையும். இசையைப் பயில்வதற்கு பலர் முன்வருவர்.

முன்னைய காலங்களில் பொது நிகழ்வுகள் பலவற்றிலும் இசைக்கச்சேரிகள் முதலிடம் பெற்றன. ஆனால் தற்போது அக்கச்சேரி களைச் செவிமடுப்போர் அருகிவருகின்றனர். முன்பு வீடுகளில் இசை யாசிரியர்கள், இசை பயிலும் மாணவர்கள் இருந்தால் அவர்களின் வானொலிப் பெட்டியினூடாக அறிந்துகொள்ளலாம். தற்போது இசைத் துறையிலுள்ளவர்களே இசைக் கச்சேரிகள், வானொலிகள், தொலைக் காட்சிகளில் ஒலிபரப்பப்பட்டால் உடனே அலை வரிசையை மாற்று கின்றார்கள். கிராமங்களிலும் ஒரு சில கோவில்களைத் தவிர ஏனைய கோயில்களில் இசைக்கச்சேரிகள் நடத்தப்படுவதில்லை. திருவிழாக் காலங்களில் மெல்லிசைக் குழுவினரை அதிக பணத்தைச் செல வளித்து அழைத்துவந்து விடியவிடியக் களியாட்டம் நடத்துகின்றார்கள். இசை வளர்ச்சியில் ஆலயங்களுக்கு முற்காலத்தில் இருந்த முக்கிய மான இடம் தற்போது அருகிவருகின்றது. கோயில்களில் மங்கல வாத்திய இசை முக்கியமானது. ஆனால் தற்போது அவர்களும் கோவிலில் இசைப்பதற்குப் பொருத்தமற்ற சினிமாப் பாடல்களைத் தான் அதிகமாக இசைக்கின்றார்கள். இறைவன் வீதியுலா வரும்போது வடக்கு வீதியில் வைக்கப்படும் மங்கல வாத்தியக் கச்சேரி கூட அநேகமான இடங்களில் சினிமாப்பாடல்களை, அதிலும் துள்ளற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களையே குறிவைக்கின்றன. கிராமங்களில் நடைபெறும் ஏனைய பொது நிகழ்வுகளிலும்கூட இரட்டை அர்த்தம் பொதிந்த சினிமாத் துள்ளல் இசைகள் தான் ஒலிபரப்பப்படுகின்றன. இவ்வாறு நிலைமையுள்ளபோது கர்நாடக இசை எவ்வாறு வளரும்?

அழகியற்கலை பயில்வதற்கு மன்றங்கள் பல இருந்தாலும், கட்டணங்கள் குறைவாக அறவிட்டபோதிலும் கற்பதற்கு மாணவர்கள் வருவது குறைவு. அவ்வாறு வருபவர்களும் மேலைத்தேய நடனம், மேலைத்தேய வாத்தியங்கள் பழகுவதில் காட்டும் ஆர்வம் கர்நாடக இசையில் காட்டுவதில்லை. மேலும் தற்போது எம்மக்களிடையே ஏற்பட்டுவரும் கலாசாரச் சீரழிவு, பண்பாட்டுக்குறைவு இவைகளால் எமது அழகியற் கலைகளில் எதிர்காலம் கேள்விக் குறியாகவும் மாறலாம்.

இவ்வாறான கலாசாரச் சீரழிவுகள், மக்களுடைய எதிர்பார்ப்புக்கள் மாற்றமடைதல் புரிந்துணர்வின்மை மற்றும் அறியாமையால் கர்நாடக இசை வளர்ச்சியும், மக்களின் ஈடுபாடும், மாணவர்களின் அக்கறையும் ஒருபக்கத்தால் குறைவடைந்துகொண்டு போனாலும், சிறிய பகுதியினராவது கர்நாடக இசையின் பெருமையை உணர்ந்து அதனை அக்கறையோடு பயின்றும், பயிற்றுவித்தும் வருவதனால் இன்றும் கர்நாடக இசை உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றது. உதாரணமாக, இன்று ஈழத்தில் வாழ்ந்து வரும் சில பிரபல இசை விற்பன்னர்கள் இசைப்புத்தகங்களை இலாப நோக்கற்று வெளியிட்டு மாணவர்களை ஊக்குவிக்கின்றனர். மேலும் குறைந்த ஊதியத்தில் இசை வகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் பயிற்சிப் பட்டறைகளையும் நடத்தி வருகின்றனர். எனினும் கல்வித் துறையினரும், இசை நிறுவனங்களும் இசையை வளர்ப்பதில் பெருமுயற்சி எடுப்பதால் மட்டும் உரிய வளர்ச்சியைப் பெற்றுக்கொள்ள முடியாது. கர்நாடக இசைபற்றிய பொதுமக்கள் மற்றும் பெற்றோரின் மனோநிலை, மாணவர்களின் விருப்புநிலை ஆகிய வற்றிலும் மாற்றம் தானாகவே உருவாக வேண்டும். அதன் பின்பே கர்நாடக இசை உயரிய வளர்ச்சிப் பரம்பலை எட்டமுடியும்.

**(தென்மராட்சிப் பிரதேச செயலகம் மற்றும் கலாசாரப்பேரவையின் வெளியீடாகிய தென்பொழில் - 01 மலருக்காக 2015ல் எழுதப்பட்டது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேனாதிராயர்
# பாராட்டுக்களும்
# வாழ்த்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. பிரிந்து செல்லும் பிரதம நாயகருக்கு விவசாய அமைச்சின் சேவை நலன் பாராட்டுக்கள்

ஆளுமையின் மறுபெயரே எம் அனைவருக்கும் பெரியவரே
தாழ்வென்பதறியாத தன்னிகரில்லாத் தலைவரே
புகழோடு தோன்றிப் புகழோடு சேவை செய்து
எம் அனைவரையும் கலங்கவைத்துப் புகழோடு எமைப்
பிரியும் பிரதம செயலாளர் அவர்களுக்கு சேவைநலன் பாராட்டும்
நன்நாளில் பணிவோடு வாழ்த்துகின்றேன்.

வன்முறைகள் சூழ்ந்தபோதும் வடகிழக்கை வளர்த்து விட்டீர்
வடக்கைத் திடமாக்க விழிமூடாது திட்டமிட்டீர்
வசந்தம் வரும் போது விடைபெற்றுச் செல்கின்றீர்
இழப்பல்ல பேரிழப்பு தங்கள் தலைமை விடைபெறுவது.

திட்டங்கள் உதவிகள் வந்தபோதும் வரத்தயங்கிய போதும்
திடமாக எம்தேவை இதுவென்று தானுரைத்து
வந்த வாய்ப்பை வளமாகப் பயன்படுத்தி
வடக்கு வளரத் தூண்டுகோலானீர்

நாலும் தெரிந்தவர் என்று நாலாயிரம் பேர்கள் பேச
நல்லறிவு வளர்த்தீர் நற்பெயரை வாங்கினீர்
சென்ற இடமெல்லாம் சிறந்த நற்பண்புகளால் தலைமைதாங்கினீர்
நல்லதைப் புரிய வைத்தீர்

குட்டிவைத்து இளைஞர்களை மட்டம்தட்ட நினைக்கையிலே
தட்டிக்கொடுத்துத் தரமான பதவி தான் கொடுத்து
தலைமைப் பண்பைத் தானே வளர்க்கப் பயிற்சி கொடுத்து
வாய்ப்புக் கொடுத்துக் களம் அளித்தீர்

இப்படி இனிமேல் யார்வருவார்?
பதவிகள் வந்துவிட்டால் படைத்தவனை மதிக்காமல் – யார்க்கும்
உதவியும் செய்யாது அதட்டிவைப்போர் உள்ளபோது
நாள் பார்த்து நட்சத்திரம் பார்த்து சுபநேரம்தான் பார்த்து
நல்லவற்றைத் தேடிச் செய்ய மனவலிமை வளர்த்தீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் இல்லா ஊரில் பணிபுரிய வேண்டாமென்று
பாழடைந்த தலத்தைப் புதிதாக அழகு செய்து
பூசையொடு பஜனையும் அலங்காரமும் அன்னதானமும்
அடிபணிந்துகொடுத்து அருந்தொண்டாற்றினீர்

விளங்கவைப்பதில் நல்லாசானாய்க் கணனியில்தகவல் களஞ்சியமாய்ப்
பழகுவதில் பண்பாளராய்த் தோற்றத்திலே ஆறடியாய்த்
தோழமையில் நூறடியாய்வழிகாட்டினீர்கள் வழிநடந்தோம்
பார்வையிலே கம்பீரம் வார்த்தையிலே கனிவு பார்புகழப் பணிசெய்தீர்

பாக்கியம் செய்தோம் தங்கள் கீழ் பணியாற்ற.
தவம் செய்து பெற்ற பயனாய் தவப்புதல்வர் தனை ஈன்று
தமிழர்கள் நன்கு வாழத் தலைமை செய்யத்
தங்களை எமக்களித்த தம்பெற்றோரை அடிபணிந்து வாழ்த்துகின்றோம்.

என்னதான் திறமையாயிருந்தாலும் அன்பான அரவணைப்பும்
அமைதியான சூழ்நிலையும் இல்லறத்தில் இல்லாவிட்டால்
கருத்தொன்றிச் சேவை செய்ய யாராலும் இயன்றிடுமா?
பகலென்றும் இரவென்றும் பாராமல் பாடுபட்டு

புகழோடு சேவை செய்யப் புத்தூக்கம் தந்திட்ட தம்
துணைவியார் அவர்களையும் அன்பாக வணங்கி வாழ்த்துகிறோம்
செய்த சேவை போதுமென்று இடைநடுவில் விட்டிடாது
எத்தனையோ வழியினிலே ஏதோ ஓர் வழியில்

எமக்கு வழிகாட்டிட இரந்து தங்களை வேண்டுகின்றோம்.
தொடர்ந்து வரும் காலங்களும்
தொடர்சேவையில் அமைதியாகக் கழிய உளமார வாழ்த்துகிறோம்.
செய்த சேவையையும் பாராட்டுகிறோம்

**(வட மாகாண முன்னாள் பிரதம செயலாளர் திரு. ரங்கராஜன் அவர்களின் பிரியாவிடை நிகழ்வின் போது சமர்ப்பிக்கப்பட்டது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௨. பிரிந்து செல்லும் விவசாய அமைச்சின் செயல் வீரரை வாழ்த்தும் பா

**வி**வசாயக் கலாநிதியே விளைநில விற்பன்னரே
எவர்க்கேனும் ஒப்பில்லா எத்துறையும் வல்லவரே
விவசாயம், கால்நடை, வழிந்தோடும் நீர் காணி
பவரோடு ஆட்சிசெய்த பண்பான சந்திரரே

பிறநாட்டில் பிறந்தாலும் பெற்றோரின் திருநாட்டை
மறவாது பணிசெய்ய மகிழ்வுடனே தேர்ந்தெடுத்தீர்
மூங்கிலாய் நெடிதுயர்ந்த முப்பதொடு நாலாண்டு
தூங்காது ஓர்கணமும் துடிப்போடு சேவை செய்தீர்

விவசாய ஆசிரியராய், விவசாய உதவிப்பணிப்பாளராய்,
விவசாயப் பணிப்பாளராய் வடகிழக்கில் வலம்வந்தீர்
திட்டமிடல் பணிப்பாளராய்த் துண்டுபட்ட கிழக்கிலும்
பட்டங்கள் சிலபெற்றுப் பதவிகள் பலபெற்றீர்.

எளிமையின் மறுபெயரே எல்லோர்க்கும் இனியவரே
துளியேனும் செருக்கில்லாத் தூய்மையான மனதுடையீர்
எளியோரும் அருகில்வந்து எந்நேரமும் சேவை பெற
தெளிவான தளமமைத்தீர் தெவிட்டாத சேவை தந்தீர்

தமிழோடு சிங்களமும் தாபனமும் கணக்கியலும்
அமிழ்தான ஆங்கிலமும் அதிரடியாய்க் கலந்துவர
தெரியாத பகுதியில்லை தெளிவாகக் கற்றுணர்ந்தீர்
புரியாதது புரியவைத்தீர் புகழோடு சேவை செய்தீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன உருவம் சிரிப்பிலே சிறுவன்சாயல்
மின்னும் நெற்றியில் மிளிரும்தினம் திருநீறு
புன்னகை தவழ்ந்திடப் பெருங்கதைகள் சொல்லும்பாவம்
என்னசொல்லி நாம்வாழ்த்த எல்லோரும் அறிந்ததுதான்.

கடமையில் ஒழுங்கு கண்ணியம் கட்டுப்பாடு
புடத்தில் போட்டெடுத்த பொன்னனைய நன்மனம்
வடக்கிலே வீசவந்த வசந்தத்தில் எமதமைச்சைத்
திடமாக உயர்த்திடத் திட்டங்கள் பலவகுத்தீர்

செயலாளர் என்றாலும் செருக்கென்பது ஒன்றுமில்லை
சுயமாக வேலைகளைச் சுருக்கமுடிக்கும் பண்பாளர்
எந்தத் தரத்திற்கும் எளிதில் இறங்கிவந்து
சிந்திப்பது மட்டுமல்ல செயலையும் முடித்திடுவீர்

கதிரையில் நாள்முழுதும் கட்டுப்பட்டு இருக்காது
குதித்தோடி ஒவ்வோரிடமும் குழப்பங்கள் தீர்த்திடுவீர்
எமதாசை சிலசொன்னால் ஏற்றதை முடித்திடுவீர்
உமக்கிணை நீரே தான் உம்போல எவருமில்லை.

கடமை லீவெனினும் கட்டாயம் பட்டியல்வரும்
திடமாக இன்னென்ன செய்திடல் வேண்டுமென்று
தூரமாக இருந்தாலும் துளிக்கொரு கோல்வரும்
பாரமாக இருக்குதையா பதவியில் ஓயக்கண்டு

ஏதோ ஓர்நாளில் அருமையாக லீவெடுப்பீர்
ஏதோ ஓராலயத்தில் ஏதோவோர் திருவிழாவாம்
வெள்ளி வந்தால்போதும் விரைந்திடுவீர் நடேசனிடம்
தள்ளித்தான் போகிறீர் தாங்கவும் முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குப்பின் தான் தானம் என்றாலும்
தன்குடும்பத்தைப் பின்தள்ளித் தனதமைச்சைக் காத்திடுவீர்
வாரத்தில் ஏழுநாளும் வந்துசேவை புரிந்திடுவீர்
ஈர விழிகளுடன் ஈர்கரம்கூப்பி வாழ்த்துகின்றோம்.

எமதமைச்சில் உமதிடத்தை எவர்வந்து நிரப்பிடினும்
உமைப்போல ஒருவரில்லை உரிமையாய் நாம்பழக
பிரியமனம் வரவில்லை பிரியமான உமைஎனினும்
பிரியாவிடை தருகின்றோம் பிரிந்துநீர் போவதனால்

ஓய்வுஉம் சேவைக்கல்ல இப்பதவி ஒன்றுக்குத்தான்
தேய்வில்லா உமதறிவு தேசத்திற்கு ஒளிதரட்டும்.
சூழ்க உம்தொடர் வாழ்வில் சுடர்விடும் சந்தோஷம்
வாழ்க எம் ஞானச்சந்திரன் ஐயா வளமுடன் நீடுவாழ்க.

(வட மாகாண விவசாய அமைச்சின் முன்னாள் செயலாளர் திரு.ஞானச்சந்திரன் அவர்களின் பிரியாவிடை நிகழ்வின் போது சமர்ப்பிக்கப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. வாழ்த்துப் பா

இலக்கியம் இன்றைக்கு இரண்டாம் பட்சமாச்சு
அலட்சியம் அணுகியதால் அரங்கேற்றம் அருகிப்போச்சு
அரங்கொன்று ஏறினாலும் அழைத்தால்தான் அன்பர்கள்
இரங்கி இறைஞ்சுவார் இறுதிவரை இருங்களென்று

எதையென்றே தெரியாமல் எங்கெங்கோ தேடுகின்றார்
சிதைகின்ற பண்பாட்டைச் சீர்படுத்தும் நாட்டமிலர்
இடையிடையே இதுபோன்ற இன்மலர்கள் மலர்வது-எம்
அடையாளம் தனைக்காத்து அகத்திற்கும் இனிமைதரும்

கண்ணியம் தரும்தோற்றம் கனிவான நகைமுகம்
மண்ணின் மணம்கமழும் மடைதிறந்த வெள்ளப்பேச்சு
சிறுகதை கட்டுரையோடு சீரடிப்பாடல் புனைதல்
மறுக்காமல் பலவரத்தை மந்துவிலும் தந்ததுவோ?

ஆசிரியராய்ச் சிலகாலம் அதிபராயப் பலகாலம்
நேசிக்கும் உள்ளத்துக்கு நேர்மையாய் முழுக்காலம்
கோவிற்பணி கிராமப்பணி கட்சிப்பணி சங்கப்பணி
சேவைகள் போதாதென்று சிறுகவியாய்ப் புதுத்தோற்றம்

ஓய்வுநிலை கண்டபின்பும் ஓயவில்லை உம்பணிகள்
ஆய்வுநிலை தொடர்கிறது ஆதாரம் இம்மலர்தான்
ஈழத்து இலக்கியத்தில் இனியபல முகங்களுண்டு
வாழ்கின்ற காலமதில் வரவேண்டும் அதிலொன்றாய்

பாலகர் பாவெழுதும் பாலசுப்பிர மணியரேநீர்
பல்லாண்டு பாரில்வாழ்ந்து பலகவிகள் படைக்கவேண்டும்
வாழ்த்திறுக்கும் வயதில்லை வணங்கியே பிரார்த்திக்கின்றேன்
வாழவேண்டும் வளமுடன் வளர்கின்ற புலமையுடன்.

(திரு. மு. பாலசுப்பிரமணியம் - ஓய்வுபெற்ற அதிபர். யா/சந்திரபுர ஸ்கந்தவரேதய மகாவித்தியாலயம் அவர்களின் கவிதை நூலுக்கு 2017ல் வழங்கிய வாழ்த்துப்பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரங்கற்பாக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. அஞ்சலிக்கிறோம்...

காற்றோடு வந்த செய்தி
கனவாகிப் போகாதோ
நேற்றிருந்த உமதுருவம்
நிஜமென்று ஆகாதோ

அன்பான உம் பேச்சு
அதிராத அழகு நடை
பண்பான புன்சிரிப்பு
பதறாத செயற்பாடு

கீர்த்திமிக்க நெடும் சேவை
கொடும் முடிவு வரக்கண்டு
வார்த்தை வர மறுக்கிறதே
விழிகளிலே நீர் நிறைகிறதே

பணிப்பாளராய் பலகாலம்
பதிற்செயலாளராய்ச் சிலகாலம்
துணிவாகச் சேவை செய்தீர்
திரும்ப உமைக் காண்பதெப்போ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமதமைச்சில் உமதிடத்தை
இனி நிறைக்க யாருமில்லை
உமது பண்பு கண்டவர்கள்
உமை மறக்க வழியுமில்லை

எமை மறந்து சென்றுவிட்டீர்
இருந்தாலும் உமது ஆத்மா
அமைதியில் ஆழ்ந்துறங்க
அஞ்சலிக்கிறோம் ஏற்றுக்கொள்க!

(வட மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் அமரர் சி.சர்வலோகநாதன் அவர்களின் இறுதியஞ்சலி நிகழ்வின் போது சமர்ப்பிக்கப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. மனிதருக்குள் மாணிக்கமாய்...

சுற்றுகின்ற சுந்தரப் பூமியில்
சுருக்கமான மானுட வாழ்க்கையில்
பற்றி நிற்கும் உறவுகள் ஆயிரம்
பாடி முடித்த கவிகளும் ஆயிரம்

கல்வெட்டில் கவியெழுதி வணங்கக்
காலம் விரையுமென்று நினைக்கவில்லை
பொல்லா விதி வந்ததால் விழி
பொங்க எழுதுகின்றோம் ஏட்டினிலே

கோணநாதர் குடியிருக்கும் கோண மலையினிலே
காணக் கண் நிறைந்த கிளிவெட்டிக் கிராமமதில்
சின்னத்தம்பி எனும் சீர்நிறைந்த குலமகனும்
அன்னப்பிள்ளை எனும் அன்பான குலமகளும்

தரணியிலே செய்த தவத்தின் திருப்பயனாய்
வரமாக வந்துதித்தீர் வாழ்வாங்கு வாழ்வதற்கு
எழுவரிலே ஒருவராக ஏழ்மையிலே உழன்றாலும்
தொழும்பண்பு தனை நீரும் தொட்டிலிலே வளர்த்திட்டீர்

முக அழகு பார்க்கையிலே முன்னலர்ந்த பூ தோற்கும்
அக அழகு நோக்கையிலே அன்னைக்கு நிகராகும்
நடந்து நீர் போகையிலே நாணலும் தலை நிமிரும்
தொடர்ந்து பழகையிலே திகட்டாத அன்புதரும்
வந்தாறு மூலைதனில் வளர்கல்வி தான்கற்று
பிந்தாது திருமலையில் உயர்கல்வி தனைக்கற்று
பேராதனை சென்று பேர்விளங்கப் பட்டம்பெற்று
ஊரார் மகிழ உயர் பொறியியலாளரானீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் ஓர்துணை வேண்டுவது நியதியாம்
ஏழ்பிறப்பும் தொடர்ந்துவர எழில் சிவபவானியும்
கிடைத்த நற்பயனாய் குலமகனாய் பவித்திரனை
அடைந்திட்டீர் ஆனந்தமாய் அகிலம் தான் அறிய

சிறிய வயதினிலே சேவைக்காய் களம் புகுந்து
அரிய பல பணிசெய்தீர் அறிஞரோடு தானிணைந்து
வடகிழக்கில் இருந்தாலும் வடக்கில் இருந்தாலும்
குடவிளக்காய் இருக்கவில்லை குன்றில் விளக்காய் இருந்திட்டீர்

மீன்பாடும் தேனாடும் மதிநிறைந்த திருமலையும்
வானுயர்ந்த உம்சேவை வரக்கண்டு மகிழ்ந்ததுவே
நீர்ப்பாசனத் துறையினிலே நீண்டு செய்த சேவையிலே
பேர் பதிந்ததுவே இணைந்திருந்த மனங்களிலே

நல்மகனாய் சகோதரனாய் மணாளனாய் தந்தையாய்
கல்வியில் கலங்கரைவிளக்காய் கடமையிலே சேவகனாய்
பணிப்பாளராய் செயலாளராய்ப் பிரதான பொறியியலாளனாய்த்
துணிவாகச் சேவை செய்தீர் தூரத்தான் போய்விட்டீர்.
அவனியில் பிறந்தோர் அனைவரும்
அமரராவது என்றோ நிச்சயம்
இவரைப்போல் ஒருவர் இனிமேல்
உதித்திடுவாரோ இல்லை நிச்சயம்

கண்முன் நின்று கடமைசெய்த
காலமது கனவாய்க் கரைய
விண்ணில் நின்று வழிகாட்டிடுவீர்
விழிநீர் மல்க வணங்கி வேண்டுகின்றோம்.

**(வட மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் அமரர் சி. சர்வலோகநாதன் அவர்களின் இறுதியஞ்சலி நிகழ்வின் போது சமர்ப்பிக்கப்பட்டது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூலாசிரியரைப் பற்றி...

செல்வி ரஞ்சனா நவரத்தினம், தென்மராட்சி மண்ணின் கலைத்துறை வரலாற்றுப் பக்கங்களில் நுணாவில் தந்த பரிசு. எனது மாணவிகளில், யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் புதல்விகளில் ஒருவரது ஆளுமையின் படைப்புக்களைக் கண்டு பெருமிதப்பட்டு நிற்பவர்களுள் நானும் ஒருத்தியாக இணைந்து கொள்வது மகிழ்ச்சியினைத் தருகின்றது.

"ஒரு சில எழுத்தாளர்கள், ஆச்சரியம் மிக்க தமது பேனாவால் இருண்ட ஆன்மாவினுள்ளே நுழைந்து, பல்வேறு விடயங்களை வெளிக்கொண்டு வருகின்றார்கள்" என்றார் அறிஞர் ரரிகுல்மட்ஸ். செல்வி ரஞ்சனா நவரத்தினத்தை அவ்வகையான எழுத்தாளராகவே நான் அடையாளம் காண்கின்றேன். ஆம், எழுத்தாளர்கள் மக்களது மனங்களோடு உறவாடுபவர்கள். அவர்களது உணர்வுகளோடு உரையாடுபவர்கள். தேவைப்படும் போது, தேவைப்படும் விதத்தில், ஒத்தடம் கொடுப்பதும், உளச்சக்தி ஏற்றுவதும் மக்கள் மனங்களை வெற்றிகொண்ட எழுத்தாளர்களின் எழுத்துக்களுள் அடங்கியுள்ள அதிசயம்.

"ரஞ்சன மஞ்சரி" க்குள் செல்வி ரஞ்சனா நவரத்தினம் அவர்களால் எடுத்துக் கோர்க்கப்பட்டிருக்கும் எழுத்துக்கள், மனித மனங்களைத் தட்டியெழுப்பும் தரம்வாய்ந்தவை. இவர் பெற்றுக்கொண்ட உளவளத்துணை டிப்ளோமாப் பயிற்சிகள், அவரது எழுத்துக்களுக்கு அற்புத சக்தியைக் கொடுத்திருப்பதாகவே நான் நம்புகின்றேன்.

வட இலங்கை சங்கீத சபையின் இசைக்கலாவித்தகர், வயலின் கலாவித்தகர், வீணை கலாவித்தகர் போன்ற பட்டங்களை இசைத்துறையில் பெற்றுக்கொண்டுள்ளதோடு, தமிழ் சிறப்புப் பட்டத்தையும் பெற்றுள்ள இவரை, "ரஞ்சன மஞ்சரி" ஒரு சிறந்த இலக்கியப் படைப்பாளியாக அடையாளப்படுத்தி நிற்கின்றது.

வாழ்த்துக்களுடன்
திருமதி. சிவத்திரை சிவநாதன்,
பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி),
வலயக்கல்வி அலுவலகம்,
தென்மராட்சி.

திருக்கணித பதிப்பகம் - சாவகச்சேரி 021 227 0257

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org